A1C
3

ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-26 எண். 4.5.6.

அக்டோபர் முதல் டிசம்பர் வரை

1937

JL
R65m211,N12
N37-26.4-6
158714

80

SRI VEDANTA DIPIKA

Vol. 26] OCTOBER 1937 [Part 4

472

4- APR 1938

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஈசுவர ௵

புரட்டாசி ௴

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS, 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS

ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ப்ரசார சபா
(லிமிடெட்)

4—5, வாணி விலாஸ், பத்திரய்யன் தோட்டத் தெருவு,

பார்க்டவுன், **Madras.**

விளம்பரம்

இனி, வேதாந்த தீபிகையின் சந்தா பாக்கிகளையும், தீபிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வியாசங்களையும், மற்றுமுள்ள தீபிகா ஸம்பந்தமான எல்லா கடிதங்களையும் 'மானேஜர், ' வேதாந்த தீபிகா, வாணீ விலாஸ், **4-5** பத்திரய்யன் தோட்டத் தெருவு, சென்னை பார்க்கு டவுன் என்னும் விலாசத்திற்கே அனுப்பவேணும். ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ஸபையைச் சேர்ந்த மெம்பர்களின் சந்தாத் தொகைகளையும், சபா ஸம்பந்தமான கடிதங்கள் எல்லாவற்றையும் சபையின் ஜாயிண்டு செக்ரடரி விலாசத்திற்கு அனுப்பவேணும்.

T. RAJAGOPALACHARI
R. TIRUMALAI TATACHARI
Joint Secretaries.

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புத்தகங்கள்

(1) *ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த ந்யாய சித்தாஞ்சநம்—ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் வெளியிடப்பட்டது. ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி அருளிய வ்யாக்யானத்துடன் கூடியது.* விலை ரூ. **5—0—0**

(2) *வேதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ பாஷ்யகாரர்) ஸ்ரீ. உப. வாசுதேவாசார்யரின் தமிழ் உரையுடன்* **3—0—0**

(3) *ஸ்ரீ பஞ்சஸ்தவம்—(ஸ்ரீ ஸ்துதி—ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம்) ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரின் உரையுடன்* **1—0—0**

(4) *ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்தோத்திரங்கள் தேவநாகரத்தில் அச்சிட்டது* **1—0—0**

(5) *ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீ ஸ்துதி, V. அனந்தாசாரியன் எழுதிய தமிழுரையும் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதிய முகவுரையும்.* **0—8—0**

(6) *ஸ்ரீ சூக்தபாஷ்யம்—ஸ்ரீநஞ்சீயர் அருளிச் செய்தது. சதுச்லோகி, சரணாகதி கத்யம், ஸ்ரீ ஸ்துதி ஸ்ரீ ஸ்தவம், ஸ்ரீ குணரத்நகோசம், லக்ஷ்மீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம், அஷ்டோத்ர சதநாம ஸ்தோத்திரம் இவ்வளைத்துக்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு;* by A. Srinivasa Raghavan M.A., *(புதுக்கோட்டை மகாராஜா காலேஜ்)* **1—8—0**

வியாபாரிகளுக்கும் வித்தியார்த்திகளுக்கும் 25% கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

" अ इति भगवता वाचमकारं

प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । "

" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । "

தலைவலி, ஜலதோஷம்,

சுளுக்கு முதலான சகல

நோய்களையும் தீர்க்கவல்ல

ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்!   எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

...களின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

... மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

...திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

...துங்கள்!   கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு!!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

SRI L. N. CONFECTIONARY,

Sales Depot:—West Chitrai St., Madura.

MADRAS OFFICE:—**Phone No. 3658.**

Y. M. I. A. Buildings, Armenian St., Madras

158714

L   காயம்—பெருங்காயம்   **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும்' நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ணம் செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய்   சென்னை   கும்பகோணம்

APR 1939
472

வியாஸம் எழுதி அனுப்புகிற வித்வான்களுக்கு ஓர் விக்ஞாபநம்

ப்ரம்ம விசாராதிகார விஷயமான விசாரம் இந்த ஸஞ்சிகையோடு முடிவு பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. பத்திரிகை நாநாவித ஜநங்களை திருப்தி செய்வதற்காக ஏற்பட்ட கருவியாகும். நமது பத்திரிகைக்கு என்று ஒரு பாஷாசைலியை அமைத்துக் கொள்ளவேண்டியது, அவச்யமாகிறது. விஷயம் கடினமானாலும் அதை சுருக்கி எளிய தமிழ் நடையில் எழுதினால் அனைவர்க்கும் பயன்படும். इष्टं हि विदुषां लोके समासस्यैव धारणम् என்று காலரீதியை அநுஸரித்து மாற்றிக் கொள்ளவேண்டியிருக்கிறது.

விஷயம் எழுதி அனுப்பும் வித்வான்கள் கெட்டிக் காகிதத்தில் ஒரே பக்கத்தில் தெளிவாய் வாசிக்கும்படி எழுதியனுப்பவேணும். கூடினவரை ஸம்ஸ்கிருத பாஷை கலக்காமலும் அப்படி அத்யவச்யமான விடங்களில் தேவ நாகரீலிபியில் ஸம்ஸ்கிருத வார்த்தைகளை எழுதியும், ஒவ்வொரு வ்யாஸமும் நான்கு பக்கங்களுக்கு மேல் போகாமல் சுருக்கியும் எழுதியனுப்பவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

பத்திராதிபர்கள்

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி வேதஸாஹித்ய சாஸ்திர பாடசாலா.

இப்பாடசாலையின் இரண்டாவது வருஷதினக் கொண்டாட்டம் ஷை பாடசாலையில், சென்னை கவர்ண்மெண்டு வக்கீல் ஸ்ரீமான் K. S. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்காரின் தலைமையில் வெகு விமரிசையாய் நடந்தேறியது. இதன் விவரம் அடங்கிய ரிபோர்ட்டு ஒன்று ஷை பாடசாலை கார்யதர்சி ஸ்ரீ. உ.வ. வேதாந்தாசாரியார் ஸ்வாமியால் அனுப்பப்பட்டிருக்கிறது. அது அடுத்த தீபிகையில் வெளியாகும்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

விஷய ஸூசிகை

1.	பத்திராதிபர் குறிப்புகள்	125
2.	கோகர்ணன்—ஓர் புராணக் கதை [ஸ்ரீ. உப. வி. அனந்தாசார்யர்]	129
3.	வேதாந்தாக்ஷாமணி விமர்சம் [ஸ்ரீ. உப. வ. வி. கோபாலா சார்யர்]	139
4.	ஆக்ஞானுக்ஞா விஷயத்தில் ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் [ஸ்ரீ. தூர்வார்பாஷ்யம் ஸ்ரீநிவாஸ தாஸர்]	151
5.	ப்ரும்ம விசாராதிகாரம் [ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாச தாதாசார்யஸ்வாமி]	152
6.	புத்தக விமர்சம்	100
7.	பக்தியின் பெருமையும் அதன் ஸ்வரூபமும் [ஸ்ரீ. உப. வே. ரா. பத்மநாபாச் சாரியார்]	165
8.	மானிட தேகத்தின் உயர்வு [ஸ்ரீ. A. S. தேசிகன்]	171
9.	வேதாந்த ஸாரம்	9—16
10.	ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி	25—32

பத்திராதிபர் குறிப்புகள்

பெற்றோரின் கடமை

தாய் தந்தையர், மக்களைப் பெற்று வளர்த்து, அவர்களை முன்னேற்றமடையச் செய்வது இக் காலத்தில் இது ஒரு பெரிய வேதாந்த மென்றே சொல்லலாம் போல் இருக்கிறது. சிறியோரைக் காட்டிலும் பெரியோர் பல விஷயங்களில் அநுபவம் வாய்ந்தவர் என்பதில் ஸந்தேஹம் இல்லை. பெரியோர் சிறுவருக்கு எவ்விதமான திறமையை உண்டாக்க விரும்புகின்றனரோ அதற்கு விரோதமாகவே படிப்பு முறை நடத்தப்படுகிறது என்பது பலருடைய கொள்கை. சிறு பிள்ளைகளுக்கு ஐந்தாவது வயதில் அக்ஷராப்யாஸத்தை செய்து வைத்து அவரை பள்ளிக்கூடம் அனுப்பி விட்டு பெற்றோர் தாங்கள் செய்யவேண்டிய கடமை இத்தோடு முடிந்ததாக நினைத்து நிர்பாராய் இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை கிரஹிக்கக் கூடிய புத்தி கூர்மையை உண்டாக்கித் தரவேண்டிய கடமை பெற்றோர்களுடையதேயாம். புத்தி கூர்மையை அடைவதற்கு நல்லொழுக்கங்களே ஸாதநங்களாகும். நல்லொழுக்கங்களை வீட்டில் வைத்துப் பழக்கவேணுமே யல்லாது பள்ளிக் கூடத்தில் பழக்க ஸாத்தியமாகாது. "आचार्यः प्रथमं स्वस्य शिष्येभ्यः शौच मादिशेत्" என்ற மநு வசநம் இங்கு நினைக்கத் தக்கது. முன் காலங்களில் மாணுக்கர் கல்வி கற்பதற்காக ஆசார்யர்களின் அகத்திலேயே வசித்து வந்தனர். அப்போது நல்லொழுக்கங்களில் பழக்கவேண்டிய கடமையும் உபாத்தியாயரைச் சேர்ந்ததாகவே இருந்தது. இப்போது அந்த முறை மாறிவிட்டபடியால் இருவர் இரண்டு விஷயங்களை கவனிக்கவேண்டி வருகிறது. பெற்றோர் தங்கள் கடமையைச் செலுத்தாதது கொண்டு சிறுவர் பெற்றோருக்குப் பயன்படாத நிலையில் தேர்ச்சியடைகின்றனர். அது சிறுவரின் குற்றமல்ல. சிறுவர் வித்தைகளை கிரஹித்து புத்திசாலியாய் விளங்குவதே பரமோத்தேச்யம் என்று நினைக்கக் கூடாது. உலகத்திற்கும், தங்களுக்கும், குடும்பத்திற்கும் நன்மை செய்வதே நமது பிறப்புக்குப் பரம ப்ரயோஜநம். இக் கார்யங்களுக்கு உதவும்படி நமது சிறுவரை பழக்குவது புத்திசாலித்தனமாகும். இளம் வயதில் அவரை நவீந நாகரீகம் என்னும் நாடகத்தில் ஆடவிட்டு வேடிக்கை பார்த்துவிட்டு மேல் வயது வந்தபோது அவர் பெற்றோருக்கு நேரே விரோதமாக நடக்கும் போது பரிதாபப்படுவதில் ப்ரயோஜநமில்லை.

தேவாலய கார்ய நிர்வாகங்கள்

நமது புண்ய பூமியாகிய இப்பரதகண்டத்தில் புராதநமான நாகரீகத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட தேவாலயங்கள் நவீந நாகரீகத்தைச் சேர்ந்தவர்களால் பரிபாலிக்கப்பட்டுவர வேண்டியதாகின்றன. அதனால் கோயில்களில் பழைய உருவம் மறைந்து புது உருவம் தோற்றுவிக்கப் படுகிறது. இந்த நிலை குணமோ, தோஷமோ வென்று சிலருக்கு ஸம்சயம் ஜநிக்கலாம். புதிய நாகரீகத்தில் உண்டாகக்கூடிய குணங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு கூடுமானவரை பழைய நாகரீகத்தை விடாமல் காப்பாற்றுவதே தேவாலய கார்ய நிர்வாஹ விஷயத்தில் நல்லது என்று துணிவாய் சொல்லக் கூடும். ஏனெனில்—இத் தேவாலயங்களை ஏற்படுத்தியதன் நோக்கமும், அவற்றை பரிபாலிக்கவேண்டிய முறைகளும், அவற்றை மேன்மேலும் விருத்தி செய்யவேண்டிய வழிகளும், பக்தி மார்க்கத்தையே பற்றி நிற்கின்றன. கோயில் தொழிலாளிகளும், தொழுபவர்களும், பக்திமான்களாய் இருப்பதே சிறப்புக்குக் காரணம். லௌகிக கார்யாலயங்களைப்போல் கூலிக்கு வேலை செய்யும் முறையை புகுற விடுவது நன்றன்று. சினிமாக்களும், நாடகங்களும், சர்க்கஸ்ஸுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும்போது, தேவாலயங்களில் தொழுபவர்களின் சங்கியை நாளுக்கு நாள் குறைந்து வருவதை கவனித்துப் பார்க்கவேணும். இக் குறைவுக்குக் காரணம் ஜனங்களின் பக்திக் குறைவே. ஜனங்களின் மனதில் பக்தி மிகுந்து அவர் கொடுக்கும் பொருள்களைக் கொண்டு பரிபாலிக்கவேண்டிய கோயில்களில், பொய், பிரட்டு, திருடு இவை அதிகமானால் எப்படி பரிபாலிக்க முடியும். கோயில் நிர்வாஹங்களில் சண்டை சச்சரவு உண்டாகி லக்ஷக்கணக்கான திரவ்யங்கள் நீதிஸ்தலங்களில் மடிகின்றன. கோர்ட்டுகளில் அளிக்கப்படும் தீர்மானங்களும், மேன்மேலும் விவஹாரங்களை வளர்க்க இடந் தருகின்றன. ஜனங்கள் தம்மில் ஒற்றுமை இருக்கவேண்டிய இடத்தில் வேற்றுமை வந்ததே தவறு என்ற அபிப்ராயத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் அளிக்கப்பட்டால் ஜனங்களுக்கு புத்தி உண்டாகும். நீதிபதிகள் தங்களை ஆசிரியராகவும், கக்ஷிக்காரரை சீடர்களாகவும் நினைத்து வழக்குகளைத் தீர்மானித்தால் ஜனங்களுக்கு ஒற்றுமை உண்டாகும். தேவாலயங்களில் நடைபெறவேண்டிய காரியங்கள் இப்படிப்பட்டவை என்ற விவரம் அறியாத நீதிபதிகள் தற்காலம் கக்ஷிக்காரர் சொல்லும் வாதங்களை மாத்திரம் கேட்டு ஏதோ சுவல்பம் தெரிந்துகொண்டு தீர்மானிப்பதில் என்ன நன்மை உண்டாகும்? ஆகையால் தேவாலய கார்ய நிர்வாஹங்கள் எந்த நூல்களின் ஒத்தாசையைக்கொண்டு நடத்தப்படுகின்றனவோ, அந்த நூல்களில் நுண்ணறிவு வாய்ந்த பெரியோரை ஷை தேவால்ய நிர்வாஹக் கமிட்டியில் சேர்த்துக்கொண்டு கார்யங்களை விசாரித்

தால் நன்மை உண்டு. அந்த நூல்கள் புராணங்களும் ஆகமங்களும் ஆகும். இந்நூற்களிற் பயிற்சி பெற்றவர் கிடைப்பது அரிதே. ஆனாலும் இப்போதே இந்த வழியைக் கைக் கொண்டால் கூடிய சிக்கிரத்தில் ஷை நூற்களில் பயிற்சி பெற்றவர் திரள் திரளாய் உண்டாகக்கூடும். இவ் விஷயத்தை புதிய துரைத்தனத்தார் கவனிக்க வேண்டுகிறோம்.

நீதி ரத்நங்கள்

नसीदेत् स्नातको विप्रः क्षुधा शक्तः कथंचन। नजीर्णमलवद्वासाः भवेच्च विभवे सति.

(மநு 4-வது அத். 34 ச்லோ)

ஸ்நாதக:-ப்ரம்மசர்யாச்ரமத்தில் நின்றும் நீங்கின, விப்ர:=ப்ராம்மணன், சக்த:=தன்னுடைய வித்தையைக்கொண்டோ, அல்லது ப்ரதிக்ரஹம் முதலான உபாயத்தைக்கொண்டோ பொருள் ஸம்பாதிக்க சக்தியுள்ளவனாயிருக்கச்செய்தே, கதம்சந= எப்படியாவது திறமையிருக்கும்போது, க்ஷுதா=பசியினால், நஸீதேத்= வருந்தக்கூடாது, விபவேஸதி=போதுமான பொருள் ஐச்வர்யம் இருக்கும்போது,ஜீர்ணமலவத்வாஸா:--கிழிந்தும் அழுக்கடைந்ததுமான வஸ்திரத்தை தரிப்பவனாய், நபவேத்= இருக்கக்கூடாது.

இந்த வசநம் இரண்டு விதமான தர்மசூக்ஷ்மங்களை போதிக்கிறது. இக்காலத்திலும் சிலர் ஊக்கமின்மை காரணமாக, வறுமையால் வருந்துவதைக் காண்கிறோம். அவருக்கு நல்வழியை உபதேசிக்கிறது இவ்வசநம். படாதபாடும் பட்டுப் பொருள் தேடவும், அதனால் தன்னையும் தன்னைச் சேர்ந்தவரையும் இன்பமுறச் செய்யவேணும். தன்னை ரக்ஷிக்கவேண்டிய பாரத்தை பரமபுருஷனிடத்தில் வைத்து மநுஷ்யயத்நத்தைச் செய்துவந்தால் தன்னுடைய நல்வினைக்குத் தக்கபடி ஈச்வரன் படியளக்கிறான் என்பது இதன் தத்துவம்.

அதன்மேல், ஸர்வேச்வரன் தனக்குப் போதுமான ஐச்வர்யத்தைக் கொடுக்குமளவில் லோபத்தினாலோ, ஆலஸ்யத்தினாலோ, மற்ற எக்காரணத்தினாலோ கிழிந்ததும் அழுக்கடைந்ததுமான வஸ்திரங்களை உடுக்கக்கூடாது, ஈச்வரன் கொடுத்ததை தான் அநுபவிப்பது ஒரு தர்மமாகும். ஒரு பகவத் கைங்கர்யமென்றே சொல்லலாம். நமது உடம்பை அழுக்குடம்பு என்று இகழ்ச்சியாய் பேசும் சாஸ்திரங்களின் அபிப்ராயம் என்னவென்றால், சார்வாக மதஸ்தர்போலே ஆத்மாவை முற்றும் மறந்து சரீரத்தைக் காப்பாற்றுவதே உயர்ந்த புருஷார்த்தம் என்று எண்ணாதீர். உலகவாழ்க்கையின் முக்கியநோக்கம் ஆத்மாவுக்கு நல்ல கதி தேடவேண்டியதாகும்

என்பதே. இதனால் சரீரத்தை ஆஹார வஸ்திராதி ஸௌகர்யங்களால் போஷிப்பது கூடாதென்பதில்லை. நமது சரீரத்தை ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஒரு திருக்கோயிலாக நினைக்கவேணும். தைவத்தினிடத்தில் உண்மையான பக்திவாய்ந்தவன் கோயிலை செம்மைப்படுத்தாமல் அதன் உள்ளில் இருக்கும் தைவத்தை மாத்திரம் பூசிப்பது ந்யாயமாகுமா?. அதுபோல் நமக்கு பரமாத்மாவினிடத்தில் பக்தியுண்டானால் நமது சரீரத்தையும் பரமாத்மாவைச்சேர்ந்த கோயிலாக நினைத்து அதை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ள வேண்டியது சாஸ்திர ஸம்மதமாகும் என்பது இதன் கருத்து.

सर्वेषामेव शौचानाम् अर्थशौचं परं स्मृतम्
योर्थे शुचिस्स शुचिः नमृद्वारिशुचिश्शुचिः

(மநு. 5-வது அத்யா. 106 ச்லோ.)

ஸர்வேஷாமேவ சௌசாநாம்—எல்லா சௌசங்களிலும், அர்த்த சௌசம்= தநத்தால் ஏற்படும் தூய்மை, பரம் ஸ்ம்ருதம்= சிறந்ததாகக் கருதப்படுகிறது, ய:= எவனொருவன், அர்த்தே= த்ரவ்ய விஷயத்தில், சுசி: சுத்தம் வாய்ந்தவனோ, ஸ:= அவனே, சுசி:—சுத்தமானவன். ம்ருத்வாரி சுசி:= மண் தண்ணீர் இவற்றால் மாத்திரம் சுத்தம் செய்துகொண்டவன் ந சுசி:=சுத்தனாக மாட்டான்.

மனிதர்களுக்கு விதித்த நல்ல குணங்களில் சௌசம் முக்கியமான தொன்றாகும். இது மநச்சௌசம், தேஹ சௌசம் அர்த்த சௌசம் என்று மூன்றுவகையாயிருக்கும். அவற்றில் அர்த்த சௌசம் முக்கியமானது என்று உரைக்கும் இவ்வசநம். அர்த்த சௌசமாவது நல்ல வழியில் ஸம்பாதித்த திரவ்யத்தைக்கொண்டு ஜீவநம் செய்தல். தநத்தை ஸம்பாதிக்கும் வழிகளையும் சாஸ்திரங்கொண்டே அறியவேணும். மநு முதலான ஸ்ம்ருதி கர்த்தர்கள் இதை நன்கு விளக்கிக் காட்டியிருக்கின்றனர். தேஹ சுத்திக்கும் மநச்சுத்திக்கும் அர்த்த சுத்தியே மூலகாரணமாகும். அர்த்த சுத்தியில்லாத மீதி இரண்டு சுத்திகளும் அஸ்திவாரமின்றி கட்டப்பட்ட கட்டிடம் போல் நிலைத்திருக்காது. இதனால் ம்ருத்வாரி சௌசத்தை தூஷித்ததாகக் கருதக்கூடாது. அர்த்த சௌசம் ப்ரதாநம் என்பதில் தாத்பர்யம்.

தேவநாகரி லிபி

உலகத்தில் ஒற்றுமை இல்லாத ஜந்துக்களுக்கு இன்பம் இல்லை. ஒற்றுமை என்பது நாம் சில கார்யங்களை உத்தேசித்து ஏற்றுக்கொள்ள வேண்டிய மநோபாவமாகும். ஒற்றுமையின் உருவம் எதில் நிற்கின்றது

என்றால் பலர் சேர்ந்து ஒரே விஷயத்தை அநுபவிப்பதும், ஒரே கார்யத்தைச் செய்வதும், ஒரே பாஷையை வழங்குவதும், ஒரே எண்ணங்கொள்வதும் இத்தகைய கார்யங்களில் ஒற்றுமையை ப்ரகாச படுத்தமுடியும். அதில் ஒரே பாஷையில் பேசுவது, ஒரே புஸ்தகத்தைப் படிப்பது இது முதலிய கார்யங்களைச் செய்யும்போது லிபியின் வித்யாஸங்கள் இடையூறு ஆக நிற்கின்றன. இக்காலத்தில் பாஷைகளும் லிபிகளும் எண்ணிறந்தவையாயின. ஒவ்வொரு நகரத்தில் மாத்திரமல்ல, ஒவ்வொரு கிராமத்திலும் கூட அனைவரும் ஒரே பாஷையில் பேசியும், ஒரே லிபியில் எழுதியும் ஒற்றுமையை அநுபவிக்க தற்காலத்தில் இடமில்லாமல் இருக்கிறது. இவ்விஷயம் தீவ்ரமாய் ஆலோசிக்கத் தக்கது. சிற்சில வீடுகளில் வசிக்கும் பந்துக்கள் கூட ஒரே லிபியை வழங்குவது அசாத்யமாயிருப்பது வியசனிக்கத் தக்கதாகிறது. இப்படி இருந்தால் ஒற்றுமை எப்படி இருக்கும்? ஆகையால் ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு நகரத்திற்கும் ஒவ்வொரு தேசத்திற்கும் ப்ரத்தியேகம் ப்ரத்தியேகமாய் லிபியும், பாஷையும், பொதுப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகும். இதுவே நாகரீகம் செழித்து ஓங்குவதற்கு இன்றியமையாத ஸாதநமாகும். அதற்காக தேவநாகரலிபியை எடுத்துக்கொண்டால் இப்பாரத கண்டம் முழுவதிலும் ஒற்றுமையைக் காண்பதற்கு ஸாத்யமாகும். அந்தந்த பாஷைக்குரிய எழுத்துக்களோடு தேவநாகர லிபியையும் சிறு வயதிலேயே கற்றுக்கொடுப்பது மிகவும் நன்று.

ஸ்ரீ:

கோகர்ணன்—ஓர் புராணக் கதை

தலை எழுத்தை மாற்ற முயன்றவன் கதி.

[ஸ்ரீ. உப. வே. V. அனந்தாசாரியர்.]

முன் ஒரு காலத்தில் துங்கபத்ராநதிக் கரையில் சிறந்த பட்டணம் ஒன்று இருந்தது. அதில் ஆத்மதேவன் என்ற பெயர் பூண்ட ஒரு அந்தணன் இருந்தான். அவன் நான்கு வேதங்களிலும், ஆறு வேதாங்கங்களிலும் மற்றுமுள்ள ஸகல சாஸ்த்ரங்களிலும் வல்லவன். வைதிக ஸ்மார்த்த கர்மங்களில் மிகவும் நிபுணன். அவனது முகத்தில் ப்ராம்மண தேஜஸ் சூர்யனைப்போல் ஒளிகொண்டிருந்தது. அவ்வந்தணன் தக்க பருவத்தில் ஒரு மனைவியை மணந்தான். அவளுக்கு துந்துலீ எனப் பெயர். சிறந்ததொரு அந்தணர் குலத்தில் உதித்தவள். மிகுந்த அழகு வாய்ந்தவள்.

ஆனால் அவள் தனது சொல்படி மற்றவர் நடக்கவேண்டும் எனப் பிடிவாதம் கொண்டவள். மித மிஞ்சிப் பேசும் இயல்பு வாய்ந்தவள். இரக்கம் இல்லாதவள். வீட்டு வேலைகளை கவனிக்க மாட்டாள். ஊர்வம்பு பேசுவதில் மிகப் பிரியமுள்ளவள். இத்தன்மை வாய்ந்த மனைவியை மணந்து ஆத்மதேவன் பலகாலம் இல்லற வாழ்க்கையை இன்பமுற நிகழ்த்தினன். அவனுக்கு நாளடைவில் செல்வம் ஏராளமாகக் குவிந்தது. அதனால் அவ்விருவரும் மனதில் தோன்றிய இன்பங்களைத் தடையின்றி அநுபவித்தார்கள். தர்மம், அர்த்தம், காமம், என்னும் த்ரிவர்க்கம், ஒன்றோடொன்று பகையின்றி அத் தம்பதிகளுக்கு சிறந்தவின்பம் தந்தது. ஆனால் புதல்வன் இல்லாக் குறை மாத்திரம் அவர்கள் மனதில் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. அக்குறையை நீக்க அவ்விருவரும் ஏக மனதாயிருந்து பற்பல சடங்குகளைச் செய்யத் தொடங்கினார்கள். புத்திர ஸந்தானத்தைக் கருதியே ஏழைகளுக்கு வஸ்த்ரம், பொன், பூமி, பசு இவைகளை தானம் செய்தார்கள். தங்களது செல்வத்தை தர்ம வழியிலேயே செலவிட்டார்கள். என்ன செய்தும் அவர் எண்ணம் நிறைவேற வில்லை. புதல்வன் பிறக்காவிட்டாலும், ஒரு புதல்வியாகிலும் பெற மாட்டோமா என்ற பேரவா அவருக்கு நாளுக்கு நாள் பெருகி வந்தது. ஒரு நாள் மிக்க வெறுப்புற்ற ஆத்மதேவன், தனது எண்ணத்தை நிறைவேற்றல் பொருட்டு வீட்டை விட்டுக் கானகம் சென்றான். பித்தம் பிடித்தவன்போல் கானகத்தில் அங்கும் இங்கும் திரிந்து சென்றான். அப்போது கடுங்கோடை காலமாய் இருந்தது. கொடுங்கானலால் மிகவும் வருந்தினன். நடுப் பகலில் அடக்கமுடியாத நீர் வேட்கைகொண்ட அவன் நீர் நிறைந்த தடாகம் ஒன்றைக் கண்டு அதில் இறங்கி நீர் அருந்தி ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்தான். கொஞ்ச நேரம் கழிந்த பின் ஒரு சன்னியாசி அவ்விடம் வந்தான். வந்து நீரைக் குடித்து அவனும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். ஆத்மதேவன் தனது மனத்துயரத்தைத் தீர்க்க வழி ஒன்றையும் காணாதவனாய் கண்களில் நின்றும் கண்ணீர் பெருகிய வண்ணம் அவனது அருகில் சென்று வணங்கினன். வணங்கி ஒன்றும் பேசாமல் கை கூப்பி நிற்கையில் அம் முனிவன், “ஓ அந்தணத் தலைவனே! நீர் யார்? உனது மனத்துயரத்திற்குக் காரணம் என்ன?” என்று வினவினர். அதற்கு ஆத்மதேவன் பின் வருமாறு மறுமொழி கூறினன்.

“தேவனே! எனது துக்கத்தைப் பற்றி யான் என்னென்று உரைப்பது. யான் முன் பிறப்பில் அளவற்ற பாபத்தைச் செய்து விட்டேன் அது இப் பிறப்பில் எனக்கு அளவில்லாத் துயரத்தை விளைவிக்கிறது. யான் புத்திரனில்லாமல் மிகவும் வருந்துகிறேன். யான் எனது பித்ருக்களுக்கு தர்ப்பண ஜலம் கொடுக்கும்போது அவர் அதை மிகுந்த வருத்தத்

துடன் சாப்பிடுகிறார். ஏனெனில், எனது காலத்திற்குப் பிறகு தங்களுக்கு இம்மாதிரி தர்ப்பண ஜலம் கொடுப்பவன் இல்லை என்று வருந்தி அதனால் பெரு மூச்சு விடுகிறார்கள். அந்த மூச்சுக் காத்து ஸம்பந்தப்பட்டதனால் அவர் கையில் ஏந்திக் கொண்டிருக்கும் தர்ப்பண ஜலம் கொஞ்சம் சூடு ஆகிறது. அப்படிப்பட்ட நீரைக் குடிக்கிறார்கள். “ப்ரஜயாஹிமநுஷ்ய: பூர்ண:” என்று வேதம் கூறுகிறது. ப்ரஜை இல்லாதவன் முழு மனிதன் அல்ல என்றல்லவா ஏற்படுகிறது. மேலும் புத்திர ஸந்ததி இல்லாதவனை அநேக தர்ம கார்யங்களுக்கு யோக்யதை இல்லாதவன் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தேவர்களும் அந்தணர்களும் நான் கொடுத்த அன்னத்தை புஜிப்பதில்லை. புத்திரன் இல்லாமல் இருப்பது பெரிய தோஷம் என்றல்லவோ அவர்களின் கருத்து. என்னுடைய குலம், வீடு, செல்வம், எல்லாம் பயனற்றவை என்று எனக்குத் தோன்றுகிறது. யான் கொடும் பாபம் செய்தவன். எனது ஸம்ரக்ஷணையில் இருக்கும் பசுமாடு கூட மலடு ஆய்விடும் என நினைக்கிறேன். யான் வளர்க்கும் மரங்கள் கூட பலம் தராதுபோல் இருக்கிறது. இவ்வளவு துர்பாக்கியசாலியான என்னுடைய உயிர் இருந்து என்ன பயன்?”

இவ்விதம் சொல்லி அந்த ஸந்யாசியின் முன், ஆத்மதேவன் பெருங்குரல் இட்டு அழுதான். அப்போது அந்த ஸந்யாசியின் மனதில் மிகவும் கருணை உண்டாயிற்று. அவர் பலகாலம் யோகாப்யாஸம் செய்து விசேஷமான சக்தி வாய்ந்தவர். ஆகையால் அவ்வாத்மதேவனுடைய நெற்றியில் பிரும்ம தேவனால் எழுதப்பட்டிருக்கும் எழுத்தை வாசித்தார். அவனுடைய ஸுக துக்காதிகள் அனைத்தையும் அறிந்து விஸ்தாரமாகப் பின் வருமாறு கூறினார்.

“அந்தணத் தலைவனே! நீ முன் ஜன்மங்களில் செய்த கர்மங்களை யான் நன்கு அறிந்தேன். இது முதல் ஏழு ஜன்மங்களில் உனக்கு புத்திர பாக்யம் இல்லவே இல்லை. உனது ஆசை வீண் ஆகும். இந்த அஜ்ஞானத்தை விட்டுவிடு. செய்வினைப் பயனை மாற்ற முடியாது. ஸம்ஸாரத்தில் இன்பம் உண்டு என்று எண்ணுவது முற்றும் தவறு. இது நல்லது, இது, கெட்டது என்பதை நிர்க்காலோசனை செய்து அறியவேணும். மனிதனுக்கு ஜன்மாந்தர வாஸனை என்பது ஒன்று உண்டு. அதாவது ஒருவன் முன் ஜன்மங்களில் எந்தெந்த விஷயங்களில் அதிக பழக்கம் கொண்டானே அந்தந்த விஷயங்களிலேயே அடுத்த ஜன்மத்திலும் மனம் செல்லுகிறது. இந்த ஜன்மாந்தர வாஸனையை அகற்றுவது விவேகத்தினாலேயே ஸாத்யம், விவேகம் என்பது நல்லது கெட்டது இவைகளை அறிகை. இந்த விவேகத்தினால் ஸம்ஸார வாஸனையை அகற்றிவிடு. குடும்பத்தில் பற்று

அறுத்து துறவியாய் இருப்பது நலம். முன் காலத்தில் சூர்ய வம்சத்தில் உதித்த ஸகர மகா ராஜன் குடும்ப விருத்தியில் ஆசை வைத்து அடைந்த சுகம் என்ன? உனக்குத் தெரியாதா? ஆகையால் குடும்ப வாழ்க்கையில் ஆசை கொள்ளாதே. ஈச்வரன் கொடுத்ததை வைத்துக்கொண்டு திருப்தியுடன் இரு."

இவ்விதம் அத்துறவி உரைத்த வார்த்தையைக் கேட்டு ஆத்மதேவன் மறுமொழி கூறலானான்.

"பகவானே! எனக்கு அருள்புரியவேணும். யான் சொல்லப்போகும் வார்த்தைக்காக என்னிடத்தில் கோபம் கொள்ளக்கூடாது. எனக்கு நீங்கள் இம்மாதிரியான தத்வங்களை உபதேசிப்பதால் பயன் யாதும் இல்லை. நீர் தபோநிஷ்டையால் சித்தி பெற்றவர். உம்மால் ஆகக்கூடாத கார்யம் ஒன்றும் இல்லை. எனக்கு எப்படியாவது ஒரு புதல்வனைத் தந்தருள வேணும். "அபுத்ரஸ்ய கதிர் நாஸ்தி", அதாவது புத்திரன் இல்லாதவனுக்கு நல்ல கதிஇல்லை என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. புதல்வனுடைய சிறு பிராயத்து விளையாட்டுகளைக் கண்ணுற்றுக் களிக்காத ஜன்மம் எதற்கு? உமக்கு குடும்ப வாழ்க்கையில் அநுபவம் இல்லை. எனக்கு நாளுக்கு நாள் புத்திரன் இல்லாத் துயரம் அதிகரித்து வருகிறது. நீர் என்னுடைய வேண்டுதலைப் பூர்த்தி செய்யாவிட்டால் என்னுடைய துக்கம் உமது கண் முன்னேயே என்னை உயிர் துறக்கச்செய்யும் என்பதில் ஸந்தேகமே இல்லை. உலகத்தில் கிருஹஸ்தாச்ரமந்தான் ஆநந்தத்திற்கு இருப்பிடம் என்று சொல்லக்கூடும். புத்திரர்கள், பௌத்திரர்கள் முதலான குடும்ப ஜனங்களோடு வாழும் வாழ்க்கைக்கு நிகர் எது? இல்லறவாழ்க்கையின் இன்பமுறாத சன்யாசம், வெயிலில் காய்ந்து பட்டுப்போன மரத்திற்குச் சமானம். மரம், காய்களும், பூக்களும், இலைகளும், தளிர்களும், நிறைந்து செழித்திருந்தால் அல்லவோ பயனுற்றது. அப்படிப்பட்ட மரத்திலேயே பறவை முதலிய அநேக ப்ராணிகள் வசிக்க இடமுண்டு. அது பற்றியே கிருஹஸ்தாச்ரமத்தை மற்ற எல்லா ஆச்ரமங்களிற்காட்டில் சிறந்ததாக தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. மூன்று கடன்களைத் தீர்த்த பிறகல்லவோ சன்யாசத்தில் புக சாஸ்த்ரங்கள் விதிக்கின்றன. அவைகளில் பித்ருக் கடனைத் தீர்க்காத எனக்கு எப்படி நல்ல கதி உண்டாகும்? ஆகையால், பகவானே! நீர் கருணை கூர்ந்து எப்படியாவது எனது மனோரதத்தை பூர்த்தி செய்தருளவேணும்" என்று சொல்லி ஆத்மதேவன் கண்களில் கண்ணீர் ததும்ப அத்துறவியின் பாதங்களில் பணிந்து பலமுறை தண்டனிட்டான்.

அது கேட்டு அவர் அவனுடைய பிடிவாதத்தைக் கண்டு வியந்தார். அவருடைய ஹிருதயத்தில் கருணை ஒரு பக்கமும், கோபம் ஒரு பக்கமும் அவன் பேரில் வளர்ந்தது. அப்போது அடியிற்கண்டபடி உரைத்தார்.

"ஆத்மதேவனே! யான் ஒருதத்வம் உரைக்கின்றேன் கேள். ஸமஸ்த ப்ராணிகள் செய்யும் செய்கைகளுக்கெல்லாம் முக்கிய கர்த்தாக்கள் இருவர் ஆவர். ஈச்வரனும், ஜீவனும், ஈச்வரனுடைய உதவியின்றி நாமும் எந்தக் கார்யத்தையும் செய்யமுடியாது. அந்த ஈச்வரனும் மநுஷ்யப்ரயத்நம் இன்றி ஒரு கார்யத்தையும் செய்யமுடியாது. இப்படி இருக்க இதில் ஒரு ரஹஸ்யம் உண்டு. மனிதன் தனது கார்யத்தைச் செய்ய தொடங்குவதற்கு முன் இக்கார்யத்திற்கு தெய்வஸஹாயம் இருக்கிறதா? இல்லையா என்பதை உணரவேணும். தெய்வம் ஸஹாயம் செய்யும் வழியில் மனிதன் கார்யங்களை செய்ய இறங்கினால் ச்ரமமின்றி கார்யம் கைகூடும். அப்படி இல்லாமல் பலாத்காரமாய் இறங்கினால் ஏறு மடைக்கு நீர் பாய்ச்சுபவனைப்போல் துன்பத்துக்கு உள்ளாவான். தெய்வஸங்கல்பத்திற்கு மாறாக இவன் செய்யினும், செய்கை மாத்திரம் அரைகுறையாக முடியுமே யல்லாமல் அச் செய்கைக்குப் பயன் யாதும் கிடைக்க மாட்டாது. ஈச்வரன் மனிதர்களுக்குச் செய்கைகளைச் செய்வதில் மாத்திரம் அதிகாரம் அளித்திருக்கிறாரே யன்றி செய்கைகளுக்குப் பயன் கொடுக்கும் அதிகாரத்தைத் தானே வைத்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீ பகவத் கீதையில் "கர்மண்யே வாதிகாரஸ்தே மாபலேஷு கதாசந" என்ற ச்லோகமும் இக் கருத்தைத் தான் வெளிப்படுத்துகிறது. இப்போது நீ உன்னுடைய சிரோ லிபியை மாற்ற முயலுகின்றாய். ஈச்வர ஸங்கல்பத்திற்கு மாறாக யான் உனக்குப் புதல்வன் உண்டாகச் செய்தாலும் உனக்குச் சிறிதேனும் இன்பம் உண்டாகாது."

என்று சொல்லி மாற்ற முடியாத அவனுடைய விருப்பத்தை அநுஸரித்து மந்த்ர பலம் வாய்ந்த ஒரு கனியை அவன் கையில் கொடுத்து, "இதை உனது மனைவியை சாப்பிடச் சொல். புத்திரன் பிறப்பான் ஆனால் இன்று முதல் ஒரு வருஷம் வரை உனது பார்யை நியமங்களை அநுஷ்டிக்க வேணும். ஒரு தினத்தில் ஒரு தடவைதான் சாப்பிடவேணும். எது காரணத்தைப் பற்றியும் பொய் சொல்லக்கூடாது. எப்போதும் சரீரத்தை உள்ளும் புறமும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். ஸகல ப்ராணிகளிடத்திலும் கருணை காண்பிக்கவேணும். தன்னால் இயன்றமட்டும் நல்ல பாத்திரத்தில் தாநம் அளிக்கவேண்டும். இப்படி இருந்தால் அவளது வயிற்றில் நற்குணங்கள் அனைத்தும் வாய்ந்த ஒரு புதல்வன் பிறப்பான்" என்று சொல்லி, அந்த யோகீச்வரர் மறைந்தார்.

ஆத்மதேவன் மிகுந்த ஸந்தோஷத்துடன் அந்தக் கனியை கையில் ஏந்திக்கொண்டு விரைவாய் வீடுசென்று, அதை தனது மனைவியின் கையில் கொடுத்தான். கொடுத்து ரிஷி சொன்ன நியமங்களையும் வெகு ஜாக்கிரதையாய் அநுஷ்டிக்குமாறு கூறினான். அவன் இவ்வளவு ப்ரயாசப்பட்டு ஸம்பாதித்து வந்த அக்கனியை துந்துலீ ஸந்தோஷத்துடன் வாங்கிக் கொள்ளவில்லை. அறை மனதாகவே கையில் வாங்கிக்கொண்டு கணவனை அனுப்பிவிட்டாள். ஆத்மதேவன் சில அவச்ய கார்யமாய் பக்கத்துக் கிராமத்திற்கு விரைவில் செல்லவேண்டியிருந்ததால் தனது மனைவியின் முகத்தில் அதிருப்தியின் ஜாடை நடையாடிக் கொண்டிருந்ததை கவனிக்கவில்லை. துந்துலீ பக்கத்து வீட்டுக்காரியான தனது தோழியை வரவழைத்து அவளுடன் பின்வருமாறு ஆலோசித்தாள்.

"தோழியே! எனது மனத்தில் பெரியதொரு விசாரம் தோன்றி விட்டது. எனது கணவன் படாதபாடுபட்டு இப்பழத்தை ஸம்பாதித்து வந்தார். இதை நான் சாப்பிடப்போவதில்லை. ஏனெனில், அதனால் கர்ப்பம் தரிப்பேன். கர்ப்பத்தால் எனது வயிறு வீங்கும். ஆகாரத்தைக் குறைவாக உண்ணவேண்டி வரும். சரீரத்தில் அசக்தி உண்டாகும். எனக்கோ வீட்டு வேலைகள் மிதமிஞ்சி இருக்கின்றன. பருத்த வயிற்றைச் சுமந்துகொண்டு யான் எப்படி வீட்டு வேலைகளைச் செய்வேன்? கர்ப்பத்தை தரிப்பவள் வேகமாய் நடக்க முடியாது. எப்படிப்பட்ட ஆபத்து வந்தபோதிலும் மெல்லனவே நடக்கவேண்டும். பெண்களுக்கு ப்ரஸவவேதனை மரணவேதனையைக் காட்டிலும் கொடியது என்று சொல்லுகிறார்கள். எனது தேகமோ மிகவும் மெலிந்தது. அவ்வளவு கடினமான ப்ரஸவ வேதனையை எப்படி ஸஹிக்கப்போகிறேன். சிசு நேராக வெளி வந்தால் தான் எனது உயிருக்கு அபாயம் இல்லை. வெளிவரும்போது குறுக்குப் பாய்ந்துவிட்டால் யான் உயிர் துறக்கவேண்டிவரும். மேலும் பிரஸவ அறையில் யான் பதுங்கிக் கிடக்கும்போது எனது நாத்தனார் வந்து புகுந்து எனது வீட்டுப் பொருட்களை எல்லாம் கைப்பற்றிவிடுவார். அதற்கு யான் என்ன செய்ய இயலும்? இதுவுமன்றியே எனது கணவன் சொல்லிப் போன வ்ரதாதிகளை நினைத்தால் எனக்குப் பெரிய பயம் உண்டாகிறது. ஸத்யம், சௌசம் முதலிய நியமங்களை வெகு ஊக்கத்துடன் அநுஷ்டிக்க வேணுமாம். இது யாராலே ஸாத்யம்? குடும்ப வ்யவஹாரத்தில் பொய், பிறட்டல், ஆசாரம், அநாசாரம் எல்லாம் கலந்துதான் இருக்குமல்லவா? அவ்வளவு தீவிரமாய் நியமங்களைச் செய்ய எப்படி முடியும்? அவ்வளவு ப்ரயாசப்பட்டு குழந்தையைப் பெற்றபோதிலும் பிற்பாடாகிலும் இன்பமுண்டோ இல்லவே இல்லை. குழந்தையை வளர்ப்பது மகா கஷ்டம் அல்லவா? ஆகையால் எனது அன்பார்ந்த தோழியே! உலகத்தில் பிறந்த

பெண்மக்களில் வைத்து மலடு ஆகவிருப்பவள் பாக்யசாலி என்பதும், கணவனையும் துறந்து விதவையாக இருப்பவள் அவளைக்காட்டிலும் அதிக பாக்யசாலி என்பதும் எனது அபிப்ராயம்.' அதுபற்றி யான் இந்தப் பழத்தை எவ்விதத்திலும் சாப்பிடப் போவதில்லை', என்று தீர்மானித்தாள். இவ்விதம் குதர்க்கங்களை எண்ணி அவள் அந்தப் பழத்தை சாப்பிடாமலே மறுநாள் கணவன் வந்து பழத்தை சாப்பிட்டாயா? என்று கேட்டபோது சாப்பிட்டேன் என்று பொய் சொல்லிவிட்டாள்.

அவளுக்கு ஒரு ஸஹோதரி உண்டு. அவள் அதே கிராமத்தில் வசிப்பவள். இரண்டு மூன்று தினங்கள் சென்ற பிறகு அச்சஹோதரி துந்துலீ இடம் வந்தாள். துந்துலீ அவளிடத்தில் தன்னுடைய விருத்தாந்தங்கள் அனைத்தையும் சொல்லி தனது கணவனை ஏமாற்றுவது எப்படி? என்று ஆலோசனை கேட்டாள். அவள் சொன்னதாவது—"சகோதரியே! நீ கவலைப்படவேண்டாம். நீ கர்ப்பவதிபோலே பாசாங்குகளை பண்ணிக்கொண்டு வீட்டில் சுகமாய் இரு. யான் இப்போது கர்ப்பவதியாய் இருக்கிறேன். எனது வயிற்றில் புதல்வன் பிறந்தவுடன் உனக்குத் தந்துவிடுகிறேன். அப்புதல்வன் உனக்குப் பிறந்தவனாகவே நானும் சொல்லிவிடுகிறேன். நீயும் அப்படியே உனது கணவனுக்கும் மற்றவர்களுக்கும் சொல்லிவிடு. எனது கணவனையும் நம்முடைய இந்த சூழ்ச்சிக்கு இணங்கும்படி செய்கிறேன். எனது கணவனுக்கு நீ த்ரவ்ய ஸஹாயம் செய்யவேணும். வறுமையால் வருந்துகிற எனது பர்த்தா தனது புத்திரனை உனக்குத் தந்துவிடுவார். எனது கர்ப்பம் ஆறு மாதத்தில் கலைந்து போய்விட்டது என்று ஊரார் நம்பும்படி சொல்லிவிடுகிறேன். அக்குழந்தை ஸ்தந்யபானம் செய்யும்வரை யான் உனது கிருஹத்தில் வந்திருந்து குழந்தையை வளர்க்கிறேன். ஆனாலும் முனிவன் கொடுத்த பழத்தின் மகிமையை பரிசோதனை செய்யவேணும். நமது வீட்டில் இருக்கும் பசுவுக்கு இப்பழத்தைக் கொடுத்துவிடு" என்றாள்.

துந்துலீயும் இவ்வாலோசனைக்கு இணங்கினாள். பெரும்பான்மையில் ஸ்த்ரீகள் வக்ர ஸ்வபாவமுடையவர். அவ்விருவரும் கூடி செய்த ஆலோசனையை நிறைவேற்றினார்கள். சிலகாலம் சென்றபிறகு அச்சகோதரி ஒரு புத்திரனைப் பெற்றாள். துந்துலீயிடமிருந்து த்ரவ்யங்களைப் பெற்றுக் கொண்ட அவளது கணவன் ஒருவருக்கும் தெரியாமல் குழந்தையை துந்துலீயிடம் கொண்டுவந்து கொடுத்தான். துந்துலீயும் ப்ரஸவ வேதனை போல் பாசாங்கு செய்து முடிவில் புதல்வன் பிறந்ததாக கணவனுக்கு அறிவித்தாள். ஆத்மதேவனுக்கு ஆண்குழந்தை ஜனித்தது என்றே ஸர்ஜனங்களும் நம்பியிருந்தனர். ஆத்மதேவனும் சாஸ்த்ரங்களில்,

சொல்லியபடி ஜாதகர்மம் முதலியவை செய்து விசேஷமாய் தானங்களையும் வழங்கினான். அக்குழந்தைக்கு துந்துகாரீ என்று பெயர் இடப்பட்டது. ஒருநாள் ஆத்மதேவன் தனது இஷ்டப்படி புதல்வன் பிறந்ததை நினைத்து மனமகிழ்ந்திருக்கும் ஸமயம் நோக்கி துந்துலீ கூறினாள். "என்னுடைய உடம்பில் சில வியாதிகள் உண்டு. அதுபற்றி எனது ஸ்தநங்களில் பால் இல்லை. ஸ்தநப்பால் இல்லாமல் குழந்தையை நான் எப்படி வளர்ப்பேன். எனது ஸஹோதரிக்கு ஆறு மாஸத்தில் கர்ப்பம் சிதறிவிட்டது. ஆனாலும் அவளுக்கு பால் உண்டு. அவளை வீட்டில் வரவழைத்து வைத்துக் கொள்கிறேன்" என்றாள்.

ஆத்மதேவனும் அப்படியே ஸம்மதிக்க ஸஹோதரியைக்கொண்டு குழந்தையை வளர்த்து வந்தாள். முனிவரின் மந்த்ரமஹிமையைப் பரிசோதிப்பதற்காக அப்பழத்தைப் பசுவுக்குக் கொடுத்தாள். சிலநாள் சென்றதும் பசுவின் வயிற்றில் சுந்தரமூர்த்தியான ஒரு குமாரன் பிறந்தான். பசுவின் வயிற்றில் பிள்ளை பிறந்த ஆச்சர்யத்தைக்காண ஜனங்கள் திரள் திரளாகச் சென்றார்கள். அனைவரும் நோக்கி "ஆத்மதேவனுடைய பாக்யமே பாக்யம். இதல்லவோ தெய்வாநுக்ரஹம். பசுகூட புதல்வனைப் பெற்றுக்கொடுத்ததே. இதென்ன அற்புதம்! இந்தக்குழந்தை தேவாம்சமாகத்தான் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட அழகும் தேஜஸ்ஸும் மானிடச் சிறுவனுக்கு எப்படி உண்டாகும்? என்று வியந்தார்கள். நடந்த கார்யத்தின் உண்மை ஒருவருக்கும் தெரியாது. அக்குழந்தையினது காது பசுவின் காதுபோல் இருந்தபடியால் அவனுக்கு கோகர்ணன் என்று பெயர் இடப்பட்டது. அவ்விரு குமாரரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தார்கள். நாள் அடைவில் கோகர்ணன் நுண்ணறிவு வாய்ந்தவனும் கல்வியில் சிறந்தவனுமானான். துந்துகாரி மூடனும் கெட்ட நடத்தையில் பிரியம் உள்ளவனாகவும் ஆனான். அவனுக்கு யௌவந வயது வந்ததும் அவனுடைய துர்நடத்தையை ஆத்மதேவன் ஸஹிக்கமுடியவில்லை. தாஸீவிடனான துந்துகாரி தகப்பனார் ஸம்பாதித்து வைத்திருந்த பொருள்கள் அனைத்தையும் அழித்துவிட்டான். தாய் தந்தைகளை அடித்து பலாத்காரமாய் திரவ்யங்களை பிடுங்கிக் கொண்டுபோய் துர்விநியோகத்தில் செலவு செய்துவிட்டான். மகனது பலவிதமான துர்நடத்தையை ஸஹிக்க மாட்டாதவனாய் ஆத்மதேவன் மிகவும் வருந்தினான். தேடிவைத்த செல்வம் எல்லாம் தொலைந்து தரித்திரனாய்ப்போன ஆத்மதேவன் பின்வருமாறு கதறினான்—"ஐயோ! கெட்ட நடத்தையுள்ள பிள்ளையை பெறுவதைக்காட்டிலும் மலடு ஆக இருப்பது நலம். இனி நான் என்ன செய்வேன். எங்கே போவேன்? உயிர் துறப்பதே சுகம்" என்று எண்ணுகிறேன். இப்படி வருந்தும்

ஆத்மதேவனுக்கு கோகர்ணன் சில தத்வோபதேசங்களைச் செய்தான். அதனால் வைராக்யம் அடைந்து ஆத்மதேவன் வீட்டைவிட்டுக் காடு சென்றான். துந்துலீயும் மகன் செய்யும் தொந்தரவு ஸஹிக்கமாட்டாதவளாய் கிணற்றில் விழுந்து மாண்டாள்.

கோகர்ணன் அந்த வீட்டில் வசிக்கப் பிரியமில்லாதவனாய் தீர்த்தயாத்திரை செய்யும்பொருட்டு தேசாடநம் செய்யப் புறப்பட்டான். காமவெறி கொண்ட துந்துகாரி ஐந்து வேசிப் பெண்களை தனது வீட்டில் வைத்துக் கொண்டு பலவிதமான கள்ளத் தொழில்களை செய்து திரவ்யம் தேடி அவ் வேசிப் பெண்களைப் போற்றி வந்தான். இப்படி சிலகாலம் கழியவே வேசிப் பெண்கள் பின்வருமாறு ஆலோசனை செய்தார்கள். "நம்மிடம் பேரன்பு கொண்ட இவன் பிறரகங்களில் புகுந்து களவாடி விலை உயர்ந்த ஆபரணங்களையும் மற்றுமுள்ள பொருட்களையும் நமக்குக் கொடுக்கிறான். பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்ற பழமொழியின்படி இவனை போலீஸ்காரர் பிடிப்பது நிச்சயம். அப்போது நம்மிட மிருக்கும் திரவ்யங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும். நம்முடைய கதி என்னவாகும்?" இப்படி ஆலோசித்து ஒரு நாள் இரவில் படுத்து உறங்கும்போது துந்துகாரியை அவ் ஐவரும் சேர்ந்து கழுத்தில் கயிற்றால் இறுக்கக் கட்டி வாயில் நெருப்புத் தணலை இட்டுத் திணித்துக் கொன்றுவிட்டார்கள். கொன்று வீட்டினுள்ளேயே பெரியதொரு குழி தோண்டிப் புதைத்துவிட்டார்கள். இம்மாதிரியான ஸாஹஸ காரியங்களைச் செய்வது பெண்களுக்கு இயல்பு. வேசிகளைப்பற்றி கேட்கவே வேண்டாம். இவ் விருத்தாந்தம் ஊரில் ஒருவருக்கும் தெரியாது. தாசிகள் ஊரில் உள்ளோருக்கு எங்களது நாயகன் பணத்தாசைப் பிடித்து தேசாந்தரம் சென்று இருக்கிறார். சில தினம் கழித்து வருவார் என்று உரைத்தார்கள். கெட்ட நடத்தையுள்ளவரிடத்தில் நம்பிக்கை வைப்பது மிகவும் அபாயம் என்பதற்கு இதுவே அத்தாக்ஷியாகும். மனத்தில் மிகக் கொடுமை வாய்ந்த அப் பெண்கள் வேறு புருடனை அடைந்து அவ் வகத்தை விட்டு அகன்று சென்றார்கள். துந்துகாரி துர்மரணமாய் மாண்டதால் பயங்கரமான ப்ரேத ரூபமாய் தோன்றி அங்குமிங்கும் திரிதல் ஆனான். உத்தரக்ரியைகள் செய்வதற்கு கதியாரும் இல்லாதது பற்றி அவன் ஒரு பெருங் காற்று வடிவமாகவே தோன்றி பசியினாலும், தாஹத்தினாலும், குளிரினாலும், சூரிய வெப்பத்தினாலும் வருந்தி நாநா திக்குகளில் அலைந்து கொண்டிருந்தான். தேசாந்தரம் சென்ற கோகர்ணன் இவன் மாண்டதைச் செவியுற்று கயா க்ஷேத்திரம் சென்று இவனுக்காக கயா ச்ராத்தம் செய்தான். அவன் செல்லும் ஒவ்வொரு தீர்த்தத்திலும் துந்துகாரியை உத்தேசித்து ச்ரார்த்தம், தர்ப்பணம் இவைகளைச் செய்து வந்தான். என்ன செய்தும் அவனுக்கு நல்ல

கதி கிடைக்கவில்லை. இப்படி பலகாலம் தீர்த்தயாத்திரை செய்து கோகர்ணன் தனது கிராமத்தில் வந்து தனது வீட்டில் படுத்தான். அன்று நள்ளிரவில் துந்துகாரி அவனது கண்முன் ஆடுபோலும், யானைபோலும், எருமைபோலும், கோர ரூபமான புருடன்போலும் பலவிதமான உருவங்களைக் காட்டினான். அதைக் கண்டு கோகர்ணன் துந்துகாரிதான் இப்படி தோன்றுகிறான் என்று அறிந்து கயா ச்ராத்தம் முதலான அநேக கிரியைகள் செய்தும் ஏன் இவனுக்கு நற்கதி கிடைக்கவில்லை என்று ஸந்தேகித்து, கையில் கமண்டலுவில் இருந்த புண்ய தீர்த்தத்தை அவன்மீது வாரி இறைத்தான். அதனால் சிறிது நல்லறிவு வாய்ந்த துந்துகாரி ஆகாசவாணியாய் அவனுக்கு உரைத்தான். “நான் உனது ஸஹோதரன் துந்துகாரி, எனது பாப கர்மங்களால் இக்கதி யடைந்தேன். கருணை கூர்ந்து எனக்கு நற்கதி யளிக்கவேணும்” என்று. கோகர்ணன் அநேக வித்வான்களைக் கேட்டும் அவ் வுபாயம் அவனுக்குப் புலப்படவில்லை. முடிவில் ஸூரிய பகவானை உபாஸித்தான். அத்தேவன் அவனுக்கு இரவில் சொப்பனத்தில் தோன்றி ‘ஸ்ரீ பாகவத புராணத்தை ஸப்தாஹ விதியால் இவனுக்குக் கேட்பித்தால் நற்கதி யடைவான்’ என்று அருள் புரிந்தார். அநேக ப்ராமணர்களை முன் வைத்துக் கொண்டு ஸப்தாஹ பாராயண விதி தொடங்கவே துந்துகாரி காற்று உருவம் கொண்டு அவ்வருகில் இருக்கும் பெரியதொரு துவாரமுள்ள ஒரு மூங்கிலில் நுழைந்தான். அதில் ஏழு கணுக்கள் இருந்தன. ஒவ்வொரு நாளும் பாராயணம் முடிந்தவுடன் ஒரு கணு வெடித்துப்போவதை அனைவரும் கண்டார்கள். இவ்விதம் ஏழு நாட்களில் ஏழு கணுக்களும் வெடித்து மூங்கில் கீழே விழவே துந்துகாரி ஆகாசத்தில் தேவ ரூபியாய் தோன்றி கோகர்ணனை புகழ்ந்து துதித்து விமானத்தில் ஏறி தேவலோகம் சென்றான்.

ஸ்ரீ பாகவத பாராயணத்தை வெகு ஊக்கமாய் கேட்டபடியால் துந்துகாரி நல்லகதி கிடைத்து பரமானந்தத்தை அடைந்து மகிழ்ந்தான்.

முற்றிற்று

ஸ்ரீ:

வேதாந்த ரக்ஷாமணி விமர்சம்

ப்ரஹ்ம ஸ்ரீ மஹாமஹோபாத்யாய அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளின் ஸ்ரீ பாஷ்ய தூஷண க்ரந்தத்திற்கு பதிலுரை:—

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யார்]

கல்கத்தாவிலிருக்கும் ப்ரஹ்ம ஸ்ரீமஹாமஹோபாத்யாய அநந்த கிருஷ்ண சாஸ்திரிகள் ஸ்ரீபாஷ்யத்தை தூஷிப்பதாகக் கோரி சில வருஷங்களாக க்ரந்தங்களெழுதிவந்திருக்கிறார். இப்பொழுது ஸ்ரீ பாஷ்ய ஸமாலோசனம் செய்வதாகச் சொல்லி ‘வேதாந்த ரக்ஷாமணி’ என்னும் க்ரந்தத்தைத் தொடங்கி அதின் முதல் பாகத்தை அச்சிட்டு அடியேனுக்கு அனுப்பியிருக்கிறார். முதல் பாகத்தில் முதல் ஐந்து அதிகரணங்கள் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த க்ரந்தத்தில் பக்கம் பக்கமாக அவர் வாக்யங்களைத் தமிழில் காட்டி அவற்றிற்கு பதில் கூறப்படும். சில வருஷங்களுக்கு முன் சாஸ்திரிகள் க்ரந்தமொன்றுக்கு பதிலாக ‘அத்வைத பரிபாஷா பூமிகா விமர்சம்’ என்றொரு ஸம்ஸ்க்ருத க்ரந்தமெழுதி அச்சிட்டிருந்தேன். அதற்கும் ஸ்ரீ உபய மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்வாமி ஸாதித்த ‘வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டத்திற்கும்’ பதிலாக ‘அத்வைத மார்த்தாண்டம்’ என்றொரு க்ரந்தம் சாஸ்திரிகளால் வெளியிடப்பட்டது. தாஸனிடமுள்ள நிரதிசய ஸௌஹார்த்தத்தோடு, அவர் அடியேனுக்கு அந்த க்ரந்தத்தைக் கொடுத்த சில தினங்களில் அடியேனால் பதில் க்ரந்தம் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டு சில வருஷங்களாகியும், அச்சிடுவதற்காக வேண்டியபடி யெழுதி அச்சிட ஸௌகர்யப்படவில்லை. சீக்கிரத்தில் வெளிவரும். ஸம்ஸ்க்ருதத்தில் எழுதும் க்ரந்தங்களைப் படிப்பாரில்லை. சொல்லப்படும் பக்ஷப்ரதிபக்ஷிகளை எல்லோரும் அறியக்கூடியபடி தமிழ் பாஷையிலேயே பெரியோர் க்ருபையை முன்னிட்டு இந்த பதிலுரையை எழுதுகிறேன். கேவலம் தர்க்கசாஸ்த்ரமாக விருக்கும் ஸ்வல்ப பாகங்கள் மட்டும் இங்கே விஸ்தரிக்கப்படமாட்டா. ப்ராசீன அத்வைத க்ரந்தங்களில் ஸ்ரீ பாஷ்ய ஸித்தாந்தாம்ஸங்களுக்கு அநுகூலமாகவே பல பாகங்களுள்ளன. ஸ்ரீ பாஷ்யத்திற்கு முந்தியதும் பிந்தியதுமான அத்வைத க்ரந்தங்களைக் கொண்டும் இங்கே பதிலுரைக்கப்படும். அவர்களுரைகளுக்கே சாஸ்திரிகள் கக்ஷிகள் அனேக விடங்களில் விருத்தமென்பதையும், ஸ்ரீ பாஷ்யத்தை தூஷிப்பதனால் அவர் பெரியார்கள் க்ரந்தங்களையே தூஷிப்பதாவதையும், நன்கு காட்டுகிறோம்.

அத்வைத க்ரந்த கர்த்தாக்களில் பெரும்பான்மையோர் கரைபுரண்ட விஷ்ணு பக்தியுள்ளவர்கள்; யாவதாயுஷம் அந்த பக்தியிலேயே ஆழ்ந்தவர்கள்; அதையே மோக்ஷ ஸாதனமாகப் பற்றியவர்கள்; அப்படியே உத்கோஷித்தவர்கள்; தங்கள் ஆஶ்ரம தர்மங்களை எல்லையற்ற ஶ்ரத்தையோடு யாவதாயுஷம் யதாவிதி அனுஷ்டித்தவர்கள்.—ஶாந்த வைராக்ய நிதிகள், கர்மத்யாகம், முதலியதை க்வசித் பேசினாலும், அதையவர்கள் அனுஷ்டித்தவரேயல்ல. பக்தியோகத்தை மோக்ஷ ஸாதனமென்று விஶேஷமாகத் தங்கள் க்ரந்தங்களில் ஆதரித்திருக்கிறார்கள் கீதாதாத்பர்ய சந்த்ரிகை முடிவில் அனேக கீதா வ்யாக்யானங்களையும் பரிஶீலனை செய்து எல்லாவற்றிலும் பொதுவாக ஏகரூபமாக நிச்சயிக்கப்பட்ட அம்ஶங்களை எடுத்துக் காட்டப்பட்டது. "பிஶாசாந்தி தேவ குப்த ஶங்கர யாதவ ப்ரகாஶ பாஸ்கர நாராயணார்ய யக்ஞஸ்வாமி" முதலிய நூற்றுக்கணக்கான பாஷ்யகாரர்கள் பலராலும், நம் ஸித்தாந்த தீர்த்தகாரர்களான யாமுனார்ய பாஷ்யகாராதிகளாலும் ஏகமனஸ்கமாய் அறுதியிடப்பட்டிருக்கும் ஸாரார்த்தம் "பகவான் நாராயணனே பரதத்வம், அநந்ய ஶரணர்களாக அவரவரதிகாரத்திற்குத் தக்கபடி அவரையே ஆஶ்ரயிப்பதுதான் ஶ்ரேஷ்டமான தர்மம்" என்பதேயாம் என்று அங்கே ஸாதிக்கப்பட்டது.

ஸ்ரீயாமுனரின் கீதார்த்த ஸங்க்ரஹம் முதல் ஶ்லோகத்தில் 'ஸ்வதர்ம ஞான வைராக்ய ஸாத்யமான பக்தியொன்றுக்கே விஷயமாகும் நாராயணன் என்னும் பரப்ரஹ்மம் கீதாஶாஸ்த்ரத்தில் நன்கு உபதேசிக்கப்பட்டது' என்று ஸாதித்தது போலும், கீதாபாஷ்யாரம்பத்தில் 'பரம்ப்ரஹ்ம புருஷோத்தமோ நாராயண:' என்று ஸாதித்தது போலுமே ஸ்ரீஶாங்கர கீதா பாஷ்யமும் 'நாராயண: பரோ அவ்யக்தாத்' என்ற ப்ரமாண வசனத்தை உதாஹரித்துக்கொண்டு 'அந்தபகவான் ஞானைஶ்வர்ய ஶக்தி பலவீர்ய தேஜஸ்ஸுக்களோடு ஸர்வகாலமும் ஸம்பன்னராய் பூதங்களுக்கு ஈஶ்வரராய், தேஹத்தோடு பிறந்தவர்போல, லோகாநுக்ரஹம் செய்து கொண்டு, தனக்குவேண்டிய ப்ரயோஜனமில்லாவிடினும், லோகானுக்ரஹேச்சையால், வைதிகமான ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி தர்மமிரண்டையும் அர்ஜுனனுக்கு உபதேசித்தார்' என்று பூமிகையில் பணித்தார். அதற்கு முன் வாக்யங்களில் 'அந்த ஆதிகர்த்தாவான நாராயணனென்னும் திருநாமமுடைய விஷ்ணு வஸுதேவரிடமிருந்து க்ருஷ்ணனாக அவதரித்தார் என்றும் பணித்தார். 'ஷட்குணங்களோடும் ஸர்வதாஸம்பன்னன் ஈஶ்வரன்' என்றதால் 'ஸ்வாபாவிகீ ஞான பலக்ரியா ச' என்ற ஶ்ருதியையாதரித்து, 'ஈஶ்வரனுடைய உத்தமமான ஞானம், ஶக்தி முதலிய குணங்கள் நித்யமும் ஸ்வாபாவிகமுமானவை' என்று விளக்கினார்.

பகவான் நாராயணனுடைய ஸ்வாபாவிகமும் நித்யமுமான ஷாட்குண்யத்தில் ஸ்ரீஶங்கரர் ஆரம்பத்திலேயே ஈடுபட்டபடி, நம்கீதாபாஷ்யமும் பகவத் குணவிக்ரஹ விபூதிகளில் ஈடுபாட்டுடன் தொடங்கிற்று. இந்த மூன்று க்ரந்தங்களும் நாராயணன் பரதத்வமென்னும், குணபரிபூர்ணனென்னும். உலகத்தை யனுக்ரஹிப்பதற்கே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறதென்றும் கீதையின் பொருளாக உரைத்தன.

18-வது அத்யாயம் 'ஈஶ்வரஸ்ஸர்வ பூதானாம்' 'தமேவ ஶரணம் கச்ச,' என்றும் ஶ்லோகங்களின் பாஷ்யத்தில், பரமஶாம்பவரான ஸ்ரீ அபிநவகுப்தாசார்யர் "அவரையே ஶரணம் பற்று" என்று தொடங்கி 'என் ப்ரஸாதத்தால்' என்று இங்கே நிர்வாஹ வாக்யத்தைப்(பலமளிக்கும் நிர்வஹணத்தை)பணிக்கும் பகவான் பரமத்மாவான ஈஶ்வரனையும் வாஸுதேவனையும் ஒன்றாகவே யோஜிப்பதால், இந்த ஞானமே குஹ்யமான வேதாந்தத்திலும் அதிகமான குஹ்யம், என்றார். 'ஹ்ருதயகுஹையிலிருக்கும் ஈஶ்வரனையே பூர்ணபாவத்தோடு ஶரணம்பற்று' என்றவிடத்தில் 'தன் கூர்மையான நகங்களால் கிழிக்கப்பட்ட காமக்ரோதம் முதலிய மதயானைகளிலிருந்து வெளிப்படும் முக்தரென்னும் முத்துக்களின் ஒளியில் ப்ரகாஶிக்கும் ப்ரதாபமஹஸ்ஸையுடைய ஸிம்ஹமக்குட்டி(இளஞ்சிங்கம்) குஹைக்குள் அதிஷ்டானம் செய்கையில் சபலமனஸாயும், ஓட்டம் பிடிப்பதில் மட்டும் பலமுடையதாயுமுள்ள மான்குட்டிகள் (இந்த்ரியங்கள்) தங்கள் வ்யாபாரங்களைப் பரிஶீலனம் செய்ய ஸாமர்த்யத்தைத் தரிக்கமாட்டா,' என்று உரைத்தார். 'அசோதை யிளஞ்சிங்கம்' என்ற அனுபவம் போன்றதாயிற்று. 'இளஞ்சிங்கம்' என்று தொடக்கத்திலிருந்த அனுபவம் மேலே 'மாரிமலை முழைஞ்சில்' 'மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம்' என்று முற்றினதசையையும் அடைந்தது. ஆலங்காரிகாக்ரேஸரரான ஸ்ரீ அபிநவகுப்த ரனுபவ மித்தகையது. ரஸபுருஷனிடம் ரஸநிபுணரின் ரஸானுபவம்.' கீதாஶாஸ்த்ரத்தால் பக்தியோகம் அவதரிப்பிக்கப்பட்டது' என்று நம் பாஷ்யம் அறுதியிட்டதுபோல 'ஞானம் என்பது பக்தியின் அவாந்தர வ்யாபாரம்; பக்திதான் மோக்ஷஹேது' என்று ஸ்ரீதரீய வ்யாக்யானத்தின் முடிவில் கீதாதாத்பர்ய நிகமனம். ஸ்ரீபாகவதத்திற்கு ஸ்ரீ தரர் செய்த வ்யாக்யானத்திற்கு வ்யாக்யானமெழுதியவர் ஸ்ரீதரரை ந்ருஸிம்ஹ பாதாப்ஜாளி:' (ந்ருஸிம்ஹத்தின் திருவடித் தாமரையில் லயித்ததேன் வண்டு)என்று வர்ணித்தார்.

முராரியை நமஸ்கரித்துத் தொடங்கிய ஸங்க்ஷேபஶாரீரகம்

'புஜங்கமாங்கஶாயினே விஹங்கமாங்க காமினே |
துரங்கமாங்க பேதினே நமோரதாங்க தாரிணே' ||

என்று மங்களம் பாடி முடிந்தது. 'இதம்ஹிரங்கம்' என்ற ஸ்ரீ சஸ்கரா நுபவம் நெஞ்சில் ஊறிவிட்டது—'த்வேஷத்தையே வ்ரதமாகக்கொண்டவனுக்கும் (ஶிஶுபாலனுக்கும், கண்டா கர்ணனுக்கும்) தன் பதத்தை (ஸ்தானத்தை, திருவடியை) யளிக்கும் அந்த விஷ்ணுவுக்கு நமஸ்காரம்' என்று ஸ்ரீமதுஸூதன ஸரஸ்வதியின் அத்வைத ஸித்தி முடிந்தது. 'எந்தக் கருணாநிதியைச் சரணம் பற்றி ஶத்ரு ஸஹோதரனும் (விபீஷணனும்) முக்தி பெற்றானோ, அந்த ஜானகீகாந்தனை யாஶ்ரயிக்கிறேன்' என்று ஸ்ரீ ஶங்கர ஸூத்ர பாஷ்யத்தின் வ்யாக்யானமான ரத்னப்ரபை தொடங்கிற்று. 'இந்த வ்யாக்யை ரகுவரன் திருவடித் தாமரை த்வந்த்வத்தை யடைந்தது' என்று முடிந்தது. 'இருட்டைச் சேதிக்கும் ஹரிக்கு நமஸ்காரம்' என்று ஸ்ரீ ஸுரேஶ்வருடைய நைஷ்கர்ம்ய ஸித்தி தொடங்கிற்று. ஸ்ரீ ஶங்கரர் பாஷ்யங்களுக்கெல்லாம் வ்யாக்யானம் செய்த ஸ்ரீ ஆனந்தகிரி சிறந்த விஷ்ணு பக்தர். 'வாஸுதேவனை ஸர்வ காலமும் பணிகிறேன்; அச்யுதனை நமஸ்கரித்து' என்று அவருடைய கீதா பாஷ்ய டீகை தொடங்கி 'இது புருஷோத்தமனை யடையட்டும்' என்று முடிந்தது. தைத்திரீய வார்த்திகத்திற்கு அவர் செய்த டீகை 'க்ருஷ்ணனுக்கு நமஸ்காரம்' என்று தொடங்கி 'இந்த வ்யாக்யை க்ருஷ்ணனிடத்தில் நீங்காத த்ருஷ்ணையோடு பகவானைத் தவிர மற்றொன்றிலும் ப்ரீதியில்லாமல் விளங்கட்டும்' என்று முடிந்தது. 'ஆனந்த ரூபமான ஹரியை பஜிக்கிறோம்' என்று பாமதீ வ்யாக்யானமான ருஜு ப்ரகாஶிகை தொடங்கிற்று. 'ஸ்ரீமான் ந்ரு கண்டீரவ:' என்று பாமதீ வ்யாக்யானமான கல்பதருவின் மங்களம். விவரணத்தின் வ்யாக்யானமான ருஜு விவரணம் 'கார்மேக வண்ணனும், ஸச்சிதானந்த ரூபனும், நதஜனஹிதனுமான ராமனை ஆஶ்ரயிக்கிறேன்' என்று தொடங்கி 'ஹே ராம! ஹ்ருதய கமலமென்னும் பீடத்தோடு கூடிய என்னுடைய தேஹமென்னும் இல்லத்தில் எழுந்தருளிக் கோவில் கொள்ளவேணும்; என் ஈஶனை உம்மை அங்கே அன்புடன் உபசாரங்களால் ஆராதிக்கிறேன்' என்று மங்களகானத்துடன் முடிந்தது. 'நமோ நவ்யநஶ்யாம காம காமித தேஹினே கமலா காமஸௌதா மகனகா முகமேஹினே" என்று ப்ரஹ்மானந்தீயம் தொடங்கிற்று. 'விஷத்தைப் புசி' என்று பேசுவதற்கு 'சத்ரு வீட்டில் புசியாதே' என்று பொருளென்று சாஸ்த்ரகாரர்கள் சொல்லுவர். விஷத்தைத் தின்னாலும் தின்னலாம் ஶத்ரு வீட்டில் தின்னலாகாது என்று கருத்து. "விஷத்தைச் சாப்பிடு" என்பதற்கு 'விஷ்ணுவைப் பூஜிக்காமல், அவருக்கு நிவேதனம் செய்யாமல் சாப்பிடாதே. விஷத்தை சாப்பிட்டாலும் சாப்பிடு' என்று ப்ரஹ்மானந்தர் பொருளுரைத்தார். ஸ்ரீ வைஷ்ணவ உலகம் அவரை யென்னென்று கொண்டாடுவது. அத்

வைதாசிரியர்களின் பகவத் பக்தி நிஷ்டையின் மிகுதியை ஆங்காங்கு எடுத்துக் காட்டுவோம். பக்கம் பக்கமாகப் பூர்வபக்ஷ க்ரந்தத்தை யநுவாதம் செய்து பதில் கூறத் தொடங்குவோம்.

ஸ்ரீசாஸ்திரிகள் வாதம். 1—4 பக்கங்கள் "பிறகு அதனாலேயே ப்ரஹ்ம விசாரமென்பது விரும்பிச் செய்ய யோக்யமானது' என்று முதல் ஸூத்ரம் 'எதற்குப்பின்பு' 'முன்பு நடந்ததென்ன' என்பதைப் பற்றித் தகரார். 'கர்ம விசாரம் (தர்ம ஜிக்ஞாஸை) செய்த பிறகு. 'அந்தக் காரணத்தாலேயே ப்ரஹ்ம விசாரம் செய்யலாகும்,' என்று ஸ்ரீ பாஷ்யம். (1) நித்யா நித்யப் பொருள்களின் பகுத்தறிவு, (2) ஐஹிகாமுஷ்மிக போகங்களில் வைராக்யம், (3) சமம், தமம், உபரதி (ஸந்யாஸம்), திதிக்ஷை (கஷ்ட ஸஹனம்), ஸமாதானம் (ஐகாக்ர்யம்) ச்ரத்தாதனம் முதலிய அந்தரங்க ஸாதனங்களின் ஸம்பத்தி, (4) மோக்ஷேச்சை, ஆக இந்நான்கு ஸாதனங்களும் ஸித்தித்த பிறகு என்று அத்வைதிகள் பொருளுரைப்பது ஒவ்வாது. வேதாந்த விசாரத்திற்கு முன் இந்த ஸாதனங்கள் உள்ளபடி ஸித்திக்க மாட்டா, இவை ஸித்திப்பதற்கு வேதாந்த விசாரம் செய்து தீரவேண்டும். வேதாந்த விசாரம் செய்வதற்கு முன் இவை ஸித்தித்துத் தீரவேண்டும் என்று அந்யோந்யாச்ரய தோஷம் வரும். மோக்ஷ ஸாதனமாக சாஸ்த்ரங்களாலுபதேசிக்கும் ப்ரஹ்ம ஞானம், ப்ரஹ்ம ஸ்வரூபத்தை யறிவிக்கும் வேதாந்த வாக்யத்தாலேற்படும் வாக்யப் பொருளறிவுமட்டுமல்ல. பின்னெதுவென்றால், ப்ரஹ்ம ஸ்வரூப விஷயத்தை யறிவிக்கும் வேதாந்த வாக்யங்களால் அறிவிக்கப்பட்ட ப்ரஹ்மத்தை எல்லையற்ற ப்ரீதியுடன் யாவதாயுஷம் பக்தி (த்யானம் செய்வது) என்னும் உபாஸன ரூபமான ஞானமே. அந்த உபாஸனம் பக்தி, த்யானம், நிதித்யாஸனம் என்னும் ஞானம் தர்சனம் போன்ற தெளிவுடையதா யிருக்கவேண்டும். (தர்சன ஸமானாகாரம்). ஆத்மா தான் பார்க்கப்பட வேண்டும், கேட்கப்படவேண்டும், மனனம் செய்யப்படவேண்டும், விரும்பி இடைவிடாமல் தியானம் செய்யப் படவேண்டும், என்ற வாக்கியத்தில் "பார்க்கப்படவேணும் என்ற சொல்லால் தியான ரூபமான ஞானம் காட்சியைப்போன்ற தெளிவுடையதா யிருக்க வேணும்" என்பது விதிக்கப்படுகிறது. உபாயமென்னும் பக்தி யோகத்திற்கு சாஸ்திரங்களா லவரவர்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களி னனுஷ்டானம் பலத்தி லிச்சை யில்லாமல் ஈச்வராராதனமாக ஸஹகாரியாக அனுஷ்டிக்கப்பட வேண்டியது அவச்யம் இன்றி யமையாதது. அந்த கர்மங்களை முறைப்படி யனுஷ்டிக்க கர்மஸ்வ ரூபாதிகள் அனுஷ்டிக்கும் முறைகள் இவையெல்லாம் நன்றாய் தெரியவேணும். அது தெரிவதற்காக, மீமாம்ஸைகளைக்கொண்டு கர்ம விசாரம் முன்பே செய்திருக்க வேணும் என்று ஸ்ரீ பாஷ்ய மதம். ப்ரபஞ்சம் பொய், ஸம்சார பந்தம்

பொய், ப்ரம்ம ஸ்வரூபத்தைப் பற்றிய அக்ஞானத்தால் பொய்யான ஸம்ஸாரத்தின் தோற்ற மேற்படுகிறது. இது பொய் யென்னும் உண்மையில் நாம் ஒன்றேயானது ப்ரபஞ்ச சூன்யமுமான, ப்ரஹ்மமேதான் என்ற உண்மை யறிவினால் ஸம்ஸார பந்தம் நசிக்கும். ப்ரஹ்மத்தைக் காட்டிலும் மறுபொருள் தோன்றுவதே ஸம்ஸார பந்தத்திற்குக் காரணம். பொய்யான பந்தம் பொய்யென்ற ஞானத்தாலேயே தொலையும். அது ஸம்ஸாரமென்னும் பேதத் தோற்றத்தைத் தொலைக்கும் வலிமை யுடையது. 'நீ அதாக இருக்கிறாய்' முதலிய மஹா வாக்யங்களால் பிறக்கும் ஞானமே. அந்த வாக்யத்தால் ஞான மேற்படும் விஷயத்தில், அதன் உத்பத்தியாலாவது, பலத்திலாவது, கர்மானுஷ்டானத்தின் அபேக்ஷை நேராகக் கிடையாது. ஞானத்தை அடைய விருப்பம் உண்டாவதற்குத்தான் கர்மங்கள் உபயோகப்படும். இப்படி ப்ரஹ்ம ஞானத்திற்கு கர்மங்கள் உபயோக மற்றதாகையால், 'முற்கூறிய நான்கு ஸாதனங்களை ஸம்பாதித்த பிறகு' என்று தான் ஸூத்ரத்திலுள்ள 'பிறகு' என்னும் பதத்திற்குப் பொருள் கொள்ள வேணுமென்று அத்வைத ஸித்தாந்தத்தை அனுவாதம் செய்து அதை லகு ஸித்தாந்தத்தில் நிரஸிக்கிறார். உபாஸநரூபமான ப்ரஹ்ம ஞானம்தான் பகவதனுக்ரஹத்வாரமாக பேதத் தோற்றத்திற்கு உண்மையான விரோதி. மஹா வாக்யத்தால் மட்டும் பிறக்கும் ப்ரஹ்ம ஸாக்ஷாத்கார ரூபமான ப்ரமாணாதீன ஞானம், பேதத் தோற்றத்திற்கு விரோதியல்ல என்றும் நினைக்கிறார். ஞானத்தால் பந்தம் தொலைவதென்று சாஸ்த்ரம் பேசுவது, பந்தம் பொய்யென்று விளக்குமா? விளக்காதா, என்று முதலில் ஓர் விசாரம். வாக்யத்தில் உண்டாவதும், நாம் ப்ரயத்னம் செய்யாமல் ப்ரமாண பலத்தால் தானாக உண்டாகும் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரமான ஞானம் மோக்ஷத்திற்கு ஸாதனமானால், அத்வைதமே வேதாந்தங்களின் உண்மைக் கருத்தாகும். உபாஸனம், பக்தி, தியானம் என்னும் ஞானம்தான் மோக்ஷஸாதநமென்றால் ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதமே வேதாந்தங்களின் கருத்தாகும். வாக்யத்தின் பொருளை அறிதலைக் காட்டிலும் வேறான உபாஸனம், பக்தி, த்யானம் என்று சொல்லப்படும் ஞானம்தான் வேதாந்தத்திற்கு இஷ்டமானது. நன்கு அறிந்து ப்ரக்ஞையைச் செய்யக் கடவன்,' 'கேட்டறிந்து விஞ்ஞானத்தைச் செய்யக்கடவன்,' 'ஓம் என்றே ஆத்மாவை தியானிக்கக் கடவன்' 'ஆத்மா என்னும் லோகத்தையே உபாஸிக்கக் கடவன்,' 'ஆத்மாதான் பார்க்கவேண்டியவன், கேட்கவேண்டியவன், மனனம் செய்யவேண்டியவன், நிதித்யாசனம் செய்யவேண்டியவன்,' 'அவன் தேடவேண்டியவன், விஜிக்ஞாஸிக்க வேண்டியவன்,' முதலிய விதி வாக்யங்கள் ஸ்ரீ பாஷ்யகாரர் காட்டும் பிரமாணங்கள். இந்த வாக்யங்கள் ஞானத்தை விதிப்பதில்லை என்று பாமதீமதம்:

ஞான விதியை ஒப்புக்கொள்ளும் மதத்திலும், 'பார்க்கப்படவேண்டியது' என்னுமிடத்தில் தர்சன விதியில்லை. கேட்பது முதலியதில்தான் விதி. கேட்பது முதலியதால் கிடைக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைப்பற்றிய வாக்ய பொருளறிவுமட்டும் பலம் (பிரயோஜனம்) அல்ல; ஸாக்ஷாத்கார ரூபமான ஞானம்தான் பலன். பாமதீ மதத்தில், பாவனையின் மிகுதியோடு கூடிய மனமென்னும் உள்ளிந்திரியத்தால் ஏற்படும் ஆத்ம ஞானம் ஸாக்ஷாத்காரமாகும். விவரண மதத்தில், சப்தத்தாலேயே ஸாக்ஷாத்காரம் உண்டாகுமென்று ஒப்புவதால் வாக்யத்தாலேயே ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் கூடுகிறது. இன்னுமொரு விசேஷமுண்டு. ஸ்ரீ பாஷ்ய மதத்தில் தியானம் மட்டும்தான் விதிக்கப்படுகிறது. "கேட்கவேண்டும்," "யுக்திகளால் மனனம் செய்யவேண்டும்," என்பது நம் ஆசையாலேயே ப்ராப்தமானதை அனுவதிக்கிறது. அவ்விரண்டிலும் விதியில்லை. இந்த தியானமும், 'த்ருவானு ஸ்மிருதி' என்னும் இடை விடாத ஸ்மரணமாகையால் பார்ப்பதைப் போன்ற தெளிவடைவதென்பது, 'பார்க்கவேண்டும்' என்ற சொல்லால் கட்டளை யிடப்படுகிறது. அத்வைத மதத்திலோவென்றால் 'த்ருவானு ஸ்மிருதி' என்றும் 'நினைப்பின் தொடர்ச்சி' தரிசனமென்னும் காட்சியாகா தாகையாலும், காட்சியைப்போன்ற தெளிவுடையதென்று பொருளுரைத்தால், பார்க்கவேணும் என்னும் பதத்திற்கு "பார்ப்பது போன்ற" என்று உபசாரப் பொருள் கூறவேண்டியிருப்பதாலும், மனனம் முதலியதால் வேதாந்த வாக்யத்தால் உண்டாகும் காட்சியே அக்ஞானத்தை தொலைப்பதின் மூலமாக மோட்ச சாதனமென்று பற்றப்படுகிறது. "அந்தப்பராவரம் காணப்படுகையில் ஹ்ருதயத்தின் முடிச்சு அவிழ்கிறது. ஸர்வ சம்சயங்களும் அறுகின்றன. இவனுடைய கர்மங்கள் நசிக்கின்றன." என்ற சுருதி இந்த கொள்கையோடு பொருந்தும். பாவனையின் மிகுதியினால் ஸாக்ஷாத்காரமுண்டாவதை எங்கும் கண்டதில்லை. அப்படியானால் ஸ்ரீ பாஷ்யகாரர் சாஸ்த்ரயோந்யதிகரணத்தில் யோகிப்ரத்யக்ஷத்தை மறுதளிப்பது தப்பாகும். 'ஸ்ம்ருதி' 'நினைப்பு' என்பதே. 'ப்ரத்யக்ஷம்' என்று சொல்வது விருத்தம். 'இந்த ஆத்மா கேவல ப்ரவசனம் என்றும் மனனத்தாலாவது கேவல நிதித்யாஸனத்தாலாவது, கேள்வியின் மிகுதியாலாவது, அடையத்தக்கவனல்ல. எவனையே இவன் வரிக்கிறானோ அவனாலே அடையத் தக்கவன். இவனுக்கு இந்த ஆத்மா தன் ஸ்வரூபத்தை ப்ரகாசிப்பிக்கிறான்' என்கிற ச்ருதியால், கேவல ச்ரவணாதிகள் உபாயமாக மாட்டாவென்று சொல்லி, ஆத்மாவினாலேயே (தன்னாலேயே) ஆத்மாவின் (தன்னுடைய) அடைதலையும், அதற்குக் காரணம் ஆத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்காரமே யென்றும், காட்டப்பட்டிருப்பதும் அத்வைதத்திற்குத் தான்

பொருந்தும். இந்த ச்ருதியில் ஸ்ரீ பாஷ்ய மதப்படி "ஆத்மா" வென்பது ஸகுணமான ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது. எல்லா வுலகத்தையும் சரீரமாகவுடைய பரமாத்மாதான் அந்தப் பதத்திற்கு முக்கியப் பொருள். அத்வைத மதத்தில் மனம் முதலிய உபாதியற்ற ஸ்வரூப சைதந்யந்தான் 'ஆத்மா' என்பதற்குப் பொருள். 'ஆத்மாதான் ஆத்மாவுக்கு பந்து; ஆத்மாவே ஆத்மாவுக்கு சத்ரு' என்ற கீதா வசனமும் இதற்குப் பொருந்தும். உபாதியோடு கூடிய ஜீவன் பந்தத்தின் பொருட்டாவான்; உபாதியில்லாதவன் மோக்ஷத்தின் பொருட்டாவான். இதனால் 'அடைகிறவனும், அடையப் படுவதும் ஒன்றே' என்று விளக்கப் படுகிறது. 'ப்ரஹ்மத்தை யறிந்தான், ப்ரஹ்மமேயானான்' என்ற ச்ருதியின் அர்த்தம் இதில் சேரும். 'எந்த பரமாத்மாவை இந்த ஸாதகன் வரிக்கிறானோ, அந்த ஸாதகனால் இந்த பரமாத்மா அடையப்படுவான். அந்த ஸாதகனுக்கு இந்த பரமாத்மா தன் ஸ்வரூபத்தை ப்ரகாசப்படுத்துகிறான்' என்று அத்வைதமதப்படி விவரணம், ஸ்ரீ பாஷ்ய மதப்படியோவென்றால், 'அந்த ஸாதகனால் இந்த பரமாத்மா அடையப்படுவான். அந்த ஸாதகனுக்கு இந்த பரமாத்மா தன் ஸ்வரூபத்தை ப்ரகாசிப்பிக்கிறார்' என்று விவரணம்.

இங்கே ஸ்ரீ பாஷ்ய மதத்தில் 'வரிக்கிறான்' என்னும் பதத்திற்கு 'அடையப்படவேண்டியதாக நினைக்கிறான்' என்று பொருளாயிருக்க ஸ்ரீ பாஷ்யம் வேறு பொருளுரைக்கிறது. அத்வைத மதத்தில் அந்த முக்கியப் பொருள் உரைக்கப்படுகிறது. அப்படியே ஸ்ரீ பாஷ்ய மதத்தின் 'இவன்' என்பது ஸ்வரஸமாக 'ப்ரத்யக்ஷமான ஜீவனை'ச் சொல்லுவதை விட்டு, கண்ணுக்குப் புலப்படாத ஈச்வரனைச் சொல்லுமென்கிறார்கள். அத்வைதத்திலோ வென்றால் 'இவன்' என்பதற்கு ஸ்வரஸப் பொருளைச் சொல்லுகிறோம். இரண்டு மதங்களிலும் 'அவனால் என்பதற்கு' ஸாதகனால் என்று பொருளாயினும் அத்வைதத்தில் ஸாதகனும் ப்ராப்யமும் ஒன்றேயென்று கொள்ளுகிறோம். ஆகையால் 'எவனால்' என்பதும் 'அவனால்' என்பதும் ஒருவனையே குறிக்கவேண்டிய நிர்ப்பந்தமும் அநுசரிக்கப்பட்டதாகிறது. அடைகிறவனும், அடையப்படும் ஈச்வரனும் ஒருவனே (ஒன்றே)யாம். உண்மையை ஆலோசித்தால், 'என்னிடத்தில் அநந்யமான யோகத்தால் நீங்காத பக்தியும்' என்ற கீதாவசனப்படி ஸகுண ப்ரஹ்மத்தின் உபாஸநமும் நிர்குண ப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதநமாகுமென்று அத்வைதிகளொப்புவதால் 'எவனையே இவன் பார்க்கிறானோ' என்று முற்கூறிய ச்ருதிக்கு ஸ்ரீ பாஷ்யகாரருரைக்கும் பொருளும் எங்கள் மதத்திற்கு விரோதமாகாது. 'ஸர்வகாலமும் என்விஷயமான நினைப்புடன் என்னைப் ப்ரீதியோடு பஜிப்பவருக்கு

என்னை யடைவிக்கும் ஸாதனமான பக்தியோகத்தைக் கொடுக்கிறேன்.' என்கிற கீதா வசனப்படி பரமாத்மா ஞானயோகத்தால் தான் அடையக்கூடியவர். பக்தியோகத்தால் அடையக்கூடியவரல்ல என்பது ஸ்பஷ்டமாகையால், பக்திரூபத்தை யடைந்த உபாஸநத்தால் அடையக் கூடியவர் என்கிற (ஸ்ரீ பாஷ்யபக்ஷம்) எப்படி கீதை முதலியதற்கு ஸம்மதமாகும்.

பதிலுரை—(1) முன் மீமாம்ஸை, பின் மீமாம்ஸை என்று மீமாம்ஸா சாஸ்திரத்தில் இரண்டு பாகங்கள். வேதவேதாந்தங்களை அங்கங்களோடு அத்யயனம் செய்தவருக்கு அந்த வாக்யங்களின் பொருள் மேலாகத் தெரியும். ஆனால் இப்படியா அப்படியா என்கிற ஸம்சயங்களிருக்கும். மேலாக ஏற்படும் பொருளறிவை 'ஆபாத ப்ரதீதி' என்பர். ஸம்சயத்திற்கு இடங்கொடுக்கும் ஆபாத ப்ரதீதி ஏற்பட்டபின் வேதவாக்யங்களின் உண்மையான கருத்துப்பொருளைத் தீர்மானம் செய்ய 'மீமாம்ஸை' என்னும் சாஸ்திரம் ப்ரவ்ருத்திக்கிற தென்பது ஸர்வ ஸம்மதம். வேதத்தின் முதல் பாகமான கர்ம காண்டத்தின் பொருளை விசாரித்துத் தீர்மானிப்பது பூர்வ மீமாம்ஸை. வேதத்தின் பின் (முடிவு) பாகமான, ப்ரஹ்ம காண்டமான வேதாந்தத்தின் பொருளை விசாரித்துத் தீர்மானிப்பது ப்ரஹ்ம மீமாம்ஸை. சாஸ்திர விஹிதமான கர்மங்களின் அநுஷ்டானம் ஈச்வரனை யாராதித்து, அவருடைய அநுக்ரஹத்தால் பலம் பெறும். பலங்களை யபேக்ஷிக்காமல் கேவலம் ஈச்வராராதனமாக கர்மங்களை யனுஷ்டிப்பதால், ஈச்வராநுக்ரஹமென்னும் அதிர்ஷ்டத்தால், சித்தம் சுத்தமாவதோடு பாபங்களும் கழியும். ப்ரஹ்ம வித்யைக்கு வேண்டிய சித்தசுத்திக்காக ஸ்வகர்மாநுஷ்டானத்தை பலத்தினாசை யில்லாமல் செய்து தீரவேணும். வர்ணாச்ரமாசார ஸம்பந்நனை புருஷனாலே பரமபுருஷனை விஷ்ணு ஆராதிக்கப்படுகிறார்' மற்றொன்றும் (நாந்ய:) அவருக்குத் தோஷகரமல்ல' 'நாந்ய: பந்தா:' என்பது போல—இந்த வசனம் ஸ்ரீ சங்கரர் நெஞ்சிலூரியது. கர்மானுஷ்டானத்திற்குக் கர்மங்களை யனுஷ்டிக்கும் முறை தெரியவேணும்.

அதற்காகக் கர்ம விசாரம் என்னும் கர்ம மீமாம்ஸையைக் கற்க வேண்டும். இந்த அம்சங்கள் எல்லோருக்கும் ஸம்மதம். ப்ரஹ்ம வித்யை உத்பத்தியாவதற்கு பலேச்சையில்லாத கர்மானுஷ்டானம் வேண்டுமென்று அத்வைதிகள் ஒப்புகிறார்கள். அந்த வித்யை யென்பது ஒரு க்ஷணத்திலுண்டாகும் அத்விதீய ப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்காரமென்பர். அது உண்டாவதற்கு நிஷ்காம கர்மானுஷ்டானம் இன்றியமையாதது என்கிறார்கள். ப்ரஹ்மவித்யை என்னும் மோக்ஷஸாதனம் யாவதாயுஷம்

ப்ரஹ்ம நினைப்பை ஆவ்ருத்தி செய்வதென்னும் உபாஸனம், த்யானம், பக்தியோகம். அது நிர்விக்நமாகக் கூடுவதற்காக சித்தம் சுத்தமாகவே எக்காலமுமிருக்கவும், பாப புத்திகள் உண்டாகாமல் தடுத்துவரவும் ஈஶ்வரானுக்ரஹமென்னும் உதவி கூடுவதற்காக ஈஶ்வராக்ஞா ஸித்தமான கர்மங்களின் நிஷ்காமானுஷ்டானம் அவசியம் வேண்டும். 'நாஶ்யஸ்தத் தோஷகாரக:' என்னும் வசநத்தில் வர்ணாச்ரம தர்மங்களி னனுஷ்டானத்தால் விஷ்ணுவை ஆராதிக்கும் மார்க்கம் தவிர மற்றொன்றும் அவருக்குத் தோஷகரமல்லவென்று ஸ்பஷ்டம். இப்படிக்கொத்த கர்மானுஷ்டானம் ப்ரஹ்மவித்தைக்கு ஸஹகாரியான அங்கமென்று சூத்ரங்கள் ஸ்பஷ்டமாக அறுதியிடுகின்றன. 'அக்னிஹோத்ரம் முதலியவை வித்யையின் கார்யத்தின் பொருட்டே உபயோகப்படுவனவாதலால் அவற்றிற்கு அச்லேஷமில்லை; அவற்றின் பலம் ஒட்டாமலிருப்பதில்லை. அவற்றை யனுஷ்டித்தே தீரவேண்டும். 'அந்த இப்பரமாத்மாவை வேதாந்த வசனத்தாலும், யக்ஞத்தாலும், தானத்தாலும்,' தபஸாலும், உபாஸிக்க விரும்புகிறார்கள்' என்று ச்ருதி காட்டுவதால் என்று 'அக்னிஹோத்ராதி ஸூத்ரம். வித்யை கைக்குக் கிட்டினவனுக்கு பின்புள்ள கர்மங்களும் பாபகர்மங்களைப்போல அச்லேஷத்தையும், விநாசத்தையும் அடையும். பின்புண்ய கர்மங்கள் ஒட்டுகிறதில்லை—என்று முன்பு 'இதராதிகரணத்தில்' கூறப்பட்டது. அதற்கு ஓரதிகரணத்திற்கு அடுத்த அதிகரணம் அக்னிஹோத்ராத்யதிகரணம். நித்யகர்மங்களான புண்ய கர்மங்கள் மட்டும் வித்யையின் கார்யத்திற்கே உபயோகப்படுவதால் அவை வித்யைக்கு அனுகூலமானதால், அவற்றைச் செய்தே தீரவேண்டும்; அவற்றின் பயன் ப்ரஹ்மவித்தென்னும் ஞானிக்கு ஒட்டும் என்று ஸ்ரீ சங்கரபாஷ்யத்தில் அந்த அதிகரணத்தின் பொருளுரை. தஹயிமமே' என்னும் ஸூத்ரத்தில், தஹயிமசே' என்பதற்கு 'ப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்காரம் வந்தபோது' என்று அத்வைதப் பொருளுரை. 'ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம்' என்னும் 'வித்யை' கிட்டின பிறகும் அக்னிஹோத்ரம் முதலிய நித்ய கர்மங்கள் செய்தே தீரவேண்டும். அவற்றின் பலங்கள் வித்யைக்கு அனுகூலங்களென்று ஸூத்ரமும், அதன் அத்வைத பாஷ்யாதிகளும் பேசுவது ஸ்பஷ்டம்.

'அக்னிஹோத்ராதி' என்னும் ஸூத்ரம் ஸகுண ப்ரஹ்மத்தின் உபாஸனம் என்னும் வித்யை விஷயத்தில் தான் ஸ்வாரஸமாக ஒட்டுமென்று ஸ்ரீ சங்கர பாஷ்யத்தின் தாத்பர்யமென்று அதன் வ்யாக்யானங்களில் காட்டியுளது. 'ப்ரஹ்மவித்திற்கு ப்ரஹ்மவித்யை கிட்டின பிறகு பின் வரப்போகிற அக்னிஹோத்ராதி நித்ய கர்மங்களுக்கு ப்ரஸக்தியில்லையே; தானே பரஹ்மமென்னும் ஞானம் பிறந்தவன் வேதகிங்கானல்

லவே, சாஸ்த்ரவச்யனல்லவே' என்று ஸ்ரீ சங்கர பாஷ்யத்தில் தாமே ஆக்ஷேபித்துக்கொண்டு ஸகுண ப்ரஹ்ம விஷயமான வித்யைகளில் நிஷ்டரானவருக்கு (உபாஸகர்களுக்கு, பக்தர்களுக்கு) கர்ம கர்த்ருத்வமுண்டாகையால் வித்யை தொடங்கி பின்பும் அவர்களுக்கு அக்னிஹோத்ராதி நித்யகர்மானுஷ்டானமுள்ளதே—அந்த நித்ய கர்மங்களை அவர்கள் பலத்தை யுத்தேசியாமல் செய்தால் வித்யையென்னும் உபாஸனத்தோடு அவைகூடச் சேருவது யுக்தமே என்று கூறினர். ஸகுண ப்ரஹ்மத்தின் உபாஸனையென்னும் பக்தியோக நிஷ்டை விஷயத்தில் தான் இந்த ஸூத்ரம் ஸமஞ்சஸமாக ஒட்டுமென்று ஸ்ரீ சங்கரர் தாத்பர்யமென்று ஸ்ரீ ஆநந்த கிரீயம், ரத்னப்ரபை முதலிய வ்யாக்யானங்கள் ஸ்பஷ்டமாகக் கூறின. 'ஸகுண ப்ரஹ்ம வித்யையின் பலத்தில் நித்ய கர்மங்கள் ஸாக்ஷாத்தாக உபயோகப்படுகின்றன வென்று இந்த ஸூத்ரத்தின் கருத்தென்று' ஸ்ரீ ஆனந்த கிரி பணிப்பு. ஸகுண ப்ரஹ்மத்தின் உபாஸனத்தை உபாயமாகக்கொள்ளும் நம் மதத்திற்குத் தான் இந்த ஸூத்ரம் ஸமஞ்சஸமென்று ஸ்ரீ அத்வைத க்ரந்தங்களின் ஸ்பஷ்டமான ஒப்புதல். 'ஸர்வம் ஸமஞ்ஜஸம் என்பது ஸ்ரீ பாஷ்யத்திற்குத்தான் கூடுமென்பது நிஸ்ஸம்சயம். மோக்ஷஸாதனமென்று ஆவ்ருத்யதிகரணத்தில் (பலாத்யாயத்தொடக்கத்தில்) ஸூத்ரகாரர் நிர்ணயித்த ப்ரஹ்ம த்யானம்(ப்ரஹ்ம விஷயமாக பொங்கும் மகிழ்ச்சியோடு இன்பநினைப்பின் ஆவ்ருத்தி) முடிவுகாலம் வரையில் செய்தே தீரவேண்டுமென்று ஆப்ராயணாதிகரணம் தீர்மானித்தது. இந்த அதிகரணத்தின் தொடக்கத்தில் 'எல்லா உபாஸனங்களிலும் ப்ரஹ்ம நினைப்பை ஆவ்ருத்தி செய்ய வேண்டு மென்று முதலதிகரணத்தில் (ஆவ்ருத்யதிகரணத்தில்) ஸித்தித்தது' என்று ஸ்ரீ சங்கர பாஷ்யத்தின் முதல் வாக்யம். நிர்குண ப்ரஹ்மாத்மைக்ய ஞானம் ஆவ்ருத்தியில்லாமலே மோக்ஷ ஸாதனமாகலாமென்று ஆவ்ருத்தி ஸூத்ரத்திற்கு நேர் விரோதமாகத் தாம் அங்கே பேசிய ஓர் பேச்சை அப்பெரியார் இங்கே ஆதரிக்கவில்லை. அடியோடு அதைத் தள்ளி நம் பக்தியோகத்தையே ஸௌத்ரஸாதனமாக அறுதியிட்டார். அந்த அதிகரணத்தில் ஸூத்ரகாரர் தீர்மான மறுதியிட்டது ஆவ்ருத்தியே எல்லா உபாஸனங்களிலும் ஆதரிக்கப்பட வேண்டுமென்பது தானென்று மிக்க ஆர்ஜவத்தோடு ஆப்ராயணாதி கரணத்தில் பகவத்பாதரின் அழகான ப்ராமாணிகமான அனுவாதம். கொஞ்சகாலம் ஆவ்ருத்தி செய்தால், உபாஸநமென்னும் மோக்ஷோபாயம் பூர்ணமாகி விடலாமே என்று பூர்வபக்ஷம் செய்து கொண்டு 'கடைசி க்ஷணம் வரையில் (தேஹம் விழும் வரையில்) ப்ரஹ்ம நினைப்பை ஆவ்ருத்தி செய்து தீரவேண்டும். அந்த நினைப்பின் வசத்தால் அத்ருஷ்ட பலம் கிடைக்குமாதலால் 'எந்த த்யானத்தோடு

இந்த லோகத்தை விட்டுக் கிளம்புகிறானோ ' என்னும் ச்ருதியும், ' எதை எப்போதும் நினைத்துக்கொண்டே முடிவு காலத்திலும் நினைக்கிறானோ அதையே அடைவான், ' ' ப்ரயாணகாலத்திலே சலிக்காத மனத்தோடே ' என்னும் கீதா வசனங்களையும், ' அந்த வேளையில் இம்மூன்றையும் நினைப்பானாக ' என்ற ச்ருதியும், மரணவேளையிலும் செய்ய வேண்டிய சேஷகார்யமிருக்கிறதென்று விளக்குகின்றன " என்று அங்கே சங்கரபாஷ்யம். இம்மூன்றும் ' என்பது 'அக்ஷிதமஸி, அச்யுதமஸி, ப்ராணஸம் சிதமஸி' என்னும் மூன்று மந்திரங்கள். ' ப்ரயாணம் ' ' ப்ராயணம் ' என்னுமிரண்டுமொன்றே. 'ப்ராயணாந்தம் அபித்யானம் செய்வான் ' என்று ச்ருதி. ' ப்ரயாணகாலத்தில் ' என்று கீதை. ஸூத்ர பாடபேதத்தால் அர்த்த பேதமில்லை. ' மரணபர்யந்தம் உபாஸன ரூபமான ஞானத்தை ஆவ்ருத்தி செய்ய வேண்டும், அது மோக்ஷோபாயம் ' என்று ஸூத்ரமும் ஸ்ரீ சங்கர பாஷ்யமும் நிர்ணயித்துப் பேசுவது ஸ்பஷ்டம். உபாஸனம் நடக்குங்காலமெல்லாம் அக்னி ஹோத்ராதி நித்யகர்மங்கள் செய்ய வேண்டுமென்பது ஸ்பஷ்டம். ஆப்ரயாணாதிகரணம் வரையில் மோக்ஷஸாதனமான மோக்ஷ வித்யையின் ஸ்வரூபத்தைப பற்றி விசாரம் நடக்கிறதென்பது இரண்டு பாஷ்யங்களுக்கும் பொது. நிர்குண ப்ரஹ்ம விஷயமான ஞானம் மோக்ஷ ஸாதனமென்றும், நிர்குண ப்ரஹ்ம விஷய ஞானம் உதிக்கும் க்ஷணத்திலேயே கர்மானுஷ்டானத்தை விட்டு விட வேண்டுமென்றும், சாஸ்த்ரிகள் அபிமானிக்கும் பக்ஷத்திற்கு இந்த அதிகரணங்களெல்லாம் அத்யர்தம் விருத்தமே. ஆவ்ருத்தி ஸூத்திரத்தில் தொடர்ந்த நினைப்பென்னும் ஆவ்ருத்தி மோக்ஷோபாயம் என்று ஸ்ரீ சங்கர பாஷ்யமும் ருஜுவாக ஸூத்திரத்திற்குப் பொருளுரைத்தது—ஒருதடவை நினைப்பது என்பதைப் பேசுவது போல் ' வேதனத்தை ' உபாயமாகச்சொல்லும் ச்ருதிகள் பல தடவை ஆவ்ருத்தமான நினைப்போடு கூடிய உபாஸனத்தை தான் சொல்லுகின்றன வென்று அங்கே ஸ்பஷ்டமாக ஸூத்ரஹேதுவின் பொருள் பகவத்பாதரால் ருஜுவாகப் பணிக்கப்பட்டது. சாஸ்த்ரார்த்தமாக, மோக்ஷஸாதனமாக வேதாந்தங்களில் விதிக்கப்படும் வேதனம் என்பது அனேகம் தடவை ஆவ்ருத்தி செய்யப்படும் நினைப்பு. ஸ்ரீ ஶங்கர பாஷ்யத்தில் வேதனம் என்பது உபாஸனமே என்று உரைக்கப்பட்டதை ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ராயேண அதே சப்தங்களால், அதே ரீதியாக, பலகால் ஸ்ரீ பாஷ்யத்தில் ஸாதித்தார்—ப்ராசீன வ்ருத்திகாரர் அறுதியிட்டதை ஸ்ரீ சங்கரரும் ப்ரமாணிகமாக அநுஸரித்ததில் ஹர்ஷம்.

ஸ்ரீ:

ஆக்ஞாநுக்ஞா விஷயத்தில் ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம்.

[ஸ்ரீ. துவரர் பாஷ்யம் ஸ்ரீநிவாஸ தாஸன்]

ஆக்ஞை அநுக்ஞை என்று சாஸ்த்ரத்தில் இரண்டு கர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஆக்ஞை என்பது செய்யாமல் போனால் வரும் பகவானுடைய நிக்ரஹம் உண்டாகாமலிருப்பதற்காக விதிக்கப்படும் கர்மா. அநுக்ஞை என்பது பசு, புத்திரன், ஸ்வர்க்கம் முதலிய பலத்துக்காக விதிக்கப்படும் கர்மா என்று சாஸ்த்ரீயநியமநாதிகாரத்தில் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்த வார்த்தையில் அநுக்ஞா கைங்கர்யங்கள் ஐந்து அருளிச் செய்யப்பட்டன. அவைகளில் க்ரந்த காலக்ஷேப விஷயமாக பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்தித்தல், அதற்கு யோக்யதை யில்லையாகில் அருளிச் செயலைக் கேட்டு ப்ரவர்த்தித்தல், என்றி இரண்டு கைங்கர்யங்கள் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன. சரமச்லோகாதிகாரத்தில் ஸந்த்யா காலங்களிலும் எல்லா காலத்திலும் அஷ்டாக்ஷர ஜபம் செய்யவேணுமென்றும் அர்த்தாநு ஸந்தானத்துடன் த்வயத்தை எப்பொழுதும் சொல்லவேணுமென்றும், ஆசார்யன் திருநாமத்தை எப்பொழுதும் ஜபிக்கவேணுமென்றும், இம்மாதிரி அநுக்ஞை எல்லாம் அவச்யகர்த்தவ்யங்களான நித்யநைமித்திகங்களுக்கு விரோதம் வாராதபடி அவற்றுக்குப் போக்கி மிக்க காலத்திலே யாகக் கடவது என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்வசாகாத்யயனம் நித்யம் என்பதில் எந்த வைதிக மதஸ்தனுக்கும் விவாதமில்லை. அது ஸந்த்யாவந்தனம் முதலியது போன்றது. அநுக்ஞா ரூபமான வேதாந்த காலக்ஷேபம் ஸ்ரீமதஷ்டாக்ஷர ஜபம், த்வயாநு ஸந்தானம், குருநாம ஜபம் முதலியது போன்றது. ஸ்வசாகாத்யயனம் செய்யாமல் வேதாந்த ச்ரவணம் செய்வது ஸந்த்யாவந்தனம் முதலியதை விட்டு த்வயோச்சாரணம் முதலியது செய்வது போலாகும் என்று ஆசார்யன் திருவுள்ளம். இப்படியிருக்க ப்ரஹ்ம விசாராதிகார நிர்ணயத்தில் ஸ்வசாகாத்யயனம் பண்ணாமல் ப்ரஹ்ம விசாரம் பண்ணவேணுமென்று நிரூபித்தது சரியா என்பதை வித்வான்கள் கவனிக்கவேணும். உண்மையாய் அசக்தி யுள்ளவனை விதிகள் கட்டுப்படுத்தாது. அவனுக்கு ப்ரஹ்ம விசாரத்தில் அதிகாரமில்லை.

சக்தன் விஷயத்தில் இவ்வாக்ஞாதிலங்கன தோஷம் வரவே வரும். ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும், ப்ரஹ்ம விசாராதிகளிலும் மற்ற லௌகிக வ்யவஹாரங்களிலும் எப்பொழுதும் பாடுபடுவோருக்கு ஸ்வசாகாத்யயனத்தில் மட்டும் அசக்தி வந்து விட்டதாக ஸாதிப்பது ஸரியா ? ஆக்ஞை வேண்டியதில்லை யென்றால் அநுக்ஞை வேண்டியதில்லை என்பது ஸித்தம். ஆகவே அநித்ய ப்ரஹ்ம விசாரம் செய்யவேண்டுமென்றும், நித்யமான ஸ்வசாகாத்யயனம் வேண்டாமென்று மெழுதுவது ப்ரமாண சரணரான ஸ்ரீ தேசிகனுடைய ஸித்தாந்தத்துக்கு அநுகுணமன்று.

ப்ரும்ம விசாராதிகாரம்

[ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாச தாதாசார்யஸ்வாமி, திருவாதி]

साकं विनावा निगमान्तरेण योऽहि स्वशाखामखिलामधीते ।
सईश्वरश्चिन्तयितुं यथावत् कर्माऽथवा ब्रह्मपरात्परंतत् ॥
मीमांसाप्राग्भाग प्रथमाद्यपदं ब्रवीति चिन्तायाः ।
कृत्स्नस्वकीयशाखा ध्ययनात्परतां तथा हु राचार्याः ॥

நமது வேத வைபவ வ்யாஸத்தில் "नतावदनधीतवेदस्य वेदान्तश्रवणमुपपद्यते अनधिकारात्, नचोपनिषन्मात्राध्ययनं कस्यचिच्छास्त्रार्थः, स्वाध्यायोऽध्येतव्य इत्यखण्डग्रहणात् तन्मात्राध्ययन विध्यश्रवणाच्च" இத்யாதி ஸூக்திகளை அனுஸரித்து, ஸ்வசாகாத்யயனம் ப்ரம்ம விசாரத்துக்கு அதிகார சம்பாதகம் என்று சொல்லி இருப்பதை சகியாமல் 'ப்ரம்ம விசாராதிகார நிர்ணயம்' என்ற பெயருடன் பூர்வாசார்யர்களுடைய வெகு தீர்மானங்களை வேறு விதமாகத் தோன்றும்படி செய்யும் ஒரு வியாஸம் 'வேதாந்த தீபிகை'யில் வெளி வந்து இருப்பதை 'அதை வாசிக்கும் மஹான்கள் அறிவார்கள். அவ்விஷயத்தில் சரியான அர்த்தத்தை நிரூபிப்பது நமது கடமை என்று நினைத்து வித்வான்கள் சந்நிதியில் கொஞ்சம் விண்ணப்பம் செய்கிறேன். நிர்ணயகாரர் செய்திருக்கும் நிர்ணயம் சுருக்கமாய் மூன்று அம்சங்களைப் பற்றியது.

(1) எல்லா வேதங்களையும் அத்யயனம் செய்தவர்களுக்கே பூர்வோத்தர மீமாம்ஸைகளில் முக்யாதிகாரம்.

(2) உபநிஷன் மாத்திரத்தின் அத்யயனமும் விசாரமும் சாஸ்திரீயமே.

(3) பூர்ணமாக ஸ்வசாகையின் அத்யயனம் செய்தவர்கள் ஏக தேசாத்யாயிகளோடு துல்யர்களே தவிர முக்யாதிகாரிகளாக ஆகமாட்டார்கள்.

இதில் முதல் விஷயத்தைப் பற்றி முதலில் விசாரிக்கிறோம். 'अथातोधर्मजिज्ञासा,' 'अथातोब्रह्मजिज्ञासा,' என்கிற பூர்வோத்தர மீமாம்ஸைகளின் முதல் ஸூத்திரங்களுக்கு வ்யாக்யானம் செய்த எல்லா பாஷ்யகாரர்களும் மற்றவர்களும் தன் வம்ச பரம்பரையில் வந்த ஒரே சாகையின் அத்யயனத்தை விதிக்கிற 'स्वाध्यायोऽध्येतव्यः,' என்கிற விதி வாக்யத்தால் ப்ராப்தமான அத்யயனத்தை பூர்வ வ்ருத்தமென்று நிரூபித்து இருக்கிற

படியால் அதற்கு விருத்தம் இந்த நிர்ணயம் என்பது ஸ்பஷ்டம். இனி இவர் செய்யும் நிஷ்கர்ஷத்தின் ப்ராமாணத்தை ஆராய்வோம். 'ऋग्वेदं भगवोऽध्येमि, यजुर्वेदं सामवेदमाथर्वणं चतुर्थम्.' என்கிற நாரதோக்தியில் ரிக்வேதம் முதலிய பல வித்யாஸ்தானங்களை பதிகரித்தும் தனக்கு ஆத்ம ஞானம் பிறக்கவில்லை யென்கிற சோகம் ப்ரஹ்ம வித்யாதிகாரமாகத் தோத்துகிறதே யன்றி நான்கு வேதங்களுடைய அத்யயனம் அதிகாரமாகத் தோன்றவில்லை. அப்படி அது அதிகாரமானால் 'पित्र्यंराशिं दैवं निधिम्.' இத்யாதிகளால் சொல்லப்பட்ட ச்ராத்த கல்பம், கணிதம், உத்பாத ஞானம், நிதிதர்சன சாஸ்த்ரம் முதலானதுகளின் அத்யயனமும் அதிகாரமாக ஏற்படும். ச்வேதகேது விஷயமான 'सर्वान्वेदानधीत्य' என்ற வாக்யத்திலும் எல்லா வேதங்களின் அத்யயநம் கர்வ ஹேதுவாய் தோன்றி 'उततमादेशमप्राक्ष्यः' என்று பிதா கேட்ட கேள்வியினால் உண்டான சித்த வ்ருத்தி விசேஷமே அதிகாரமாய் நின்றது. மேல் முண்டகாதி வாக்ய விஷயத்தில் நிரூபிக்கப்படுகிற நியாயமும் இங்கே கண்டு கொள்வது. முண்டகத்தில் 'द्वेविद्येवेदितव्ये इति ह स्म यद्ब्रह्मविदोवदन्ति पराचैवापराच, तत्रापरा ऋग्वेदो यजुर्वेदस्सामवेदोऽथर्ववेदः शिक्षाकल्पोव्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति' என்றும் கேநோபநிஷத்தில் 'तस्यै तपोदमः कर्मेति प्रतिष्ठा वेदास्सर्वाङ्गानि सत्यमायतनम्' என்றும் நான்கு வேதங்களும் ப்ரம்ஹ வித்யை உண்டாவதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டிருப்பதால் வேதங்கள் ப்ரம்ஹவித்யைக்கு காரணமாவதற்கு விசாரம் ஆவச்யகமாகையால் அவ்விசாரத்துக்கு முன் நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்யவேணுமென்று ஏற்படுகிறபடியால் ப்ரஹ்ம விசாரத்திற்கு எல்லா வேதங்களின் அத்யயனம் அதிகாரமென்று ஏற்படுகிறதென்கிறார். இவர் மேலே உதாஹரிக்கும் 'ऋग्यजुस्साम संज्ञेयम् त्रयीवर्णा भूतिर्द्विज' 'अनधीत्यत्रयीं,' 'वेदानधीत्य वेदौ वा वेदं वापि यथाक्रमम्.' என்கிற வசனங்களால் மூன்று இரண்டு வேதங்களையும் ஒரு வேதத்தையும் அத்யயனம் செய்யலாமென்று, ஏற்படுகிறபடியால் எல்லா வேதங்களின் அத்யயனம் அவச்யம் என்று விதிப்பதற்கு வழி யில்லை, 'आचार्यकुलाद्वेदमधीत्य' 'अधीत्य वेदं नविजानाति योऽर्थम्' 'योनधीत्य द्विजोवेदम्' 'योऽन्यत्रकुरुते यत्नमनधीत्य श्रुतिंद्विजः' 'वेदस्य पाठमात्रेण' 'योऽधीत्यविधिवद्वेदम्' 'वेदः कृत्स्नोऽधिगन्तव्यः' 'षडङ्गोवेदोऽध्येयः' पारंपर्यागतोयेषां वेदः, 'यस्स्वशाखां परित्यज्य' 'स्वीयाशाखोज्झिता येन' 'संस्कृत्य तनयं पिता वेदमध्यापयेत्पश्चाच्छास्त्रं मन्वादिकं तथा' 'नवेदमनधीत्यान्यां विद्यामधीयीतान्यत्रवेदाङ्गस्मृतिभ्यः' என்பது முதலிய வாக்யங்களால் தன் வம்ச பரம்பரையில் வந்த ஒரு வேதத்தை அத்யயனம் செய்யவேணுமென்றும் செய்யாவிட்டால் ப்ரத்யவாயம் வரும் என்றும் போதிக்கப்படுகிறது. இரண்டு, மூன்று, நான்கு

வேதங்களின் அத்யயனம் செய்யாவிட்டால் ப்ரத்யவாயம் வருமென்று அதற்கு நித்யத்வத்தை தெரிவிக்கிற வசனம் ஒன்று கூட கிடையாது. ஆகவே, **ऋग्वेदो यजुर्वेदः**, என்பது முதலிய முண்டகோபநிஷத்தில் இருக்கும் வாக்யங்களில் அவரவர்களுடைய அதிகாரத்துக்குத் தக்கபடி, அத்யயனம் செய்யும் வேதம் என்று க்ரஹித்துக்கொள்ள வேணுமே தவிர ஒவ்வொருவரும் எல்லா வேதங்களையும் அத்யயனம் பண்ணவேணுமென்கிற ஸமுச்சயம் கிடையாது. வேறு ப்ரமாணங்களால் ஏற்பட்ட உத்பத்தி அதிகாராதிகளைத் தழுவி உபயோக பேதமாத்ரமன்றோ இங்கு செய்யப்படுகிறது. இவ்விடத்தில் இந்த மீமாம்ஸா ந்யாயத்தை அநுஸந்திக்க வேணும். 6வது அத்யாயத்தில் அப்யுதிதேஷ்டிபேடிகையில் '**यस्य हविर्निरुप्तं पुरस्ताच्चन्द्रमा अभ्युदेति त्रेधातण्डुलान् विभजेद्ये मध्यमास्स्युस्तानग्नये दात्रे पुरोडाशमष्टाकपालं कुर्यात् ये स्थविष्ठास्तानिन्द्राय प्रदात्रे दधंश्चरुं येऽणिष्ठास्तान् विष्णवे शिपिविष्टाय शृते चरुम्**' என்று அரிசியைப்போல் தயிர் பால்களும் சொல்லப்பட்டிருப்பதைக் கொண்டு ஸாந்நாய்யம் செய்கிறவர்களுக்கே இந்த அப்யுதிதேஷ்டியில் அதிகாரம் என்பது கூடாது. ஸாந்நாய்யத்தில் அதிகாரமில்லாதவர்களுக்கும் தயிர் பால் இல்லாமலே அப்யுதிதேஷ்டி உண்டென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. '**यज्ञेन दानेन तपसाऽनाशकेन**' என்கிற இடத்தில் யஜ்ஞேன என்கிற ஏகத்வத்தில் '**इयाज सोऽपि सुबहून् यज्ञान् ज्ञानव्यपाश्रयः**' என்பது முதலிய ப்ரமாணங்களாலே தாத்பர்யமில்லை என்பதில் விவாதப்படுவதற்கில்லை. இப்படி அநேக யாகங்கள் வேதனத்துக்கு ஸாதனமாக விதிக்கப்பட்டிருந்தாலும் ஜாதி சக்தி இவைகளை அநுஸரித்தே யாகங்களை வேதநார்த்தம் பண்ணவேணுமென்கிறதே தவிர எல்லா யாகங்களையும் செய்ய வேணுமென்று சாஸ்திரார்த்தம் இல்லை. அதுபோலவே அங்கு இருக்கும் வேதாநுவசனேன என்கிற இடத்திலும் ப்ரக்ருதத்திலும், '**स्वाध्यायोऽध्येतव्यः**' என்கிற வாக்கியத்தில் ஸ்வாத்யாயத்துக்கு உத்தேச்யத்வம் இருந்தபோதிலும் அஷ்டவர்ஷம் முதலிய ந்யாயத்தாலே ஸ்வீயத்வம் ஏகத்வம் இவைகளுக்கு விவக்ஷை அவச்யம் ஆனபடியால் பெரும்பாலும் ப்ரவர்த்திக்கிற க்ரஹைகத்வாதி கரணத்தை ஸஞ்சரிப்பித்து எல்லா சாகைகளையும் அத்யயனம் செய்ய வேணுமென்று நிஷ்கர்ஷித்து ஆகிலும் பூர்வர்கள் செய்த நிஷ்கர்ஷத்தை ச்ரத்தாமாத்ரத்தால் அநுசரிப்பதாகச் சொல்லிக்லேசம் அநுபவிக்கவேண்டிய ப்ரஸக்தி ஒன்றுமில்லை. இப்படி ஒரே வேதத்தில் ஒரே சாகைக்கு அத்யயநம் ப்ராப்தமாக '**ऋग्वेदं भगवोऽध्येमि**' '**अनयात्रय्या विद्यया**' என்பது முதலிய லிங்கத்தால் வேறு வேதங்களின் சாகைகளுக்கு அத்யயனம் கூடுமென்று ஏற்படுவதாலும், ஆனால் விதி இன்றி அநுவாத ரூபமாத்மா இருப்பதால் நியமம் ஏற்படாமையாலும்

விகல்பமாக வேறு வேதங்களின் சாகைகளின் அத்யயனத்தை '**वेदानधीत्य**' என்று மனு அப்யநுஜ்ஞை செய்தார். இனி வைகல்பிகமான எல்லா வேதங்களின் அத்யயனத்துக்குப் பிறகு என்ற அர்தத்தையா அல்லது நியதமான ஸ்வசாகாமாத்ராத்யயனத்திற்குப் பிறகு என்ற அர்த்தத்தையா விவக்ஷித்து அதசப்தம் மீமாம்ஸாரம்ப ஸூத்ரத்தில் ப்ரயோகிக்கப்பட்டது என்று விசாரிக்கவேணும். நான்கு வேதங்களையும் பூர்ணமாக அத்யயனம் செய்தவரே ஸர்வ முக்யாதிகாரி என்று ஸூத்ரகாரருக்கு அபிப்ராயமானால் அவர் செய்யும் சாஸ்திரத்திற்கு ப்ரயோஜனம் மிகவும் அல்பமாகும். ஆகையால் வெகு அதிகாரிகளுக்கு ப்ரயோஜனம் ஏற்படும்படியாக அதாவது—'**शास्त्रस्य महाविषयत्वसिद्ध्यर्थं**' (சாஸ்திரத்துக்கு அதிக விஷயம் ஸித்திப்பதற்காக) என்று அங்கங்கு சொல்லும் ந்யாயப்படி அவர் சாஸ்திரம் செய்தார் என்பதற்கு அநுகுணமாக அர்த்தம் சொல்லுவது உசிதமும் ஆவச்யகமும் ஆகிறது. சாகாந்தராதிகரணத்தில் '**वाक्यासमवायात्**' என்கிற ஸூத்ரத்தினால் ஒரு வேதத்தில் ஒரு சாகையை அத்யயநம் செய்த புருஷனுக்கு அதே வேதத்தில் சாகாந்தராத்யயனம் ப்ரஸக்தமில்லை என்று சாதித்த ஜைமினிக்கு அந்த சாகாந்தரத்தில் சொல்லப்பட்ட அங்க விஷயத்தில் நியமம் இல்லாத லௌகிகாத்யயனம் கல்பஸூத்ரம் முதலிய உபாயாந்தரத்தாலேயே ஞானம் சம்பாதிக்கவேணுமென்ற அபிப்ராயமானதால் அதுபோலவே வேதாந்தர சாகாவிஷயத்திலும் உபாயாந்தரத்தால் அபேக்ஷிதார்த ஞானம் சம்பாதிக்கக்கூடியதாகையால் வேதாந்தர சாகாத்யயனத்துக்குப் பிறகே அதின் அர்த்த ஞானத்தை சம்பாதிக்கவேணுமென்கிற நியமம் அபிமதமில்லை என்று தெரிகிறது. மேலும் ஸ்வாத்யாயோத்யேதவ்யஹ என்ற விதிக்கு பரதந்திரர்களாய் அத்யயனம் செய்து க்ருஹித்த ஸ்வாத்யாயத்திற்கு உபயோகாபேக்ஷை உண்டாகும்போது '**स्वाध्यायेनार्थज्ञानं भावयेत्**' '**स्वाध्यायेन जपयज्ञं भावयेत्**' (ஸ்வசாகையினால் அர்த்த ஞானத்தை சம்பாதிக்கவேணும். ஸ்வ சாகையினால் ஜபமாகிற யாகத்தை ஸம்பாதிக்கவேணும்) என்று ஏற்படும் விநியோக வாக்யத்தில் '**व्रीहिभिर्यजेत**' என்பது முதலிய ஸ்தலங்களில் நெல் முதலியவைகளுக்கு யவதான்யம் முதலியதின் அபேக்ஷை இல்லாததுபோல் ஸ்வசாகைக்கு தன் வேதத்திலும் வேதாந்தரத்திலும் உள்ள வேறு எல்லா சாகைகளின் அபேக்ஷை இல்லாமை ஏற்படுவதால் ஸ்வசாகை ஒன்றே கரணம் என்று ஒப்புக்கொள்ளவேணும். இப்படி ஒரு சாகை கரணமானால் ஸ்வசாகையாகிற கரணத்திற்கு இதி கர்தவ்யதா ரூபையான மீமாம்ஸையும் வேறு சாகையை அபேக்ஷிக்காமல் கரணமான ஒவ்வொரு சாகையின் சம்பந்தியாக ஆவதற்குத் தட்டு இல்லை. ஆகையால் வேதத்திற்கு இதி கர்தவ்யதையான மீமாம்ஸா சாஸ்திரத்தை

செய்யும் மஹரிஷி எவ்வளவு அத்யயனம் செய்யாவிட்டால் ப்ரத்யவாயம் வருமோ (அதாவது எவ்வளவு வேதாத்யயனம் அவச்யம் எல்லோரும் செய்வார்களோ) அவ்வளவு வேதாத்யயனத்தை அபிஸந்தி பண்ணி 'அதன் பிறகு, என்ற அர்த்தத்தை விவக்ஷித்து அத சப்தம் ப்ரயோகித்தார் என்பதே ஸமஞ்ஜஸம். 'अद्विर्वचनं वा श्रुतिसंयोगाविशेषात्' என்ற ஸூத்ர வியாக்யானத்தின் கடைசியில் नचैकस्य पुरुषस्य शाखान्तरे स्वाध्यायविधिबोधित वैधाध्ययनाभावेऽपि अध्ययनाद्यर्थं? (अध्याप) अनिषिद्धरागप्राप्तशाखान्तरावगमस्य संभवेन एकस्मिन् प्रमातरि वाक्यद्वयस्य नाज्ञातज्ञापकत्वोपपत्तिरिति वाच्यम् सर्वस्यापि शाखान्तरावगमे नियमेन प्रवृत्त्यभावात् क्वचिदनुपपत्तावपि पुरुषान्तरं प्रति अज्ञातज्ञापकत्वोपपत्तेः (எல்லோருக்கும் தன் வேதத்தின் சாகாந்தரத்தை அறிவதில் நியமேன ப்ரவ்ருத்தி இல்லாமையாலும் ஓர் புருஷனிடத்தில் தெரியாத அம்சத்தை தெரிவிப்பது அனுபபன்னமானாலும் வேறு புருஷனைக் குறித்து தெரியாத அம்சத்தை தெரிவிப்பது உபபன்னமாவதாலும் ஒரு புருஷனுக்கு சாகாந்தரத்தில் स्वाध्यायोऽध्येतव्यः' என்கிற விதியினால் தெரிவிக்கப்பட்ட வைதமான அத்யயனம் இல்லாமல் போனாலும் ப்ரவசனாதிகளுக்காக அனிஷித்தமாயும் ராகப்ராப்தமுமான சாகாந்தர ஞானம் ஸம்பவிப்பதால் ஓர் ஞாதாவினிடத்தில் ஒரே அர்த்தமுள்ள இரண்டு வாக்யங்களுக்கு தெரியாத அம்சத்தை தெரிவிப்பது உபபன்னமாவதில்லை என்று சங்கிக்கக்கூடாது.) என்று மீமாம்ஸா கௌஸ்துபத்தில் சொல்லப்படுகிறது. இதனால் இம்மாதிரி விஷயங்களில் நியமேன ப்ராப்தியை வைத்துக்கொண்டே ஜைமினி ந்யாய நிஷ்கர்ஷம் செய்கிறார் என்பது விளங்கும். இதுபோலவே நியமேன ப்ராப்தயான ஸ்வசாகையின் அத்யயனத்துக்கு பிறகு என்ற அர்த்தத்தை வேதாந்தராத்யயனத்திற்கு அவிருத்தமாக அத சப்தம் சொல்லுகிறதே தவிர அனேகவேதங்களின் அத்யயனத்துக்குப் பிறகு என்ற அர்த்தத்தை சொல்லவில்லை என்பது ஸித்திக்கிறது. 'वेदानधीत्य' என்று அப்பநுனை செய்தபடி அனேக வேதாத்யனம் செய்தாலும் அதில் ஸ்வசாகையின் அத்யயநம் நியதமானபடியால் ஸ்வசாகாத்யயனத்திற்குப் பிறகு என்ற அர்த்தத்தைச் சொல்வதால் அனேக வேதாத்யாயிகளுக்கும் அதிகாரமில்லாமல் போய்விடாது. அல்லது இங்கு விஸ்தரம் செய்யவேண்டிய அவச்யமே இல்லை. வேதத்தின் அர்த்தத்திற்கு விவக்ஷை இல்லாமையால் வேதாத்யயனம் செய்த பிறகு அதை விசாரிப்பதற்காக மீமாம்ஸா சாஸ்திரம் அனவச்யம் என்கிற பூர்வ பட்சத்தை நிரஸிப்பதற்காக வந்த முதல் ஸூத்ரத்தில் வேதாத்யயனத்திற்குப் பிறகு என்று அத சப்தத்தினால் வேதாத்யயனம் அனுவதிக்கப்படுகிறதே தவிர அத்யயனத்திற்கோ வேதத்திற்கோ விதி இல்லை. ஆகையால் 'स्वाध्यायोऽध्येतव्यः' 'वेदानधीत्य' என்ற இவ்விதிகளை

அனுசரித்து யார் எத்தனை வேதம் அத்யயனம் செய்தாலும் அந்த அத்யயனம் முடிந்த பிறகு விசாரம் செய்யவேண்டியது அவச்யமென்றே ஸூத்ரார்த்தமாகையால் எல்லா வேதங்களையும் அத்யயனம் செய்த பிறகு என்று அர்த்தம் சொல்லுவதற்கு ஒருவராலும் ஒரு ந்யாயமும் காண்பிக்க முடியாது. மேல் வேறு வேதங்களின் வாக்யார்த்த விசாரம் செய்யப்படுவதால் அதனத்யயனமும் அவச்யம் என்னில் தன் வேதத்தின் வேறு சாகையின் அர்த்தமும் விசாரிக்கப்படுவதால் இதனத்யயனமும் அப்படியே என ப்ரஸங்கிக்கும்.

இனி இரண்டாவது விஷயத்தை எடுத்துக் கொள்வோம். இங்கு எல்லாம் ஆசார்ய ஸூக்திகளுக்கு நேர் விரோதமாகவே நிரூபிக்கப் பட்டிருக்கிறது. ஆசார்யாள் ஆக்ரஹத்துடன் தூஷிக்கும் பக்ஷமே இங்கு ஸாதிக்கப்படுகிறது. அநேகமாய் மறைமுகமாக நம்முடைய ஸித்தாந்த கண்டனமே இவ்விடத்தில் செய்யப்படுகிறதென்பதை வித்வான்கள் அறிவார்கள். 'धर्मजिज्ञासायाः प्रागप्यधीतवेदान्तस्य ब्रह्मजिज्ञासोपपत्तेः' (கர்ம விசாரத்துக்கு முன்னும் வேதாந்தாத்யயனம் செய்தவனுக்கு ப்ரம்ம விசாரம் உபபன்னமானதால்) என்பது சங்கர பாஷ்யம். இதை நிரஸிப்பதற்காக ப்ரவிருத்தங்களான ஸ்ரீ பாஷ்யம், ச்ருத ப்ரகாசிகை, பாவப்ரகாசிகை, தத்வடீகை, அதிகரணஸாராவளீ மீமாம்ஸா பாதுகா, சத தூஷணீ, ஸேச்வர மீமாம்ஸை இவைகளில் ஸ்பஷ்டமாய், விசாரம் விதியினால் ப்ராப்தமானாலும் ராகத்தால் ப்ராப்தமானாலும் முதலில் கர்ம விசாரம், பிறகு ப்ரம்ம விசாரம் என்கிற இந்த க்ரமத்தாலேயே செய்யப்படவேணுமென்றும் இதற்கு உபபாதகமாக ஸ்வசாகை முழுவதும் அத்யயனம் செய்வதே சாஸ்த்ரீயமென்றும், உபநிஷத்தை மாத்திரம் அத்யயனம் செய்வது ஸர்வ ப்ரகாரத்தாலும் அசாஸ்த்ரீயமென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இங்கு முன் உதாஹரித்த அத்வைத பாஷ்ய க்ரந்தத்தில் 'अधीतवेदान्तस्य' என்கிறதை மாத்திரம் பராமர்சிக்கும்போது வேதாந்த பாக மாத்திரத்தின் அத்யயனத்தை சொல்லியிருப்பதாகத் தோன்றுகிறது. அதைக் கொண்டு ச்ருத ப்ரகாசிகையில் முதலில் 'वेदान्तमात्राध्यायिनस्तु' என்று விவரணம் செய்து यद्वाऽधीतकृत्स्नवेदस्यापि जन्मान्तरसुकृतवशात् वेदान्तवाक्य एव बुभुत्सा जायते चेत् तस्य न कर्मविचारापेक्षेति तदा अधीतवेदान्तस्येति पदं अयोगव्यवच्छेदपरं, नान्ययोगव्यवच्छेदपरम् कृत्स्नवेदाध्ययनादपेक्षितवेदान्तभागोऽप्यधीत एवेत्यर्थः । (அல்லது பூர்ணமாக வேதாத்யயனம் செய்தவனுக்கும் ஜன்மாந்தர ஸுக்ருதமடியாக வேதாந்த வாக்யத்திலேயே அறியவேணுமென்கிற விருப்பம் ஏற்படுமேயானால் அவனுக்கு கர்ம விசாரத்தில் அபேக்ஷையில்லை என்று அபிப்ராயம். அப்பொழுது 'अधीतवेदान्तस्य' என்ற பதம் வேதாந்தாத்யயனத்தின்

அஸம்பந்தத்தை நிஷேதிப்பதில் தாத்பர்யமுள்ளதே தவிர கர்ம பாகாத்யயந ஸம்பந்தத்தை நிஷேதிப்பதில் தாத்பர்யமுடையதன்று. பூர்ணமாக வேதத்தை அத்யயனம் செய்வதால் அபேக்ஷிதமான வேதாந்த பாகமும் அத்யயனம் செய்யப்பட்டதே என்றர்த்தம்.) என்று வேறொரு ப்ரகாரமாக அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு **यद्वा** என்று அர்த்தாந்தரம் வர்ணித்ததற்கு '**वेदान्तमात्राध्ययनस्याशास्त्रीयत्वादाह**' (வேதாந்த மாத்ராத்யயனம் அசாஸ்த்ரீயமாயிருப்பதால் சொல்லுகிறார்) என்று பாவப்ரகாசிகையில் அவதாரிகை இருக்கிறது. இபபடி அவதாரிகை வைத்த பாவப்ரகாசிகாகாரர் **अधीतवेदान्तस्य** என்று சொன்ன சங்கரருக்கு அசாஸ்த்ரீயமான உபநிஷந்மாத்ராத்யயனத்தில் தாத்பர்யமில்லை என்று அபிப்ராயப்படுகிறார் என்பது ஸ்பஷ்டம்.

'**स्वाध्यायानन्तर्यन्तु समानं**' (ஸ்வசாகாத்யயனத்துக்குப் பிறகு என்பது துல்யம்) என்று '**अधीतवेदान्तस्य**' என்பதற்கு முன் இருக்கும் சங்கரபாஷ்ய வாக்யத்தை பராமர்சித்தாலும் இது வ்யக்தமாகும். '**इह खलु जगति स्वाध्यायोऽध्येतव्य**' **इति नित्याध्ययनविधिना अधीतसाङ्गस्वाध्याये 'तद्विजिज्ञासस्व', 'सोऽन्वेष्टव्यः', 'आत्मा वा अरे द्रष्टव्यश्श्रोतव्य' इति श्रवणविधिरुपलभ्यते ।** (ஸாங்க ஸ்வசாகாத்யயனம் செய்தவன் விஷயத்தில் வேதாந்த வாக்யங்களால் வேதாந்த ச்ரவணம் விதிக்கப்படுகிறது) என்று சங்கரபாஷ்யத்தின் ரத்னப்ரபா வ்யாக்யானத்தினுடைய ஆரம்பம். இவ்விதமே சிவார்க்கமணி தீபிகையிலும் ந்யாய ரக்ஷாமணியிலுமுள்ள கீழ் உதாஹரிக்கப்பட்ட வாக்யங்களையும் கவனிக்கவேணும். '**कृत्स्न स्वाध्यायाध्ययनानन्तर्यं च वक्तव्यं स्वचिकीर्षितशास्त्रे प्रेक्षावतां प्रवृत्त्यर्थं कर्तव्यत्वेन प्रतिज्ञायमाने धर्मविचारे प्रयोजकतया कार्यपरवेदाध्ययनमात्रस्यापेक्षितत्वेऽप्यध्ययनविधेः कृत्स्नस्वाध्यायविषयत्वेन तदेकदेशमधीत्योपरन्तुमशक्यत्वात्**' (ஸ்வசாகாத்யயனத்தின் ஆநந்தர்யமும் சொல்லவேணும். தன்னால் செய்ய விரும்பப்பட்ட சாஸ்திரத்தில் புத்திமான்களுக்கு ப்ரவிருத்திக்காக செய்ய வேண்டியதாக ப்ரதிக்ஞை செய்யப்படும் தர்ம விசாரத்தில் ப்ரயோஜநமாக செய்ய வேண்டிய தர்மங்களை ப்ரதிபாதிக்கிற வேதத்தின் அத்யயனம் மாத்திரம் அபேக்ஷிதமானாலும் அத்யயனவிதி பூர்ணமான தன் சாகையை விஷயீகரிப்பதால் தன் சாகையின் ஏகதேசத்தை அத்யயனம் செய்து ஓழிவையடைய முடியாதாகையால்—சிவார்க்க மணி தீபிகை பக்கம் 17) '**साङ्गसशिरस्कवेदाध्ययनजन्यापातप्रतीतिरूपो नित्यानित्यवस्तुविवेक इह परिगृह्यते**' (அங்கங்கள் உபநிஷத்துக்கள் இவைகளுடன் கூடின வேதத்தின் அத்யயனத்தால் உண்டான மேல்வாரியான ஞானமாகிற நித்யாநித்யவஸ்து விவேகம் இவ்விடத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது—ந்யாயரக்ஷாமணி ஜிக்ஞாஸாதிகரணம்—பக்கம் 7) '**अवयुत्याध्ययने मानाभावेऽपि आपादित (आपदादिना ?) वेदान्तमात्राध्यायिन इत्यर्थः । यद्वा कृत्स्नाध्येतुरपि स्वापेक्षितांशस्याप्यधीततया**' (பிரித்து ஸ்வல்ப பாகத்தை அத்யயனம் செய்வதில் ப்ரமாணமில்லாதபோதிலும் ஆபத்து முதலியதால் வேதாந்தமாத்ரத்தை அத்யயனம் செய்தவனுக்கு என்றர்த்தம். அல்லது பூர்ணமாக அத்யயனம் செய்தவனும் தனக்கு வேண்டிய வேதாந்த பாகத்தையும் அத்யயனம் செய்திருப்பதால்) என்கிற தத்வடீகா ஸ்ரீ ஸூக்தியாலும் வேதாந்த பாக மாத்ராத்யயனம் அப்ராமாணிகமென்று விளங்குகிறது.

ஆனால் முதல் அர்த்தத்தில் ஆபத்காலத்தில் செய்த அத்யயனம் என்று ஸாதித்திருப்பது விசேஷம். இவ் வர்த்தம் லகு ஸித்தாந்தத்தில் '**यस्त्वधीतवेदान्तस्येत्यादिना......चोदितं तदसत्...मृग्यते**' என்கிற ஸ்ரீ ஸூக்தியாலும் ஸ்பஷ்டம்.

கர்ம விசாரத்துக்குப் பிறகு என்ற அர்த்தத்தை மாத்திரம் நிரஸிக்க வந்த அத்வைத பாஷ்யகாரருக்கும் வேதாந்த பாக மாத்திராத்யயனம் சாஸ்த்ர ஸம்மதம் என்கிற அபிப்ராயம் ஸர்வ ப்ரகாரத்தாலுமில்லை என்பது ஸித்திக்கிறது.

அதிகரண ஸாராவளியில் '**कृत्स्नस्वाध्यायसाङ्गाध्ययनसमुदितापातबुध्यैव**' (பூர்ணமாக ஸ்வ சாகையை ஸாங்கமாக அத்யயனம் செய்வதாலுண்டான மேல் வாரியான ஞானத்தாலேயே) '**स्वाध्यायाध्याय कात्स्न्र्ये**' (பூர்ணமாக ஸ்வ சாகாத்யயனம் இருக்கும்பொழுது) என்று பூர்வாக ஸ்வசாகையின் அத்யயனமே சாஸ்த்ரீயமென்று திருவுள்ளத்துடன் அனுக்ரஹிக்கப்பட்டது. மீமாம்ஸா பாதுகையில் '**स्वाध्यायत्वाविशेषे स्थितवति निखिलेऽधीतनानांशचिन्ता**' என்கிற ஸ்ரீ ஸூக்திக்கு வ்யாக்யானமான பரித்ராண க்ரந்தமும் இங்கு கவனிக்கத் தக்கது. '**तदेव कृत्स्नचिन्तारूपत्वं स्थापयतिस्वाध्यायत्वेति । अयमत्र विकल्पः । किंभागान्तरस्य स्वाध्यायरूपत्वाभावादेकदेशचिन्ता, किं वा तदंशाध्ययनाभावात्, अथवा स्वेच्छातः न प्रथमः असिद्धेः न द्वितीयः—एकदेशाध्ययनस्यापन्यायमूलत्वात् न च तृतीयः—न्यायप्राप्तस्य चिन्तनस्य स्वेच्छातः प्रहाणे वेदाध्ययनादेः कृत्स्नस्यापि विधिगोचरस्य प्रहाणप्रसङ्गादिति**' । (வேறு பாகமும் ஸ்வாத்யாய பதத்துக்கு வாச்யமாக இருப்பதாலும் ஏக தேசாத்யயனம் அபந்யாய மூலமானதால் எல்லா பாகத்தையும் அத்யயனம் செய்யவேண்டியிருப்பதாலும் நியாயத்தால் வந்த விசாரத்தை தன்னிச்சையால் விட்டால் விதிக்கு விஷயமான வேதாத்யயனம் முதலிய எல்லா அம்சங்களையும் விடவேண்டி வருவதாலும் ஏக தேச விசாரம் பண்ணுவது ஸரியன்று) '**न तावदनधीतवेदस्य...तन्मभाध्ययनविध्यश्रवणाच्च**' என்பது சததூஷணீ க்ரந்தம். '**अनधिकारादिति-स्थाणुरयमिति वाक्ये अधीतवेदस्तं विचारयेदिति विधिपर्यवसानेन मध्ययनस्य**

तदधिकारत्वादिति भावः। उपनिषन्मात्राध्ययने तद्विचारो युक्तः। अधिकारस्य सत्वादित्यत्राह न चेति। कस्यचिदिति कस्यापि मते अध्ययनविध्यर्थो न भवती, त्यर्थः। विहिताध्ययनस्यैव विचारविधौ निमित्ततयाऽनुवादात् कृत्स्नस्वाध्यायाध्ययनस्यैव विधानात् नैकदेशाध्यायिनो विचाराधिकार इति भावः '। (சாஸ்த்ர விஹிதமான அத்யயனமே 'अधीतवेदस्तं विचारयेत्' என்கிற விதியில் நிமித்தமாக அனுவதிக்கப்பட்டிருப்பதால் பூர்ணமான ஸ்வசாகாத்யயனமே விதிக்கப்பட்டிருப்பதால் ஏக தேசாத்யாயிக்கு விசாரத்தில் அதிகாரமில்லை என்று தாத்பர்யம்) என்று அதன் வ்யாக்யானமான சண்டமாருதம்.

இங்கு சததூஷணீ க்ரந்தத்தைப்பற்றி நிர்ணயக்காரரின் அபிப்ராயத்தைச் சிந்திப்போம். 'अथ वैधत्वान्मीमांसाश्रवणस्य स्वयं विमर्शः' इत्यादिக்குப் பிறகு 'एवं रागप्राप्तश्रवणपक्षेऽपि क्रमसिद्धिः' என்று ஸித்தாந்தாரம்பத்துக்குப் பூர்வத்திலுள்ள இவ்வசனம், (न चोपनिषन्मात्राध्ययनम् என்பது முதலிய சததூஷணீ க்ரந்தம்) மீமாம்ஸா சிரவணம் விதிக்கப்பட்டது என்று சொல்லும் ப்ரதிபக்ஷியின் ஸித்தாந்தத்தை அப்யுகம்ம் பண்ணி तुष्यतु ந்யாயத்தால், ஸமாதானம் சொல்லுவதாயிருப்பதால் அன்யபரமான இவ்வசனத்தைக் கொண்டு தாத்பர்ய நிர்ணயம் ஆபாத ப்ரதீதியின் கார்யம் என்று நிர்ணயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அபிப்பிராயமாவது தன் பக்ஷத்தில் உபநிஷந் மாத்திராத்யயனமும் அந்த பாகத்துக்கே உபபன்னமாயிருந்தும் பூர்வ பக்ஷிகளின் மார்க்கத்தை அனுஸரித்து 'न चोपनिषत्' என்றும் 'तन्मात्राध्ययनविध्यश्रवणाच्च' என்றும் ஸ்ரீ தேசிகன் பூர்வ பக்ஷிகளைப் பார்த்துச் சொன்னார் என்பது—இப்படியாகில் மனதில் வேறு, வாக்கில் வேறு என்கிறபடி ஸ்வாமி தேசிகன் வஞ்சனையினால் ஸமாதானம் சொன்னதாக ஆகுமேயொழிய तुष्यतु ந்யாயத்தால் சொன்னதாக ஆக மாட்டாது. விதியினால் ப்ராப்தமானாலும் ராகப்ராப்தமானாலும் விசாரம் எல்லா பாகத்துக்குமுண்டு என்கிற அம்சமே இங்கு ஸமர்த்திக்கப்படுகிறது. அதில் வைதத்வத்தை ஒப்புக்கொள்வது तुष्यतु ந்யாயத்தால் இருக்கலாமே தவிர கண்டனயுக்திகள் அந்த ந்யாயத்தாலே ஒப்புக் கொள்ளப்பட்டதாக இருக்க முடியாது.

'एवं रागप्राप्तश्रवणपक्षेऽपि क्रमसिद्धिः'

என்று ஆரம்பித்த தன் ஸித்தாந்த பக்ஷத்திலும் 'रागोऽपि हि साङ्गाधीतसशिरस्कवेदस्य' என்று உபபாதநமிருக்கிறபடியால் முன் சொன்ன அர்த்தத்தை ஒப்புக்கொண்டு மாத்திரம் சொன்னதன்று என்பது வ்யக்தமாகிறது. மூன்றுவது வாதத்தின் ஆரம்பத்தில் 'स्थितं तावदध्ययनविधिनाऽध्यापनविधिना वा प्रयुक्तमध्ययनं साङ्गसशिरस्ककृत्स्न स्वाध्यायविषयमिति रागतो विधितो वा प्रयुक्तस्तदर्थविचारोऽपि कृत्स्नगोचरः, तयोस्सङ्कोचकाभावात्, ननु विधिप्रयुक्तौ माभूत्सङ्कोचः, रागप्रयुक्तौ तु स्यात्, यावद्रागं प्रवृत्त्युपपत्तेः, मैवं विकल्पासहत्वात्' ('स्वाध्यायोऽध्येतव्यः' என்கிற அத்யயன விதியினாலோ, 'अष्टवर्षं ब्राह्मणमुपनयीत तमध्यापयेत्' என்கிற அத்யாபன விதியினாலோ ப்ராப்தமான அத்யயனம், அங்கங்கள், உபநிஷத்துக்கள் இவைகளுடன் கூடின பூர்ணமான ஸ்வசாகையை விஷயமாகக் கொண்டது. ராக விதிகளுக்கு ஸங்கோசகம் இல்லாமையால் ராகத்தாலோ விதியினாலோ ப்ராப்தமான வேதார்த்த விசாரமும் முழுவதையும் விஷயமாகக் கொண்டது. விதியினால் ப்ராப்தமானபோது விசார ஸங்கோசம் வேண்டாம். ராகத்தால் ப்ராப்தமானபோது ஆசையுள்ளவரையில் ப்ரவ்ருத்தி உபபந்நை யாவதால் விசார ஸங்கோசம் வரும் என்பது ஸரியன்று—விகல்பத்தைப் பொறுக்காத்தால்) என்று ஸாதித்திருப்பதையும் கவனிக்கவேணும். 'विध्यश्रवणात्' என்பதற்கு விதி ச்ரவணமில்லை விதி ஸ்மரணமுண்டு என்று நிர்ணயத்தில் வ்யாக்யானம் செய்யப்படுகிறது. இது ஸாத்யத்தோடு சேருகிறதா என்று சிந்திக்கவேணும். உபநிஷந்மாத்திரத்தின் அத்யயனம் யாருடைய மதத்திலும் சாஸ்த்ரார்த்தமில்லை என்று ப்ரதிக்ஞை- இங்கு சாஸ்த்ரார்த்தம் என்ற இடத்தில் சாஸ்த்ரம் என்பதற்கு ஸ்ம்ருதியும் அர்த்தமானால் ச்ருதி யில்லாமையால் ச்ருத்யர்த்தமன்றாகிலும் இவர் சொல்லுகிறபடி உபநிஷந்மாத்திரத்தின் அத்யயனம் 'अध्येतव्योऽप्येकदेशः' என்கிற ஸ்ம்ருதி ரூபமான சாஸ்த்ரத்தின் அர்த்தமாகிறபடியால் ச்ருதி இல்லாததால் சாஸ்த்ரார்த்தமாகாதென்று சொல்வது கூடாதன்றோ. ஸம்ருதி அர்த்த மன்று எனில் ச்ருதியில்லாததால் ச்ருத்யர்த்தமில்லை என்று ஸாதிக்கப்பட்டதாகிறது. இப்படியாகில் ஸ்ம்ருதியிருப்பதால் ஸ்ம்ருத்யர்த்தமாகலாமே என்கிற சங்கை ஸ்வரஸமாக உண்டாவதால் அதை பரிஹரிக்காமல் போனது க்ரந்தத்தின் குறைவுக்கு ஹேதுவாகும்.

இப்படி ஸ்ம்ருதி வசனத்தினால் உபநிஷந்மாத்திரத்தின் அத்யயனம் யுக்தமானாலும் இதை 'स्यादुरयं' என்கிற வசனத்தால் ஏற்படுகிற விசார விதி விஷயீகரிக்காது என்று நிர்ணயத்தில் சொல்லியிருப்பது யுக்தமன்று. இந்த ஸ்ம்ருதிக்கு மூல பூதையான ச்ருதி அவச்யமானதால் அந்த ச்ருதி, 'स्वाध्यायोऽध्येतव्यः' என்கிற ச்ருதி இவ்விரண்டினாலும் ப்ராப்தமான அத்யயனத்தை அனுவதித்து விசார விதியுபபந்நமாகிறதன்றோ. ஸ்ம்ருத்யாதிகள் ச்ருதியின் அர்த்தத்தைத் தெளிவு படுத்தவே இருப்பதால் ஏக தேசாத்யயன ஸ்ம்ருதியின் ப்ராமாண்ய பலத்தையே கொண்டு 'अधीत्य वेदं न विजानाति योऽर्थं' என்கிற விடத்தில் அனுவாதகமான வேத பதம் முழுவதையும் ஏக தேசத்தையும் தெரிவிக்கிறது என்பது ஸமீசீனமான பல ந்யாயங்களுக்கனுகுணமானது. ஸ்ம்ருத்யாதிகளிலிருக்கும்

பல அங்கங்களையும் ச்ருதியிலிருக்கும் அங்கங்களைப் போலவே க்ருஹித்து வைதிக விதி வாக்யங்கள் ஒரு மஹா ப்ரயோகத்தை விதிக்கின்றன என்று ந்யாயவித்துக்களின் நிஷ்கர்ஷம். மேலும் ஸ்ரீ தேசிகனால் தத்வடீகையில் ஸ்ம்ருதி என்று உதாஹரிக்கப்பட்ட 'यदधीतमविज्ञातं' என்கிற வசனத்தாலும் 'अधीत्य विधिवद्वेदं वेदार्थं यो न चिन्तयेत्' என்ற ஸ்ம்ருதியாலும் ஏற்பட்ட விசார விதியானது 'अध्येतव्योऽप्येकदेशः' என்று ப்ராப்தமான ஏக தேசாத்யயனத்தை உபஜீவித்து ப்ரவிருத்திக்கலாமானபடியால் ப்ரம்ம விசார மாத்திரமும் வைதமாகும். இப்படியாகில், அபி நிவேசத்துடன் ஆசார்யர்கள் நிரஸிக்கிற பூர்வ பக்ஷிகளுக்கு ஸம்மதமான ப்ரம்ம பாக மாத்திர விசார ஸித்தாந்தமே ஸ்தாபிதமாகிறது. கீழ்ச் சொன்ன ந்யாயத்தாலேயே ஏகதேசாத்யயனம் கலி காலம், அசக்தன் என்பது போன்ற காலம், அவஸ்தை முதலியதின் ஸங்கோசம் கொண்டு விசார விதிக்கு உபஜீவ்யமாகாது என்று சொல்லக்கூடாது. ஏனெனில் 'अधीत्य वेदं न विजानाति योऽर्थं' என்பது, தான் வேதாத்யயனத்தை விதிக்காமல் யார் எந்தக் காலத்தில் எவ்வளவு அத்யயனம் செய்கிறார்களோ அவர்கள் அப்போது அந்த பாகத்துக்கு அர்த்த விசாரம் அவச்யம் செய்ய வேணும் என்று விதிக்கிறதாகையால்—ஆக இப்படி ப்ரம்ம விசாரம் மாத்திரம் யுக்தமென்கிற பூர்வ பக்ஷத்தை நிரஸநம் பண்ணி ஆசார்யர்கள் செய்திருக்கும் ஸித்தாந்தத்தை அப்படியே அவலம்பிக்க நினைப்பவர்கள் ஏகதேசாத்யயனத்துக்கு ப்ராபகமாக ஒரு சாஸ்த்ரமுண்டு என்பதை ஒருக்காலும் இசைவதற்கு இல்லை. இவ் விஷயம் ஸேச்வர மீமாம்ஸையில் 'न चैकदेशाध्ययनं वृत्तं, साङ्गसशिरस्कस्वाध्यायाध्ययनस्य विहितत्वात्' (அங்கங்கள், உபநிஷத்துக்கள் இதுகள் கூடின ஸ்வசாகையின் அத்யயனம் விதிக்கப்பட்டிருப்பதால் ஏகதேசாத்யயனம் விசாரத்துக்குப் பூர்வ வ்ருத்தமன்று) என்கிற ஸ்ரீ ஸூக்தியால் நிரூபிக்கப்பட்டது. இவ்விடத்தில் ஏகதேசாத்யயனம் பூர்வ வ்ருத்தமன்று என்கிற நிஷேதம் ஏகதேசாத்யயன விதி இருந்தால் அநுபபந்நமாவதால் அவ்விதி இல்லை என்றேற்படுகிறது.

இப்படி ஸ்ம்ருதிரூபமாயும் ஏகதேசாத்யயன ப்ராபகமாக ஒரு ப்ரமாணமிருந்தால் ஸ்ரீ தேசிகன் சததூஷணியில் மேலே செய்தருளின பூர்வ பக்ஷ நிரஸனம் உபபன்னமாகாதென்ற வபிப்ராயத்தினாலேயே சண்டமாருதத்தில் 'ननु अध्ययनस्य कृत्स्नस्वाध्यायविषयता न युक्ता, स्वविधिप्रयुक्तो वेदानां किंचिदधीत्य ब्राह्मणः' इत्येकदेशाध्ययनप्रतीतेः....इत्यत्राह—अध्ययनविधिनाऽध्यापनविधिनावेति, स्वविधिप्रयुक्तौ स्वाध्यायशब्दस्य कृत्स्नविषयत्वात् कृत्स्नस्वाध्यायाध्ययनसिद्धिः। वेदानामित्यस्य संज्ञापरत्वान्न संकोचकत्वं'

என்று மூன்றாவது வாதத்தின் ஆரம்பத்தில் அவதாரிகையின் அபிப்ராய வர்ணன வ்யாஜத்தால 'वेदानां किंचिदधीत्य ब्राह्मणः' என்கிற கல்பஸூத்ர வசனம் ஏகதேசாத்யயன விதி பரமன்று என்று ஸமர்த்திக்கப்பட்டது.

இதனால் ஏகதேசாத்யயனத்துக்கு 'किंचिदधीत्य' என்பதை ப்ரமாணம் என்று உதாஹரித்தது அநுபபந்நமென்றதாயிற்று. இது விதி என்ற பக்ஷத்தில் ஸர்வதேச காலங்களுக்கும் பொதுவான நித்யாத்யயன விதியோடு விரோதிப்பதால் விரோதாதிகரண ந்யாயத்தால் அப்ராமாண்யம் தடுக்கமுடியாது.

புத்தக விமர்சம்

ஸ்ரீ ஸூக்த பாஷ்யம்

நஞ்ஜீயர் என்று ப்ரசித்தரான ஸ்ரீ ரங்கநாதமுனி அருளிச் செய்த ஸ்ரீ ஸூக்த பாஷ்யம் இதுவரை எவ்விடத்திலும் அச்சிடப்படாதது, இப்போது புதிதாய் அச்சிட்ட புஸ்தகம் வரப் பெற்றோம். இப் புத்தகத்தில் லக்ஷ்மீ தேவியைப்பற்றிச் சொல்லவேண்டிய விஷயங்கள் யாவும் அடங்கியிருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது. விசேஷித்து, ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை ஒட்டி லக்ஷ்மீ தேவியின் மஹிமையைத் தெரிந்து கொள்ள என்னென்ன ஆதாரங்கள் வேணுமோ அவை எல்லாம் ஒருமிக்கத் திரட்டி இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விஷ்ணு புராணத்தில் ஸ்ரீ-ஸ்தவம், சதுச்லோகி, ஸ்ரீ ஸ்துதி, கூரத்தாழ்வான் அருளிய ஸ்ரீ ஸ்தவம், ஸ்ரீ குணரத்ந கோசம், லக்ஷ்மீ ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம், அஷ்டோத்தரநாம ஸ்தோத்திரம், இது முதலிய பல விஷயங்கள் அடங்கி இருக்கிறபடியால் இதை லக்ஷ்மிக் களஞ்சியம் என்று சொல்லலாம். ஸ்ரீ ஸூக்த பாஷ்யகாரரைப்பற்றி ஆராய்ச்சி முறையில் அநேக விஷயங்களை வெளிப்படுத்தின முன்னுரை ஸ்ரீ. உப. வே. கோஷ்டீபுரம் வித்வான் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டு இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது அனைவராலும் கொண்டாடத் தக்கது. இதை இவ்வளவு பரிச்ரமப்பட்டு அச்சிட்டு வெளிப்படுத்திய புதுக்கோட்டை காலேஜ் ஸம்ஸ்க்ருத ப்ரொபஸர் ஏ. ஸ்ரீநிவாஸ ராகவாசாரயாரிடத்தில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகள் அனைவரும் நன்றி பாராட்ட உரிமை வாய்ந்தவர். எல்லா ஸ்துதிகளுக்கும் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பும், முகவுரையும் கூடியிருப்பதால் இதன் பெருமை எல்லா ஆஸ்திகருக்கும் எளிதில் அறியத்தக்கது.

விலை ரூ. 1—8—0

[ஏ. ஸ்ரீநிவாஸராகவன், M. A., அம்பாள்புரம், புதுக்கோட்டை, திருச்சி Dt.]

அபிநவ ஆசௌச ஸங்கிரஹம்

இப்புத்தகம் மிக அருமையானதும் அனைவருக்கும் அவச்யமுமான விஷயத்தை வெளிப்படுத்தியது.

தஞ்சாவூருக்கடுத்த திருவாதி என்னும் நகரத்தில் ஸம்ஸ்கிருத கலாசாலை உபாத்தியாயர் V.R.S. தாதாசாரியரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தை இயற்றிய மஹானை இப்போது நாம் நினைப்பது பெரியதொரு புண்ணியமாகும். ஸ்ரீரங்கத்தில் சின்ன ஆண்டவன் என்று புகழ் பெற்று எழுந்தருளி இருந்த ஸ்ரீ பாதுகாஸேவக ராமாநுஜ யதீந்திர மஹாதேசிக ஸ்வாமி இந்த க்ரந்தத்தை அநுக்ரஹித்தார். ஆசௌச விஷயத்தில் பற்பல தர்ம சாஸ்திர க்ரந்தங்கள் ஒன்றொடொன்று முரண்பாடிட்டு பிந்நபிந்நமான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றன. அதனால் அவ்விஷயத்தில் தேசந்தோறும், ஆசாரபேதங்கள் இப்போதும் காணப்படுகின்றன. இந்த க்ரந்த கர்த்தா, வெகு ப்ரயாஸமெடுத்துக் கொண்டு அபிப்ராய பேதமுள்ள கிரந்தங்களை ஒருமைப்படுத்தி தெளிவான நடையில் தீட்டு விஷயங்களை நன்கு நிரூபித்திருக்கிறார். ஆயினும் இது வட மொழியில் எழுதப்பட்டிருப்பதால் வட மொழியிற் பயிற்சியில்லாதவருக்குப் பயன்படாது என்றெண்ணி இதை முத்திரணம் செய்தவரும், மேற்சொன்ன கிரந்த கர்த்தாவின் பௌத்திரருமான ஸ்ரீ நிவாஸதாதாசாரியர் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு இத்துடன் சேர்த்திருக்கிறார். புத்தகம் 150 பக்கங்கள் அடங்கியது. சாஸ்திரப் பயிற்சியில்லாதவர் கூட தானே ஆசௌச விஷயங்களை இப்புத்தகத்தைக்கொண்டு எளிதில் அறியலாம். ஒவ்வொருவர் கிரஹத்திலும் இப்புத்தகம் இருக்க வேண்டியது அவச்யம்.

விலை அணா. 6.

கிடைக்குமிடம் :—V.R.S. தாதாசாரியர், ப்ரொபஸர், ஸம்கிருத காலேஜ். திருவாதி. Tanjore Dt.

ஸ்ரீ பாஷ்யம்—புதிய பதிப்பு

ச்ருத ப்ரகாசிகை, பாவ ப்ரகாசிகை, மூல பாவ ப்ரகாசிகை, தத்வ டீகை, ச்ருதப்ரதீபிகை, நயப்ரகாசிகை, ந்யாய ஸுதர்சநம் இப்படிப்பட்ட பெரிய விஸ்தார வ்யாக்யானங்களுடன் தேவ நாகரீ லிபியில் பெரிய எழுத்தில் நல்ல கெட்டிக் காகிதத்தில் அச்சிடவாரம்பித்து முதல் ஸம்புடம் வெளி வந்திருக்கிறது. இலகு சித்தாந்தம் வரை அடங்கிய முதல் ஸம்புடத்தின் விலை (பைண்டு செய்தது ரூ.) 6—10—0

V. அனந்தாசாரியர், கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் போஸ்டு, சென்னை.

பக்தியின் பெருமையும் அதன் ஸ்வரூபமும்

[ஸ்ரீ. உப. வே. ரா. பத்மநாபாச்சாரியார், நெடுந்தெரு]

ஶுத்³த⁴ஸத்த்வமயம் ரூபம் ஸர்வலோகைகபாவநம்।
தஸ்ய யோ ஹ்ரிയ ഭക്ത്യാ ... ॥

(1) ஸ்ரீபாஷ்யத்தில் சாஸ்திர யோனித்வாதி கரணத்தில் ஸர்வ ஜகத் காரணமான ஸ்ரிய꞉பதியானவன் சாஸ்திரம் என்று சொல்லப்படும், ச்ருதி என்ன, அதை அநுசரித்த ஸ்மிருதி, இதிஹாஸ புராண, ஆகமங்கள் என்ன இவைகளால் மட்டும் அறியத் தகுந்தவன். அல்லது ப்ரத்யக்ஷம், அநுமானம் இவைகளால் அறியக்கூடாதவன் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(2) அப்படிப் பார்க்கும் இடத்தில் "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம" (தைத்தி — ஆன. 1 வது அநு. 1 வது வாக்யம்) என்பது முதலான ஶ்ருதிகளில் விகாரமற்றதாயும், அளவிடக் கூடாததாயும், ஜ்ஞாநமயமுமான ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் உடையவன் என்றும், "நாந்தம் கு³ணாநாம் க³ச்ச²ந்தி தேநாநந்தோயமுச்யதே" (குணங்களின் முடிவை வேதங்கள் எதனால் அடைய முடியவில்லையோ அதனால் அநந்தன் என்று ஶ்ரிய꞉பதி சொல்லப்படுகிறான் என்று அர்த்தம்) என்கிற நிருக்தியை அநுஸரித்து அநந்த பதத்துக்கு அர்த்தம் சொல்லும்போது அளவில்லாத குணம் உள்ளவன் என்றும் சொல்லப்பட்டிருப்பதுபோல் ஸாந்தோ³க்³யத்தில் த³ஹர வித்யையில்

"...நிஹித꞉ ... ஸர்வ... நவிநேஶ்ய... ஸேதுர்விதி⁴ருதி꞉ ... லோகம் நவிந்த³ந்தி" (சாந். 8-3-2.)

என்கிற ஶ்ருதியில் ப்ரும்மமானது ரத்ந நிதிக்கு ஸத்³ருஶமாகவும், லோகம் என்னும் வடித்தால் ஸகல வஸ்துக்களுக்கும் ஆதாரமாகவும் சொல்லப்பட்டிருப்பதால் அவன் மேன்மையும் பெருமையும் எல்லையற்றது என்பதில் யாதொரு சந்தேகமில்லை.

(3) இப்படி ஶ்ருதியில் கம்பீரமாகச் சொல்லப்பட்ட "நிதி" என்னும் வடித்தின் அர்த்தத்தையும், "லோகம்", என்னும் வடித்தின் அர்த்தத்தையும், விஷ்ணு புராணத்தில் 1 வது அம்ஶம் 2 வது அத்யாயம் 66 வது ஶ்லோகம் முதல் 74 வது ஶ்லோகம் வரையில்

" ஆத்மாநமஸ்ய ஜகதோ நிர்லேபமகுணாமலம் ।
பிபர்தி கௌஸ்துபமணி ஸ்வரூபம் பகவாந் ஹரிஃ ॥

என்று ஆரம்பித்து பராஶர ப்ரம்மர்ஷி விஶதீகரித்தருளினர். ஆத்மாநமஸ்ய ஶ்லோகத்தில் ஜீவாத்மாவை பெருமாள் கௌஸ்துபம் என்கிற ரத்நமாக தரிக்கிருர் என்று சொல்லப்பட் டிருக்கிறது.

(4) இதை திருவுள்ளம்பற்றியே ஸ்ரீ தேசிகனும் அதிகார ஸங்க்ரஹத்தில் " புருடன் மணிவரமாகப் பொன்ற மூலப்ரக்ருதி மருவாக " என்கிற பாசுரத்தில் ஜீவாத்மா முதலிய 2○ தத்வ ரத்நங்களும் பெருமாளிடத்தில் ஆச்ரயித் திருக்கும் ப்ரகாரத்தை தெளிய ஸாதித்தருளினர்.

(5) ரஹஸ்யத்ரய ஸாரத்தில் " ஸித்தோபாய சோதனதிகாரத்தில் " [illegible] " என்கிற ஶ்லோகத்திலும், " [illegible] " என்று (அளவில்லாத நிதி என்று அர்த்தம்) ஶ்ரியஃ பதியை மாநிதி என்று ஸ்பஷ்டமாக ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தார்.

(6) உலகத்தில் சிலவகையான ரத்னங்களுக்கு இருப்பிடமா யிருப்பது கொண்டு நிதி (புதையல்) என்பது பெருமை பெறுமானல் மேலே நிரூபித்தபடி அந்தப் புதையல் முதலிய ஸகல பதார்த்த ரத்னங்களுக்கும் இருப்பிடமா யிருக்கும் ஶ்ரியஃ பதியின் பெருமை அளர்த்தற் கரிதென்பதை அறிவாளர் ஆக்ஷேபிக்க முடியுமோ ?

(7) இப்படி அளவில்லாத பரத்வம் (மேன்மை) குடிகொண்டிருக்கும் விலை யில்லா மாநிதியையும் விலைப்படுத்தி வசப்படுத்திக் கொடுக்கும் வல்லமை பக்தி ஒன்றுக்கே உள்ளதென்று " பக்திக்ரீதோ ஜநார்தநஃ " (ஜனனம் முதலிய ஸம்ஸாரத்தை போக்குபவனுன பெருமாள் பக்தியால் விலைக்கு வாங்கப்பட்டவன் என்று அர்த்தம்) என்றும்

" மந்யே தநாபிஜந ரூபதபஶ்ஶ்ருதௌஜஸ்
தேஜஃ ப்ரபாவபலபௌருஷ புத்தியோகாஃ ।
நாராதநாய ஹி பவந்தி பரஸ்ய பும்ஸஃ
பக்த்யா துதோஷ பகவாந் கஜயூதபாய ॥

என்கிற (பாகவத 7 வது ஸ்கந். 9 தாவது அத்யாயம் 9 வது ஶ்லோகம்) சுலோகத்தில் பணம் குலம் முதலியவைகள் மட்டில் பெருமாளை த்ருப்தி செய்யமாட்டா. பக்திதான் அவனை வசப்படுத்தத் தகுந்த முக்கியமான கருவி என்றும் சொல்லபபட் டிருக்கிறபடியால் வ்யக்தமாக ஏற்பட்டிருக்கிறது.

(8) " நாஹம் வேதைர் ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா ।
ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா ॥
(கீதை ॥ அத். 53 சுலோ)

" பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥
(கீதை ॥ அத். 54 சுலோக)

என்று கீதையிலும் பக்தி யில்லாத வேதாத்யயநம் முதலியவைகளால்தான் பார்க்க முடியாதவன் என்றும் தன்னையே ப்ரதான பலமாக எண்ணிச் செய்யும் பக்தியால் மட்டும் தன்னைக் கீழே " பஶ்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே " என்று பார்த்தபடி விஶ்வ ரூபத்தோடு பார்க்க முடியும். அடைய முடியுமே தவிர வேறு வழியால் முடியாவென்று சொல்லப்பட் டிருக்கிறது.

(9) இவ்விடத்தில் " அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யானுர், (திருவாய் மொழி 5-1-7) என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி பரமபத நிலயனும் ஸர்வ ஸ்வாமியாய் பெரு மேன்மை யுடைய எம்பெருமான் பக்தியால் வாங்கப்படுகிறுன் என்று சொல்வது பொருந்தாத அர்த்தமா யிருப்பதால் " ஆதித்யோ யூபஃ " என்கிற வேத வாக்யம்போல் (யூபஸ்தம்பமானது ஸூர்யனைப்போல் பளபளவென்று பிரகாசிக்கிறது என்று அர்த்தம்) பக்தியைப் புகழும் வார்த்தையே தவிர வாஸ்தவமான அர்த்தத்துடன் கூடியதல்ல என்று சிலர் ஸம்சயிக்கலாம். அதன் பரிகாரார்த்தமாக இங்கே ராம க்ருஷ்ணவதாரங்களில் சில சரித்திரத்தை ப்ரமாணத்துடன் உதாஹரிக்கிறேன்.

(10) ஸ்ரீமத் ராமாயணத்தில் சக்ரவர்த்தி திருமகனை ராமன் " யஜ்ஞவிக்நகரம் ஹந்யாம் " என்கிற தன் பிரதிக்ஞை குலையாதபடி மாமுனி வேள்வியைக் காத்து அவபிருத மாட்டிய பின் அமர்ந்திருக்கும் விசுவாமித்திரரைப் பார்த்து (பாலகாண்டம் 31 வது ஸர்க்க. 4 வது ச்லோகம்)

இமௌ ஸ்ம முநிஶார்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ ।
ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை ஶாஸநம் கரவாவ கிம் ॥

என்று விக்ஞாபித் திருக்கிறுன். இதன் பொருளாவன = பக்திமான்களுக்குள் சிறந்தவருகிய விசுவாமித்திரரே உம்முடைய பக்திக்கு ஈடுபட்டு நாங்கள் " நஜீவேயம் க்ஷணமபி விநா " (விட்டுப் பிரிந்து ஒரு க்ஷணமும் உயிருட னிருக்கமாட்டேன்) என்கிறபடி ஒரு க்ஷணமும் தம்மை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாமல் தம் அருகில் மெய் அடிமையாய் வந்து நிற்கி

றோம். இஷ்டம்போல் வேலை யிடவேண்டும் என்று இவ்விடத்தில் "ஸ்திதஃ" என்றாகிலும் உபஸ்திதஃ என்றாகிலும் சப்தத்தை உபயோகிக்காமல் "ஸமுபஸ்திதஃ" என்று பதம் உபயோகித்திருப்பது கவனிக்கத் தக்கது.

(11) உலகத்தில் கிங்கரர்கள் (வேலைக்காரர்கள்) மூன்று வகுப்பாயிருப்பார்கள். இதில்

(1) எந்த வேலைக்காரன் எஜமானன் இருக்கும் இடத்தில் இல்லாமல் தூரத்திலேயே இருந்துகொண்டு வாயினால்மட்டும் கிங்கரன் என்று வஞ்சனையாகச் சொல்லிக்கொண்டு பாவனை பண்ணிக்கொண்டிருக்கிறானோ அவன் அதமனான கிங்கரன்.

(2) எந்த வேலைக்காரன் எஜமானனிடம் சமீபத்தில் இருந்தாலும் எஜமானனுக்கு மேற்பட்ட வேஷ பாஷைகளுடன் இருப்பதால் எஜமானனுக்கு வேலையிடக் கூசும்படி இருக்கிறானோ அவனை எப்பொழுதும் எல்லா வேலையையும் சொல்ல முடியாதாகையால் அவன் மத்யம கிங்கரன்.

(3) எவன் எஜமான் சமீபத்தில் வினீத வேஷனாய் உள்ளன்போடு சகல வேலையையும் செய்துகொண் டிருக்கிறானோ அவன் உத்தமமான கிங்கரன்.

(12) மேலே சொல்லியபடி ராமன் தான் தூரத்திலேயே ஸ்திதனாய் (இருந்துகொண்டு) வேலைக்கார பாவனை பண்ணாமல் திருவடி வாரத்தில் வந்து நிற்பதை "உபஸ்திதஃ" என்கிற பதத்தாலும் கிட்ட வந்தும் "தேவர்" என்று அஞ்சும்படியான "சங்கசக்ராதி" களை தரித்த வேஷத்துடன் நின்றால் ரிஷி வேலையிடக் கூசுவனோ என்று பயந்து ப்ரதமாசார்யனான தன்னை சிஷ்யனாயும் அவரை ஆசானுமாயும் ஆக்கி வினீத வேஷனாய் நிற்கிற நிலையை "ஸமுபஸ்திதஃ" என்கிற பதத்தை உபயோகித்தும் நன்றாக வேலைக்கார வேஷத்துடன் உத்தம கிங்கரனாய் வந்திருக்கிறேம். இஷ்டம்போல் ஏவவேண்டும் என்று சொல்லியிருக்கும் இந்த நீர்மை அன்பர்களை "எத்திறம்" என்று மோஹிக்கும்படி யென் ஈடுபடுத்தாது.

(13) இதனால் உலகில் இஷ்டப்பட்ட வரன்களைக் கொடுக்கக் கூடியதென்று பிரசித்தி பெற்ற "கல்பக விருக்ஷமும் தாதாக்கள் தானிருக்கும் இடந் தேடிவந்து இரப்பவர்க்கு தன்னையொழிய சில பயன்களைத் தான் கொடுக்கும் தன்மை யுடையவர்கள். நம்வள்ளல் இராகவனோவெனில்

இரப்பவர் இருக்குமிடந் தேடிவந்து அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படும் புருஷார்த்தங்களையும் தன்னையும் தரும் கற்பகம் என்று காட்டப்பட்டது.

(14) மேலும் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் உரலில்—கட்டுண்டது, பாண்டவர்க்கு தூது போனது, தன் நியாம்யனான அர்ஜுனனால்

"സേനയോരുഭയോർമധ്യേ രഥം സ്ഥാപയ മേ'ച്യുത"।
(கீதை க அத் 21 சுலோ)

என்று நியமிக்கப்படுவது, அந்தப்படி

"സേനയോരുഭയോർമധ്യേ സ്ഥാപയിത്വാ രഥോത്തമം"।
(கீதை க அத் 24 சுலோக)

என்று சாரதியாய் ஓட்டியது, முதலிய அனந்த சரிதங்களை அறிந்தவர்களுக்கு "ഭക്തിക്രീതോ ജനാർദനഃ" என்கிற வாக்யத்தில் ஸந்தேக லேசமும் உண்டாகாதென்பது திண்ணம்.

(15) இதை அநுஸரித்து

"ഭക്ത്യാ ത്വനന്യയാ ശക്യഃ അഹമേവംവിധോ'ർജുന"।
(கீதை க அத் 54 சுலோக)

என்கிற இடத்திலும் "ഏവംവിധഃ" என்கிற பதத்துக்கு அவாந்தர ப்ரகரணமான 11 வது அத்யாயத்தில் காட்டிய விசுவரூபத்துடன் கூடிய தன்னைக் காட்டி "ഏവംവിധഃ" இந்த விதமாய் விஶ்வ ரூபத்துடன் கூடிய நான் என்று அர்த்தம் என்று பாஷ்யகாராதிகள் நிர்வஹித்த அர்த்தம் ஒருவித மிருக்க ஆரம்பத்தில் "സേനയോരുഭയോർമധ്യേ രഥം സ്ഥാപയ മേ'ച്യുത" என்று உத்திரவிடும்படி வாயன்மை ரயியாயும் தன்னை ஸாரதியாயும் ஸர்வ லோகங்களும் பார்க்கும்படி தான் நின்ற நிலையை "ഏവംവിധഃ" என்கிற பதத்தால் பராமர்சித்து அர்ஜுன! ஸர்வ நியந்தாவாய் விராட் ஸ்வரூபமான நான் உனக்கு "ഏവംവിധഃ" இந்தவிதமாய் நியாம்யனான ஸாரதியாய் பார்த்து அனுபவிக்கும்படி அநந்யபக்தி ஒன்றாலேதான் செய்ய முடியும் என்று ஒருவிதமாயும் அர்த்தம் சொல்லலாம்.

(16) இப்படி பக்தி என்னும் ஸ்வல்பமான "அமூர்த்த திரவியத்துக்கு" (உருவ மில்லாத திரவியம்) ஸர்வேஶ்வரன் தன்னை விலைப்படுத்தினால் அவன் கௌரவத்துக்கு (பெருமேன்மைக்கு) குறைவு வராதோ என்

னும் (1) "ஸர்வம் பரவசம் து:க்கம்" என்கிறபடியே பாரதீனதையால் து:க்கம் ப்ரஸங்கியாதோ என்னும் (2) இரண்டு ஆக்ஷேபங்கள் உண்டா கலாம். அதில்

1வது ஆக்ஷேபத்துக்குப் பரிஹாரம்.

(17) பெருமேன்மை மேரு என்னும்ஸ்வர்ணமயமான பர்வதத் துக்கு இருந்தபோதிலும் அது துர்லபமாய் (கிடைக்க அரிதாய்) இருப் பதால் ஒருவருக்கும் உபயோகப்படாமல் அதன் பெருமை பயனற்றதாய் இருக்கிறது.

(18) அதிதுர்லபமான அதை விரும்பு வோரும் மதியை வேணடிய மதலையைப்போல் மதியீன ராவார்கள் (அம்புலி வேண்டிய பாலனைப் போல்) அப்படி துர்லப மன்னியில் மஹோதாரனன் ஸ்ரிய: பதி தன்னை பக்தி என்னும் ஸ்வல்ப திரவ்ய முள்ளவர்களுக்கு ஸுலப மாக்குவதால் ஸௌலப்யம் என்றும் (சுலபமாய் கிடைக்கக்கூடியது) மகா குணம்பெற்று மிகவும் மேன்மை பெறுகிறான்.

(19) இதனாலேதான் விண்ணுளாரிலும் சீரியர்களான ஆழ்வார்கள் இந்த ஸௌலப்யம் என்னும் மகா குணத்தையே ஆழ்ந்து அநுபவித்து "எத்திறம்" என்று வயிறு பிடித்துக்கிடந்தார்கள்.

(20) நம் ஆசார்யர்களும் ஜகத்காரணமான ஸ்ரிய: பதிக்கு பரத்வ ஸௌலப்யங்கள் இரண்டும் சேர்ந்துதான், அரசனுக்கு சத்ரசா மரங்கள் இரண்டும்போலே முக்கியமான அடையாளமாயிருந்துகொண்டு பெருமைப்படுத்துகிறன என்று அடிக்கடி சாதிப்பார்கள்.

(21) இதனால் ஸௌலப்யம் என்னும் நீர்மை பரத்வம் என்னும் மேன்மையை பயனுள்ளதாகச் செய்து போஷிக்கு மதாகையால் இந்த ஸௌலப்ய குணத்தால் ஸ்ரிய: பதிக்கு கௌரவமே தவிர இகழ்ச்சி வராது என்று ஏர்ப்பட்டது. கீழே 16-வது பாராவில் சொன்ன 2வது ஆக்ஷேபத்துக்கு பரிஹாரம் பின்வருமாறு.

(22) ஸர்வம் பரவசம் து:க்கம் என்று சொன்னது நம்மைப்போல் கர்மத்தால் பராதீனராய் இருப்பவர்களுக்கு துக்கமுண்டு என்று சொன்னதே ஒழிய ஈஸ்வரன் தன் தடையில்லாத ஸ்வாதந்த்ரியத்தால் "தாஸ்யம் ஐச்வர்ய யோகேந ஜ்ஞாதீநாஞ்ச கரோம்யஹம்" என்று (ஸ்வாதந்திரியத்தால் அதாவது இஷ்டத்தால் நான் ஜ்ஞாதிகளுக்குத் தொண்டு செய்கிறேன் என்று அர்த்தம்) இச்சையுடன் அனன்ய பக்தர் கள் விஷயத்தில் தாஸ பாவத்தை வஹித்தால் துக்கப்ரக்தியே இல்லை.

(23) இதை நட்டில் வடக்குத்திருவீதிப்பிள்ளை சுத்தாந்த ஸித் தாந்திகளான பரமை காந்திகள் விஷயத்தில் ஈசுவரன் தானே தொண்டு செய்வதென்பது ஸார்வ பௌமனை ராஜாவுக்கு அநேக பரிஜனங்களிரு ந்த போதிலும் தன் மகிஷியின் வேர்வையைதுடைக்க வேறு" ஆளிட வொண்ணாதாப் போலே" என்று வெகு அழகாய் சாதித்தருளினர்.

(24) ஆகையால் "பக்தி: ஸ்ரீஜநாதிந:" என்கிற வாக்யத்து க்கு முக்யார்த்தம் கொள்வதில் யாதொரு பாதகமுமில்லை. ஆதலால் ஸகல பலப்ரதாய்" ஸ்வா தீநத்ரிவித சேதநா சேதந ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி பேதனை எம்பெருமானையும் நாமிட்ட வழக்காய் ஸ்வாதீனப் படுத்திக்கொடுத்து அவன் முகமாக சகலபலத்தையும் மோக்ஷாந்தமாக சாதித்துக்கொடுக்கும் பெருமை பக்தி ஒன்றுக்கே உளதென்றால் அந்த பக்தியின் பெருமையை எழுதுவதற்கு ஆகாயம் முற்றிலும் கடிதமாகி ஏழு கடல்களும் மசியாகி ஸஹஸ்ர ஸீர்ஷனை புருஷோத்தமனே சொல்லி எழுதுபவனானால் அல்லது முடியாது என்பது கையுள் கனிபோல் விளங்கு கிறது.

இனி பக்தியின் ஸ்வரூபத்தை கொஞ்சம் விசாரிப்போம்

மானிட தேகத்தின் உயர்வு

[ஸ்ரீ. A. S. தேசிகன்]

चत्वार्यशीतिर्लक्षाणि संख्याता जीवराशयः ।
ब्रह्मसृष्टिगता राजन् उत्तमा स्तेषु मानवाः ॥

ப்ரம்ம ஸ்ருஷ்டியிலடங்கிய ஜீவ வர்க்கங்களின் தொகை எண்பத்து நான்கு லக்ஷம் என்றும், அவற்றுள் மானிட வர்க்கம் மிக உயர்வு பெற்ற தென்றும் நமது மஹர்ஷிகள் சாஸ்திரங்களில் கூறியிருக்கின்றார்கள்.

ஜீவ வர்க்கங்களின் உயர்வு அவற்றின் ஞான சக்தியையும், கிரியா சக்தியையும் பொருத்திருக்கின்றது. உலகில் உள்ள எல்லாப் பிராணிகளும் மானிடரைப்போல கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்ற ஐந்து விதமான ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களென வழங்கப்படும் வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்ற ஐவகைச் செய்கைக் கருவி களையும் பெற்றிருக்கவில்லை. மானிடர்களோ, இவ்விருவகைக் கருவிகளை முற்றிலும் பெற்றிருக்கின்றார்கள்.

மேலும், மானிடர் இவ்விரு கருவிகளுக்கும் அதிபதியாய், மனஸ், புத்தி, சித்தம், அஹங்காரம் என்று நான்கு வகைப்பட்டதாயுமுள்ள, அந்தக்கரணம் என்னும் உட்கருவியைப் பெற்றிருப்பதுபோல் இதர ஜீவ வர்க்கங்கள் அதனைப் பெற்றிருக்கவில்லை.

अहारनिद्राभयमैथुनं च सामान्यमेतत्पशुभिर्नराणाम् ॥
विवेक एषामधिको विशेषः विवेक हीनः पशुभिः समानः ॥

மிருகங்களை மனிதன் தன் இஷ்டம் போல் ஆட்டி வைக்கக்கூடும், ஆனால் மிருகங்கள் மனுஷ்யர்களை அப்படிச் செய்ய முடியாது.

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களும், மஹர்ஷிகளால் எழுதப் பெற்ற ஸ்மிருதிகள் என்ன, புராணங்கள் என்ன, வேதங்கள் என்ன, வேதத்தில் சொல்லியிருக்கும் நீதி விசேஷங்கள் என்ன எல்லாம் மானிடரையே அதிகாரியாய் கொண்டிருக்கின்றன.

மேலும் முன் ஜன்மங்களில் செய்யப்பட்ட நல்வினைப்பயனாக இம் மானிட சரீரம் லபித்திருக்கிறது. ஈச்வரனால் கொடுக்கப்பட்ட பொருளை நல் வழியில் உபயோகப்படுத்தி அதனால் நமக்கு க்ஷேமத்தை தேடிக்கொள்வது புத்திசாலிகளின் கார்யம். ஆகையால் ஸமுத்திரத்தின் நடுவில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருக்குமவனுக்கு ஒரு ஓடம் கிடைப்பது போல் இச்சரீரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதைக்கொண்டு நன்மையை தேடிக்கொள்ள முயலவேண்டும். இத்தேஹம் என்னும் ஓடத்தை ஸ்திரமாக எண்ணி கால தாமதம் செய்வது உசிதமல்ல. கடல் நடுவில் மிதந்து கொண்டிருக்கும் ஓடத்துக்கு அபாயம் எளிதில் ஸம்பவிக்கக்கூடும். அது போலவே இச்சரீரம், அழியுந்தன்மையை இயல்பாக உடையது. ஜீவித்திருப்பது அரிது. இச்சரீரத்தைக் கொண்டு மோக்ஷ மார்க்கத்தைத் தேடிக் கொள்ள வேண்டியது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இச்சரீரத்திலேயே ஸம்பவிக்கக்கூடிய சிற்சில சுகாநுபவங்களை உபேக்ஷிக்காமல் அவ்வப்போது ஈச்வரனருளால் நேரக்கூடிய இன்பங்களை அநுபவிக்கவேணும். அப்போதுதான் பகவான் நமக்கு சரீரம் அருளியதை பயன் படுத்தினதாகும். மநுஸ்மிருதியிலும் " பூதாநாம் ப்ராணிந: ச்ரேஷ்டா: " என்று தொடங்கி மானிட சரீரத்தை மிக உயர்ந்ததாகக் கூறியது இங்கு கவனிக்கத்தக்கது.

கார்யத்தை எண்ணம் பொய்யாகாமல் நினைத்தபடியே நிறைவேற்றும் சக்தி வாய்ந்ததும், அழுக்கு குற்றம் ஒன்றுமில்லாமல் இருப்பதால், அபுருஷார்த்தம் எனப்படும் குறை கொஞ்சமேனும் இல்லாததுமான ப்ரும்மமே, தன்னை, விசித்திரங்களான சேதநாசேதநங்கள் அடங்கிய இவ்வுலக வடிவமாக ஸ்ருஷ்டித்துக்கொண்டது என்பது எப்படிப் பொருந்தும்? உலகத்தில் குறை, குற்றம், துக்கம் இவை பலவாறுப் காணப்படுவதால், குறையில்லாத ப்ரும்மம் தனக்குக் குறையை தேடிக்கொண்டது, குற்றமில்லாதது தனக்கு குற்றத்தை தேடிக்கொண்டது, துக்கம் இல்லாதது தனக்கு துக்கத்தை தேடிக்கொண்டது என்று சொன்னால் அது ஒப்புக்கொள்ளத் தக்கதா? என்று கேள்வி. இதற்கு சமாதானம் அருளிச்செய்கிறார்.

तदेतत् सूत्रकारः स्वयमेव परिचोद्य परिहरिष्यति । " अपीतौ तद्वत्प्रसङ्गादसमञ्जसम् " " इतरव्यपदेशाद्धिताकरणादि दोषप्रसक्तिः " इति चोद्यम् । परिहारस्तु—" नतु दृष्टान्तभावात् " अधिकन्तु भेद-निर्देशात् " इति च ॥

மேற்சொன்ன கேள்வியை ஸ்ரீ ஸூத்திரகாரர் தானே சோத்யம் செய்து கொண்டு, பரிஹாரம் சொல்லப்போகிறார். அதாவது—உலகத்தில் காரணம், கார்யம் இவ்விரண்டும் வெவ்வேறு வஸ்துக்களாகவே காணப்படுகின்றன. அவ்விரண்டும் ஒரே பொருள் என்று சொல்லும் பக்ஷத்தில் கார்யத்தில் காணப்படும் குண தோஷங்கள் காரணத்திலும் காணப்பட வேண்டியதாகையால் கார்யமான உலகத்திற்குரிய சுக துக்காதிகள் காரணபூதமான பரமாத்மாவிலும் காணப்பட வேண்டியதாகும். ஒன்றோடொன்று விரோதிக்குமவற்றை ஒரே ப்ரும்மத்தில் இருப்பதாகச் சொல்லுகிறபடியால் வேதாந்தங்களில் சொல்லுமது அஸமஞ்ஜஸம்—அதாவது ந்யாயமார்க்கத்திற்கு ஒவ்வாதது என்பது ஆக்ஷேபம்.

இதற்கு ஸமாதாநம்—நது திருஷ்டாந்தபாவாத் என்று ஸூத்திரத்தால் அருளிச் செய்கிறார். பரமாத்மாவுக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஸங்கோசம் விகாஸம் என்று. அதாவது—முறையே சுருங்கல், படர்தல் என்பது. இது மாத்திரமல்ல—கார்யாவஸ்தை காரணாவஸ்தை என்றும் நிலைகள் சொல்லப்படுகின்றன. எப்போதும் ஏகரூபமான ப்ரும்மம் கார்ய காரணாவஸ்தைகளை ஏற்றுக்கொள்ளும்போது சுருங்கல், படர்தல் என்ற நிலைகள் உண்டாகின்றன. இந்நிலைகள் கார்யகாரணாவஸ்தைகளைச் சேர்ந்ததேயல்லாமல் பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தைச் சேர்ந்தவையாகா.

ஏனெனில் இவ்விதம் திருஷ்டாந்தம் காண்கிறபடியால். ஆத்மா, சரீரம் என்னும் இரண்டு பொருள்களில் ஆத்மாக்களின் குணங்கள் சரீரத்தில் இல்லை. சரீரங்களின் குணங்கள் ஆத்மாவில் இல்லை. அதுபோல் ஆத்மா, சரீரம் இரண்டிற்குறிய குணங்கள் இவ்விரண்டுக்கும் அந்தர்யாமியான பரமாத்மாவில் இல்லை என்பது நியாயமே. ஆகையால் கீழே சொன்ன ஆக்ஷேபத்திற்கு இடமில்லை.

'**इतरव्यपदेशात्**' என்ற ஸூத்ரத்தால் ஒரு ஆக்ஷேபம் செய்யப்படுகிறது. அதாவது.—ஜீவனுக்கே ப்ரும்மத்வ ப்ராப்தி (அதாவது பரமாத்வாவாக ஆகுவது) சொல்லும் பக்ஷத்தில் ப்ரும்மமே தனக்கு நன்மையைச் செய்யாமல் தீமையைச் செய்து கொள்ளுகிறது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டி வருவதால், அறிவுள்ளவனாகிய ஒருவனும் தன்னுடைய தீமையை தானே தேடிக்கொள்ளமாட்டானாகையால் பரமாத்மாவின் மீது இப்படிப்பட்ட பெரும் குற்றம் சாட்டப்பட்டதாகிறது. இதற்கு ஸமாதானம் '**अधिकं तु**' என்னும் ஸூத்திரத்தால் சொல்லப்படுகிறது. ஜீவாத்மாவைக்காட்டிலும் பரமாத்மா எவ்விதத்திலும் வேறுபட்டது. அநேக ச்ருதி வாக்யங்களில் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வெவ்வேறு பொருட்களாகவே கூறப்படுகின்றன. இப்படிப்பட்ட வெவ்வேறாகக் கூறும் ச்ருதிவாக்யங்களை அந்தந்த அதிகரணங்களில் விவரிப்போம்.

मू—'क्षरन्त्वविद्या ह्यमृतन्तु विद्या, विद्याविद्ये ईशते यस्तु सोऽन्यः,' 'सकारणं करणाधिपाधिपो न चास्य कश्चिज्जनिता न चाधिपः', 'क्षरं प्रधानममृताक्षरं हरः क्षरात्मानावीशते देवएकः' अचिद्वर्गं स्वात्मनो भोग्यत्वेन हरतीति भोक्ता हरइत्युच्यते। 'द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च। क्षरस्सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते॥ उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः। यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः। यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः॥ अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः' इत्यादि श्रुतिस्मृतिगणैः प्रत्यगात्मनो ब्रह्मणो भेदेन निर्देशात्, परमपुरुषार्थभागिनः प्रत्यगात्मनः अधिकमर्थान्तरभूतं ब्रह्म। तच्च प्रत्यगात्मशरीरतया तदात्मभूतम्। प्रत्यगात्मनस्तच्छरीरत्वं ब्रह्मणस्तदात्मत्वञ्च 'य आत्मनितिष्ठन्...'यस्यात्मा शरीरम्' 'एष सर्वभूतान्तरात्माऽपहत पाप्मा दिव्यो देव एको नारायणः' इत्यादि श्रुतिशतसमधिगतम्।

'வித்யா' என்பது ஜ்ஞானத்திற்குப் பெயராகும். 'அவித்யா' என்பது கர்மத்திற்குப் பெயர். இவ்விரண்டும் ஜீவாத்மாவினிடம் விட்டுப்பிரியா வண்ணம் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. இவ்விரண்டினால் ஆராதிக்கப்பட்டு பலன் கொடுப்பவன் வேறு. அவனையே பரமாத்மா என்பர்' என்று ச்வேதாச்வதரோபநிஷத்தின் வசனம். அதே உபநிஷத்தின் ஆறுவது அத்யாயத்தில் 'இந்த பரமாத்மாவே ஜகத் காரணம். இந்திரியங்களுக்கு அதிபதி யெனப்படும் ஜீவாத்மாவுக்கும் அதிபதி. அவனைப் பிறப்பித்தவன் வேறு ஒருவருமில்லை. அவனுக்கதிபதி வேறு ஒருவருமில்லை' என்றும் கூறப்படுகிறது. மற்றும் மேற்சொன்ன உபநிஷத்தின் முதல் அத்யாயத்தில் ப்ரகிருதியை க்ஷரம் என்றும், ஜீவாத்மாவை அக்ஷரம் என்றும் சொல்லி இவ்விரண்டிற்கும் ஈச்வரன், அதாவது நடத்துகிறவன், ஒரு தேவன் இருக்கிறான் என்று சொல்லப்பட்டது. அந்த வாக்யத்தில் அசேதன வர்க்கங்களைத் தனக்கு போக்யமாக உபயோகப்படுத்துகிறவன் என்ற காரணங்கொண்டு ஜீவாத்மாவை ஹர: என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'பகவத்கீதை பதினைந்தாவது அத்யாயத்தில் க்ஷரன் அக்ஷரன் என்று இரண்டு புருஷர்கள் உண்டு என்றும், அதில் க்ஷரன் என்பவன் ப்ரகிருதி மண்டலத்திற்குட்பட்டவன் என்றும், மற்றொருவன் ப்ரகிருதி மண்டலத்திலகப்படாத முக்தன் என்றும் இவ்விருவரைக்காட்டிலும் வேறுபட்ட உத்தமனான புருஷனே பரமாத்மா என்றும், அவன் இம்மூன்று உலகங்களிலுமுட்புகுந்து தனக்கு ஒரு விதமான விகாரமின்றி உலகங்களைத் தாங்கிக்கொண்டிருப்பதால் ஈச்வரன் எனப்படுவான் என்றும், க்ஷரம் அக்ஷரம் என்று சொல்லப்பட்ட புருஷர்களைக்காட்டிலும் உத்தமனாயிருப்பது கொண்டு உலகத்திலும் வேதத்திலும் என்னை புருஷோத்தமன் என்று கூறுவர்,' என்றும் ஸ்ரீ பகவான் அருளிச்செய்திருக்கிறார்.

இப்படி பற்பல ச்ருதி வாக்கியங்களிலும் ஸ்மிருதிகளிலும் பரமாத்மாவை ஜீவாத்மாவை விட்டுப் பிரித்துச் சொல்லியிருப்பது கொண்டு பரமபுருஷார்த்தம் எனப்படும் மோக்ஷத்தை யடைய உரிமைவாய்ந்த ஜீவாத்மாவைக்காட்டிலும் ப்ரும்மம் வேறு. அந்தப்ரும்மமும் ஜீவாத்மாவைத் தனக்குச் சரீரமாகப் பெற்றிருப்பதால் ஜீவாத்மாவுக்கு ஆத்மா எனப்படும். இப்படி ஜீவாத்மா பரமாத்மாவுக்கு சரீரமாக நிற்கிறது என்பதும், பரமாத்மா ஜீவாத்மாவுக்கு ஆத்மாவாக இருக்கிறது என்பதும் 'ய ஆத்மனி

திஷ்டன்...யஸ்யாத்மா சரீரம்' என்ற ச்ருதியிலும், ஸுபாலோபநிஷத்தில் ஏழாவது கண்டத்தில் 'இவனே ஸர்வ பூதங்களுக்கும் அந்தராத்மா, பாபமில்லாதவன், திவ்யன், தேவன் என்றும் நாராயணன் ஒருவனே' என்றும், இது முதலிய அநேக ச்ருதி வாக்யங்களால் தெளிவுற உரைக்கப்பட்டிருக்கிறது.

सशरीरस्यात्मनः कार्यावस्थाप्राप्तावपि गुणदोषव्यवस्थितेर्दृष्टान्तभावात् ब्रह्मणि न दोषप्रसक्तिः इति नासामञ्जस्यं वेदान्तवाक्यस्येति 'नतु दृष्टान्तभावात्' इत्युक्तम् ।

'நது த்ருஷ்டாந்தபாவாத்' என்னும் ஸூத்திரத்திற்குப் பொருள் கூறப்படுகிறது. ந= தோஷம் சொல்லுவதற்கிடமில்லை. த்ருஷ்டாந்தபாவாத்= த்ருஷ்டாந்தம் இருப்பதால். சரீரத்துடன் கூடின ஆத்மாவுக்கு கார்யாவஸ்தை வந்தபோது குணம், தோஷம் இவை வ்யவஸ்தை செய்யப்பட்டிருப்பதாலும் அவ்விதமே உலக திருஷ்டாந்தம் காணப்படுவதாலும் பரமாத்மாவினிடம் தோஷம் சொல்லுவதற்கிடமில்லை என்று வேதாந்த வாக்யங்கள் பொருந்தவில்லை என்ற ஆக்ஷேபம் நிராகரிக்கப்பட்டது.

दृष्टान्तश्च देवमनुष्यादिशब्दवाच्यस्य सशरीरस्याऽत्मनः 'मनुष्यो बालो युवा स्थविरः' इति नानावस्थाप्राप्तावपि बालत्वयुवत्वस्थविरत्वादयः शरीरगता दोषाः नात्मानं स्पृशन्ति, आत्मगताश्च ज्ञानसुखादयः नशरीरमिति ।

த்ருஷ்டாந்தம் யாதென்றால் சரீரத்துடன் கூடின ஆத்மா தேவன், மனுஷ்யன் முதலிய சப்தங்களால் சொல்லப்படுகிறான். அவனுக்கே மனுஷ்யன் சிறுவன், வயதுமுதிர்ந்தவன், யௌவன வயதுடையவன் என்னும் அநேக அவஸ்தைகள் உண்டாகின்றன. சிறுமை, முதலிய தோஷங்கள் சரீரத்தைச்சேர்ந்தவை. அவை ஆத்மாவைத் தொடுவதில்லை. ஆத்மாவுக்குரிய ஞானம் சுகம் முதலிய குணங்கள் சரீரத்தைத் தொடுவதில்லை. இந்த திருஷ்டாந்தத்தைக்கொண்டு கார்யாவஸ்தையில் உண்டாகும் தோஷங்கள் காரணாவஸ்தையில் சேராது என்பதை நன்கு உணரலாம்.

अतः कार्यावस्थं कारणावस्थं च ब्रह्म प्रत्यगात्मशरीरतया तदात्मभूतमिति प्रत्यगात्मवाचिना शब्देन ब्रह्माभिधाने तच्छब्दसामाना-

धिकरण्ये च हेतुं वक्तुं, निरसनीयं मतद्वयम् 'प्रतिज्ञासिद्धेर्लिङ्गमाश्मरथ्यः' 'उत्क्रमिष्यत एवम्भावादित्यौडुलोमिः' इत्युपन्यस्य 'अवस्थितेरिति काशकृत्स्नः' इति हेतुरुक्तः ।

ஆகையால் கார்யாவஸ்தை யென்றும் காரணாவஸ்தையென்றும் இரண்டு அவஸ்தைகளையடைந்த ப்ரும்மமானது ஜீவாத்மாவைத் தனக்கு சரீரமாகப்பெற்றிருப்பதால் அந்த ஜீவாத்மாவுக்கு ஆத்மாவாக நிற்கிறது. இப்படி ஒப்புக்கொண்டபிறகு ஒரு ஆக்ஷேபம் தோன்றுகிறது. அதாவது- பரமாத்மா ஜீவன், இவ்விருவரும் வெவ்வேறு என்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் வேதங்களிலும் மற்றவிடங்களிலும் பரமாத்மாவை ஜீவாத்மாவைக் குறிக்கும் சொல்லால் சொல்லுவானேன் 'தத், த்வம், அஸி' என்ற ச்ருதிவாக்யத்தில் பரமாத்மாவைக் குறிக்கும் 'தத்' என்னும் பதத்தையும், ஜீவாத்மாவைக்குறிக்கும் 'த்வம்' என்ற பதத்தையும் ஒரே வேற்றுமையில் சொல்லுவானேன் என்று. இதற்கு ஸூத்ரகாரர் 'அவஸ்திதேரிதி' என்ற ஸூத்ரத்தால் ஸமாதானம் அருளிச்செய்திருக்கிறார். காசக்ருத்ஸ்னர் என்ற ஒரு ஆசாரியன் இவ்விதம் சொல்லுகிறார்—'பரமாத்மாவானவன் ஜீவாத்மாவினிடத்தில் எப்போதும் விட்டுப் பிரியாமல் இருப்பதுகொண்டு பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும் ஒரே வேற்றுமையால் குறிப்பதும் இருவரையும் ஒரு பொருளாகக்கூறுவதும் பொருந்தும்.' ஆனால் அதற்குமுன் இரண்டு ஸூத்ரங்களால் சொன்ன ஆக்ஷேபத்திற்கு இரண்டுவிதமான ஸமாதானங்களும் நம் ஸித்தாந்தத்திற்கு ஒவ்வாதவை யென்று தள்ளி முடிவில் காசக்ருத்ஸ்னருடைய மதமே ஸித்தாந்தம் என்று உரைக்கிறார். தள்ளப்பட்ட காரணங்களில் ஒன்று ஆச்மரத்யர் என்ற ரிஷியினுடையதாம். அவர் சொல்லுவதென்னவென்றால், ஸத்வித்யையில் ஒருபொருளின் அறிவினால் மற்றெல்லாப்பொருளும் அறிந்ததாக ஆகும் என்று ப்ரதிக்ஞை செய்திருப்பதால் இப்பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவதன் பொருட்டு ப்ரும்மமும் ஜீவனும் ஒன்று என்று ஒப்புக்கொள்ள வேண்டுமே என்பது. இரண்டாவது காரணம் ஔடுலோமி என்ற ரிஷியினுடையதாம். அவர் (சொல்லுகிறதாவது—இஜ்ஜீவன் இச்சரீரத்தை விட்டுப்பிரிந்தபின் பரப்ரும்மபாவம், அதாவது பரமாத்மாவின் தன்மையை அடைந்துவிடுகிறபடியால் இக்காரணத்தைக்கொண்டு வேதாந்தவாக்யங்களில் சில இருவரையும் ஒன்றாகச்சொன்னது என்பது. இவ்விரண்டு மதத்தையும் தள்ளி இவற்றிற்கு விரோதமான காசக்ருத்ஸ்னருடைய மதத்தை முடிவில் சொன்னபடியாலும், இதற்கு மேல் வேறுமதங்கள் சொல்லாமையாலும் அதுவே ஸித்தாந்தம் ஆகிறது.

‘तत्सृष्ट्वा । तदेवानुप्राविशत् । तदनुप्रविश्य । सच्चत्यच्चाभवत्’ इत्यादिना प्रत्यगात्मन आत्मतयाऽवस्थानात् ब्रह्मणस्तच्छब्देनाभिधानम्, तत्सामानाधिकरण्येन व्यपदेशश्चेत्युक्तम् ।

தைத்தரீயோபநிஷத்தில் ‘பரமாத்மாவானவன் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து இந்த ஜகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் தான் உட்புகுந்து சேதனம் என்னும் அசேதனம் என்னும் இரண்டுவகை வஸ்துக்களாகத்தானே நின்றான்; என்று சொல்லியிருப்பதனால் பரமாத்மா ஜீவாத்மாவுக்கு ஆத்மாவாகும். ஆதலால் பரப்ரும்மத்தை ஜீவாத்மாவைச் சொல்லும் சொல்லால் சொல்லுவதும், ஜீவாத்மாவோடு ஒரே வேற்றுமையினால் கூறுவதும் யுக்தமாகும் என்று சொல்லப்பட்டது.

तथा ‘वैषम्यनैर्घृण्ये न सापेक्षत्वात्’ ‘न कर्माविभागादिति चेन्नानादित्वादुपपद्यते चाप्युपलभ्यते च’ इति देवमनुष्यादिविषमसृष्टेः जीवकर्मनिमित्तत्वम्, जीवानां तत्तत्कर्मप्रवाहाणाञ्चानादित्वं प्रतिपाद्य, तदनादित्वं च ‘नित्योनित्यानां चेतनश्चेतनानाम्’ ‘ज्ञाज्ञौद्वौ’ इत्यादिश्रुतिषूपलभ्यत इत्युक्त्वा, तदनादित्वेऽपि प्रलयकाले चिदचिद्वस्तुनोर्भोक्तृभोग्ययोर्नाम रूपविभागाभावात्, ‘आत्मा वा इदमेक एवाग्र आसीत् नान्यत्किञ्चन मिषत्’ इत्यादावेकत्वावधारणमुपपद्यत इति सूत्रकारेण स्वयमेवोक्तम् ।

ஸூத்ரகாரரும் கீழ்சொன்ன விஷயத்தை தெளிவாய் உரைத்திருக்கிறார். அதாவது சேதனம் அசேதனம் என்ற இருவகை வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணனான பரமபுருஷன் தன்னுடைய அதிசயமான சக்தியால் நாநாவிதமான இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறான் என்று ஒப்புக்கொள்ளும்போது அந்த பகவானுக்கு பக்ஷபாதம் என்னும் தோஷம் வருகிறது. ஏனெனில் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது ஒரு ஜீவனை தேவனாயும் மற்றவனை மனுஷ்யனாயும் இன்னும் சிலதுகளை பசுபக்ஷிரூபமாயும், உயர்ந்த நிலையிலும் தாழ்ந்தநிலையிலும் இப்படி ஸ்ருஷ்டிப்பது பெரும் குற்றமல்லவா என்ற ஆக்ஷேபத்தை ஸூத்ரகாரர் கிளப்பி, அதற்கு ஸமாதானம் பின் வருமாறு கூறுகிறார்.

‘ஸாபேக்ஷத்வாத்’ — ஜீவாத்மாக்கள் செய்த கர்மங்களுக்கு ஏற்றபடி அவர்களுடைய நிலைமை ஏற்படுகிறதாதலால். அப்படியே ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் கூறுகின்றன. இதன்றியில் மற்றொரு ஆக்ஷேபமும் உண்டாகிறது. பகவான் முதல் முதல் ஜீவாத்மாக்களை ஸ்ருஷ்டிக்கும் போது புண்யபாபரூபகர்மங்கள் அவர்களுக்கில்லை யல்லவா? படைத்த பிறகல்லவோ கர்மம் செய்யவேண்டும்? படைப்பதற்கு முன் கர்மம் இல்லை? அப்போது கர்மத்திற்கேற்றபடி ஸ்ருஷ்டி என்பது எப்படிப் பொருந்தும்? இதற்கு ஸமாதானம்—ஜீவன்கள் எப்படி அநாதியோ அப்படியே செய்வினைகளும் அநாதிகளே யாதலால். கர்மம் அநாதியாயிருந்தும் ஸ்ருஷ்டிப்பதற்கு முன் இஜ்ஜீவன் என்ற வஸ்து, பேர், உருவம், இன்றி பரமாத்மாவுக்கு சரீரம் என்ற நிலையில் மிகவும் நுட்பமானதால் பரமாத்வைத் தவிர்த்து வேறாகச் சொல்லக் கூடாமல் பரமாத்மாவென்றே சொல்லக் கூடிய நிலைமையிலிருந்தது என்பது பொருந்தும். கர்மம் அனாதியென்று ஒப்புக்கொள்ளாத பக்ஷம் இவ்வுலக வாழ்க்கையிலும் நாம் செய்யாத வினைப் பயன் நமக்கு வரவும், செய்த வினைப் பயன் நம்மை விட்டு விலகவும் கூடும். ஸ்மிருதிகளிலும் ச்ருதிகளிலும் ஜீவாத்மாக்கள் அனாதியென்று பலவாறாய் முறையிடப்பட்டு இருக்கிறது என்று சொல்லி, அந்த ஜீவாத்மாக்கள் அனாதியாயினும் ப்ரளயகாலத்தில் சேதனா சேதனங்களுக்கு பேர், உருவம் முதலியதுகள் இல்லாததுகொண்டு, ‘உபநிஷத்தில்’ ‘ஆதியில் இவ்வுலகம் ஒரு ஆத்மாவாகவே இருந்தது; வேறு ஒன்றும் தென்படவில்லை’ இது முதலிய சொற்களால் ஒன்றே என்று சுட்டிக் காட்டி த்தீர்மானித்திருப்பது ந்யாயமே என்று ஸூத்ரகாரர் தாமே வெளியிட்டிருக்கிறார்.

तथाच ‘नात्मा श्रुतेर्नित्यत्वाच्च ताभ्यः’ इति प्रत्यगात्मनो नित्यत्वादनुत्पत्तिमुक्त्वा ‘ज्ञोऽत एव’ इति तस्य ज्ञातृत्वमेव स्वरूपमित्युक्तम् ।

ஆகாசம் முதலிய வஸ்துக்கள் பரமாத்மாவினிடமிருந்து உண்டாகின்றன என்றதைச் சொல்லி, பிறகு ஜீவாத்மாவுக்குப் பிறப்பு உண்டோ இல்லையோ என்று ஸந்தேஹித்து அதைத் தீர்மானிக்கிறார். ஜீவாத்மாவானவன் பிறக்கிறதில்லை. ‘ந ஜாயதே’ முதலிய ச்ருதி வாக்யங்களில் ஆத்மாவுக்குப் பிறப்பு இல்லை என்று ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருப்பதால் ஜீவாத்மாக்கள் நித்யர்களே என்பதை நிரூபித்து ‘ज्ञोऽत एव’ என்ற ஸூத்திரத்தால்

ஜீவாத்மாவின் ஸ்வரூபம் ஜ்ஞாநாச்ரயம், அதாவது அறிவுக்கிருப்பிடமானது என்று சொல்லப்பட்டது.

‘उत्क्रान्तिगत्यागतीनाम्’ इत्यादिना अणुत्वञ्चोक्तम् ।

ஆத்மாவை எங்கும் நிறைந்தவன் என்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில், எல்லாருக்கும், எப்பொழுதும், எவ்விடத்திலும் அறிவுண்டாக வேண்டிவரும். அதற்காக ஆத்மா அணுவானது என்று சொல்லப்பட்டது. அணு = மிகச் சிறியது. அதற்கு ப்ரமாணம்—வேதங்களில் இந்த ஆத்மா இச் சரீரத்தில் நின்றும் புறப்படுகிறான் என்றும் சந்திரன் முதலியவைகளை அடைகிறான் என்றும், பரலோகத்திலிருந்து இவ்வுலகிற்குத் திரும்பி வருகிறான் என்றும் கூறியிருப்பதால், எங்கும் நிறைந்தவன் ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குப் போகிறான் என்று சொல்ல முடியாததாலும், அவன் போவதும் வருவதும் ஒருவர்க்கும் புலப்படாததாலும், அவனுக்கு ஸ்தூலரூபம் இல்லை. ஆகையால் ஸூக்ஷ்மனாய் இருக்கவேண்டுமென்று அணுத்வம் சொல்லப்பட்டது.

“तद्गुणसारत्वात्तु तद्व्यपदेशः प्राज्ञवत्” “यावदात्मभावित्वाच्च नदोषस्तद्दर्शनात्” इति ज्ञातुरेवात्मनो ज्ञानशब्देन व्यपदेशो ज्ञानगुणसारत्वात् ज्ञानैकनिरूपणीयस्वभावत्वाच्चेत्युक्तम् ॥

ஆத்மாவை ஞானம் என்றும் விஞானம என்றும் சொல்லக் கூடுமோ ஞானத்திற்கு இருப்பிடமல்லவோ ஆத்மா. ஞானத்திற்கு இருப்பிடமானதை ஞானம் என்றே எப்படி சொல்லலாம். என்ற கேள்விக்கு உத்தரம் அருளிச் செய்கிறார்—ஆத்மாவினிடத்தில் காணப்படும் அனேக குணங்களில் ஞானம் என்னும் குணம் ஸாரமானது. ஆகையால் அதை ஞானம் என்றே சொல்லலாம். “प्राज्ञवत्” பரமாத்மாவினிடத்தில் ஆனந்தம் என்னும் குணம் ஸாரமானது கொண்டு அந்த பரமாத்வை “ஆனந்தம்” என்றே சொல்லி இருப்பதை காண்கிறோம். மற்ற விடங்களில் ஆனந்தம் பரமாத்மாவின் குணம் என்று சொல்லி சில விடங்களில் அந்த ப்ரும்மமே ஆனந்தம் என்று சொல்லி இருப்பதுபோல். மேலும் ஆத்மாக்கள் அனைத்திலும் இந்த ஞானம் என்ற குணம் தொடர்ந் திருப்பதால் அதை ஞானம் என்றே சொல்லலாம். ஆத்வாவின் ஸ்வரூபம் முழுவதும் ஞான மயமாய் இருப்பதால் அதை ஞானம் என்று சொல்லலாம். “கோ” என்னும் பொருளில் ஒரு பாகத்தை “கோ” என்றே சொல்லுகிறோம் அல்லவா. அதுபோல் இங்கும், ஆத்மாவை ஞானம் என்று சொல்வதில்

ஸம்பிரதாயமும் காட்டினோம். இப்படியே தத்துவ விஷயத்தில், பிராட்டியை ஈச்வர தத்வத்தில் நின்று பிரிப்பதும், ஜீவ தத்துவத்தில் சேர்ப்பதும், விஹாஸ நியமநாதிகள் இல்லை என்பதும் ஜடத்வாதி [illegible] இல்லை என்பதும் சாஸ்திர மூலமல்லாததுமாய் [illegible] ஸம்ப்ரதாயமாயிருக்கும். ஆகயாலேயிறே பட்டரும்—

“ [illegible] காரணம்
[illegible] ” ॥

என்றருளிச் செய்தது. பாஹ்யமாகையாலே என்னாதே பாஹ்ய [illegible] மாகையாலே என்றது. இவர்களும் தங்களை [illegible] ரென்று சொல்லிக்கொள்ளாதே இத்தர்சந ப்ரவர்த்தகாளான எம்பெருமானார், ஆழ்வான், எம்பார், பட்டர், திருவடிகளில் [illegible] பண்ணிக் கொண்டு [illegible] எல்லாம் பாஹ்யர் சொல்லுமோபாதி, [illegible] யாகஸிக்கையாலே. பாஹ்ய [illegible] மாமென்னாதே [illegible] மாகையாலே அவிச்வஸநீயமென்று [illegible] பண்ணினது, அவர்களும் இத்தர்சந நிஷ்டர் என்கையாலே வேஷ பாஷைகளாலே அவர்கள் பக்கல் விச்வாஸம் கூடினாலும் அவர்கள் ஸம்பிரதாயத்திலே விச்வாஸம், கூடாதென்று நிஷேதிக்கைக்காக.

ஆகையாலேயிறே மதாந்தரஸ்தரைப் போலே இவர்களை நிஷேதியாதே இவர்கள் இழிந்த திருக்கோயில்களிலே நாமும் திருவடி தொழுகிறது.

அவ—ஆனாலும் கர்ம, ஞாந, பக்தி, ப்ரபத்தி என்று சொல்லப்படுகிற மோக்ஷோபாயங்களில் சரமோபாயமாயிருந்த ப்ரபத்தி, ரஹஸ்யத்ரய வேத்யமாகையாலே ரஹஸ்யமாய், ப்ரபத்தி ப்ரதிபாதகங்களான ‘[illegible]’ இத்யாதிகள் ரஹஸ்ய சாஸ்திரங்கள் என்ன வேண்டாவோ ?—கர்ம ஞான பக்திகள் இந்த ரஹஸ்ய சாஸ்திர ப்ரதி பாத்யங்களலல்லாமையாலே, தத் ப்ரதிபாதக சாஸ்திரங்கள் ஸதஸ்ய சாஸ்திரங்கள் என்னவேண்டாவோ ? கிஞ்ச—கர்மத்தாலே ஞானமாய், அத்தாலே பக்தியாய், அத்தாலே புருஷார்த்தம் என்கிற சாஸ்திரமும், கர்ம ஞாந பக்தி த்யாக புரஸ்ஸரமாய், கேவல ப்ரபத்தியாலே புருஷார்த்தம் என்கிற சாஸ்திரமும், பாஸ்பர விருத்தமாகாதோ ?—ப்ரபத்தி சாஸ்திர ப்ரரோசகத்தில் அபிஸந்தியாலே கர்ம ஞாந பக்திகளை உபாயங்களாக, ஸதஸ்ய சாஸ்திரங்கள் சொல்லிவைக்கை

பாலும், ரஹஸ்ய சாஸ்திரங்கள் நிஷ்க்ருஷ்டாதிகாரிக்கு இதுகளுடைய த்யாகத்தைச் சொல்லுகையாலும், இவ்விரண்டு சாஸ்திரங்களும், ஏகாதிகாரி விஷயத்திலே பரஸ்பர விருத்தங்கள் ஆகாதோ; ஆகையால் ஸதஸ்யமான வத்யாத்ம சாஸ்திரமே அபேக்ஷிதார்த்த நிர்ணயகம் என்னப் போமோ? ஸ்வரூபாநுரூபமான ரஹஸ்ய சாஸ்திரமன்றோ நிஷ்க்ருஷ்டாதிகாரிக்கு அபேக்ஷிதார்த்த நிர்ணயகம், என்ன வருளிச் செய்கிறார்.

அன்றிக்கே—இப்படி சாஸ்திர மூலமில்லாதேயும் சாஸ்திர விருத்தமாயும் வரும் ஸம்ப்ரதாயம் பாஹ்யதுல்யம் என்னப் போமோ?—இந்த ஸம்ப்ரதாயத்தில் தானே ரஹஸ்யம் ஸதஸ்யம் என்று, பரஸ்பர விருத்தமாக ஸம்ப்ரதாயம் வரவில்லையோ?—என்ன வருளிச் செய்கிறார் என்றும் கீழ் வாக்யத்தோடே தானே இவ் வாக்யத்தை அவதரிப்பிக்கலாம்.

மூ—பூர்வ விருத்தமாக ஸதஸ்யமும் ரஹஸ்யமும் என்று சொல்லுமவை யிரண்டும் ஸ்வவாக்யத்தாலே பாதிதங்களாம்” என்று.

வ்யா—ஸதஸ்யம் = வேதாந்த சாஸ்திரம்; ரஹஸ்யம் = ததோபிந்நமாய், தத்தாத்பர்ய பூர்வமாய், உபதேசமாத்ரகம்யமாயிருக்கும் சாஸ்திரம்—இவற்றிற்கு பரஸ்பர விரோதமாவது—வேதாந்த விஹிதமான ஸாதந பக்தி ப்ரபத்திகள் இரண்டும் “ஸஹகாரித்வேந” என்கிறபடிக்கு வித்யாஸஹகாரமாயோ, “விஹிதத்வாச் சாச்ரமகர்மாபி” என்கிறபடியே வர்ணாச்ரம விசேஷமாயோ, பூர்வோக்தப்ரபந்நோதித கர்ம ஸஹமாயிருக்கும் உபதேசசாஸ்திரம் வேதவேதாந்தோதித கர்மாவாஸந பக்தித்யாக ப்ரதிபாதகமாயிருக்கும்.

“உபதேசாதிசம் பூர்வ விரோதீவ கர்மஸு”

“யஜ்ஞார்த ஹுதம் தத்தவாதீதம் ஹோமயோ க்ஷீரதிவா ஸ்ரீமதிஸு” இத்யாதி ப்ரமாணங்களாலே உபதேசசாஸ்த்ரஸ்ய உபாதேயத்வமும், தந்யவேதாந்த சாஸ்த்ரஸ்ய த்யாகமும் ப்ரதிபாதிதம்” என்றிப்படியே இவர்கள் சொன்னது. அதுவேயிறே இங்கு விவக்ஷிதமாயிருக்கும் “சொல்லுமவை யிரண்டும்:- ரஹஸ்ய விருத்தம் ஸதஸ்யம், ஸதஸ்யவிருத்தம் ரஹஸ்யம் என்று சொல்லுமிரண்டும். “ஸ்வவாக்யத்தாலே பாதிதங்களாம்.” இவரே “அஷ்டதசரஹஸ்ய ஷட்சதாநி இத்யாதிகளும் ரஹஸ்யமான மூலமந்திரத்வயங்களும் வேதாந்த சாஸ்த்ராந்தர்கதமென்று எழுதி வைக்கையாலே, ‘வேதாந்தசாஸ்த்ரமின்று சாஸ்த்ரம் உபதேச சாஸ்த்ரம் என்றது பாதிதமாயிருக்கும். இதுக்குத் தனியே நாம் ஒரு தோஷம் சொல்ல வேண்டாவென்றபடி.

அன்றிக்கே—ஸர்வோபாயசூந்யனன்றிக்கே. ஸர்வஜ்ஞாநசக்தியுமுடையவனான அதிகாரிக்கு ஸர்வ விரோதி பக்திப்ரபத்திகளைச் சொல்லி, ஸாத்யாநுஷ்டான ஸாத்ய லக்ஷணங்களோடே தலைக் கட்டுகையாலே வேதாந்தசாஸ்த்ரம் ஸர்வோபாய சூந்யனானவனுக்கு விருத்தமாகையாலே த்யாஜ்யமாய், ஸர்வோபாயாநர்ஹனான ஸர்வேச்வராய ஸ்வீகாரப்ரவ்ருத்தி பாதகமாய் உபதேசோத்ரஹஸ்யமான ரஹஸ்யசாஸ்த்ரம் உபாயலக்ஷணம் ஸாதகமாகையாலே உபாதேயமாய் இரண்டு சாஸ்த்ரங்களும் பரஸ்பரவிருத்தங்களாயிருக்கும் என்று இப்படியும் தத்பக்ஷத்தில் விரோதோபபாதநம் பண்ணலாம். “ஸ்வவாக்யத்தாலே பாதிதங்களாம்” என்றதற்கு தனியே கேழ்க்கும் சிஷ்யனுக்கு ஸதஸ்யங்களான வேதாந்தார்த்தங்களை ஸங்க்ஷேபமாகச் சொல்லவேண்டி வருகையாலும், திரளிலே பூர்வபக்ஷியோடு வாதிஜயத்திற்காக ரஹஸ்யமாக இவர் நினைத்திருக்குமதை ஸதஸ்யமாகச் சொல்லக் காண்கையாலும், ரஹஸ்யமென்பதை ஸதஸ்யமாகவும், ஸதஸ்ய மென்பதை ரஹஸ்யமாகவும் தானே சொல்ல வேண்டிவருவதால் ரஹஸ்யமும் ஸதஸ்யமும் பரஸ்பரவிருத்தமென்பது ஸ்வவாக்யத்தாலே பாதிதமாம் என்றபடி. பாதிதமாமென்று அநாதரம் தோற்றவருளிச்செய்தது பூர்வபக்ஷார்த்தத்துக்கு முப லக்ஷணம். வேதாந்தோதித பக்தியோகத்தை அர்ஜுநனுக்குப் பூசல் நடுவிலே உபதேசிக்கும் போது

“இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந” (?) “இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி”

“ராஜ வித்யா ராஜகுஹ்யம்” என்னும், முடிவிலும் “ஸர்வகுஹ்யதமம்” என்று அருளிச் செய்கையாலும், வேதாந்தங்களில் ப்ரஹ்மதத்த்வ தத்உபாயங்களை வெளியிடும் ப்ரதேசமெல்லாம் ரஹஸ்யமாயிருக்க ஸதஸ்யமென்னது சேராது. வேதாந்தோதித ப்ரதாந ப்ரதிதந்த்ரங்களுடைய ஸாரஸங்க்ரஹ ரூபமாயிருக்கையாலே சிலவற்றை விசேஷித்து ரஹஸ்யத்ரய மென்றதத்தனைபோக்கி இதுதான் ரஹஸ்யமென்றும், வேதாந்தம் இதற்கு விருத்தார்த்த ப்ரதிபாதகமென்பது ஸர்வார்த்த ஸம்ஹதமே “தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்” என்று வேதாந்த சாஸ்த்ர ஸாரார்த்தத்திற்கு குரு முகத்தாலேயே ச்ரவணத்தை ஓதுகையாலே உபதேசசாஸ்த்ரமாயிருக்க ஸதஸ்யமென்பதும் சேராது என்று திருவுள்ளம்.

அவ—ஆனால் ரஹஸ்யமேது? ஸதஸ்யமேது? என்ன வருளிச் செய்கிறார்.

மூ—திரளிலே சொல்லுமவை ஸதஸ்யம் சில வசநங்களை ஏகாந்தத்திலே சொல்ல விதிக்கையாலே அவற்றை ரஹஸ்யங்கள் என்கிறது.—என்று.

வ்யா—திரளிலே சொல்லுமவை ஸதஸ்யம் என்றிப்படியே ப்ராசீந ஸ்ரீகோசங்களில் பாடம். திரளிலே சொல்லுமவைகளில் சிலவசநங்களை என்று ஏகவாக்யமாக பாடமும் காண்கிறது. கீழ் ஸதஸ்யமும் ரஹஸ்யமும் ப்ரஸ்துதமாயிருக்க இரண்டையும் விவரிக்கை உசிதமாயிருக்கும். ஏகவாக்யமாக அநுஸந்திக்கும்போது ரஹஸ்ய சப்தார்த்தம் மாத்திரம் சொன்னதாகவாகும். ஆகையால் இரண்டு வாக்யமாக அநுஸந்தாநமே உசிதமென்று தோன்றுகிறது யதாச்ருதார்த்தஸ்து ஸாத்ரூஹ்யம். திரளிலே சொல்லுமவை ஸதஸ்யம் இதி. வேதாந்தங்களிலே தானே ஜநகஸதஸ்ஸிலே பஹுவித்வான்கள் வந்து த்ரவ்யத்துக்காக பரஸ்பரஜிகீஷயா ஜீவபராத்ம ஸ்வரூபங்களை விசாரித்ததாகக் காணா நின்றோம். ஆகையாலவையெல்லாம் ஸதஸ்யமாயிருக்கும். "சில வசநங்களை" திரளிலே சொல்லக்கூடிய சில வசநங்களை.— அதாகிறது—வேதாந்தோதித வித்யோபயுக்த வசநங்களை. "ஏகாந்தத்திலே சொல்ல விதிக்கையாலே" இதி. வித்யை தான் "ஸேவதிஷ்டேஹமஸ்மி ரக்ஷமாம்" என்று அபேக்ஷித்தபடியிலே, கணிகாலங்காரமாக்குதல், விலைச் சாந்தாக்குதல், அம்பலத்தில் அவல் பொரியாக்குதல், குரங்கின் கையில் பூமாலையாக்குதல் செய்யாதே "ப்ரணிபத்யாபிவாத்ய" இத்யாதிகளிற் சொன்ன சிஷ்யகுண பூர்த்தி உடையார்க்கு, "ஸம்வத்ஸரம் ததர்த்தம் வா மாஸத்ரயமதாபி வா ॥ பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்" "யஸ்ய தேவே பரா பக்தி: ... தேஹாந்தநிவாஸிநாம் । ஏஷா வை ஸம்ஸ்க்ருதஸ்தேஷாம் நாராயணாத்மநாம்" இத்யாதிகளிற் சொன்ன பரீக்ஷாதி க்ரம ப்ராப்த நிஷ்டய ப்ரபத்திகமாக "ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய" என்னலாமவஸ்தையிலே "யோ ப்ராஹ்மணாய ... யோ ப்ராஹ்மணாநாம் ஸம்ப்ரயச்சதி । ... ஸாந்தோந்யாய" "யஜ்ஞம் பரம் குஹ்யம் ... ப்ரியாவஹம் இதி" இத்யாதிகளிற்படிக்கு சுஷ்ட்டு லக்ஷணமாகச் சொல்ல விதிக்கையாலே என்றபடி. "அவற்றை ரஹஸ்யமென்கிறது" இதி. இத்தால் வேதாந்தங்களிலே சிலவற்றை ரஹஸ்யங்கள் என்பதற்கு விதிதான் ப்ரயோஜகம் என்றதாகிறது. விதியில்லாதேபோனால் ஸர்வமும் ஸதஸ்யமாகக் குறையில்லை. ஆனபின்பு ஸதஸ்ய ரஹஸ்யங்களுக்கு பரஸ்பர விரோதம் சொல்லவொண்ணாது என்று திருவுள்ளம்.

அவ—ஆனாலும் சில வசநங்களை ஏகாந்தத்திலே சொல்ல விதிக்கையாலே அவற்றை ரஹஸ்யங்கள் என்கிறதென்னப்போமோ? பரிசுத்தாத்ம

ஸ்வரூபத்தை குரு முகமாக சாஸ்திரத்தாலே அறிந்து உபாஸிப்பானுக்கு ஸர்வலோக ஸர்வ காமாவாப்தி உண்டென்று ரஹஸ்யார்த்தத்தை ப்ரஜாபதி சொன்னதாக ஐதிஹ்யரூபேண கேட்டு இந்திர விரோசநர்கள் ப்ரஜாபதி ஸகாசத்திலே த்வாத்ரிம்சத் வர்ஷம் ப்ரஹ்மசர்யவாஸம் பண்ண, அவர் தனித்தனியே ஏகாந்தமாகச் சொல்லாதே இருவரும் கூடவிருக்கச் செய்தேயன்றோ உபதேசித்தது. ஆகையாலே ஏகாந்தத்திலே சொல்ல விதிக்கையாலே ரஹஸ்யமென்ன வொண்ணாதே என்ன வருளிச் செய்கிறார்.

மூ—ப்ரஜாபதி வாக்யம் முற்படவஸுரேந்த்ரனை விரோசநனை மோஹிப்பிக்கைக்காகச் சொல்லப்பட்டு பிற்பட தேவேந்த்ரனை வஞ்சகத்வத்தாலே பரிசோதித்த விஷயத்திலே ப்ரதிஷ்டித பாவ்யமாக்குகிறது.

வ்யா—ப்ரஜாபதி வாக்யமாகிறது—"ய ஆத்மாபஹதபாப்மா" இத்யாதியாய் குணாஷ்டக விசிஷ்ட நிர்த்தோஷாத்ம ஸ்வரூபபரவாக்யம். இது வாக்யத்வ ச்ருதிவிதமாயிருக்கச்செய்தே "இதிஹ ப்ரஜாபதிருவாச" என்று ப்ரஜாபதி சொன்னதாக ச்ருதி சொல்லுகையாலே ப்ரஜாபதி வாக்யமென்கிறது. முற்பட என்றது—பிற்பட உபதேசமொன்றுண்டு அதுவே ரஹஸ்யமென்கைக்காக, ஆகில் முற்பட உபதேசம் எதற்காகவென்ன வருளிச்செய்கிறார். "அசுரேந்திரனை விரோசநனை மோஹிப்பிக்கைக்காக" என்று. "ய ஏஷோக்ஷிணி புருஷோ த்ருச்யத ஏஷ ஆத்மா" என்று முந்துற பண்ணின வுபதேசம் மோஹநார்த்தமென்றபடி. இப்படி மோஹிப்பிக்கலாமோ வென்று சங்கியாமைக்காக அசுரேந்திரனை வென்றது. விரோசநன் குரு சிச்ரூஷாபரன் ஆனாலும் அஸுரஸ்வபாவனாகையாலே

"ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச ஜநா ந விதுராஸுரா: ।
ந சௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே ॥

இத்யாதிப்படியே ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஜ்ஞாந ஸூந்யதையாலும், சௌசாசாரம் முதலியவை இல்லாமையாலும் இவனுக்கு வாஸ்தவார்த்தத்தை வெளியிடலாகாதென்கைக்காக "விரோசநனை மோஹிப்பிக்கைக்காக என்றது." விரோசநனையிட்டு ஆசுரப்ரக்ருதிகளை மோஹிப்பிக்கைக்காக என்றபடி. விரோசநனை மோஹிப்பிக்கைக்காகவன்று. சுச்ரூஷாபர உபஸந்நனுக்கு இப்படி உபதேசம் கூடாதாகையாலும் ஸ்ருஷ்டியில் ப்ரக்ருதிவசனுக்கு இங்கு சொன்ன சுத்தஸ்வபாவ ஸ்வரூபாதிகள் பலியாமையாலும் உபநிஷத்தில் ப்ராப்தி க்ருஹீதார்த்த நிர்ணய முடையவன் நித்ய ஸம்ஸாரி யாவனென்று

இருவரையும் பார்த்து ப்ரஜாபதி சொல்லுகையாலும் ஆகையாலே இவனுக்கு ப்ராஜாபதி உபதேசித்தது ஸது³பதே³ஶம் என்னக் குறையில்லை. இவன் ஆசுரஸ்வபாவனாகையாலே

"ஜாயமாநம் நரம் தே³வோ ஹ்ருத³யே நஶ்யதி யதா³ ।
ஶாஸ்த்ரஜ்ஞாநம் மதி: ஸத்யா ஶாஸ்த்ரோக்தம் ஜநார்த³நம் ॥

என்கிறபடிக்கு ப்ரக்ஷீணாஶேஷ கல்மஷனல்லாமையாலும்

"ப³ஹ்வாதி³வர்த்தி ஆநந்த³ கேஶ்யம் பாரம்பர்யமேவ ச ।
அஜ்ஞாநம் ஹி ஜாதஸ்ய பாபஸம்பத³ஶாஶ்ரீம்" ॥

என்கையாலும் இவனுக்கு மோஹஹேதுவாய் அத்தோடே உபதேசம் தலைக்கட்டிற்று. சொல்லப்பட்டு என்றது. "தாநஹம் த்³விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராத⁴மாந்" க்ஷிபாம்யஜஸ்ரமஶுபா⁴நாஸுரீஷ்வேவ யோநிஷு ॥ என்கிறபடிக்கு இவர்களுக்கு உத்தரோத்தரம் ஶிக்ஷைக்காக வென்றபடி. ஆனாலும் இப்படி உபதேச க்ரமஹீ தார்த்தத்தில் தோஷ தர்சநம் பண்ணி வந்நு முன்போலே தானே குருகுல வாஸம் பண்ணின இந்திரனுக்கு அஸந்தி³க்³த⁴மாக உபதேசிக்கலாகாதோ? பல தடவைகளில் அலமர்ந்துவிடப் பண்ணுவானேன்? என்றில் அருளிச் செய்கிறார். "பிற்பட தே³வேந்த்³ரனை" இத்யாதி. பிற்பட வென்றது — உபதிஷ்டார்த்தத்தில் அநுபபத்தி ப்ரதிபாதந பூர்வகம் யதாவஸ்திதார்த்தம் நெஞ்சில் படுமளவும் அநுவர்த்தநாநந்தரமென்றபடி. இந்த்³ரனை என்னாதே தே³வேந்த்³ரனை என்றது தை³வ ப்ரக்ருதியாகையாலே "அப⁴யம் ஸத்த்வஸம்ஶுத்³தி⁴:" இத்யாதிகளிற் சொன்ன தை³வ ஸம்பத்தை உடைத்தானவனாகையாலே யதாவஸ்திதார்த்த மல்லது இவன் நெஞ்சில் படாதென்கைக்காக. க்ரமத்தாலே என்றது—ஜீவனுக்கு ஸஶரீராவஸ்தையிலே ஜாக்³ரத்ஸ்வப்ந ஸுஷுப்திகளான அவஸ்தைகள் என்ன அஶரீராவஸ்தையென்ன, இந்த க்ரமத்தாலே என்றபடி. பரிஶுத்³தா⁴த்மாவாகிறான். ஆத்மா ஶரீரஸம்ப³ந்த⁴னாய் அபஹதபாப்மத்வாதி³ கு³ணாஷ்டகவிஶிஷ்டனாய் இருக்குமவன். ப்ரதிஷ்டித் பா³தி⁴யாக்குகிறது இதி—ஸ்வாபா⁴விக வாஸநைகள் நிவ்ருத்தியாதபோது உபதிஷ்டார்த்தத்தில் ஸம்ஶயம் வருமாகையாலே அதற்காக சிஷ்யாநுக்ரஹத்தாலே முந்துற ஜாக்³ரத³வஸ்தனை உபதேசித்து அதில் தோஷம் தட்டினவாறே ஸ்வப்நாவஸ்தனை உபதேசித்து அதிலும் தோஷம் தட்டினவாறே ஸுஷுப்த்யவஸ்தனை உபதேசித்து அதிலும் தோஷம் தட்டினவாறே ஆத்மஸ்வரூபத்தை அஶரீரமாயும் ஶரீரஸம்ப³ந்த⁴மாயும் இவன் அதி⁴ஷ்டாதாவென்றும் ஆத்மாவுக்கு ஶரீரமுள்

ளவும் இவனுக்கு வித்யாவித்ய விஷயத்தில்லை என்றும் அந்த ஶரீரம் போனால் வித்யாவித்ய ஸம்ப³ந்த⁴மில்லை என்றும் ஆத்மாவுக்கு ஶரீர ஸம்ப³ந்த⁴ம் விட்டவாறே பாபோத்³ ப்ராப்தியுண்டாய் கு³ணாஷ்டகாவிர்பா⁴வ முண்டாமென்று மிப்படி இவ்வர்த்தத்தில் ப்ராஜாபதிவாக்யம் ப்ரதிஷ்டித பா³தி⁴யாக்குகிறது என்றபடி. இவ்வர்த்தங்கள் எல்லாம் "உத்தராச்சேதா³விர்பூ⁴த ஸ்வரூபஸ்து" என்கிற ஸூத்ரபா⁴ஷ்யத்திலே காணலாம்.

அவ—ஆனாலும் ஸதா³சார்ய ஸம்ப்ரதா³யத்தாலே ஶாஸ்த்ரார்த்த² நிர்ணயம் பண்ணவேண்டும் என்கிற நிர்ப³ந்த⁴மும், நிரூபணத்தில் சக்தியில்லாதாருக்கு உபதேசமே அபேக்ஷிதார்த்த² நிர்ணாயக மென்னவும் கூடுமோ. உபகோஸல வித்³யையிலே ஆசார்யனிருக்க அக்³நிகள் பக்கலில் அன்றோ ப்³ரஹ்மஸ்வரூபத்தை விசாரித்து நிர்ணயித்தது—வைஶ்வாநர வித்³யையிலும் ஏகதேசத்தையன்றோ ஆசார்யன் உபதேசித்தது. அது அபேக்ஷிதார்த்த² நிர்ணாயகமென்னக்கூடுமோ என்னவருளிச்செய்கிறார்.

மூ—உபகோஸல வைஶ்வாநர வித்³யைகளிலே முற்பட வேத்³யோபாதே³யங்களைப்பற்ற ஏகதே³ஶாவதே³ஶம் க்ரமேண ஶேஷபூரணார்த்த²ம் என்று.

வ்யா—உபகோஸல வித்³யையாகிறது. அக்³நி விஜ்ஞாபகமாய் நிரவத்³ய ஸ்வரூபமான ப்³ரஹ்மத்தை ஸம்யத்³வாமத்வாதி³ கு³ணவிஶிஷ்டமாய் அக்ஷிஸ்தா²நத்திலே உபாஸிக்கை. உபகோஸலனென்பான் அநுஷ்டிக்கையாலே இத்தை உபகோஸலவித்³யை என்கிறது. உபகோஸலனானவன் ஜாபா³லனென்கிற ஆசார்யனிடத்திலே ப்³ரஹ்மவித்³யைக்கென்று பனிரண்டு வருஷங்கள் அக்³நிபரிசர்யை பண்ணி வந்தானாயிற்று. ஸர்வவெயின்றிக்கே இவனுக்கு ப்³ரஹ்மவித்³யை ப்ரதிஷ்டிதமாகாதென்று கொண்டு ஆசார்யன் இவனுக்குப் பிற்பாடான சிஷ்யர்களுக்கு ஸ்வாத்⁴யாய ஸமாவர்த்தநம் பண்ணி நின்று கொண்டு இவனுக்கு ஒன்றும் சொல்லாமல் இருக்க இவன் அக்³நிஶுஶ்ரூஷாபரனாயிருந்தான். இவனபேக்ஷிதம் சொல்லலாகாதோவென்று ஆசார்ய பத்நீ நிர்ப³ந்தி⁴க்க, ஆசார்யனும் உபதேசியாதே ப்ரவாஸம் பண்ண ப்³ரஹ்மசாரியாயிருந்த உபகோஸலனும் து³:கா²க்ராந்தனாய் அநஶநத்திலே நிற்க, ஸ்வபரிசரண ப்ரீதங்களான மூன்று அக்³நிகளும் இவன் து³:க²நிவ்ருத்திக்காக அநவத்³யஸ்வரூபம் ப்ரும்மம் என்று ப்ரும்மஸ்வரூபத்தையும் ப்³ரஹ்மவித்³யாங்க³மாக அக்³நிவித்³யை என்று, பெயரை உடைய ஆதி³த்யாதி³விஷயோபாஸநங்களையும் உபதேசிக்கை

யாலும் சில்வம்ச்கங்களை ஆசார்யன் உபதேசிக்கையாலும் இவன் ப்ரஹ்மத்தையும் ஆசார்யன் பக்கலிலே கேட்க்கவில்லையன்றோ? அப்படியே வைச்வாநர வித்யையிலும் ஔபமந்யவாதிகளான ஐந்து மஹர்ஷிகள் வைச்வாநராத்மாவை ஓராசார்யன் ஸகாசத்தில் இன்றிக்கே தாங்களே நிரூபிக்கத் தொடங்கி அது தங்களுக்கு ஸாத்யமில்லாதபடி கண்டு வைச்வாநரஜ்ஞனை கேகய ஸகாசத்திலே போனபோது எல்லாருக்கும் க்ருத்ஸ்நோபதேசம் பண்ணாதே தனித்தனியே இவர்கள் வைச்வாநராத்மாவாக நினைத்திருந்த த்யுலோகாதித்ய வாய்வாகாசாப்ப்ருதிவிகளில் வைச்வாநராத்மாவினுடைய சிரச்சக்ஷுஃப்ராண ஸந்தேஹ வஸ்தி பாதாவயவங்கள் என்றும் இதுகளுக்கு குண நாமதேயங்களையும் இவ்வளவே அன்றோ உபதேசித்தது. இதுதான் வைச்வாநராத்மோபாஸநமாகையாலே வைச்வாநர வித்யை என்கிறது. ஆதி சப்தத்தாலே ஸத்வித்யாநந்தமயவித்யாதிகள் விவக்ஷிதங்கள். "வேத்யோபாதேயங்களைப்பற்ற" இதி—அங்காங்கிஸ்வரூபங்கள் வேத்யங்கள். தத்கதங்களான குணங்கள் உபாதேயங்கள்-ச்ருதிஸாயுஜ்யத்தில் உபாதேயமென்று வ்யவஹாரமிருப்பதால் ஸ்ருஷ்டிவித்யாகதி • விஜ்ஞாநஹோத்ரஸம்வத்ஸராதிரூபங்களை உபாதேயமென்றும் வித்யாவிஷயமான ஸம்யத்வாமத்வாதி குணங்களை வேத்யமென்றும் சொல்லலாமென்று சிலர் சொல்லுவர். "முற்பட" என்றது—ஆசார்யாத்த்யேவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபதிதி என்றபடி. அநேகதேசாவதேசம் என்றது—சாஸ்த்ரத்திலும் ஸூத்ரங்களிலும் என்றபடி. உபகோஸலன் அக்நிகளைக் கேளாதிருக்க, அக்நிகள் உபதேசித்தது, ஸ்வபரிசரணப்ரீதங்களாகையாலும், இவன் ஸ்வஸ்வாம்யநுவர்த்தநம் பண்ணுகையாலும், இவன் துக்காக்ராந்தனாய் அநசநத்திலே தீக்ஷிக்கையாலும் இவனுக்குத் தாங்கள் உபதேசிப்பது ஆசார்யனுக்கு அபிமதம் என்று அறிந்திருக்கையாலும், இவனுக்கும் தங்களிடத்தில் கௌரவம் உண்டென்று அறிந்திருக்கையாலும், உபபந்நமாகக் குறையில்லை. ஆனால் ப்ரதாநாம்சத்தையும் கூட உபதேசிக்கலாகாதோ வென்றில், இவன் ஜாபாலனிடத்தில் ஆசார்ய ப்ரதிபத்தி பண்ணினவன் ஆகையாலே "ஆசார்யாத்த்யேவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்," என்றத்தை ஆலோசித்து, "ஆசார்யஸ்து தே கதிம் வக்தா" என்று தாங்கள் கையொழிந்தது. "கதிக்ரஹணம் ஜ்ஞாதவ்ய க்ருத்ஸ்நஸ்யோபலக்ஷணம்", என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்தார். இத்தால் அக்நிகளும் இவனுக்கு அபராசார்யர்களாயிற்று. "அல்பம் வா பஹு வா யஸ்ய ச்ருதஸ்யோபகரோதி யஃ ॥ தமபீஹ குரும் வித்யாச் ச்ருதோபக்ரியயா தயா" ச்ருதஸ்யோபகரோதி என்று ச்ருதத்தினுடைய பூர்வோத்தரோபகாரங்களைச் சொல்லுகிறது, ச்ருதம் என்பது பாவே ப்ரத்யயமாயிருக்கும்.

இளங்குழந்தை முதல் கிழவீறாக

சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்

ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப்பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கி, முஸலீ கந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்ப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக்கூடியதென்று விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.
வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

Registered No. M. 916.

SRI VEDANTA DIPIKA

Vol. 26] NOVEMBER 1937 [Part 8

4- APR 1939

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஈசுவர ௵

ஐப்பசி மீ

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புத்தகங்கள்

(1) ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த ந்யாய ஸித்தாஞ்ஜநம்—ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் வெளியிடப்பட்டது. ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி அருளிய வ்யாக்யானத்துடன் கூடியது. விலை ரூ. 5—0—0

(2) வேதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ பாஷ்யகாரர்) ஸ்ரீ. உப. வாசுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் 3—0—0

(3) ஸ்ரீ பஞ்சஸ்தவம்—(ஸ்ரீ ஸ்துதி—ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம்) ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரின் உரையுடன் 1—0—0

(4) ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்தோத்திரங்கள் தேவநாகரத்தில் அச்சிட்டது 1—0—0

(5) ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீ ஸ்துதி, V. அனந்தாசாரியன் எழுதிய தமிழுரையும் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதிய முகவுரையும். 0—8—0

(6) ஸ்ரீ ஸூக்தபாஷ்யம்—ஸ்ரீநஞ்சீயர் அருளிச் செய்தது. சதுஶ்லோகி, சரணாகதி கத்யம், ஸ்ரீ ஸ்துதி ஸ்ரீ ஸ்தவம், ஸ்ரீ குணரத்நகோசம், லக்ஷ்மீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம், அஷ்டோத்ர சதநாம ஸ்தோத்திரம் இவ்வளைத்துக்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு; by A. Srinivasa Raghavan M.A., (புதுக்கோட்டை மகாராஜா காலேஜ்) 1—8—0

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாய புஸ்தகங்கள்

(1) கோபால விம்சதி பகவத் த்யாந ஸோபாநம் 0—1—0
(2) மகா வீர வைபவம். சுதர்சநாஷ்டகம் கருட தண்டகம் 0—1—0
கிடைக்குமிடம்:

ஸ்ரீநிவாஸ விலாஸ புஸ்தக சாலை,
16., பாட்டாசாரியர் தெரு, கும்பகோணம்.

(3) அர்ச்சாவதார வைபவம் விக்ரஹாராதநத்தில் ஆக்ஷேபங்களும் ஸமாதாநங்களும் தேவநாகரியில் அச்சிட்டது மகா மஹோபாத்தியாய R. Y. கிருஷ்ணமாசாரியர் இயற்றியது 0—10—0

வி. அனந்தாசாரியர்
கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம், போஸ்டு சென்னை.

வியாபாரிகளுக்கும் வித்தியார்த்திகளுக்கும் 25% கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

“ अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । ”

“ अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । ”

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்! எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

...களின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

... மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

... முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு!!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

SRI L. N. CONFECTIONARY,

Sales Depot:—West Chitrai St., Madura.

MADRAS OFFICE:—**Phone No. 3658.**

Y. M. I. A. Buildings, Armenian St., Madras.

L காயம்—பெருங்காயம் **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ர வேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும்' நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ணம் செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களை யெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

ஹிந்தி பாஷை

பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு ஹிந்திபாஷை கற்பிப்பதைப்பற்றிப் பலர் பலவிதமாய் அபிப்ராயங்களை வெளியிடுகிறார்கள். இவ்விஷயத்தில் வேதாந்திகளின் அபிப்ராயத்தையும் தெரிவிக்க இதுவே ஸமயமாகிறது. தேச நன்மையைக்கருதி ஒரு புதிய ஏற்பாடு செய்யப் புகுந்தால் முன்பின் விசாரிக்காமலே அதை எதிர்ப்பது நமது தேச வழக்கமாய் விட்டது. ஹிந்தி பாஷையைக் கற்பிப்பதால் இப்போது பிள்ளைகளுக்கு ஊட்டப்படும் அறிவு குன்றி விடுமா? சிறுவர்களுக்கு அநேக லிபிகளிலும் அநேக பாஷைகளிலும் பரிசயம் உண்டாவது கெட்டது என்று யாராவது சொல்லுவார்களா? நமது முன்னோர்களில் பல ப்ரமுகர்கள் அநேக பாஷைகளில் பரிசயம் வாய்ந்து அதனால் அவர் மிகவும் க்யாதி பெற்றிருந்தனர் என்று நாம் கேள்விப்படவில்லையா? ஹிந்தி பாஷை கற்பிப்பதில் இத்தமிழ் தேசம் ஒன்றே முரண்பாடான அபிப்ராயத்தை வெளியிடுவதாகத் தெரியவருகிறது, தமிழ் பாஷையை கற்கும் சிறுவர்களுக்கு ஹிந்திபாஷை கற்றுக்கொள்வதில் யாதொரு ச்ரமமும் ஏற்படாது என்பது திண்ணம். த்வீபாந்தரத்தைச் சேர்ந்த பாஷைகளையோ, நடை உடை பாவனையோ, மற்ற ஆசாரங்களையோ அநாயாஸமாய் பரம்பரையாய் வந்ததுபோலவே அங்கீகரிக்க சக்தி உள்ள நம் சிறுவர்க்கு, நமது தேசத்தில் வழங்கும் பாஷை என்ன கஷ்டம் கொடுக்கும்? பாருங்கள். அநேக பாஷைகளில் பழக்கம் ஏற்படுவது தேச முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும் என்பதில் ஸந்தேகமில்லை. ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வந்து நமது தேசபாஷையை எவ்வளவு ஊக்கமாகவும் முக்கியமாகவும் கற்கிறார்கள்? பாருங்கள். அப்படி இருக்க, நமது தேச பாஷைகளிலேயே ஒன்றைக் கற்க இப்படி எதிர்க்கலாமா? நாம் எவ்வளவுக்கெவ்வளவு அதிக தேச பாஷைகளை அதிகரிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு விசால மனதுள்ளவர்கள் ஆகுவோம். பழைய நூற்களான ச்ருதி, ஸ்மிருதி, புராணங்கள், பழைய ஆசாரங்கள் இவற்றை ஆராய்ந்து பார்க்குமளவில் அநேக தேச பாஷைகளை கற்பது அவச்யம் என்றே தெரியவருகிறபடியால் தற்காலம் ஹிந்தி பாஷையை சிறுவர்க்கு போதிப்பது மிகவும் யுக்தமும் அவச்யமுமாகும்.

ஸ்ரீ:

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

விஷய ஸூசிகை

1. ஸ்ரீ அண்ணயார்ய மஹா தேசிக வைபவம் — 173
   [கூத்தப் பாக்கம். உ. வே. தி. ந. ச. நாசிம்மாசாரியர்]
2. காலாநுகுண ஆன்ஹிகம் — 177
   [பத்ராதிபர்]
3. வேதாந்த ரக்ஷாமணி விமர்சம் — 139
   [ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]
4. நீதி ரத்நங்கள் — 186
   [பத்ராதிபர்]
5. ப்ரும்ம விசாராதிகாரம் — 188
   [ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாச தாதாசார்ய ஸ்வாமி]
6. ஆசார்ய கடாக்ஷத்தின் சிறப்பு — 195
   [ஸ்ரீ. உப. வே. ஸ்ரீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்காசார்யர்]
7. ஸங்கல்ப-ப்ரயோக-விமர்சம் — 199
   [திருப்பதி. தி. வீரராகவாசாரியர் ஸ்வாமி]
8. ஸங்கல்ப ப்ரயோக பரிஷ்காரம் — 202
   [ஸ்ரீ. உப. வி. அனந்தாசார்யர்]
9. திருவரங்கேசர் நடை யழகு — 204
   [ஆரியூர் வ. பத்மநாப ராமானுஜ தாஸன்]
10. விருத்தாந்தங்கள் — 207
11. வேதாந்த ஸாரம் — 17—24
12. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி — 33—40

ஸ்ரீ அண்ணயார்ய மஹா தேசிக வைபவம்

(முன் தொடர்ச்சி)

ஸ்ரீமத் அண்ணயார்ய மஹா தேசிகன் ஸ்ரீரங்கத்தில் வேதாந்த க்ரந்தாத்யயநம் செய்தருளும்போது பகவத் விஷயத்தை ஆசார்யனிடம் கிரஹிக்க அவகாசம் லபிக்கவில்லை. பின்பொருகால் ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஸ்ரீ பகவத் விஷய க்ரந்த காலக்ஷேபத்தை ப்ரார்த்திக்க, ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி, தமக்கு திருமேனியில் அசக்தி அதிகமாய் விட்டபடியால், தம்முடைய ப்ரசிஷ்யரான நாவல்பாக்கம் சதக்ரது, ஸ்ரீநிவாஸ தேசிகனிடம் க்ரஹிக்கும்படி நியமித்தார். அப்படியே நாவல்பாக்கம் எழுந்தருளி ஸ்ரீ பகவத் விஷயத்தை க்ரஹித்தார். இந்த அண்ணயார்ய மஹா தேசிகனுக்கு பித்ரார்ஜிதமான சொத்து ஸ்வல்பம் உண்டு. குடும்ப காலக்ஷேபத்திற்குப் போதும். அப்படியிருந்தும் இந்த ஸ்வாமி அந்த சொத்துக்களை தனது தமையனுக்குக் கொடுத்துவிட்டு காஞ்சீபுரம் எழுந்தருளி அங்கு உஞ்சவிருத்தியால் ஜீவநம் செய்து கொண்டிருந்தார். ஏனெனில் ஸ்மிருதிகளில் ப்ராம்மணனுக்கு ஜீவநோபாயத்தை விதிக்கும் ப்ரகரணத்தில் உஞ்சவிருத்தியையே உத்க்ருஷ்டமாக சொல்லியிருக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு சொத்துக்கள் அதிகமாக சேர்கப் படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு குடும்பத்தில் பற்று அதிகம் உண்டாகும். இது மோக்ஷ மார்க்கத்திற்கு இடையூறு ஆக நிற்கும் என்பது அவர் கருத்து. ஆகையால் உத்க்ருஷ்ட ஜீவநமாகக் கருதப்பட்ட உஞ்சவிருத்தியை அங்கீகரித்து இந்த ஸ்வாமி காஞ்சீ க்ஷேத்திரத்தில் வெகு காலம் வசித்து வந்தார். அப்போது இவருடைய வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநத்துடையவும், க்ரந்த காலக்ஷேப ரீதியினுடையவும் சீர்மையைக் கண்டு ஆச்சர்யமடைந்த சில பண்டிதர்கள் இவருடைய நித்யாநுஷ்டாந ரீதியை ச்லோக ரூபமாக எழுதினார்கள். எண்பது ச்லோகங்களில் எழுதப்பட்டு, அந்த ச்லோகங்கள் இப்போதும் நாவல்பாக்கம் அக்ரஹாரத்தில் வசிக்குமவர்களால் அநுஸந்திக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஸ்வாமிக்கு முப்பத்தெட்டாவது வயதில் ஸர்வதாரி ஆனி மீ"த்தில் பத்நீவியோகம் நேர்ந்தது. அதை இந்த ஸ்வாமி "நன்றே வருவதெல்லாம்" என்ற ரீதியில் பகவதநுக்ரஹமாகவே நினைத்து புநர்விவாஹத்தில் ப்யத்நத்தை விட்டு ஸந்யாஸாச்ரமத்தை பரிக்ரஹிக்க திருவுள்ளம் பற்றிக்கொண்டு இருந்தார். இப்படிப்பட்ட மஹநீய ஸந்ததி தொடர்ச்சியின்றி விச்சின்னமாய் போவதே என்று அநுசோகம் கொண்ட

அநேகம் பெரியோர்களாலும், பந்து வர்க்கங்களாலும் புநர்விவாஹத்திற்காக ப்ரார்த்திக்கப்பட்டும் அதை அங்கீகரிக்காமல் சிலகாலம் கழிந்தது. பின்பு, இவருக்கு பகவத் விஷயாசார்யனை சத்க்ரது ஸ்ரீநிவாஸ தேசிகனுடைய நியமநத்தை மீறமுடியாமல் புநர்விவாஹத்தை ஒப்புக்கொண்டார். ஸர்வதாரி வருஷம் தை மாதத்திலேயே நல்லான் சக்ரவர்த்தி வம்சத்தில் உதித்த லக்ஷ்மீ நரசிம்மாசாரியருடைய குமாரியான 'ஸ்ரீநிவாஸா' என்னும் பெண்ணை விவாஹம் செய்துகொண்டார்.

அந்த விவாகத்தில் சாஸ்த்ரோக்தமான வ்ரத நியமாதிகள் தவறாது நடந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது விவாஹத்தில் முதல் நான்கு தினங்களில் உப்பு புளி இல்லாத ஆஹாரத்தை சாப்பிடல், பல்லு விளக்கக்கூடாது, கண்ணுக்கு மையிடல், எண்ணெய் தேய்த்துக் கொள்ளல் சண்தநம் மற்றுமுள்ள வாஸநா திரவ்யங்களை உபயோகித்தல், புஷ்பம், தாம்பூலம் இவற்றை உபயோகித்தல், கட்டிலின் மேலாவது மெத்தென்ன பஞ்சு சயநத்தின் மீதாவது படுத்தல், இவை கூடாது. இப்படிப்பட்ட தீவ்ரமான நியமத்துடன் விவாஹத்தை முடித்து காலையிலும் மாலையிலும் ஔபாஸநஹோமத்தையும், ஸ்தாலீபாகாதிகளையும் தவறாது நடத்திக்கொண்டு ரிஷி என்று சொல்லலாம்படி இருந்தார். அப்போது ஸ்ரீரங்கம் ஆண்டவன் என்று ப்ரசித்தி பெற்ற ஸ்ரீநிவாஸ ஸ்வாமி, ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகனிடத்தில் ஸகல வேதாந்த க்ரந்தங்களையும் க்ரஹித்து, நாவல்பாக்கம் எழுந்தருளி இந்த அண்ணயார்ய மஹாதேசிகனோடு, ச்ருத ப்ரகாசிகையை தினவுகெட பலதடவை சிந்தனை செய்தருளினார். மஹா பண்டிதரான விக்ரஹம் தேசிகர் என்ற ஸ்வாமி இந்த அண்ணயார்ய மஹாதேசிகன் திருவடிகளில் ஆச்ரயித்து க்ரந்த காலக்ஷேபம் செய்யும் போது ஸ்வாமி ஸாதித்த விசேஷார்த்தங்களை எல்லாம் சிறிய புத்தக ரூபமாய் எழுதி வைத்தார். அவற்றில் "ஸச்சப்தார்த்த விசாரம்" ஒன்று. இது "அஸந்நேவ ஸபவதி" என்ற ச்ருதியில் ஸத் என்னும் சொல்லுக்கு பொருள் என்னவென்று விசாரணையில் ஸ்வாமி ஸாதித்த அர்த்தங்கள் அடங்கியது. பின்பு அநேக சிஷ்யர்களுடன் திவ்யதேச யாத்ரையை ஸங்கல்பித்து தக்ஷிணதேசத்தில் ஆழ்வார்திருநகரி, திருக்குறுங்குடி வரையில் உள்ள ஒவ்வொரு திவ்ய க்ஷேத்திரத்திலும் மூன்று தினங்களுக்குக் குறையாமல் வசித்து குடை, செருப்பு முதலிய உபகரணங்கள் இன்றியே கால்நடையாகவே யாத்திரையை நிறைவேற்றினார். திரும்பிவரும்போது திருக்குடந்தையில் சிலகாலம் எழுந்தருளி இருந்து சிஷ்யர்களுக்கு வேதாந்த க்ரந்தங்களை அருளினார். அப்போது சிஷ்யர்களால் கொடுக்கப்பட்ட திரவ்யத்தைக் கொண்டு ஆராவமுதனுக்கு இரத்னங்கள்

இழைத்த கர்ண பூஷணங்களை செய்வித்து ஸமர்ப்பித்தார். பின்பு திருவஹீந்திர புரம் எழுந்தருளி அங்கு வெகுகாலம் வசித்து ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனை ஸேவித்துக் கொண்டிருக்கையில் அவ்வூர் வாசிகளான ஜனங்களால் பிரார்த்திக்கப்பட்டு திருத்தேர் கைங்கர்யத்தை ஆரம்பித்தார். முதன்முதல் தமது தேவியார் காதில் அணிந்துகொண்டிருந்த கர்ணபூஷணத்தை வாங்கி திருத்தேர் கைங்கர்யத்திற்காக வென்று ஸமர்ப்பிக்க, இதைக்கண்டு வியந்து பலர், நான் முன்னே நான் முன்னே என்று போட்டி செய்துகொண்டு திரவ்யங்களை கொண்டுவந்து கொடுத்தார்கள். மஹா தநிகர்களால் ஸாத்யமான இக்கைங்கர்யத்தை ஸ்வாமி அநாயாஸமாகவே முடித்து முதன்முதல் ஸ்ரீ தேவநாதனை அதில் எழுந்தருளப்பண்ணி பின்பு ஸ்ரீ தேசிகனுக்கு சாற்றியருளினார். பிரதி வருஷமும் ஸ்ரீ தேவநாதனும் இதே திருத்தேரில் ஏறியருளலாம் என்றும் நியமித்தார் இது நடந்தபின் ஸ்ரீ தேசிகனுக்கு விமாந கைங்கர்யத்தையும் ச்ரமமின்றி பஹுஜந த்ரவ்யங்களைக்கொண்டு பூர்த்தி செய்து, ஆழ்வார்திருநகரியில் ஆழ்வாருக்கு நடப்பதுபோல் ஸ்ரீ தேசிகனுக்கு த்வஜாரோஹண பூர்வமாய் மஹோத்ஸவத்தைத் தானே கூட இருந்து நடப்பித்து அளவற்றதான ஸ்ரீ தேசிகன் உத்ஸவ வைபவத்தைக் கண்டு மனமகிழ்ந்தார். ஸ்வாமி நாவல்பாக்கம் எழுந்தருளின பின்பும் ஒவ்வொரு வருஷமும், சிஷ்ய வர்க்கங்களுடன் கூடி வந்து திருவஹீந்திரபுரத்தில் தேசிகன் மஹோத்ஸவத்தை சிறப்பித்துப் போவதுண்டு.

ஒருக்கால் திம்மயாசார்யர் என்ற மத்வ வேதாந்தி ஒருவர் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின்மீது தூஷணங்களைச் சொல்லிக் கொண்டுவர, ஸ்வாமி தம் சிஷ்யரான விக்ரஹம் தேசிகரை அனுப்பி அவரைக் கண்டித்தனுப்பினார். திருவஹீந்திரபுரத்திலேயே ஸ்வாமிக்கு ஷஷ்ட்யப்த பூர்த்தி நடந்தது. பின்பொருகால் திருக்குடந்தைக்கு எழுந்தருளினார். அங்கு கேதாண்டிபட்டி ஸ்ரீரங்க ராமானுஜ மஹா தேசிகன் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி ஸன்னிதியில் வேதாந்த க்ரந்தங்களை அதிகரித்து துரீயாச்ரம ஸ்வீகாரத்தில் நோக்குடன் திருக்குடந்தைக்கு எழுந்தருளினார். நாடெங்கும் ஸ்ரீ தேசிக ஸித்தாந்தம் தழைத்துப் பரவி ஓங்க வேண்டும் என்ற திருவுள்ளங்கொண்ட இந்த அண்ணயார்ய மஹாதேசிகன் அந்த கேதாண்டிப்பட்டி ஸ்வாமியினுடைய மநோரதத்தை அபிநந்தித்து அமுதன் ஸந்நிதியிலேயே துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்வித்து தஸோபநிஷத் பாஷ்யகாருடைய திருநாமமான ரங்கராமாநுஜ ஸ்வாமி என்ற திருநாமத்தைச் சாற்றி, காஞ்சி மண்டலத்தில் சித்தாந்த ப்ரவசநம் செய்ய நியமித்து அனுப்பினார். இந்த ஸ்ரீமத் அண்ணயார்ய மஹாதேசிகனுடைய அபிஸந்தியையும் நியமனத்தையும் அடியொற்றி திருக்குடந்தை

ராகவபாட்ராசாரிய ஸ்வாமி ஸ்ரீ கேதாண்டபட்டி ஸ்வாமிக்கு "**श्रीरङ्ग-लक्ष्मणमुनिः स्वकृतप्रबन्ध**" என்று தொடக்கமான தனியனை இயற்றி அண்ணயார்ய மஹாதேசிகன் திருவுள்ள முகப்புடன் அந்தத் தனியனை ஸமர்ப்பித்தார். இதனுள் ஸ்வாமியின் திருமேனியில் மூப்புத் தோன்றிவிட்டபடியால் இனி தேசாந்தர ஸஞ்சாரம் ஸாத்யமில்லை என்று அறுதியிட்டு நாவல்பாக்கம் எழுந்தருளி அங்கு ஸ்திரமாய் வசிக்கவும், நித்ய ததீயாராதனைகளுக்கும் போதுமான வ்ருத்தி இல்லாதது கொண்டு கொஞ்சம் விசாரத்துடன் எழுந்தருளி இருந்தார். அப்போது ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்த அநேக சிஷ்யர்களில் ஒருவரான ரங்காசார்யர் என்பவர் கொத்திமங்கலம் கிராமத்திற்கு அருகில் தத்தனூர் என்ற கிராமத்தை க்ரயத்திற்கு வாங்கி ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்தார். ஸ்வாமியும் தன் ப்ரயத்நமின்றி லபித்ததான அத்தாநத்தை பகவானுடைய ஸங்கல்பத்தால் லபித்தது அதை நிராகரிக்கக் கூடாது எனக் கருதி அதை திருவுள்ளம் பற்றி அவ்வூரிலேயே சிஷ்யர்களின் ஸஹாயத்தைக் கொண்டு திருமாளிகை ஒன்றை நிர்மாணம் செய்து அங்கேயே சிலகாலம் எழுந்தருளி இருந்தார். இப்படி துந்துபி ௵ பங்குனி ௴ வரையில் தத்தனூர் க்ராமத்தில்வசித்துக்கொண்டு அதன் பிறகு திருமேனியில் நாளுக்கு நாள் அசக்தி அதிகரித்து வருவதைக் கண்டு இனி ப்ரயாண காலம் ஸமீபித்துவிட்டது என திருவுள்ளம் பற்றி, தனது சிஷ்யர்கள் அனைவர்க்கும் ஆஹ்வாந பத்திரிகை அனுப்ப நியமித்தருளினார். அப்படியே சிஷ்யர்கள் அனைவரும் வந்து தண்டன் ஸமர்ப்பித்து நிற்கையில் அதி சீக்கிரத்தில் ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்தருளினார். ஸந்யாஸாச்ரமத்தில் அபர்யாப்தாம்ருதமுநி என்று திருநாமம் சாற்றப்பட்டது. இந்த ஆச்ரமத்தில் ஐந்து தினங்கள் எழுந்தருளி இருந்து ஆறுவது தினம் காலையில் நித்ய விபூதிக்கு எழுந்தருளினார். ஸ்வாமி திருநாட்டுக்கு எழுந்தருளும்போது திரு நக்ஷத்திரம் எழுபத்தி மூன்று (73). துந்துபி வருஷம் பங்குனிமாஸம் சுக்ல பக்ஷ சதுர்தசீ தினத்தில் அவதார ஸமாபநம் செய்தருளியது. இந்த ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்த ப்ரசித்த வித்வான்களில் அடியிற்கண்ட திருநாமங்கள் முக்கியமானவர்கள். கொத்திமங்கலம் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்வாமி, திருப்பதி வீரராகவ தாதாசார்யர், ஸ்ரீ பெரும்பூதூர் மாப்பிள்ளை விஜயராகவாசாரியர், ஸ்ரீரங்கம் மஹாமஹோபாத்தியாய சுந்தராசாரியர், திருக்குடந்தை ராகவ பாட்டராசாரியர், வலயபேட்டை ஸ்வாமி என்ற ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி. இவர்களால் ஸ்ரீமத் அண்ணயார்ய மஹா தேசிகனுடைய ஸத்ஸம்ப்ரதாயம் நாநாசாகைகளாய் பிரிந்து வளர்ந்தது.

காலாநுகுண ஆன்ஹிகம்

ஆத்மஹித சிந்தநம்

விடியற் காலையில் எழுந்திருந்து ஆத்மஹிதத்தைப் பற்றி சிந்திக்க வேணும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. சாஸ்திரம் கூறுவது மாத்திரமல்ல. உசிதமும் அவச்யமும் கூட ஆகும். ஆத்மஹிதம் என்னும் சொல்லுக்குத் தன்னுடைய ஹிதம் எனப் பொருளாகும். நமக்கு ஹிதம் இரண்டு விதம் உண்டு. ஆத்மஹிதம் என்னும் சரீரஹிதம் என்னும். இரண்டையும் பற்றி காலையில் கவனிப்பது உசிதமாகும். சிலபொழுது இவ்விரண்டு ஹிதங்களும் ஒன்றோடொன்று முரண்படக்கூடும். அவற்றை முரண்பாடில்லாமல் கூடியவரை ஸமரஸப்படுத்தி நிறைவேற்றவேண்டியது உசிதமாகும். உஷக்காலம் புத்திக்குத் தெளிவை உண்டாக்கும் காலமாதலால் பற்பல அதிகாரிகளும் தங்கள் தங்கள் அதிகாரம் நோக்கம் ஊக்கம் இவற்றை அநுஸரித்து தங்களுக்கு உரியதாகிய நன்மையை சிந்திக்க இதுவே காலமாகக் கருதப்படுகிறது. வித்யார்த்திகள் படித்த பாடத்தைப் பற்றி சிந்திப்பதற்கும், அரசர்கள் ராஜ்ய கார்யத்தைப் பற்றி சிந்திப்பதற்கும், மோக்ஷார்த்திகள் மோக்ஷ மார்க்கத்துக்கு வேண்டியவற்றை சிந்திப்பதற்கும் இதுவே காலமாக அந்தந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. வியாதிக்காரர் தனது சரீராரோக்யத்தைப்பற்றி ஆலோசிப்பதற்கும் இந்த உஷக்காலமே சிறந்தது என்பது அநுபவசித்தம். ப்ரத்யேகமாய் கவனிக்க வேண்டியவற்றில் யாதொரு அபிநிவேசமும் இல்லாவிட்டால், மோக்ஷ மார்க்கத்தைப் பற்றி சிந்திப்பதை அனைவர்க்கும் பொதுக் கார்யமாக வைத்துக் கொள்ளலாம். ஆகையால் விஸ்தாரமாய் ஆன்ஹிக க்ரமம் எழுதப்புகுந்த நம் பூர்வாசார்யர்கள் இந்த உஷக் காலத்தில் மோக்ஷ மார்க்க சிந்தையை செய்வதே நன்று என்று அபிப்ராயப்பட்டு மேற்சொன்ன விஷயத்தை மிக விரிவாய் கூறினர். ஸ்ரீ பாஷ்யகாரருடைய நேர் சிஷ்யரான வங்கிபுரத்து நம்பிகள் தமது ஆன்ஹிககாரிகை என்னும் நூலில் இவ்விஷயத்தை வெகு அழகாயும் சுருக்கமாயும் உரைத்திருக்கிறார். அப்புத்தகத்தையே வேதாந்த தீபிகையில் தமிழ் உரையுடன் வெளிப்படுத்த உத்தேசித்திருப்பதால் அதின் சுருக்கமான பாகத்தை மாத்திரம் இங்கு கூறுகிறோம். மேற் சொன்ன கிரந்தத்தில் இந்த ஆத்மஹிதத்தைப்பற்றிச் சொல்லும் பாகத்திற்கு நிர்வேத காரிகை எனப் பெயர் வழங்குவதுண்டு. உலகமென்னும் நாடகத்தின் தத்துவத்தை ஆராய்ந்து பார்த்தால் எல்லாம் துக்கத்தில் தொடங்கி ஆனந்தத்தில் முடியும் என்பதே. வடமொழியில் நாடகங்களை இயற்றிய மகா கவிகளும் இவ் வழியையே பின் பற்றி இருக்கின்றனர். மற்ற புராண இதிஹாஸக் கதைகளிலும் பெரும்பாலும் சிந்தை

யில் முதன் முதல் நிர்வேதம் தொடங்கும். அதாவது—ஐயோ எனது இறந்த கால மனைத்தும் வீணாகக் கழிந்ததே. ஸம்ஸாரமென்னும் வலையினுள் அகப்பட்டு சிறகு ஒடிந்த பக்ஷிபோல் வெளியில் செல்ல வழி தெரியாமல் தவிக்கிறேன். நான் செய்த மிகவும் அஸஹ்யமான கார்யங்களை நினைக்கும்போது எனக்கே வெட்கம் உண்டாகிறது. காலம் என்னும் புருஷன் ஸம்ஸாரம் என்னும் சக்கிரத்தில் என்னை ஏற்றி வைத்து இங்குமங்கும் வலித்து இழுக்கிறான். நல்ல கர்மங்களை நான் செய்யவில்லை. ஞானயோகத்தையும் பக்தியோகத்தையும் கை விட்டேன்; ச்ருதி ஸ்ம்ருதிகளில் சொன்ன ஆசாரங்களைத் துறந்தேன். ஸாதுக்களின் ஸமாகமத்தை விட்டொழித்தேன். அஸத்துக்களின் சேர்க்கையைப் பற்றினேன். வர்ணாச்ரமாசாரங்கள் நின்றும் நழுவினேன். முன் செய்த வினைப்பயனாக லபித்த இந்த தேஹத்தையே ஆத்மாவென்று நினைத்தேன். ஆடுமாடு முதலான பசு வர்க்கங்களைப்போல் ஆஹாராதிகளான சௌக்கியங்களால் திருப்தி அடைந்தேன். யமலோகத்திற்குப் போகும் வழியை நினைத்தால் மனம் நடுங்குகிறதே. குடிக்கத் தண்ணீர் இல்லை. நிற்க நிழல் இல்லை. பிடித்துக் கொள்ள ஆதாரமொன்றுமில்லை. வழியோ வெகுதூரமானது. மிகக் கடினமானது. துணையாருமில்லை, செய்த பாபமோ எவ்வளவு காலம் அனுபவித்தாலும் தொலையாதது. என்ன செய்வேன் யாரிடத்தில் முறையிடுவேன் யாருடைய காலில் விழுவேன். என்னுடைய நிலை ஊமையன் கனவு கண்டாற்போல் இருக்கிறது. இவ்விதம் சிறிது நேரம் நிர்வேதத்தைப் பாராட்டி, அதன் பின் தைர்யத்தை அடையவேணும். நிர்வேதத்தை அளவுக்கு மிஞ்சி வளர்த்தால் எல்லா கார்யங்களும் கெட்டு விடும். ஸம்ஸாரமென்னும் கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கும் தன்னைத் தானே கரையேற்ற முயலவேண்டும். இறந்த காலம் இறந்ததே. போன காலத்தைத் திருப்பிக்கொண்டு வர யாரால் இயலும்? அறிவுள்ளவன் ஜலம் ஓடிப்போவதற்கு முன்னமே அணை கட்டிக் கொள்ளவேணும். போன காலம் போகட்டும். இப்போது நாம் செய்யவேண்டிய கார்யம் என்னவென்றால் இனி எப்போதும் பகவானுடைய திருவடிகளை அர்ச்சிப்பதில் ஊக்கம் கொள்ளவேணும். ஒரு தினத்தை ஐந்து பாகமாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு கார்யத்தை ஏற்றுக் கொள்ளவேணும். முதலில் அபிகமநம். பின்பு உபாதாநம் அதாவது—பூஜோபகரணங்களை சேகரித்தல். அதன்மேல் இஜ்யா = பகவதாராதநம். அதன் பின் மந்த்ர ஜபங்கள். முடிவில் பகவத் த்யாநம். இவ்விதம் பஞ்ச கால ப்ரக்ரியாக்ரமமாய் தினசர்யையை நடத்துவேன். பகவான் எனது மநோரதத்தை பூர்த்தி செய்தருளவேணும் என்று ப்ரார்த்தித்து ஆத்மஹித சிந்தையை முடிக்கவேணும்.

ஸ்ரீ:

வேதாந்த ரக்ஷாமணி விமர்சம்

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர்]

(தொடர்ச்சி)

ஸ்ரீபாஷ்யத்தில் அதே வாக்யங்களால் திரும்பவும் திரும்பவும் உரைக்கப்பட்டது. உபாஸனமென்பது த்யானம். 'கணவனை விட்டுப் பிரிந்த மனைவி தன் பதியை த்யானம் செய்கிறாள் என்னும்போது அவள் தன் பதியினிடம் இடைவிடாத உத்கண்டையை வஹிக்கிறாள்' என்று பொருளென்றும் பகவத்பாதர் வெகு அழகாக மொழிந்தார். ப்ரஹ்மத்தைப் பற்றிய த்யானம் இதுபோன்றதே. இந்த பாஷணத்திற்கு விலையேயில்லை—நம் ஆழ்வார்கள் அனுபவம் போன்ற அனுபவ ரஸத்தில் ஸ்ரீசங்கர பகவத் பாதரும் ஆழ்ந்து நமக்குக் காட்டினார். 'உத்கண்டை' என்பதற்கு ஆலங்காரிகர் பணித்துள்ள லக்ஷணங்களை நினைக்கவேண்டும். ரஸமயமான பரமாத்மாவினிடம் தமக்குள்ள ஸ்நேஹத்தை விளக்குகிறார். ஆவ்ருத்யதிகரண ஸூத்ரங்களிரண்டிற்கும் ஸூத்ராக்ஷரங்களுக்கு ஸ்வரஸமாகவே ப்ரதிரூபாபன்ன ஞானத்தின் ஆவ்ருத்தியான உபாஸனத்தையே ஸூத்ரம் நிர்ணயிக்கும் மோக்ஷஸாதனமென்று ஸ்ரீபாஷ்யத்தைப்போலவே பாஷ்யம் செய்துவிட்டு, பிறகு தாமாக 'இங்கே ஒருவன் சொன்னான்' என்று தொடங்கி அத்விதீய நிர்குண ப்ரஹ்மஞானம் என்று ஓர் கதையை எடுத்துக்கொண்டு பேசினார். அது ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் சேராது. 'ஆவ்ருத்தமான ப்ரத்யயம் உபாஸன' மென்று தொடங்கி 'அதை உட்கார்ந்து செய்வது உசிதம்; ஏகாக்ரதை எங்கே ஸுகரமோ அந்த விடத்தில் உபாஸனம் செய்யவேண்டும்; தேஹத்தை விடும் கடைசி க்ஷண பர்யந்தம் உபாஸனம் செய்யவேண்டும்.' என்று ஸாதன ஸ்வரூபத்தின் விசாரத்தை மேலதிகரணங்களில் ஸூத்ரகாரர் பேசி முடித்தார். ஸகுண ப்ரஹ்மத்தின் உபாஸனத்தை ஸ்ரீபாஷ்ய முரைத்தபடியேதான் ஸூத்ரங்கள் பேசுகின்றன. ஸ்ரீசங்கரபாஷ்யமும் அதையே ஸூத்ரத்தின் பொருளென்று விரிவாகப் பேசிற்று. ஆவ்ருத்யதிகரண ஸூத்ரங்கள் ஒருக்காலும் நம் சாஸ்த்ரிகள் நினைக்கும் பக்ஷத்திற்கு ஒட்டமாட்டா 'ச்ரவண மனன நிதித்யாஸனங்களை ஆவ்ருத்தி செய்து அனுஷ்டிக்க வேண்டும்' என்று ஆவ்ருத்யதிகரணத்தின் தீர்மானத்தை ஸ்ரீஆனந்தகிரி உரைத்தார். இதுவும் ஸ்ரீபாஷ்யத்தை ஒருவாறு ஒத்ததே. 'த்யானாதிகளின் ஆவ்

ருத்தி தீர்மானிக்கப்பட்டது' என்று ரத்ன ப்ரபை நிர்ணயித்தது இதுவும் சாஸ்த்ரிகள் அபிமானத்தைத் தள்ளும்; ஸ்ரீபாஷ்யத்தைய்ய உறுதிப் படுத்தும். நிர்குண ப்ரஹ்ம ஞானம் ஒரு தடவை வந்தவுடனே ஜீவன் முக்தனாகி, பின்னால் செய்யவேண்டிய தொன்றுமில்லை, உலகமே அஸ்த மித்ததென்னும் பக்ஷம் ஸூத்ர ஸம்மதமானால், மரண பர்யந்தம் ப்ரஹ்ம சிந்தை ஆவ்ருத்தி செய்யப்படவேண்டு மென்று ஸூத்ரகாரர் ஸாதன ஸ்வரூபத்தைத் தீர்மானிப்பாரோ? ஒரு தரம் நிர்குண ப்ரஹ்மத்தின் அறிவே போதுமென்றால் மரண பர்யந்தம் ஆவ்ருத்தியை விதிப்பானேன்? ஸாக்ஷாத்காரத்திற்காக ஆவ்ருத்தி யென்றால் நிர்குண ஸாக்ஷாத்காரமும் மரணமும் ஒரே க்ஷணத்தில் ஏற்படுமென்று நியமமுண்டோ, மஹா வாக்யத்தால் ஏற்பட்ட ஐக்ய அறிவு மனதில் ஸந்தேஹ மற நிலையாக நிற்கும் வரையில் அந்த வாக்ய ஜந்யமான ஐக்ய ஞானத்தை ஆவ்ருத்தி செய்ய வேண்டும் என்றால், மரண பர்யந்தம் ஆவ்ருத்தி செய்து தீரவேண்டும் என்று காலத்தின் எல்லையை விதிப்பது பொருந்தாது. மரண காலம் வரையில் உபாஸனையென்னும் பக்தியோகத்தை யனுஷ்டித்து அந்திமஸ் மரண பர்யந்தமுள்ள அந்த ஆவ்ருத்த பக்தியால் ஆராதிக்கப்பட்ட ஈச்வரனுடைய அநுக்ரஹமென்னும் அத்ருஷ்டத்தால் பந்தம் நிவ்ருத்தியாகி, ப்ரஹ்ம நாடியில் சேர்க்கப்பட்டு, அர்ச்சிராதிகளான ஆதிவாஹிகர்களால் ப்ராக்ருதி மண்டலத்தைத் தாண்டுவித்து 'விஷ்ணுவின் பரமம் பதம்' என்று சாஸ்த்ரங்கள் ப்ராப்யமாக உத்கோஷிக்கும் பரம பதத்திற் சேர்க்கப்பட்டு, பரிபூர்ண ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற்று ப்ரஹ்மானந்தத்திற்கு ஸமமான பேரின்பத்தைப் பெறுகிறான் என்று 4-வது அத்யாயத்தில் விஸ்தாரமாக ஸூத்ரகாரர் காட்டுகிறார். நம் சாஸ்த்ரிகள் பக்ஷத்திற்கு இந்த அதிகரணங்களொன்றுமே ஒட்டாது என்போம். மற்றும் அனேகம் அடியோடு ஒட்டமாட்டா, ஸ்ரீராமானுஜர் பக்ஷமான பக்தியோகத்திற்கு (ஸகுண ப்ரஹ்மோபாஸனத்திற்கு)த்தான் ஒட்டும் என்பதை சாஸ்த்ரிகளும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். ப்ராசீன அத்வைத க்ரந்தங்களெல்லாம் ஒப்புகின்றன. ஹார்தனென்னும் அந்தர்யாமியான ஈச்வரனுடைய அனுக்ரஹத்தால் (அத்ருஷ்டத்தால்)தான் ப்ரஹ்ம நாடியில் ப்ரவேசம் கிடைத்து அதுவழியாய் உத்க்ராந்தனாகி அர்ச்சிராதி கதியின் அந்வயத்தைப் பெற்று, அமானவனால் ப்ரஹ்மத்தின் லோகத்தில் சேர்ப்பிக்கப்படுகிறான். 'ஹார்தனால் அனுக்ரஹிக்கப்பட்டு' என்ற ஸூத்ரம் ஈச்வரானுக்ரஹத்தை மோசகமாகப் பேசிற்று. ஈச்வரானுக்ரஹ மென்ற பேச்சையே சாஸ்த்ரியார் கோபிக்கிறார். 'ப்ரஹ்மத்தை யடைய விரும்புகிறவரெல்லாம் இந்த அர்ச்சிராதி மார்க்கத்தால் தான் செல்லுகிறார்கள் என்று நாம் ப்ரதிக்ஞை செய்கிறோம், ஆணையிடுகிறேம்' என்று ஸ்ரீசங்கர

பகவத் பாதரும் 3-வது பாதத்தின் முதலில் ப்ரதிக்ஞை செய்தார். இதுவும் தாத்விகமான எங்கள் பக்ஷத்தையே அவசமாகவோ (மனமார்ந்தோ) பேசுவதாகும். நிரபவாதமான உத்ஸர்க ப்ரதிக்ஞை ஸகுணோபாஸகனுக்கு இன்ன முறைகள், நிர்குணோபாஸகனுக்கு இன்ன முறை என்று, ஒரு ஸூத்ரமேனும் பேசியுள்ளதாகக் காட்டமுடியாது. அப்படிப் பிரிவினையில் நோக்கிருந்தால், பிரித்து அஸங்கீர்ணமாய் இரண்டு விதமான வித்யைகளையும் பேசவேண்டாவோ? குணோபஸம்ஹாரபாதமென்னும் 3-வது அத்யாயத்தின் மூன்றும் பாதம், பல உபநிஷத்துக்களில் ஓர் வித்யையில் சொல்லப்பட்டிருக்கும் குணங்களை யெல்லாம் சேர்த்து அந்த வித்யையைப் பற்றுகிறவர்கள் உபாஸிக்கவேண்டுமென்று விசாரிப்பது ஸ்பஷ்டம். குணங்களைப் பல விடங்களிலிருந்து திரட்டிச் சேர்க்கவேண்டும் என்றார் ஸூத்ரகாரர்; எல்லாக் குணங்களையும் அடியோடு தள்ளவேண்டும் என்று சாஸ்த்ரிகளபிமானிக்கும் நிர்குணபக்ஷம் ஸூத்ரத்திற்கு நேர் எதிர்த்தட்டு நேர் எதிர்வாதம். ஆர்ஜவத்தை யனுசரித்து பகவத்பாதர் இந்தப் பாகத்தின் • தொடக்கத்திலேயே நிர்குண ப்ரஹ்மைக்ய பக்ஷத்திற்கு இந்தப் பாத விசாரம் அடியோடு பொருந்தாதே என்று தாமே ஆக்ஷேபித்தார். 'ஏன் இந்த வித்யாபேதாபேத சிந்தையை ஆரம்பிக்கிறார்' என்று கேட்டு ஸகுண ப்ரஹ்ம விஷயமும் ப்ராணாதி விஷயமுமான விக்ஞானங்களுக்கு இந்த விசாரம் பொருந்துமாகையால் தோஷமில்லை என்றார். இந்த குணோபஸம்ஹாரபாதம் ஸ்ரீ ராமானுஜர் பற்றும் பக்தியோக விக்ஞானங்களுக்குத்தானொட்டும், நிர்குண விக்ஞானத்திற் கொட்டாது என்று ஸ்பஷ்டப் பணிப்பு. 'குணோபஸம்ஹாரம்' என்பது 'குணங்களை புஷ்பேப்ய: இவ ஷட்பத:' என்றபடி பலவிடங்களிலிருந்து திரட்டிச் சேர்க்கையைச் சொல்லுகிறது. 'குணஸம்ஹாரம்' என்று திருநாமமில்லை. ஸூத்ரங்கள் ப்ரஹ்மகுண ப்ரளய பக்ஷத்திற்கு அடியோடு பொருந்தமாட்டா.

த்ரிகுணாத்மகமான குணப்ரவாஹமெனும் ப்ராக்ருதிக்குத்தான் ப்ரளயமுண்டு. பாஷ்யமும் மங்களகுணப்ரளயத்தைப் பொருளாக வரைக்கவில்லை; உரைக்க முடியாது. 'எல்லா வித்யைகளுக்கும் அர்ச்சிராதிகதி அவிசேஷமாய்ப் போதுவென்பது ப்ரசித்தம் என்று, ஸூத்ரகாரர் ஸ்பஷ்டப்ரதிக்ஞை. எல்லா வித்யைகள் என்றால் 'நிர்குண வித்யைகள் தவிர மற்ற வித்யைகள்' என்று சாஸ்த்ரியார் பொருள். ஸூத்ரத்தில் 'எல்லாம்' என்று ஸ்பஷ்டமாகப் பேசினதற்கு நேர் விரோதமாக ஹடாத்காரமாய் நிர்குண வித்யைகளேதோ இருப்பதாகத் தாமாகப் பேசும் வித்யைகளைத் தவிர்த்து என்று பொருளுரை! கடோபநிஷத்து இவருக்கு நிர்குண வித்யை. 'ததோர்த்வமாயந் அம்ருதத்வமேதி' என்று

அங்கே 101-வது நாடிவழியாக தேஹத்திலிருந்து அந்தக் காலத்தில் வெளிப்பட்டு மேலே போவதை ஸ்பஷ்டமாகப் பேசிற்று. ஸகுண ப்ரஹ்ம விஷயமான தஹர வித்யையும் அதைப பேசிற்று. நிர்குணமென்று சாஸ்த்ரிகள் நினைக்கும் கடவல்லியும் அதைப் பேசிற்று. ப்ரஹ்ம நாடியில் ப்ரவேசித்து மேலே செல்வது ஹார்த்தனென்னும் பரமாத்மாவின் அனுக்ரஹத்தால் தானென்று ஸூத்ரம் இந்த ச்ருதியைக்கொண்டு அறுதியிட்டது. இவர் நினைக்கும் நிர்குண வித்யைகளைப் பற்றுபவருக்கும் ஈச்வரானுக்ரஹமெனும் அத்ருஷ்டத்தால்தான் மோக்ஷம் கிடைக்குமென்றும், நிர்குணமென்ற இவர்களபிமானிக்கும் வித்யைகளை அப்யஸிப்பவருக்கும் அர்ச்சிராதிகதி வழியாய்ச் சென்றுதான் மோக்ஷம் என்றும் ஸூத்ரகாரர் நிர்ணயம் ஸ்பஷ்டம். "ஹார்த்தானுக்ருஹீத:" என்கிற ஸூத்ரம் ஸகுண வித்யைக்குத் தான்; நிர்குண வித்யைக் கல்லவென்ற சாஸ்த்தியார் அபிமானம் ஸூத்ரகாரர் ஸம்மதமாகுமோ? கீதையில் பகவான் ப்ரஹ்மவித்துக்களான யோகிகளுக்கு இந்த கதிகளின் ஸ்மரணம் (த்யானம்) அவச்யமென்றும், 'அக்நிர்ஜ்யோதி:' என்று சொல்லப்படும் தேவயாந கதிதான் ப்ரஹ்ம ஸூத்ரத்தின் முடிவு ஸூத்ரம் பேசும் அபுநராவ்ருத்தி (மீளாமை) என்னும் மோக்ஷத்தை யளிக்குமென்றும் பணித்தார். எல்லா ப்ரஹ்மவித்துக்களுக்கும் இந்த கதி ஸாதாரணமென்றும், அவச்யமென்றும், பகவானுடைய வ்யாக்யானம் 'கச்சன்யோகீ நமுஹ்யதி' என்றும், 'தத்ரப்ரயாதாகச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்ம விதோ ஜநா:' என்னும் கீதா வசனத்தாலும் இது எல்லோர்க்கும் பொதுவென்பது ஸ்பஷ்டம். இந்த இரண்டுகதிகளும் உலகத்திற்கு சாச்வதமென்றும் பகவான் அறுதியிட்டார். 'அர்ச்சிராதி கதி' யென்பதே சாஸ்த்ரியாருக்கு மித்யை.

ப்ரம்ம ஸூத்ர சாஸ்த்ரமும் ஸகுண ப்ரஹ்மவித்யா நிஷ்டனாக விருந்து அர்ச்சிராதி கதி வழியாக மேலே செல்லு மவனுக்கு 'அனாவ்ருத்தி' யென்னும் மோக்ஷமென்றும், அவனுக்கு ப்ரஹ்மத்தின் ஆனந்தம் முழுவதும் ஸமானமாக உண்டென்றும், ப்ரஹ்மத்திற்குத் தனிமையாயுள்ள ஜகத் ஸ்ருஷ்ட்யாதி சக்தி முக்தனுக்கு இல்லையென்றும், ப்ரஹ்மத்திற்கும் முக்த ஜீவருக்கும் பேதத்தையே நிலைநிருத்தி முடிந்தது. சேதனாசேதன ஸகல ப்ரபஞ்சத்தையும் ஸ்ருஷ்டி, பாலனம் முதலியதைச் செய்வது ப்ரஹ்மத்திற்கு அஸாதாரண லக்ஷணமென்று தொடக்கி, 'ப்ரஹ்மமாகவே யாகிறான்,' 'ப்ரஹ்மத்தைப் போலவே யாகிறான்' 'தாத்ருகேவபவதி' 'உயர்ந்த ஸாம்யத்தை யடைகிறான்' 'என்னோடு ஸாதர்ம்யத்தை யடைகிறான்' என்று மோக்ஷத்தைப்பற்றிப் பலவிதமான

ப்ரமாணங்களிலிருப்பதைக்கொண்டு, ஐக்யமோ, ஸாம்யமோ என்கிற ஸம்சயத்தை 'ஸாம்யம்தான்,' அதிலும் ஆனந்தம்மட்டிலும் ஸாம்யம், ஆனந்தம் முழுவதிலும் ஸாம்யம், ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளான ஈச்வர வ்யாபாரம் முக்தனுக்கு இல்லை என்று நிஸ்ஸம்சயமாகத் தீர்மானித்து சாஸ்த்ரத்தை முடித்தார். சாந்தோக்யோபநிஷத்தும் முடிவுகாலம் பர்யந்தம், யாவதாயுஷம், பக்தியோக நிஷ்டனாக விருந்து அர்ச்சிராதிகதி வழியாய் ப்ரஹ்மத்தின் நாட்டிற்குச் சென்று பின் 'திரும்புவதில்லை;' 'திரும்புவதில்லை' என்று பேசி தத்வ ஞானோபதேசத்தை முடித்தது. ஸ்ரீ சங்கர பாஷ்யமும், இந்த விடத்தில் இப்படியே பொருளுரைத்தது. இதுதான் சாஸ்த்ரத்தின் பரம ரஹஸ்யம், பரமகாஷ்டை, பரம ப்ரதிஷ்டை ஸூத்ர சாஸ்த்ரமும் ஸகுண ப்ரஹ்ம வித்யையையே பேசி, அதிலே ப்ரஹ்ம ஸமானமான பூர்ணானந்த ப்ராப்தியை அறுதியிட்டு, ப்ரஹ்மத்தினிடமிருந்து வஸ்து தத்வத்தில் பேதத்தையும் நிர்ணயித்து, அனாவ்ருத்தியை ப்ரதிக்ஞை செய்தது. ப்ரஹ்மத்தின் பரிபூர்ணானந்தம் அகாமஹதனான முக்தனுக்கும் உண்டென்று தைத்திரீய ப்ருஹதாரண்யக ச்ருதிகளறுதி யிட்டதை யநுஸரித்து ஸூத்ரகாரரும் முடிவில் அவிபாகத்தையும் (அப்ருதக்த்வத்தையும்) ஆனந்த ஸாம்யத்தையும், ஜீவேச்வர பேதத்தையும், சாஸ்த்ரத்தின் முடிவு தாத்பர்யமாக விளக்கினார். ப்ரஹ்மத்திற்கும் பூர்ணானந்தமுண்டு, அகாமஹத முக்தனுக்கு முண்டென்றால், இவனு மவனு மொன்றே யென்று பொருளுரைப்பது பொருந்துமோ? 'அஸ்மின் அஸ்யச தத்யோகம் சாஸ்தி' என்று ஸூத்ரகாரர் 'ப்ரஹ்மத்தினிடம் நிஷ்டையுடைய இவனும் ஆனந்தத்தை யடைகிறான்' என்று தீர்மானித்தார். 'இந்த ஸம்ப்ரஸாதன் (முக்தி யடையப்போகும் ஜீவன்) இந்த சரீரத்தைவிட்டுக் கிளம்பிச் சென்று பரஞ்ஜோதியை யடைந்து தன்னுடைய ஸ்வாபாவிகமான அபஹதபாப்மத்வாதி விசிஷ்ட சைதன்ய ஸ்வரூபத்தின் ஆவிர்பாவத்தைப் பெருகிறான்' என்ற தஹர ப்ராஜாபத்தி வித்யைகள் பேசினதை ஸூத்ரகாரரும் 'ஸம்பத்ய ஆவிர்பாவ:' என்று தொடங்கி விளக்கினார். அந்த ஸூத்ரத்தின் விஷய வாக்யம் இரண்டு வித்யைகளிலும் படிக்கபப்பட்டுள்ளது. இந்த விஷய வாக்யம் நிர்குண ஸாக்ஷாத்காரமென்னும் பரம முக்தியை விளக்குவதாகவே சாஸ்த்ரிக ளபிமானம். அப்படியாயின் இவர் மதத்திலும் ஸகுண ப்ரஹ்ம விஷயமான தஹர வித்யையில் இதைப் படிப்பது ஒவ்வாதே. 'ஜ்யோதிர் தர்சனாத்' என்னும் ஸூத்ரத்தில் இதே விஷய வாக்யத்தை யுதாஹரித்து இந்த வாக்யம் நிர்குண வித்யை யுடையவனுக்கு நிர்குண ப்ரஹ்ம லாபத்தைச் சொல்லுகிறதென்றும், ஸகுண ப்ரஹ்ம ப்ராப்தியைச் சொல்லுவதல்ல வென்றும் ஸ்ரீ சங்கர பாஷ்யம். அப்படியாயின் இந்த வாக்யத்தை ஸகுணமான தஹர வித்யையின் பயனைப்

படித்திருப்ப தொவ்வாது. ச்ருதியை ஏன் ஸ்துதிபரமென்று சொல்லி விளக்கவேண்டும்? இல்லாததைச் சொல்லுவதாக ஏன் சொல்ல வேண்டும்? 'ஆத்மா, ப்ரகரணாத்' என்னும் ஸூத்ரத்தாலும் அதே தீர்மானம் செய்ததாக ஸ்ரீசங்கர பாஷ்யம. ஸகுணவித்யை, நிர்குண வித்யை என்ற பிரிவு ஸூத்ரகாரர் நெஞ்சிலாவது, உபநிஷத்துக்கள் நெஞ்சிலாவது இல்லையென்பது ஸ்பஷ்டம். பூமவித்யை இவர்களுக்கு நிர்குண வித்யை. தஹரவித்யையில் 'எல்லா லோகங்களிலும் இஷ்டம் போல் ஸஞ்சரிப்பான்' என்றபலம் கூறியது போலவே நிர்குண வித்யையிலும் கூறப்பட்டது. ஒரு 'சரீரமெடுக்கிறான், 3 சரீர மெடுக்கிறான், 5, 7, 9, 11, 111, 1020 எடுக்கிறான் என்றும் முக்தன்ஐச்வர்யத்தை பூமவித்யையில் படித்தது. இதை ஸூத்ரகாரர் இவர்கள் தாழ்ந்த ஸகுணமுக்தி என்றுசொல்லும் 'அபாவாதிகரண'த்தில் விசாரித்தார். நிர்குணவித்யைகள் மிக்க கொஞ்சமென்றும், ஸகுணவித்யைகளே மிக அதிகமென்றும், ப்ரஹ்மஸூத்ரங்கள் விசேஷமாக ஸகுண ப்ரஹ்மத்தையும், ஸகுணவித்யைகளையுமே உபதேசிக்கின்றனவென்றும் ஸ்ரீதீக்ஷிதர் ஆனந்த லஹரீ வ்யாக்யானத்தில் பணித்தார். "முதலத்யாயத்தில் அந்த ரதிகரணம், ஸர்வத்ர ப்ரஸித்தோபதேசாதிகரணம், தஹராதிகரணம் முதலியவை திவ்யமங்கள விக்ரஹத்தோடும், கல்யாண குணங்களோடும், ஜகத் ஸ்ருஷ்டி, பாலனம் முதலிய ஐச்வரயங்களோடும் கூடிய ஸகுண ப்ரஹ்மத்தைத் தீர்மானிப்பதாக ஸ்ரீ சங்கரர் வ்யாக்யானம் செய்தார். 2வது அத்யாயத்தில் அவாப்த ஸமஸ்த காமனும், ஸர்வ ப்ராணிகளிடமும் ஸமனும், தயை முதலிய குணங்களுமுடைய ஸகுணேச்வரன் ஜகத் ஸ்ருஷ்டி முதலியதற்குக் கர்த்தா என்று வ்யாக்யானம் செய்தார். ஸகுணமான ஈச்வரனே ஜகதுபாதான மென்று சில அத்வைதிகள் சொல்லும் அத்வைத பக்ஷத்தை யனுஸரித்து நவிலக்ஷணத்வாதிகரணம் முதலியதும் ஸகுணப்ரஹ்ம விஷயமே யாகும். 3வது அத்யாயத்தில் "ஃபலமத:" என்னும் பலாதிகரணமும், ஸகுணனான ஈச்வரன், கர்மம், உபாஸனம் முதலியவற்றிற்குப் பலமளிப்பவனாகையால், அவனே போக மோக்ஷங்களுக்கு ஸாதகதமனென்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. குணோபஸம்ஹாரபாதத்தில் உத்கீதவித்யை, நிர்குண வித்யை முதலிய விஷயமான 7, 8, அதிகரணங்கள் தவிர மற்ற 28 அதிகரணங்களிலும் ஸகுண ப்ரஹ்மோபாஸனங்களில் அனுஸந்திக்கப்படவேண்டிய குணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த குணங்களும் த்யானத்திற்காக உபாஸகனால் ஆரோபிக்கப்படுவதல்ல; இவையெல்லாம் ஈச்வரனுக்கு ஸ்வதஸ்ஸித்த மென்று காட்டப்பட்டன. 'த்யானத்திற்காக ஸத்யகாமத்வம் முதலிய குணங்கள் உபதேசிக்கப்பட்டாலும் அந்த குணங்களோடு விசிஷ்டனான ஈச்வரன் கட்டாயம் ஸித்திக்கிறான்' என்று ஸூத்ர

பாஷ்யத்திலுரைக்கப்பட்டது. 4வது அத்யாயத்தின் 'ப்ரதிஷேதாதிகரணம், கார்யாதிகரணம்' இரண்டு தவிர மற்றவை யெல்லாம் ஸகுண பரமாகவே உரைக்கப்பட்டன' என்று அங்கே ஸ்ரீ தீக்ஷிதர் வாக்யங்கள். 'ப்ரதிபிம்பமாக ஈச்வரனுடைய தன்மையை யடைகிறான். எல்லோரும் முக்தியடையும் வரையில் ஈச்வரனுக்கு எப்படி ஜகதைச்வர்யமுண்டோ அப்படியே சைதன்யமாத்ரமான நிர்குணஸ்வரூபத்தை யடைந்த நிர்குண முக்தனுக்கும் ஐச்வர்யமும் மற்ற எல்லா தர்மங்களும் (எண்குணங்களும்) உண்டு என்று அத்வைத நிஷ்கர்ஷமென்றும் காட்டினார் 'எல்லோரும் முக்தராகும்போது தான் ப்ரபஞ்ச வ்யாபாரத்தை ஈச்வரனும் முக்தர்களும் நடத்துவது நிற்கும்; அதுவரையிலும் நிஷ்ப்ரபஞ்ச ப்ரஹ்மாத்மைக்ய ஸாக்ஷாத்காரம் ஒரு முக்தருக்கும் உண்மையில் ஸித்திக்காது என்று தீர்மானம். ஸர்வ முக்திக்குப் பிறகு ஈச்வர லீலைக்கும் லீலாவிபூதிக்கும் அவகாசமே கிடையாது. நித்யவிபூதி ப்ரஹ்மானந்தமே எல்லோருக்கும் ஏகரூபமாய் எல்லையற்றிருக்கும். அதிலும் ப்ரஹ்மத்தின் ஆனந்தம் அதனனுக்ரஹத்தால் அப்படியே முக்தர்களுக்கும் ப்ரதிபிம்பிப்பதுபோல ஸங்க்ரமிக்கும். எல்லோரும் அனுபவிப்பதும் ப்ரஹ்மானந்தமே. எல்லோரும் முக்தியடையும் வரையில் ப்ரபஞ்சம் உள்ளதே; நம் சாஸ்த்ரியாரும் பரிபாஷா வ்யாக்யானத்தில் 'ஏகஜீவவாதத்தில் நிர்விசேஷ ப்ரஹ்மமாகுகை மோக்ஷம்; அனேக ஜீவவாதத்தில் ஈச்வரனுடைய தன்மையடைவது முக்தி; முதல் மதத்தில் ஒருவன் முக்தியடைந்தால், எல்லோரும் முக்தியடைய வேண்டுமேயென்றுகேட்டால், அது தங்களுக்கு இஷ்டம் என்பர்' என்றார். அனேக ஜீவவாதம்தான் இவர்களுக்கு முக்யமான பக்ஷம். சாஸ்த்ரிகள் பேச்சுக்களுக்கு பதிலுரைப்பதற்கு முன் நம் தர்சனத்திற்கு அனுகூலமாயும், சாஸ்த்ரிகள் நினைப்பிற்கு விருத்தமாயும், ப்ராசீன அத்வைத க்ரந்தங்கள் போகும் சில வழிகளை எடுத்துக்காட்டினோம். மேலும் ஆங்காங்கு எடுத்துக் காட்டுவோம்.

(2) ஜைமினி வ்யாஸருடைய சிஷ்யரென்று பாரதம். ஔத்பத்திக ஸூத்ரத்தில் வ்யாஸரை சாஸ்த்ராரம்பத்திலேயே ப்ரமாணமாக ஜைமினி ஆதரித்தார். வ்யாஸ ஸூத்ரங்களொன்றையும ஜைமினி உதாஹரிக்கவில்லை. ஜைமினி ஸூத்ரங்களைக் குறிப்பிட்டு வ்யாஸர் சில ஸூத்ரங்களிலே பேசுகிறாரென்பது எல்லா பாஷ்யங்களுமொப்புகின்றன. வ்யாஸ ஸூத்ரங்களுக்கு முன்பு ஜைமினி ஸூத்ரங்கள் செய்து முடிக்கப்பட்டனவென்பது திண்ணம். இரண்டும் மீமாம்ஸையென்ற வேதாந்த விசார சாஸ்த்ரம். 14 வித்யாஸ்தானங்களில் மீமாம்ஸை என்று ஓரே வித்யாஸ்தானமாகப் படிக்கப்பட்டது. முன்பாக விசாரம் முன்பு செய்யப்பட்டது. 'கர்மங்களைப் பரீக்ஷித்துப்பிறகு அவற்றின் பலங்களில் வைராக்யம் பிறந்து

நித்யத்தை யறிய ப்ரஹ்மநிஷ்டனை குருவிடம் செல்வான்' ப்ரசாந்த மனஸ்கனாய் சமகுணத்தோடு கூடி நெருங்கிய அச்சிஷ்டனுக்கு ஸத்ய புருஷனை யறியும்படி ப்ரஹ்மவித்யையை உபதேசிப்பானாக' என்று முண்டக ச்ருதி வாக்யம். ப்ரஹ்ம விசாரத்தை தொடங்குவதை விதிக்கும் முதல் ஸூத்ரம் குருமுக ச்ரவணத்தை விதிக்கும் ச்ரவண விதிகளை யாதாரமாக உடையதென்பர். மனன விதியைக் கொண்டு விசார விதாயகமான முதல் ஸூத்ரம் பிறந்ததென்று ஸ்ரீமத்வமதம். இந்த ஜிக்ஞாஸா ஸூத்ரம் ச்ரவண விதி மூலமென்று வஸித்தியும், ப்ரஹ்மானந்தீயமும் அறுதியிட்டன. 'ச்ரவணம்' என்பது 'குருமுகமான ச்ரவணம்' என்று நியம்விதி. குருமுக ச்ரவணத்திற்கு வேண்டிய அதிகார ஸம்பத்தையும், குருவின் குணஸம்பத்தையும் பூர்ணமாகக் காட்டுவது இந்த விதி. 'ஆகையாலே' என்ற "அத:" சப்தத்தாலே இந்த ச்ருதி பராமர்சிக்கப்பட்டதாக ஸ்ரீ சங்கர பாஷ்யமும் பாமதியுமுரைத்தன. இந்த ச்ருதி அங்கே ப்ரஹ்ம விசாரஹேதுவின் விவரணமாகிறது.

நீதி ரத்நங்கள்

अधोधः पश्यतः कस्य महिमा नोपचीयते ।
उपर्युपरि पश्यन्तः सर्व एव दरिद्रति ॥

விதுரநீதி.

உரை—**अधोधः** = கீழ் நடந்த விருத்தாந்தங்கள் என்ன, கீழ் இருந்த நிலைகள் என்ன இவற்றை. **पश्यतः** = கெவுனித்துப்பார்க்கும் இயல்புடைய, **कस्य** = எவனுடைய, **महिमा** = பெருமை, **नोपचीयते** = மேன்மேலும் ஓங்கி வளர்கிறதில்லை, **उपर्युपरि** = மேன்மேலும். **पश्यन्तः** = பார்த்துக் கொண்டிருக்கும், **सर्व एव** = அனைவரும். **दरिद्रति** = வறுமைக்குள்ளாகிறார்கள்.

ஒவ்வொருவனும் தன்னுடைய பழைய ஸ்திதியை நோக்கி அதிலிருந்து மேன்மை பெற்றிருக்கிறோமா? தாழ்ந்த நிலைக்கு வந்தோமா? என்பதை நன்கு உணர்ந்து அதற்கு தக்கபடி நடந்து கொள்ளவேணும். இப்படிச் செய்தால் தாழ்ந்த நிலைமைக்கு வாராமல் இருக்கலாம். இப்படியின்றி, மேல் மேல் நிலையையே கருதி ப்ரயத்நம் செய்து கொண்டு போனால் தாழ்ந்த நிலையை அடைவது நிச்சயம்.

नन्दन्त्युदित आदित्ये नन्दन्त्यस्तमिते रवौ ।
आत्मनो नावबुध्यन्ते मनुष्या जीवितक्षयम् ॥

இராமாயணம்

आदित्ये = சூர்யன். **उदितेसति** = உதித்தபோது. **नन्दन्ति** = களிக்கிறார்கள் **रवौ** = சூர்யன், **अस्तमिते** = மறைந்தபோதும். **नन्दन्ति** = களிக்கிறார்கள். **मनुष्याः** = மனிதர்கள் **आत्मनः** = தங்களுடைய, **जीवितक्षयम्** = வாழ்நாள் குறைந்துபோனதை: **नावबुध्यन्ते** = உணர்கிறதில்லை.

ஸ்ரீராமன் பரதனுக்கு இந்த நீதியை உபதேசிக்கிறார். மனிதர் எப்போதும் மகிழ்ச்சி யடைந்திருக்கவேணும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனாலும் மகிழ்ச்சியுடன் துக்கமும் கலந்திருக்கிறது என்பதை மறக்கக் கூடாது. நமது அருமையான குழந்தையைக் காண்கிறோம். கண்டவுடன் "பத்ரமஸ்து" உனக்கு க்ஷேமம் உண்டாகுக, என்று ஆசி கூறுகிறோம். அதன் கருத்து என்னவெனில் இவ்வருமைக் குழந்தையைக் கண்டதனால் பெருமகிழ்ச்சியை அடைகிறேன்! இம்மகிழ்ச்சிக்கு இடையூறாக இக் குழந்தைக்கு தீங்கு நேரிடாவண்ணம் நன்மையுண்டாக வேணும் என்று. நன்மையுண்டானால் தீமை அதை பின் தொடரும் என்ற ந்யாயப்படி இவ் வழக்கம் நடைபெறுகிறது. ஆகையால் நம்முடைய ஜீவிதத்தில் நன்மையும் தீமையும், இரவும் பகலும் போல் மாறி மாறி வரும் என்பதை உணர்ந்தால் தீமை வரும் போது அதிக துக்கப்படுவதுக்கு ஏது இராது. என்ற ந்யாயத்தைக் காட்டுகிறது இந்த நீதி ச்லோகம்.

कल्याणी बत गाथेयं लौकिकी प्रतिभाति मा ।
एति जीवन्तमानन्दो नरं वर्षशतादपि ॥

இராமாயணம்

लौकिकी = உலகத்தில் ப்ரசித்தமான. **इयं गाथा** = இந்த பழமொழி, **कल्याणी** = மிகவும் நன்மையைத் தருவதாக. **मा** = எனக்கு **प्रतिभाति** = தோன்றுகிறது. **बत** = ஆச்சரியம். **आनन्दः** = இன்பமானது. **नरं** = மனுஷ்யனை. **जीवन्तम्** = உயிரோடிருக்கும் பக்ஷத்தில். **वर्षशतादपि परम्** = நூறு வருஷத்திற்குப் பிறகாவது. **एति** = வரும்.

குடும்பத்தில் பலவித துக்கங்கள் உண்டாவது இயல்பு. இந்த துக்கத்தைத் தாங்க முடியாமல் பலர் உயிர் துறக்கிறார்கள். அது முற்றும் தவறு. என்று ஸ்ரீ சீதாதேவி, ஆஞ்ஜநேயரைக் கண்டபோது களித்துப் பேசுகிறாள்.

ஆத்மஹத்தி = தற்கொலை செய்துகொள்வது மஹாபாபம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. மனுஷ்யாளுக்கு ஸஹநசக்தி வேணும். குடும்பத்தில் நேரிடும் சுக துக்கங்களைப் பொறுத்துக்கொண்டு குடும்ப கார்யங்களைச் செய்து வரவேணும். துக்கத்தை சகிக்கமுடியாமல் உயிர் துறப்பது பகவதாஜ்ஞையை மீறி நடப்பது என்னும் குற்றத்தில் சேர்ந்தது. ஆகையால் அனைவரும் ஸஹந சக்தியைப் பெறவேணும் என்று வற்புறுத்துகிறது இந்த வசநம்.

ஸ்ரீ :

ப்ரம்ம விசாராதிகாரம்

[ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாச தாதாசார்யஸ்வாமி, திருவாதி]

(தொடர்ச்சி)

இனி இப்படி நிர்ணயம் செய்த ஸர்வ ஆசார்யர்களும் '**अध्येतव्योऽप्येकदेशो यदि सर्वं न शक्यते**' என்ற ஸ்ம்ருதி வசனத்துக்கு என்ன கதியை அபிப்பிராயப்பட்டிருக்கலாமென்று யோசிக்கவேணும். '**तस्मात् वृषलभीतेन ब्राह्मणेन विशेषतः, अध्येतव्योऽप्येकदेशो यदि सर्वं न शक्यते ।**' என்றது விருஷளன் என்கிற வ்யவகாரமன்றிக்கே ப்ராம்மணன் என்கிற வ்யவகாரம் ரக்ஷிதமாவதற்காகவாவது அத்யயனம் அவச்யம் பண்ணவேண்டும். ஏகதேசமே வ்ருஷளத்வ பரிகாரம் செய்யுமென்றால் ஸம்பூர்ண விஷயத்தில் கேட்கவேணுமோ? என்றிப்படி அத்யயனாவச்ய கதையைச் சொல்ல வந்ததே தவிர ஏகதேசாத்யயனத்தை விதிப்பதில் தாத்பர்யமில்லை. விதியாகில் **अपि** சப்தம் ஸ்வரஸமன்று. '**आख्यातानामर्थं ब्रुवतां शक्तिः सहकारिणी**' என்கிற ந்யாயத்தால் அசக்தன் முதலியோருக்கு அவரவர் சக்தியின் அளவுக்கு அனுகுணமாக வேதத்தில் சில பாகத்திற்கு அத்யயனம் ப்ராப்தமாகலாமாகையால் அதற்காக ஒரு விதி அனபேக்ஷிதம்.

மேலும் '**गायत्रीमप्यधीयीत त्यक्त्वाऽरण्यं समाहितः**' என்று **अपि** சப்தமுள்ளதாயும் ஏகதேச சப்த வாச்யத்தில் கடைசி பர்வாவான காயத்ரீக்கு ப்ரதிபாதககாயுமிருக்கிற மனு வசனத்தோடு ஸாத்ருச்யமிருப்பதால் இந்த வசனம் ப்ரம்ம யக்ஞாத்யயனத்தைத் தெரிவிக்கிறது. '**यत्स्वाध्यायमधीयीतै कामप्यृचं यजुस्साम वा तत् ब्रह्मयज्ञस्सन्तिष्ठते**' என்று ப்ரம்ம யக்ஞாத்யயன விதியை அனுஸந்தித்தாலும் அதன் ஸாத்ருச்யத்தால் அதே அர்த்தம் உசிதமென்பது வ்யக்தமாகும். '**अग्निकार्यात्परिभ्रष्टाः सन्ध्योपासनवर्जिताः........स्मृताः**' என்கிற முன் ச்லோகத்தில் தினந்தோறும் செய்யவேண்டிய அக்னி கார்யம், ஸந்த்யோபாஸனம் இவ்விரண்டையும் விட்டவர்கள் வ்ருஷளராவார்கள் என்பது போல் தினந்தோறும் செய்யவேண்டிய வேதாத்யயனம் அதாவது ப்ரம்ம யக்ஞாத்யயனம் செய்யாதவர்கள் வ்ருஷளராவார்கள் என்றே **अग्रयप्राय** ந்யாயத்தால் அர்த்தம் சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் '**तस्मात् वृषलभीतेन**' என்கிற ச்லோகமும் அதே விஷயத்தில் ப்ரவ்ருத்தித்து இருக்கிறது என்று சொல்

வது மிகவும் பொருத்தமுடையது. '**यदि सर्वं न शक्यते**' என்பதற்கு ப்ரச்னமோ அனுவாகமோ முழுவதும் சொல்ல சக்தியில்லாவிட்டால் என்றர்த்தம். குல்லூக பட்டீயத்தில் '**अपां समीपे नियतः**' என்கிற ச்லோக வ்யாக்யானத்தில் '**ब्रह्मयज्ञरूपमिदं बहुवेदाध्ययनाशक्तौ सावित्रीमात्राध्ययनमपि विधीयते**' என்று பாராசர ஸ்ம்ருதியின் ஞாபகம் வரும் ரீதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி ஆசார்யர்கள் ஏக கண்டமாய் அபிப்பிராயப்பட்டிருந்த போதிலும் வேதத்தின் நியமமுள்ள அத்யயனம் ஆவச்யகம் என்பதை 'அடிக்கடி ஹிதத்தைச் சொல்லவேணும்' என்கிற ந்யாயத்தால் மறுபடியும் போதிக்கக் கருதியும் அந்த விஷயத்தில் சொன்னால் ப்ரம்ம யக்ஞாத்யயனத்தில் ஸ்வயமாக அது அந்வயிக்கும் என்றும் யோசித்தும் மாதவர் இது நியமமுள்ள ஏகதேசாத்யயனத்துக்கு அப்யனுக்ஞாவிதி என்றார். ஆகிலும் அவர் இதை மீமாம் ஸாதிகார ஸம்பாதகமாக நினைத்தாரில்லை. ஏனெனில் ஸ்வாத்யாயவிதி, மந்த்ரம், ப்ராம்மணம் இவைகளின் அத்யயனத்துக்குப் பிறகு செய்யப்பட்ட உபநிஷத்தின் அத்யயனமே ப்ரம்ம விசாராதிகார ஸம்பாதகம் என்று போதிக்கிறது. அதை வ்ராத்யதையின் பரிஹாரமாத்ரார்த்தமாக ப்ரவ்ருத்தையான இந்த ஸ்ம்ருதி ஸங்கோசிக்க மாட்டாது. உபநிஷத்தை விட்டு வேறு ஏகதேசத்தை அல்லது உபநிஷத்திலும் ஏகதேசத்தை அத்யயனம் செய்கிறவர் விஷயத்தில் போதிக்கப்படாத ஒரு அர்த்தத்தை உபநிஷத்தை மட்டும் அத்யயனம் செய்கிறவர் விஷயத்தில் இது போதிக்கிறது என்றால் வைரூப்யம் வருமாகையாலும் இந்த விதி முன் சொல்லப்பட்ட க்ரமத்துக்கு பாதகமாக மாட்டாது என்பது முதலியது யோசிக்கவேணும். இதெல்லாம் இப்படியிருப்பின் ஸ்ரீ தேசிகன் '**आपत्कृतं वा त्र्यन्तमात्राध्ययनं**' என்று தத்வடீகையிலும், '**केषांचित्वेकदेशाध्ययनमगतितः**' என்று மீமாம்ஸா பாதுகையிலும், ஸ்ரீ நயினாராசாரியர் '**कर्मभागमात्रमेवाङ्गीकुर्वते केचित् अपरे पुनर्ब्रह्मभागमात्रं**' என்று பரித்ராணத்திலும், சிலர் ஏகதேசாத்யயநம் செய்வதாகச் சொல்லியிருப்பது எப்படிப் பொருந்தும் எனில் முன் உபபாதித்தபடி சக்தியை அனுஸரித்தே எல்லா விதிகளும் ப்ரவ்ருத்திக்கிறபடியால் விசேஷ விதி ஒன்றுமில்லாமலேயே இது கூடும் என்பது அறியலாம். '**आपत्कृत**' என்றும் '**अगतितः**' என்றும் ஸாதித்திருப்பதாலேயே இதற்கு விசேஷவிதி ஒன்றும் இல்லை என்றும் ஆனாலும் அது உபபன்னமென்றும் ஸ்பஷ்டமாக ஸமாதானம் சொன்னதாக ஆகிறது. விசேஷம் என்னவென்றால் விதியில்லாமல் சிலர் அவரவர்கள் சக்தியை அனுஸரித்துச் செய்யும் ஏக தேசாத்யயநம் வைகுமான அத்யயனத்தை உபஜீவிக்கிற மீமாம்ஸா சாஸ்த்ரத்துக்கு விவக்ஷிதமான அதிகாரமாகமாட்டாது. ஏகதேசாத்யயனம் விதி ஸித்தம்

என்கிற பக்ஷத்தில் வைதமான அந்த அத்யயனம் அதிகார கோடியில் சேர்ந்து அதன் பிறகு என்பதே 'अथातो ब्रह्मजिज्ञासा' என்ற ஸூத்ரத்திலுள்ள अथ சப்தத்துக்கு அர்த்தம் ஆகலாமானபடியால் எப்பொழுதும் கர்ம விசாரத்துக்குப் பிறகு ப்ரம்மவிசாரம் செய்யவேணும் என்கிற அர்த்தம் ஸித்திக்கமாட்டாது. விசேஷ சாஸ்த்ரமில்லாமல் ஆபத்கல்பமாகச் செய்யும் ஏக தேசாத்யயனத்தை விதியை மீறிப் பண்ணும் அத்யயனத்தைப்போல், சாஸ்த்ரம் சொன்ன அதிகாரத்தையே உபஜீவிக்கும் மீமாம்ஸை தனக்கு அதிகாரமாக க்ரஹிக்காது. இவ்விடத்தில் ஸ்ரீ ச்ருத ப்ரகாசிகா ஸ்ரீ ஸூக்தியை கவனிக்கவேணும் 'यस्त्वधीत वेदान्तस्य कर्माधिगमापेक्षा नास्तीत्युक्तं तदयुक्तं वेदान्तेष्वप्युपायपरमुक्ति परवाक्यमात्राध्यायिनः पुरुषस्य ब्रह्मविचारेऽपि तृतीयचतुर्थाध्यायमात्रश्रवणप्रसङ्गात् तृतीयचतुर्थयोः प्रथमद्विती-योक्तन्यायसापेक्षत्वमस्तीति चेत्तर्हि कृत्स्नस्य ब्रह्मविचारस्य कर्मविचारन्यायसापे-क्षत्वात्तस्यैव पूर्ववृत्तत्वम् । जन्मान्तरसुकृतविशेषेण कस्यचिद्ब्रह्मविचारमात्रापे-क्षेति चेत्तस्य सुकृतविशेषेण तृतीयचतुर्थमात्रापेक्षा किं न स्यात् । अथवा सुकृता-तिशयात्कृत्स्नब्रह्मविचारनिरपेक्षा किं न स्यात् । किंच वेदान्तेषूपायफलपरवाक्य-मात्राध्ययनमशास्त्रीयमिति त्वयापि वक्तव्यम् । तद्वेदान्तमात्राध्ययनस्यापि तुल्यम् । कृत्स्नस्वाध्यायाध्ययनस्य विहितत्वात् । अतो विध्यतिलङ्घिनां यद-पेक्षितं तदेव पूर्ववृत्तमित्यसङ्गतम् । [உபநிஷத்துக்களில் மோக்ஷோபாயம், மோக்ஷம் இவைகளைத் தெரிவிக்கும் வாக்யங்களைமாத்திரம் அத்யயனம் செய்த புருஷனுக்கு ப்ரம்ம விசாரம் செய்யும்போது 3, 4 அத்யாயங்களை மாத்திரம் ச்ரவணம் செய்ய நேருமாதலால் வேதாந்தாத்யயனம் செய்தவனுக்கு 'கர்ம ஞானத்தின் அபேக்ஷை இல்லை என்று சொன்னது ஸரியன்று. 3, 4 அத்யாயங்கள் 1, 2 அத்யாயங்களில் சொல்லப்பட்ட ந்யாயங்களை அபேக்ஷிக்கிறது என்றால் ஸம்பூர்ணமான ப்ரம்ம விசாரம் பூர்வ மீமாம்ஸா ந்யாயங்களை அபேக்ஷிப்பதால் கர்ம விசாரமே பூர்வ வ்ருத்தமாகும். ஜன்மாந்தர ஸுக்ருத விசேஷத்தால் ஒருவனுக்கு ப்ரம்ம விசாரத்திலேயே அபேக்ஷை உண்டாகிறதென்றால் அவனுக்கு ஸுக்ருத விசேஷத்தால் 3, 4 அத்யாயங்களில் மாத்திரம் ஏன் அபேக்ஷை உண்டாகக்கூடாது? அல்லது ஸுக்ருதாதிசயத்தால் ஸம்பூர்ணமான ப்ரம்ம விசாரத்திலும் அபேக்ஷை இல்லாமை ஏன் இருக்கக்கூடாது? பின்னும் ஸம்பூர்ணமாக ஸ்வசாகையின் அத்யயனம் விதிக்கப்பட்டிருப்பதால் உபநிஷத்துக்களால் உபாயம், பலம் இவைகளைத் தெரிவிக்கிற வாக்யங்களை மாத்திரம் அத்யயனம் செய்வது சாஸ்த்ரீய மன்று என்று நிரூபம் சொல்லவேண்டும். அது உபநிஷத்தைமாத்திரம் அத்யயனம் செய்வதற்கும் துல்யமே. ஆகையால் வித்யதிக்ரமம் செய்தவர்களுக்கு எது அபேக்ஷிதமோ அதுவே பூர்வ வ்ருத்தமென்பது அஸங்கதமே] பின்னும் ஸ்ரீ தத்வடீகா ஸ்ரீ ஸூக்திகளையும்

செவ்வையாக கவனிக்கவேணும். 'यत्तु अधीतवेदान्तस्येत्यादिना वेदान्तमा-त्राध्यायिनः तावन्मात्रचिन्ता शक्येतिपूर्वं चोदितं तदसत्; अध्ययनविधिर्हि यथाक्रमं कृत्स्नाध्ययनं प्रयुङ्क्ते । न च विध्यतिलङ्घनेन प्रवृत्तमापत्कृतं वा अध्यन्तमात्राध्ययनमपेक्ष्येदानीं तद्विचारस्य पूर्ववृत्तं मृग्यते । एतेन प्राचीनसुकृत-विशेषनियतवैराग्यातिशयात् एकदेशाध्ययनविचारौ स्यातामित्यपि निरस्तम् । तस्याप्यध्ययनविध्यतिलङ्घनायोगात् अनधिगतकर्मणः कर्माङ्गविद्याधिगतिः अश-क्यविचार इति च उक्तम् । अवि शब्दनिरूपणेन पश्चात् शेषपूरणं च क्लिष्टम् । ब्रह्मचिन्तोद्यतस्य विद्याङ्गकर्मणां गुरूपदेशमात्रेण ज्ञप्तिरस्त्विति चेत् तर्हि तेनैव न्यायेन ब्रह्मविचारोऽपि माभूत् । तदिह यथाविधि कृत्स्नाध्यायिनः प्रागिव कृताव-शिष्टे विचारपर्वणि वृत्तविशेषः स्थाप्यत इति शुद्धः पन्थाः। (अधीतवेदान्तस्य इत्यादियால் வேதாந்த மாத்ராத்யயனம் செய்தவனுக்கு அவ்வளவு பாகத்துக்கே விசாரம் கூடும் என்று முன் செய்த ஆக்ஷேபம் ஸரியன்று. அத்யயன விதி, க்ரமப்படி பூர்ணமான அத்யயனத்துக்கு ப்ரயோஜகமாக ஆகிறது. அத்யயன விதியை மீறியோ, ஆபத்திலேயோ செய்யப்பட்ட வேதாந்த மாத்ராத்யயனத்தை அபேக்ஷித்து இப்பொழுது வேதாந்த விசாரத்துக்கு பூர்வ வ்ருத்தம் தேடப்படவில்லை. இதனால் முந்தினதும் விலக்ஷணமுமான ஸுக்ருதத்தால் ஏற்பட்ட வைராக்யாதிசயத்தால் ஏக தேசாத்யயனமும் அதன் அர்த்த விசாரமும் கூடும் என்பதும் நிரஸிக்கப்பட்டது. அவனுக்கும் அத்யயன விதியின் அதிக்ரமம் கூடாதாகையால். கர்ம ஞான மில்லாதவனுக்கு கர்மாவை அங்கமாக உடைய வித்யையின் விசாரம் முடியாதது என்றும் சொல்லப்பட்டது. முதலில் கர்ம விசாரம் நன்றாகச் செய்யாமல் ப்ரம்ம விசாரம் செய்தபிறகு பாக்கியை பூர்த்தி பண்ணிக்கொள்வதும் க்லிஷ்டம். ப்ரம்ம விசாரத்தில் முயற்சித்தவனுக்கு ப்ரம்ம வித்யைக்கு அங்கமான கர்மாவின் ஞானம், குருவின் உபதேசமாத்ரத்தால் ஏற்படட்டுமென்றால் அதே ந்யாயத்தால் ப்ரம்ம விசாரமும் வேண்டாம். ஆகையால் இவ்விடத்தில் விதிப்படி பூர்ணாத்யயனம் செய்தவனுக்கு முன்போல் பாக்கியிருக்கும் விசாரத்தில் விலக்ஷணமான பூர்வ வ்ருத்தம் ஸ்தாபிக்கப்படுகிறது என்பது சுத்தமான மார்க்கம்.]

இப்படி சாஸ்த்ரத்துக்கு அஸம்மதமாகச் செய்யும் ஏக தேசாத்யயனத்தை மீமாம்ஸை ஸ்வ பூர்வ வ்ருத்தமாக க்ரஹிக்கமாட்டாது என்பதை 'ते तु नात्र प्रसक्ताः (இப் ப்ரம்ம விசாரத்தில் ஏக தேசாத்யயனம் செய்தவர்களுக்கு ப்ரஸக்தி இல்லை) என்று மீமாம்ஸா பாதுகையில் ஸ்ரீ தேசிகனும் 'न ह्यन्धबधिरजडादिवत् अगतिकानां प्रक्रियामिह वयमाचक्ष्महे; अपित्वधिका-रिणामेवेति भावः' (குருடன் செவிடன் மூடன் இவர்களைப்போல் கதியில்லாதவர்களின் ப்ரக்ரியையை நாம் இவ்விடத்தில் சொல்லவில்லை. ஆனால்

அதிகாரிகளுடையவே ப்ரக்ரியையைச் சொல்லுகிறோம் என்று கருத்து) என்று பரித்ராணத்தில் ஸ்ரீ நயினாசார்யரும் ஸாதித்திருக்கிறார்கள்.—

இவ்விதம் சாஸ்த்ரீயமான ஸம்பூர்ண ஸ்வ சாகாத்யயனத்தையே பூர்வ வ்ருத்தமாக அவலம்பித்து ப்ரவிருத்தையான மீமாம்ஸை ராக ப்ராப்தையானாலும் முதலில் கர்ம விசாரம் பிறகு ப்ரம்ம விசாரம் என்ற க்ரமம் நியதமென்று நிரூபித்து, ஆனால் சிலர் ஸம்பூர்ணமாக ஸ்வ சாகாத்யயனம் செய்தும் கர்ம விசாரம் செய்யாமலே ப்ரம்ம விசாரம் செய்வது எப்படிப் பொருந்தும் என்கிற சங்கையை அதிகரண ஸாராவளியில் ஸ்ரீ தேசிகன் '**विद्युत्तयाऽधीत्य**' என்கிற ச்லோகத்தால் பரிஹரித்திருக்கிறார். அதன் தாத்பர்யமாவது—விதிப்படி ஸாங்கமான பூர்ண ஸ்வ சாகையை அத்யயனம் செய்து மூல க்ரமத்தாலே முதலில் கர்ம விசாரமும், பிறகு ப்ரம்ம விசாரமும் செய்து, ஸம்பாதித்த ஞானத்தையே ப்ரம்ம வித்யைகளும் அதன் அங்கங்களான கர்மாக்களும்

" अवैधत्वे विचारस्य क्रमस्य च यथारुचि ।
अप्रवृत्तेः प्रवृत्तेश्च प्राप्तौ तत्रेति भाष्यते ॥
दुस्त्यजत्वाद्विचारस्य यौगपद्यविरोधतः ।
व्युत्क्रमे दोषदृष्ट्या च क्रमस्सौत्रोऽह्यसाविति ॥

(விசாரமும் பௌர்வாபர்யமும் விதிப்ராப்தமாக இல்லாமையால் தன்னிஷ்டப்படி ப்ரவ்ருத்தி இல்லாமைக்கும் ப்ரவ்ருத்திக்கும் ப்ராப்தி ஏற்பட '**तत्र कर्मविधिस्वरूपे**' என்று ஸ்ரீ பாஷ்யகாரரால் அருளிச் செய்யப்படுகிறது. விசாரத்தை விட முடியாதபடியாலும் ஒரே ஸமயத்தில் இரண்டு விசாரங்களும் அசக்யமாக இருப்பதாலும் க்ரமத்தை மீறினால் தோஷம் ஏற்படுவதாலும் இந்த க்ரமம் ஸூத்திரத்தில் சொல்லப்பட்டது) என்றும் '**अधीत्य वेदान् साङ्गांस्तु यो विचारम (मु) पेक्षते । स्वप्रयासं च विस्मृत्य प्रभ्रष्टस्स्यात् प्रयोजनात्**' (ஸாங்கமாக வேதங்களை அத்யயனம் செய்து தன் ச்ரமத்தை மறந்து விசாரத்தை உபேக்ஷிப்பவன் ப்ரயோஜனத்தை இழந்தவனாவான்) என்றும் ஸ்ரீ தேசிகன் தத்வடீகையில் ஸாதித்தபடி ஸ்வரஸமாக அபேக்ஷிக்கின்றன. ஆகையால் ஒரு ப்ரம்ம வித்யையை ஸ்வாபேக்ஷித புருஷார்த்த ஸாதனமாக அவலம்பிக்கும் ஒருவர் கீழ்ச் சொன்ன க்ரமத்தாலேயே ஞானத்தை ஸம்பாதித்து அங்கங்களையும் அங்கிகளையும் செய்ய வேணும். இதில் கொஞ்சமாவது குறைவு இருந்தால் சாஸ்த்ரப்படி பரிபூர்ணானுஷ்டானம் முடியாதாகையால் பலம் ஸித்திக்காது. இப்படி கொஞ்சம்கூட குறைவில்லாமல் அதிக ச்ரமத்தால் ஸாத்யமான விசாரம், கர்மானுஷ்டானம், உபாஸநம் என்றிவைகளை செய்ய சக்தி இல்லாமையைக்

கண்டு கால விளம்பத்தை ஸஹிக்காமல் இக் காலத்தில் சிலர் ஸுலபமாய் அனுஷ்டிக்கக் கூடிய உபாயமான சரணாகதியை அவலம்பித்து செய்ய வேண்டியதைச் செய்தவர்களாக நினைக்கிறார்கள். ஆனால் இவர்களும், தத்வ ஹித புருஷார்த்தங்களில் தெளிவு அபேக்ஷிதமாகையாலும் ப்ரியமாகையாலும் அநதிஸாரமான கர்ம பாகத்தை விசாரியாமல் மிகவும் ப்ரியமான பகவானுடைய குண ஸமூகத்தை ப்ரதிபாதிக்கிற ப்ரம்ம பாகத்தில் ரமிக்கிறார்கள் என்று. இந்த ச்லோகத்தில் ஏக தேசாத்யாயிகளுக்கு விவக்ஷை உண்டு என்பதற்கு ஞாபகலேசமுமில்லை. '**कृत्स्ने मीमांसमानाः क्रमत इति परब्रह्मचिन्तां तरन्ति**' என்று பூர்வார்த்தத்தில் ஸாதித்ததற்குமாத்திரம் ப்ரதி படமாக '**शीघ्रमन्ते रमन्ते**' என்று ஸாதித்திருப்பதால் '**विद्युत्तयाऽधीत्य वेदान्**' என்கிற அம்சத்துக்கு இங்கு வைகல்யம் சொல்ல வேண்டிய தவசியமில்லை. அப்படி இருப்பதாலேயே இந்த ச்லோகத்தில் சிந்தாமணியின் அவதாரிகையில் கர்ம விசாரம் பண்ணாமல் ஆசார்யர்கள் ப்ரம்ம விசாரம் செய்கிறார்களே என்று மாத்திரம சங்கை செய்திருக்கிறது. இந்த ச்லோகத்தில் '**अधीत्य वेदान्**' என்கிற பகு வசனம் '**वेदानधीत्य वेदौ वा**' என்று சக்தனுக்கு ஒருக்கால் ப்ராப்தமான அநேக வேதாத்யயனத்துக்கு அனுவாதகம்.

கீழ்ச் சொன்னபடி ஆபத்கல்பமாக உபநிஷத்தை மாத்திரம் அத்யயனம் செய்தவர்கள் ராக ப்ராப்தமாக பரம்மவிசாரம் செய்வதில் அனுபபத்தி லேசமும் கிடையாது. ஆனால் ஸூத்ரக்காரர் விவக்ஷித்த ஸ்வசாகாத்யயனத்துக்குப் பிறகு செய்யும் கர்ம விசாரத்துக்குப் பிறகு என்பதாகிற அதிகாரமில்லை. உபநீதர்களாக இருக்கிறபடியால் வைதிக வாக்ய ச்ரவணத்துக்கு யோக்யதை உண்டு. ஆகையால் எவ்விதத்திலும் நிஷேத ப்ரஸக்தியே கிடையாது. இவ்வர்த்தத்தைத் திருவுள்ளம்பற்றியே '**कर्मभागमात्रमभ्यसी-कुर्वते केचित्, अपरे पुनर्ब्रह्मभागमात्रम्, तदेव तैश्चिन्त्यते**' என்று பரித்ராணத்தில் அனுக்ரஹிக்கப்பட்டது.

இப்படிச் செய்யும் விகல விசாரமெல்லாம் நிஷேத மொன்று மில்லாமையால் சாஸ்த்ர ஸம்மதமென்று சொல்லலாம். 'நன்றாக ப்ரம்ம வித்யையை அனுஷ்டிப்பதற்கு அபர்யாப்தமாகையால் சாஸ்த்ரானு மதமன்று என்று சொல்லலாம்.

இனி மூன்றும் விஷயத்தை எடுத்துக்கொள்வோம். கீழ்ச் செய்த உபபாதனத்தாலேயே இவ்விஷயம் விசதமாக நிரூபிக்கப்பட்டதாகிறது. சாஸ்த்ரீயமான ஸர்வ ப்ரகார வேதாத்யயனமும் கர்ம விசாரத்தின் பூர்வ வ்ருத்தமாக விவக்ஷிதமானபடியால் ஒரு சாகையை அத்யயனம் செய்வ

தும் எல்லா சாஸ்த்ரகாரர்களுக்கும் ஸம்மதமாயும் அவச்யமுமான தன்னுடையது ஒன்று என்கிற விசேஷண விவக்ஷணத்தோடு 'स्वाध्यायोऽध्येतव्यः' என்கிற விதியினால் ப்ராப்தமாய் சாஸ்த்ரீயமானபடியால் வேறு வேதத்தோடு கூடவோ அதுஇல்லாமலோ பூர்ண ஸ்வசாகாத்யயனம் பண்ணி க்ரமமாய் கர்ம விசாரம் பண்ணினவர் களே முக்தியாதிகாரிகளாவார்கள்.

பூர்ணமாக ஸ்வசாகாத்யயனம் செய்து கர்ம பாகத்தின் விசாரம் செய்யாதவர்கள் இது செய்யாதபடியினாலேயே ப்ரம்ம விசாரத்தில் ஸூத்ரக்காரருக்கு விவக்ஷிதமான அதிகாரமில்லாதவர்களாக ஆகிறார்கள். உபநிஷத் மாத்ராத்யயனம் செய்து ப்ரம்மவிசாரம் செய்பவர்கள் பூர்ணமான ஸ்வசாகாத்யயனம் செய்யாமையாலும் கர்மபாக விசாரம் செய்யாமையாலும் இவ்விரண்டு ப்ரகாரத்தாலும் ப்ரம்மஸூத்ரகாரரால் சொல்லப்பட்ட அதிகார மில்லாதவர்களாக ஆகிறார்கள்.

இப்படி வைலக்ஷண்யம் ஸ்புடமாகயிருக்க சாஸ்த்ரீயமான பூர்ண ஸ்வசாகையின் அத்யயனத்தைச் செய்பவர்களுக்கும், விசேஷ சாஸ்த்ரமில்லாமல் ஆபத்கல்பமாய் ஏகதேசாத்யயனம் செய்பவர்களுக்கும் விசேஷம் ஒன்றுமில்லை என்பது சேராது. இப்படி விசேஷத்தை மறுக்க முடியாமலிருந்தாலும் க்ஷேத்ர ஸம்பன்னர்களின் பயிருக்காக ஏற்படுத்தப்பட்ட வாய்க்கால் முதலியதில் சிலர் தாகசாந்தி, ஜலக்ரீடை முதலியது செய்வது போல் உபநிஷத்தை மாத்திரம் அத்யயனம் செய்து வ்யுத்பத்தி முதலிய யோக்யதை உடையவர்கள் ராகப்ராப்த ப்ரம்ம விசாரம் செய்வதில் அனுபபத்திலேச மில்லையாகையால் இப்பொழுது செய்யும் விசார க்ரமத்தில் சாஸ்த்ரவிரோதம் ஒன்றும் யாரும் சொல்லமுடியாது. வேத வைபவத்தில் நாம் அபிப்ராயப்பட்டதெல்லாம் பூர்ண ஸ்வசாகையின் அத்யயனமே ப்ரம்ம விசாரத்தில் ப்ரம்ம ஸூத்ரகாரருக்கு விவக்ஷிதமான அதிகாரத்திற்கு ஸம்பாதகம் என்பது மட்டுமே. இதைக்கொண்டு வர்த்தமான விசாரக்ரமத்தில் தோஷாபாதனம் பண்ணினதாக அபிப்பிராயப்பட்டாலும் பரிவாதம் செய்தாலும் அந்த தோஷம் அடியேனிடத்தில் லக்னமாகாது.

இப்படி ப்ரதான விஷயங்கள் யதாமதி நிரூபிக்கப்பட்டன. அங்கங்கேயிருக்கும் பல தோஷாந்தரங்களைப் பூராவாக நிரூபித்தால் அதிவிஸ்தரமாகுமென்று உபேக்ஷிக்கிறோம் என்பதை முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அதற்கு உதாஹரணமாக இந்த ப்ரம்ம விசாராதிகார நிர்ணயத்திலுள்ள இரண்டு விஷயங்களை நிர்தேசித்து நிற்கிறோம்:—

1. ஸர்வசக்தரான பாதராயணர் தான் செய்ய உபக்ரமித்த ப்ரம்ம மீமாம்ஸா சாஸ்த்ரத்தை ஜைமினிசெய்த பூர்வ மீமாம்ஸா சாஸ்த்ரத்தை உபஜீவித்து அதோடு ஏக சாஸ்த்ரமாக இதைச் செய்தாரென்பதற்கு த்ருஷ்டாந்தமாக முன்பே வெகு ப்ரயோஜனத்துக்காக வெட்டப்பட்ட குளத்தை சேர்ந்தாற்போல் க்ராம நிர்மாணம் செய்வதுபோல் என்று ச்ருதப்ரகாசிகையில் சொல்லப்பட்ட திருஷ்டாந்தத்தை அசக்தர்கள் ப்ரம்ம விசாரம் செய்வதில் இவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். மஹா புண்யதீர்த்தங்களில் குருவி தாக சாந்தி செய்வதுபோல் என்கிற திருஷ்டாந்தத்தைத் தவிர்த்து அந்த திருஷ்டாந்தத்தை எடுத்தது எவ்வளவுதூரம் உசிதம் என்பதை விவேகிகள் கவனிக்கவேணும்.

2. 'साकाङ्क्षत्वाच्च वेदानामतुल्यकारित्वकारितस्समुच्चयः' என்கிற तन्त्रवार्तिक வாக்யத்துக்கு வாஸ்தவமான அர்த்தம் என்ன வென்பதை அபிக்ஞர்களைக்கொண்டு நிர்ணயிக்கவேணும்.

गतिं प्रमाणस्य गवेषयन्तो यथावदर्थानवधारयन्तः ।
गौणीमगत्या पदवीं भजन्तोऽप्युरुश्रियः सानुशया महान्तः ॥

ஸ்ரீ:

ஆசார்ய கடாக்ஷத்தின் சிறப்பு.

[ஸ்ரீ. உப. வே. ஸ்ரீ காஞ்சி பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர்]

பலவகைப் பாவங்களுக்குக் கொள்கலமாயிருக்கின்ற நம் போன்றவர்கள் வாழ்ச்சி பெறவேணுமாகில் பகவத் கடாக்ஷமோ ஆசார்ய கடாக்ஷமோ இரண்டத்தொன்று திண்ணம்வேண்டும். எம்பெருமானுடைய கடாக்ஷத்திற் காட்டிலும் ஆசார்யனுடைய கடாக்ஷமே மிகச் சிறந்த தென்னுமிடம் பலபல இதிஹாஸங்களினால் விளங்கா நின்றது. இதனை ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் பல திவ்ய ஸூக்திகளால் அருளிச் செய்துளர். அவற்றுள் ஸாரமானவொரு ஸ்ரீ ஸூக்தியை இப்போது அநுபவிக்க விரும்புகிறோம்.

"एकयैव गुरोर्दृष्ट्या द्वाभ्यां वाऽपि लभेत यत् ।
न तत्तिसृभिरष्टाभिस्सहस्रेणापि कस्यचित् ॥"

இந்த ச்லோகம் ஸுபாஷித நீவியில் மஹா தாச்ரிதபத்ததியிலுள்ளது. இதன் பொருள் யாதெனில்; ஆசார்யருடைய ஒரு கண்ணினாலாவது

இரண்டு கண்களினாலாவது அடையக்கூடியதான நன்மை மூன்று கண்களினாலும் எட்டுக் கண்களினாலும் ஆயிரங் கண்களினாலும் அடைய முடியாதது என்றபடி.

இதன் கருத்தை விளக்குவோம். "ஆசார்யனுடைய ஒரு கண்ணினாலாவது இரண்டு கண்ணினாலாவது" என்றதில் ஒரு கண் எது வென்றால் திருவுள்ளம் எனப்படும் திருக்கண்ணேயாகும். "என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுருவை, நெஞ் சென்னும் உட்கண்ணேல் காணுமுணர்ந்து" (பெரிய திருவந்தாதி) என்ற நம்மாழ்வாரருளிச் செயலில் ஹ்ருதயமும் ஒரு கண்ணாக அருளிச் செய்யப்பட்டிருப்பது அறியத்தக்கது. வெளிப்படையான கண் ஊனக்கண் என்றும், உள்ளுறையுங்கண் ஞானக்கண் என்றும் பெரியார் கூறுவர். பகவத்கீதையில் பதினோராவது அத்யாயத்தில், அர்ஜுநனுக்குத் தன்னுடைய விச்வரூபத்தைக் காட்டியருளாநின்ற கண்ணபிரான்,

"न तु मां शक्यसे द्रष्टुमनेनैव स्वचक्षुषा ।
दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम् ॥"

எனறருளிச் செய்தான். நான் என்னுடைய சரீரத்தில் ஓரிடத்தில் உலகத்தையெல்லாங் காட்டுகிறேன். நீயோ, சிறியதாய் அளவுள்ள வஸ்துக்களைக் காணவல்ல இந்த மாம்ஸ சக்ஷுஸ்ஸைக் கொண்டு இவற்றைக் காணமாட்டாய். ஆகையால் உனக்கு திவ்யமான கண்ணைக் கொடுக்கிறேன்—என்றான். இதில் திவ்யம் சக்ஷு: என்று சொல்லப்பட்டது அந்தரங்கக் கண்ணேயாகும். இத்தகையதான கண்ணையே ஸ்வாமி தேசிகன் "एकयैव दृष्ट्या" (ஏகயைவ த்ருஷ்ட்யா) என்றார். ஆசார்யனுடைய குளிர்ந்த திருவுள்ளம் ஸம்ஸாரி சேதநன் பக்கலில் பதிந்தாலே போதுமானது என்றவாறு.

அதிகரண ஸாராவளியின் உபக்ரமத்தில் "श्रीमद्भ्यां स्याद्साविव्यनुपधि वरदाचार्यरामानुजाभ्यां सम्यग्दृष्टेन" என்று மருளிச்செய்கிறார். நடாதூரம்மாளும் கிடாம்பியப்புள்ளாரும் 'ஆமுதல் வனிவன்' என்று தம்மைக் கடாக்ஷித்தருளினதாக இதில் சொல்லப்படுகிறது. இங்கு 'दृष्टेन' என்பதனால் சொல்லப்பட்ட தாத்பர்யம் 'एकयैव गुरोर्दृष्ट्या' என்றதற்கு இலக்கியமாக வுள்ளது. ஆசார்யன் அருள்புரிந்த சிந்தையை அடியார் மேல் வைத்தருளினால் ஸகல ச்ரேயஸ்ஸுகளும் பெருகுவதற்கு அவ்வளவே போதும் என்றதாயிற்று.

அதற்கு மேல் 'द्वाभ्यां वापि' (த்வாப்யாம்வாபி) என்றது-திருமுக மண்டலத்தில் ஸ்பஷ்டமாகக் காணப்படுகிற இரண்டு திருக்கண்களையே

சொன்னபடி. "यं यं स्पृशति पाणिभ्यां यं यं पश्यति चक्षुषा स्थावराण्यपि मुच्यन्ते." என்கிறபடியே திருக்கண்பட்டாலும் போதும். ஆசார்யன் அடியவர்களை அந்தரங்கமாக அபிமானிப்பது விசேஷம். அந்த பாக்யம் வாய்க்கவில்லை யெனினும், வெளிக்கண்களால் கடாக்ஷிக்கப் பெறுமது தானும் போதும் என்றதாயிற்று.

ஆக இங்ஙனே இரண்டு வகைப்பட்டதான ஆசார்ய கடாக்ஷத்தினால் ஒரு பொருள் என்ன நன்மையைப் பெறுகின்றதோ அந்த நன்மை மூன்று கண்களாலும் எண் கண்களாலும் ஆயிரங் கண்களாலும் பெறலாகாதது என்ற உத்தரார்த்தத்தின் கருத்தை இனி விவரிப்போம்.

"ईशानात् ज्ञानमन्विच्छेत्" என்று சாஸ்த்ரமிருப்பதாலும், "நுண்ணுணர்வின் நீலார்கண்டத்தம்மான்" என்று நம்மாழ்வாரும் அருளிச் செய்கிறபடியாலும் பரமசிவன் ஞானக்கடவுளாகையாலே அப்பெருமானுடைய கடாக்ஷம் ஞானப்பேற்றிற்குச் சிறந்ததாகும் என்று சிலர் நினைக்கக்கூடும். அதுவும் ஆசார்ய கடாக்ஷத்திற்கு நிகராக மாட்டாது.

அந்தப் பரமசிவனுக்கும் தந்தையாய் "यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै" என்கிறபடியே ஸாக்ஷாத் எம்பெருமான் பக்கலில் வேதம் முதலிய ஸகல ஶாஸ்த்ரங்களையும் பயின்று வாணீவல்லபனென்றே பேர் பெற்றிருப்பவனான நான்முகக் கடவுளின் கடாக்ஷம் ஞானப்பேற்றிற்குச் சிறந்ததாகும் என்று சிலர் நினைக்கக்கூடும். அதுவும் ஆசார்ய கடாக்ஷத்திற்கு நிகராகமாட்டாது.

ஆக, த்ரிஸ்ருபி : அஷ்டாபி: என்ற இரண்டு பதங்களாலும் தாமஸ ப்ரக்ருதியான தெய்வத்தின் கடாக்ஷமும், ராஜஸ ப்ரக்ருதியான தெய்வத்தின் கடாக்ஷமும் சுத்த ஸாத்விகனான ஆசார்யனுடைய கடாக்ஷத்திற்கு இணையாகாது என்னப்பட்டதாயிற்று.

பம்பாஸரஸ்ஸின் கரையிலே வந்து ஸந்தித்து அற்புதமாகப் பேசின திருவடியின் வாக்கு வைபவத்தின் அதிஶயத்தைக் கண்ட சக்ரவர்த்தி திருமகனார் மிகவும் விஸ்மயப்பட்டார் என்பதைக் கூறுகின்ற கம்பர் (தமது இராமாயணத்தில்) "இல்லாத வுலகத் தெங்கும்" என்கிற பாசுரத்தில் "ஆர் கொல் இச் சொல்லின்வல்லான் ? வில்லார் தோளிளையவீர ! விரிஞ்சனோ விடைவலானோ ?" என்றார். அங்ஙனம் புகழ்ந்து கூறப்படுகின்ற இரண்டு மூர்த்திகளின் கடாக்ஷமும் ஆசார்ய கடாக்ஷத்திற் காட்டில் தாழ்ந்தது என்று கூறிற்றாயிற்று.

இனி ஸஹஸ்ரேணாபி என்றதன் கருத்து ஆராயப்படுகிறது. ஆயிரங் கண்களையுடையவன் இந்திரன் என்று ப்ரஸித்தமே. ஸஹஸ்ராக்ஷன்

என்றே அவன் பெயர் பெற்றுமிருக்கின்றான். அவ்விந்திரனுடைய கடாக்ஷத்தை இங்கு எடுத்துக் கழிக்கின்றார் என்று பலரும் பொருள் கூறுகின்றார்கள். ஸுபாஷித நீவிக்குப் புராதனமாகவுள்ளதொரு வியாக்கியானத்திலும், தற்போது ஸம்ரக்ஷிணீ பத்ரிகையில் வெளி வருகின்ற உரையிலும் இங்ஙனமே பொருள் கூறப்பட்டுளது.

ஸ்ரீ தேசிக திவ்ய ஸூக்திகளில் ஆழ்ந்து அநுபவிக்கும் ஆற்றல் வாய்ந்த ரஸிக வித்வான்கள் இங்கு விமர்சிக்கவேணும். முந்துற முன்னம் பரமசிவனுடைய கடாக்ஷத்தை யெடுத்துக் கழித்தார். அவனுக்கும் தந்தையாய் அவனது ஞானத்திற்கும் ஊற்றுவாயான நான்முகனுடைய கடாக்ஷத்தை அதன் பிறகு எடுத்துக் கழித்தார். இந்த கோஷ்டியிலே பிரமனுக்கு அடுத்தபடியாக இந்திரனை யெடுத்துக் கழிக்க என்ன ப்ரஸக்தி? இந்திரனுடைய ஸ்மரண முண்டாவதற்கும் இங்கு ப்ரஸக்தியில்லையே. ஞானக்கடவுளர்களினிடையே இந்திரனுடைய ப்ரஸ்தாவம் வருவது உண்டோ?. ப்ரஹ்ம ருத்ரர்களில் தண்ணியவனான இவனை அந்த ப்ரஹ்ம ருத்ரர்களுக்குமேலே யெடுத்துப் பேசுவதும் நன்றன்றே.

மூன்று கண்களிற் காட்டிலும் எட்டுக் கண்கள் மேற்பட்டவை, எட்டுக் கண்களிற் காட்டிலும் ஆயிரம் கண்கள் மேற்பட்டவை—என்கிற இவ்வளவைக் கொண்டேயா ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்வர். தேசிகன் திருவுள்ளம் பற்றிய ஸ்வாரஸ்யத்தைக் கண்டறிய வேணுமே.

இங்கு உண்மையான கருத்தாவது—“**सहस्रशीर्षा पुरुषः सहस्राक्षस्सहस्रपात्**” என்று புருஷ ஸூக்தமும், “தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க் கண்களாயிரத்தாய்” என்று திருவாய் மொழியும் பேசினபடி, முழு முதற் கடவுளான எம்பெருமானையே இங்கு ஆயிரங் கண்ணனாகக் கொண்டு அந்த ஸ்ரீமந் நாராயணனுடைய கடாக்ஷத்தையே “**सहस्रेणापि**” என்பதனால் ஸ்வாமி குறிப்பிடுகின்றார். பகவத் கடாக்ஷம் நன்மை தருவது என்னுமிடம் “**जायमानं हि पुरुषं यं पश्येन्मधुसूदनः । सात्त्विकस्स तु विज्ञेयः स वै मोक्षार्थचिन्तकः ॥**” இத்யாதி ப்ரமாணங்களினால் ப்ரஸித்தமாயிருக்க, அந்த பகவத் கடாக்ஷத்தையும் ஸ்வாமி எடுத்துக் கழிப்பாரோ வென்று ஊஹ்யம் செய்வது தகுதியன்று. “**आचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहे**” என்றும் “மாதுகந்தவாசிரியர் வார்த்தைக்கு ஒவ்வா” என்றும் அழகுபட அருளிச் செய்துள்ள தேசிகனுடைய திவ்ய ஸூக்திக்கன்றோ நாம் பொருள் பணிக்கின்றோம். எம்பெருமானையுங் கூட ஆசார்ய கோஷ்டியில் அடக்கியே உத்தேச்யனாகக் கொள்ளவேணுமென்கிற திருவுள்ளத்தை “**कमप्याद्यं गुरुं वन्दे कमलागृहमेधिनम्**” என்ற திவ்ய ஸ்ரீஸூக்தியில் காட்டியருளினவரன்றோ தேசிகன். ஆகவே எம்பெருமானுடைய கடாக்ஷத்திற் காட்டிலும் ஆசார்யனுடைய கடாக்ஷமே சிறந்தது என்று வெளியிடுவதில்தான் தேசிகனுக்குத் திருவுள்ளம் பதித்திருக்குமென்பதை அவருடைய அமுத மென்மொழிகளில் ஆழ்ந்தவர்கள் அரும் பொருளாகக் கொள்ளுவர்களென்று திடமாக நம்புகிறேன்.

ஆசார்ய கடாக்ஷமானது த்ரிமூர்த்திகளின் கடாக்ஷத்தையும் வென்று வீறு பெற்று விளங்குவது என்கிற பரமார்த்தமே மேலெடுத்த ஸுபாஷித நீவி ஸூக்தியின் தெளி பொருளாக இருக்கவுரியது. இவ்விஷயத்தில் மற்றும் பலபடியாகவுள்ள உபபத்திகளை மற்றொருகால் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ:

ஸங்கல்ப்ப–ப்ரயோக–விமர்சம்

திருப்பதி. தி. வீரராகவாசாரியர் ஸ்வாமி

ஸங்கல்ப பூர்வகமாகவே நாம் ஸர்வத்தையும் அநுஷ்டிக்க வேண்டியதென்பது வேத லோக ஸித்தம். இஸ்ஸங்கல்பத்தின் ப்ரபாவத்தை இப் பத்ரிகாதிபரான ஸ்ரீ. உ. வே. வீ. வீ. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் வ்யாஸத்திலிருந்தும் பத்ரிகாபிமானிகள் அறிந்திருக்கலாம். இப்படி ப்ரதமாங்கமான ஸங்கல்பத்தை நாம் விடாமல் சரிவர அநுஷ்டிக்கவேண்டுமென்பதற்காகவே பெரியோர்கள் ஒருவிதமாக ஸங்கல்ப ப்ரயோகத்தை ஏற்படுத்தியுளர். ‘ஸங்கீர்த்ய தேசகாலௌ’ என்று முதலிய ஸ்ம்ருதி வாக்யங்களிலிருந்து அந்தந்த தேச காலங்களைக் குறிப்பிட்டு ஸங்கல்பித்துக் கொள்ள வேண்டுமென்றேற்படுகிறது. ஆன்ஹிக க்ரந்தங்களில் இதன் ப்ரயோகத்தைப் பூராக நிர்தேசிக்காமற் போனாலும் ப்ரயோகத்தில் சிற்சில அம்சங்களும் இதன் ஆவச்யகதையும் வ்யக்தமாகவே யுள.

இந்த ஸங்கல்பத்தின் ப்ரயோகம் அனேகமாக ஸ்ரீவைஷ்ணவ மண்டலியிலும் மற்றும் சில வகுப்பிலும் இருக்கும் விதம் பின் வருமாறு—

हरिरों तत् श्रीगोविन्द गोविन्द गोविन्द अस्य श्रीभगवतो महापुरुषस्य श्रीविष्णोराज्ञया प्रवर्तमानस्याद्यब्रह्मणः द्वितीयपरार्धे श्वेतवराहकल्पे वैवस्वतमन्वन्तरे कलियुगे प्रथमपादे जम्बूद्वीपे भारतवर्षे भरतखण्डे शकाब्दे मेरोर्दक्षिणे पार्श्वेऽस्मिन् वर्तमाने व्यावहारिके प्रभवादिषष्टिसंवत्सराणां मध्ये ......संवत्सरे ......अयने ......ऋतौ ......मासे ......पक्षे ...... शुभतिथौ ......वासर-

......नक्षत्रयुक्तायां श्रीविष्णुयोगश्रीविष्णुकरणशुभयोगशुभकरण—एवंगुणविशेषण-विशिष्टायामस्यां शुभतिथौ श्रीभगवदाज्ञया (श्रीमन्नारायण) (भगवत्) प्रीत्यर्थं .... ॥

ஆஸ்திகர் அனைவரும் ஒருமிக்க ப்ராமாணிகமான ஒரே ப்ரயோகத்தை ஆதரிக்க வேண்டுமெனப் ப்ரார்த்திக்க, ஆஸ்திகாபிஜ்ஞ ஸஹ்ருதயர்கள் இதில் தங்கள் தங்கள் அபிப்ராயத்தை அறிவித்துக்கொண்டால் இந்த ப்ரயோகத்தில் சிலவற்றை மாற்றியும் சில ஆக்ஷேபங்களுக்குத் தகுந்தபடி ஸமாதானங்களை விவரித்தும் ஸமுசித வ்யாகரண ரீதி பரிஷ்கரிக்கப் படலாமென்பதை நினைத்து சில ஆக்ஷேபங்களை வெளியிடுகிறேன்—

(1) முதலில் கீதா சாஸ்திரத்தை யனுஸரித்துச் சொல்லப்படும் ப்ரணவத்துக்கும் தச்சப்தத்திற்கும் ஹரியே பொருள் என்று அநுஸந்திக்கப் படுகிறது. பிறகு ஸ்ரீகோவிந்த கோவிந்த கோவிந்த என்று ஸம்போதனமாக யிருப்பதால் 'இந்த ப்ரயோகம் பகவானைப் பார்த்துத் தன்னுடைய ஸங்கல்பத்தை விஜ்ஞாபித்துக் கொள்வதாக அமைந்திருப்பதென்று சொல்வது உசிததமம். ஆகையால் 'விஷ்ணோராஜ்ஞயா' என்றவிடத்தில் 'விஷ்ணோ: தவ ஆஜ்ஞயா' என்று உம்முடைய உத்திரவினால் என்று சொல்வதற்குரிய 'தவ' என்று பதம் ப்ரயோகிப்பதல்லவோ யுக்தம். இப்படியே மேலும் கவனிப்பது.

(2) ப்ரவர்த்தமானஸ்ய என்பதற்கும் பிறகு **आद्यब्रह्मणः** என்று பதமா அல்லது **अद्यब्रह्मणः** என்றா? ஆத்ய ப்ரம்மா என்றால் முதல் ப்ரம்மா என்றாகிறது. அனாதி ஸம்ஸாரத்தில் இவர் எப்படி முதல் ப்ரம்மா? ஒருவரும் முதல் ப்ரம்மாவாக முடியாதன்றோ? ஒரு மஹா ப்ரளயத்திலிருந்து மற்றொரு மஹாப்ரளயம் வரையிலுள்ள ஸ்ருஷ்டியில் அனேக மனுக்களைப்போல அநேக ப்ரம்மாக்கள் இல்லையன்றோ. ஸர்வ ஜகத்துக்கும் முன்னே உண்டானவராகையாலே ஆத்ய ஆக சொல்லவேண்டும். இவ்விசேஷணம் எதற்காக? அத்ய என்று பதமானால் இதற்கு எங்கே அன்வயம்? அத்ய, இப்பொழுது என்று சுருக்கமாகச் சொல்லி இதை **शुभतिथौ** என்றவளவாலே விவரிக்கிறதென்றால் அப்போது ப்ரவர்த்தமானஸ்ய - ப்ரஹ்மண: என்கிற விசேஷ்யங்களுக்கிடையிலே ப்ரயோகிப்பது உசிதமாகாது. ஆக இப்போ எப்படி பத விபாகம்? இருக்கும் ப்ரம்மாவினுடைய என்றொரு விதம் சொல்லலாம். ஆகையால்

(3) ஒரு மன்வந்தரத்திற்குள் அநேக கலியுகங்களுண்டாகையாலே இக்கலியுகத்தைக் குறிப்பதற்காக '**अष्टाविंशे कलियुगे**' என்று சொல்ல வேண்டியிருக்க விசேஷணத்தை விடுவது யுக்தமா?

(4) '**प्रथमपादे**' கலியுகம் முதற்பாதமென்றவரையில் காலத்தைச் சொல்லி வந்து, மேலே **अस्मिन् वर्तमाने** என்றாரம்பித்து மறுபடியும் காலத்தைச் சொல்வதாக வைத்து நடுவிலே **जम्बूद्वीपे** என்றாரம்பித்து தேசத்தைச் சொல்வது எங்ஙனே யுசிதம்? கால விசேஷங்களைப் பூராக நிர்தேசித்ததற்குப் பிறகோ அல்லது முந்தா முன்னமோ தேசத்தைச் சொல்வதல்லவோ பொருத்தமுள்ளதாகும்.

(5) அப்படி தேசத்தைச் சொல்ல ஆரம்பித்தும் அதையும் பூர்த்தி செய்யாமல் அது நடுவில் '**शकाब्दे**' என்று காலத்தைப் புகுவிட்டது எப்படி? விக்ரம சகம், யுதிஷ்டிரசகம் முதலிய பல சகங்களிருக்க இன்ன சகமென்று குறிப்பிடவேண்டாமா? அந்த சகத்திலும் இத்தனையாவது வருஷமென்று சொல்லாமல் இவ்வளவு அஸ்பஷ்டமாக ஏன் சொல்லவேணும்.

(6) மேரோர்தக்ஷிணே பார்ச்வே என்று மேருபர்வதத்திற்குத் தென்பாகத்தில் என்பது எதற்காக? '**सर्वेषामेव वर्षाणां मेरोरुत्तरतः स्थितिः**' என்கிற ப்ரமாணத்தின்படி எல்லா வர்ஷங்களுக்கும் மேருபர்வதம் வடக்கிலிருப்பதாலும் பரத கண்டத்தில் மேருதக்ஷிண பார்ச்வம் ஒரு பாகமன்றாகையாலும் இப்படி அநுஸந்திப்பது ந்யாய்யமா. ஒருக்கால் ப்ரயோகிக்க வேண்டியிருந்தாலும் பூமண்டலத்தில் மேரு இருக்குமிடத்தைப் பரிசீலனம் செய்து '**जम्बूद्वीपे भारतवर्षे**' என்கிற விடத்தில் தகுந்தபடி சேர்ப்பதல்லவோ ஒழுங்காகும்.

(7) அஸ்மின். வர்த்தமானே என்கிற விரண்டில் ஒன்றே போதுமே.

(8) ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் என்று ஸங்க்யாவாசக ஷஷ்டி பதத்தோடு ஸமாஸம் செய்தாலிப்படி பதம் வ்யாகரணத்தை யொட்டி யிருக்க முடியாதன்றாக்ஷேபித்து '**प्रभवादीनां षष्ट्यास्संवत्सराणां**' என்று சொல்வதே யுக்தமென்று கூறுகிறார்கள். அதை கவனிக்க வேண்டும்.

(9) **वासरः** என்று சொல்வது அஸங்கதமன்றோ. இன்னவாஸரமென்று முதலில் தெரியாமல் ஆலோசிப்பதற்காக 'வாஸர: என்று மனதில் நினைத்தாலும் அதை ப்ரயோகத்தில் சேர்க்க வேண்டுமா?

(10) **शुभतिथौ** என்று இரண்டுதரம் ஏன் ப்ரயோகிக்க வேண்டும். கடைசியில் ஒருதரந்தானே யுக்தமாவது.

(11) யோககரணங்களை விசேஷித்துச் சொல்வதை அடியோடு விட்டு ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணு கரண என்று சொல்வதேன். விசேஷித்துச்

சொன்னாலும் இதையும் சொல்லவேண்டுமா? சிலர் நக்ஷத்ரத்தை விசேஷித்துச் சொன்ன பிறகு கூட ஸ்ரீவிஷ்ணு நக்ஷத்திர என்று சொல்வது வழக்கம் என்கிறார்கள். ஸ்ரீ விஷ்ணு சுபயோக ஸ்ரீவிஷ்ணு சுபகரண என்று சேர்த்துச் சுகமாகச் சொல்வதை விட்டுப் பிரித்து ஏன் சொல்ல வேண்டும்? 'एवंगुण विशेषण' என்று சொல்லப்படுவது முன் சொல்லிய விஷயமேயாகில் வ்யர்த்தம். வேறாகில் என்ன?

(12) ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம் என்பது சரியா பகவத் ப்ரீத்யர்த்த மென்பதா. ஒருதரம் பகவச் சப்தத்தாலும் மறுதரம் வேறு பதத்தாலும் குறிப்பதற்கு ஏதேனும் தாத்பர்ய முண்டா. பாஞ்சராத்ர ஸம்மதமான ஸங்கல்ப ஸாத்வித்த் யாகங்களில் பகவச் சப்தம் தவிர வேறு உண்டா? 'பகவத் கைங்கர்ய ரூபேண' என்று சிலர் அநுஸந்திப்பது வேண்டுமா, வேண்டாமா. இம்மாதிரி அல்ப விஷயங்களெல்லாம் ஒரு ஸம்ப்ரதாயமாக முடிந்து வீண் கட்சிக்கு ஹேதுவாகிறது.

இவ்வாக்ஷேபங்களில் சிலவற்றை ஸுகமாகவே பரிகரிக்கலாம். ஆயினும் ஆங்காங்கு வழங்கும் பாட பேதங்களை கவனித்து நிர்த்தாரணம் செய்வது உசிதமாயிருக்கிறது. இவ்வளவு சொல்ல முடியாத சமயத்தில் अस्यां शुभतिथौ என்றாரம்பித்துச் சுருக்கமாக ஸங்கல்பித்துக் கொண்டால் போதுமா? இந்த ப்ரயோகமிப்படி ஒரு மந்திரமன்றே. அஸ்யா மென்பதிலேயே எல்லா வர்த்தங்களையும் யதோசிதம் அநுஸந்திக்கலாமே. மஹா ஸங்கல்பங்கூட ஒன்றிருக்கிறதே. அதை நாம் ஒரு பொழுதும் க்ரஹிக்க வில்லையே. ஆக இது விஷயத்தில் இச்சையுள்ளவர்கள் தங்கள் விமர்சத்தைத் தெரிவிக்கலாம். முக்யமான ஸங்கல்பத்தில் மாறுபாடு உசிதமாகாது. எவ்வளவு ப்ராமாணிகமோ அவ்வளவை வெளியிடுக இப்படி ப்ரயோகாந்தரங்களிலும் விமர்சிக்கப்படவேண்டும்.

ஸங்கல்ப ப்ரயோக பரிஷ்காரம்

வி. அனந்தாசார்யர்

ஸங்கல்ப ப்ரயோக விமர்சம் எனப் பெயர் பூண்ட சுருங்கிய வியாஸம் ஒன்று திருப்பதி காலேஜ் ப்ரொபஸர் வீரராகவாசாரியர் ஸ்வாமியால் எழுதப்பட்டு இந்த தீபிகையில் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதை வித்வான்கள் அனைவரும் கிருபையுடன் கடாக்ஷித்து தங்கள் தங்கள் அபிப்ராயத்தை வெளிப்படுத்தவேணும். வாதரூபமான சாஸ்திர க்ரந்தங்களில் சிரகாலம் பரிசயம் செய்துவரும் வித்வான்களுக்கு இது போன்றவை அல்ப

விஷயங்களாகத் தோன்றும். ஆத்ய ப்ராஹ்மண: என்றாவது அத்ய ப்ராஹ்மண: என்றாவது சொன்னால் என்ன தலை போய் விடுமோ என்பார் சிலர். இப்படிச் சொல்லுமவர் அவர் பரிசயம் செய்யும் சாஸ்திர பத்ததியில் ஒரு அக்ஷரம் பிழைத்தால் தலை உடல் எல்லாவற்றையும் உடைத்துக்கொள்கிறார்கள் அல்லவா. அப்படியிருக்க இதில் மாத்திரம் உபேக்ஷை காட்டுவதற்கு காரணம் யாதென்று புலப்படவில்லை—வைதிக கர்மங்களின் ஸங்கல்ப ப்ரயோகத்தை சீர்மைப் படுத்தி வைத்துக் கொள்வது மிக்க அவச்யமான கார்யம். அவரவர் ஜாதி, மதம் இவற்றுக்குத் தக்கபடி ஆசாரங்களையும் பனோபாவங்களையும் நோக்கங்களையும் அநுஸரித்து ஸங்கல்ப ப்ரயோகம் அமைக்கப்படவேணும். இப்போதுவழங்கும் ப்ரயோகத்தில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டிய பாகங்கள் பல உண்டு. நீண்ட காலமாய் இவ் விஷயம் பராமர்சிக்கப் படாமலே இருக்கிறது. விமர்சம் செய்யத் திறமை வாய்ந்த வித்வான்கள் கூட இவ் விஷயத்தில் உபேக்ஷையால் ஸாமாந்ய ஜனங்களின் நடுவில் வழங்கிவரும் பத்ததியை பின் பற்றி வருகிறார்கள். அதனால் இதில் அநேக அநுசித பாகங்களும் அஸாம்ப்ரதாயிகமான சில வாக்யங்களும் கலந்து கிடக்கின்றன. நமது பூர்வாசார்யர்கள் எவ்வளவோ பரிச்ரமப்பட்டு ஒழுங்கு படுத்தின மார்க்கத்தை நாம் உபேக்ஷித்து நிற்பது ந்யாய்யமானதல்ல. இந்த விஷயத்தை விவரித்து ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினால் அபிப்ராயபேதம் அதிகமாய் விவாதம் ஏற்படும் என்று பயப்படவேண்டியிருக்கிறது. அநேக வித்வான்கள் स्थितस्य गतिश्चिन्तनीया" என்கிற ந்யாயத்தையே பின் பற்றுகின்றனர். ஆனாலும் ஸமயம் வாய்த்தபோது சொல்லாமல் இருக்கக் கூடாது என்ற ரீதியை அநுஸரித்து அடியேனும் இரண்டொரு விஷயங்களை சர்ச்சைக்கு விடுகிறேன். வித்வான்கள் நிஷ்பக்ஷபாதமாய் ஆராய்ச்சி செய்து நிர்ணயிக்கவேணும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்திகளில் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிக ஸம்ப்ரதாயஸ்தர் அனைவரும் வைதிக கர்மாரம்பங்களில் "ஸ்ரீமான் வேங்கடநாதார்ய:" என்ற ஸ்ரீ தேசிகன் தனியனை அநுஸந்திக்கிறார்கள். மற்றும் சிலர் ஆசார்யாநுஸந்தாநமின்றியே "சுக்லாம்பரதரம் விஷ்ணும்" என்று தொடங்குகிறார்கள். ஆசார்யாநுஸந்தாநம் ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். தனியனைக்கொண்டு குருத்யாநம் செய்யாவிட்டாலும் அஸ்த்குருப்யோநம: என்று ஸாமாந்யாகாரேணவாவது அநுஸந்திக்கவேணும் என்பது ஸர்வ சாஸ்திர சித்தமான விஷயம். அது நிற்க, "சுக்லாம்பரதரம் விஷ்ணும்" என்ற ஒரு ச்லோகத்தை அநுஸந்திக்கிறார்கள். இந்த ச்லோகத்திற்கு அர்த்தமென்ன? ப்ரதிபாத்ய வ்யக்தி யார்? எங்கே இருந்து எடுக்கப்பட்டது? நமது ஆசார்ய பரம்பரையில் யாராவது இதை கடாக்ஷித்ததுண்டா?

இந்த ச்லோகத்தில் சொல்லியபடி ஒரு தத்வம் நமக்கு உபாஸ்யமாக எந்த க்ரந்தத்திலாவது காணப்படுகிறதா ? என்பதை விசாரிக்கவேணும். ப்ராசீநாசார்யாளில் யாரோ ஒருவர் இந்த வசநத்தை அநுஸந்தேயமாக எடுத்திருப்பதாகக் கேள்வி. அது விவரம் அடியேனுக்குப் புலப்படவில்லை.

இரண்டாவது—ஸங்கல்பத்தில் ஸ்ரீபகவதாஜ்ஞயா பகவத் கைங்கர்ய ரூபம் என்று சிலரும் ஸ்ரீமன் நாராயண ப்ரீத்யர்த்தம் என்று சிலரும் சொல்லி வருகிறார்கள். நமது ஆசார்யாள் வெளியிட்டருளின ஸம்ப்ரதாய ரஹஸ்யத்தை அடியொற்றிப் பார்த்தால் முதலில் சொன்ன பகவத் கைங்கர்யரூபம் என்பது கொஞ்சம் ஸங்கதமாகலாம் போலிருக்கிறது. இரண்டாவது சொன்ன நாராயண ப்ரீத்யர்த்தம் என்பது ஸர்வதா அஸங்கதம் என்பதில் ஆக்ஷேபமில்லை. இது அத்வைதிகள் சொல்லி வரும் "பரமேச்வர ப்ரீத்யர்த்தம்" என்றதை கொஞ்சம் மாறுதலுடன் பின்பற்றுகிறபடி என்று தோன்றுகிறது. "उपायतां परित्यज्य" என்று ஸர்வதா கர்மங்களில் உபாயத்வ புத்தியைத் தவிர்க்கவேணும் என்று ஓதின ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளை மனதில் கொண்டவனுடைய நாக்கில் நாராயண ப்ரீத்யர்த்தம் என்ற சொல் கிளம்புமா? கிளம்பலாமா? ஆலோசித்துப் பாருங்கள். **स्वकर्मणा तमभ्यर्च्य** என்று சொன்ன கீதாசார்யன் திருவுள்ளத்திற்கு இது ஒக்குமா? என்பதையும் வித்வான்கள் விமர்சித்து அபிப்ராயத்தை வெளியிடவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

திருவரங்கேசர் நடை யழகு

[ஆரியூர் வ. பத்மநாப ராமானுஜ தாஸன்]

உலகைப் படைக்க உந்தியுறும் உயர் தாமரையில் நான்முகனை
உதிப்பித்தருளி நான்மறைகள் உவந்து வழங்கி உய்வித்தாய்!
நிலவும் வெண்பால் ஆழியிலே நிமல வரங்க விமானமதில்
நீயே அர்ச்சைத் திருவுருவை நெஞ்சிலுவந்து மேற்கொண்டாய்!
வலவன்[1] இக்குவாகு வெனும் மன்னனன்பில் மகிழ்ந்தருளி
வையம் உய்ய அயோத்தி நகர் வந்தாய்! அன்பன் வீடணனால்
இலகும் அரங்கம் அடைந்தருளும் எந்தாய்! வருக! வருகவே!!
இன்றும் அரச வுபசாரம் ஏற்பாய்! வருக! வருகவே!!

1. வலவன்=வெற்றி வீரன் ;

எல்லையில்லாப் பெருமையெலாம் எண்ணுதகத்திற் கருணையினால்
இருள்மாஞாலத் (து) உதித்தருளி இடையர் சேரியிடை வளர்ந்து
தொல்லை விளைத்த வல்லரக்கர் தொலைய அழித்துக் கரவறியாத்[2]
தூய காதர் கோவியரின் துயர மகற்றிக் குழலூதி
முல்லை நிலத்துச் செல்வர்[3] தொழும் முதலாய் நின்ற கோவிந்தா!
முகுந்தா! கண்ணா! முகில்வண்ணா! மொழியைக் கடக்கும் புகழண்ணா
நல்ல ஆயர் குலமணியே! களிர் சீரங்கக் கருமணியே!
ஞானச் சுடரே! திருவரங்க நாதா! வருக! வருகவே!! 2

பொய்கை பூதர் பேய் மழிசைப் புனிதர் மறைசொல் சடகோபர்
புகழ்கொள் குலசேகரர் பணிசெய் புதுவைப் பட்டர் உயர் கோதை
பொய்மை யகன்ற தொண்டரடிப் பொடியார் பாணர் கலியனெனப்
புகலுமன்பர் பதின்மர் மிகப் போற்ற நின்ற ஏற்றத்தாய்!
தூய்ய சிந்தை யன்பர் மணத் தூணை[4] அடுத்(து) உள் குழைந்து மிகத்
துதிப்ப அரவிற் கிடந்தருளும் தூயா! மாயா! திருநேயா!
பொய்யர்க்(கு) அரியார்! மெய்யர்க்குப் புகலாம் அறியே! வருகவே!
பொழிலிற் குயில்கள் புகழ்பாடும் புனிதா! வருக! வருகவே!! 3

நாதமுனிகள் முதல் பெரிய நம்பிவரையில் ஆசிரிய
நல்லார் பலரும் உவந்தருள—நவிலும் சீடர் பற்பலரும்
பாதம் பரவ விளங்கிய நற் பண்பர் இராமாநுசரிருந்து
பத்துக் கொத்தாய்ப்[5] பகுத்திட்ட பணியார் பணிசெய் கோயிலினாய்!
கோதை உறையூர் வல்லி எழிற் கோலத் துருக்க மெல்லி உயர்
குலசேகரரின் மகளென்[6]னக் கூறும் நான்கு செல்வியரும்
காதல் பெருகிக் கனிந்துருகிக் களிப்ப நின்ற கட்டழகா!
கண்டார் சிந்தை கவரும் எழிற் கனியே! வருக! வருகவே!! 4

மிதிலைச் செல்வி மனங் கவர்ந்த வேழநடை[7]யை, இந்நாளும்
மெய்யன்பினர் கண்(டு) உய்வுறவே விழைந்து[8] வழங்கும் வித்தகனே

2. கரவு அறியா= கள்ளம் அறியாத; 3. முல்லை நிலத்துச் செல்வர்=முல்லை நில மக்களாகிய ஆயர்கள் ; 4. மணத்தூண்=பெரிய பெருமாள் சந்நிதிக்குள் கர்ப்பக் கிருகத்தின் அருகிலிருக்கும் திருமணத்தூண், 5. பத்துக்கொத்து= (1) திருப்பதியார் ; (2) திருப்பணி செய்வார் ; (3) பாகவத நம்பிமார் ; (4) உள்ளூரார் ; (5) விண்ணப்பம் செய்வார் ; (6) திருக்கரகக்கையார் ; (7) ஸ்தாநத்தார்; (8) பட்டாள் கொத்து (9) ஆரியபட்டாள் கொத்து ; (10) தாஸநம்பி கொத்து—; 6. குலசேகரர் மகள்= சேரகுலவல்லி ; 7. வேழநடை=கஜகதி ; 8. விழைந்து=விரும்பி ;

மதிளேழ் சூழும் கோயிலுளால்! வண்மை விடையின் நடை[9] இன்றும்
வழங்கியருளும் வீரவோ! வஞ்ச நெஞ்சர் அஞ்சிடவே
பதுங்கிப் பாயும் புலிபோலும் பாய்ந்து பாய்ந்து செல்கின்ற
பண்பால் புலியின் நடை வழங்கும் பரமா! கரவோர்க்(கு) அறியானே
எதிரில் மிடுக்குக் கோளரிபோல் ஏகும் சிங்க நடையானே!
இசை நால்வகை நன்னடை விளக்கும் எந்தாய்! வருக! வருகவே!! 5

மாலை அசைய ஒளி செய்யும் மணிகொள் அணிகள் கலகலென
மார்பில் ஆசையப் பட்டுடைகள் மருங்கில் அசையக் குழை அசைய
கோல மலர்கொள் குழல் அசையக் குடையும் அசைய நடை வழங்கும்
கோவே; மன்னர் மன்னர் பலர் குழைந்து துதித்த குலத் தேவே!
சோலை தம்மில் மயிலாட—சொல் இன்னிசைகொள் குயில் பாட—
சுவை தேர் சுரும்பின் இனம் முரல—சொல்லின் கிளிகள் புகழ் குழற
சீலப் பெரியோர் மறை பாடும் சீரூர் அரங்க மணவாளா!—
செல்வம் என்றும் குன்றாத தேவே! வருக! வருகவே!! 6

மலர்கொள் கண்ணிக் குழலழகா! மாலைக் கிசைந்த தோளழகா!
வண்ணம் சிவந்த வாயழகா! வழுத்தற்கரிய கண்ணழகா!.
இலகு திலகக் கத்தூரி என்றும் விலகா நுதலழகா;
இணையற்றொளிரும் முடியழகா! இனிய செங்கைத் தண்டழகா!
அல்லரைப் பழிக்கும் அழகினதாய் ‘அஞ்சேல்’ என்ன அருளுவதாய்
அன்பர் தம்மை உய்விக்கும் அபயத் திருக்கைப் பேரழகா!
நிலவும் நான்கு நடையழகா! நித்தம் நடக்கும் விழவழகா![10]
நிகரில் அழக! மணவாளா! நிமலா! வருக! வருகவே!! 7

குலத்திற் பெரியர்; ஒழுக்கத்திற் குன்றா அன்பர்; போறிஞர்;
குணத்திற் சிறந்தோர் பலர் நிலவும் கோயில் வாழும் கோவலனே!
நிலத்திற் பிறிதொன்(று) இணையின்றி நிலவும் பெரிய கோயிலிலே,
நெஞ்சு குழைந்து—விழிகளிலே நீரும் பெருகி வழிந்து முகம்
அலம்ப—அன்பர் பலர் இறைஞ்சும் அரங்கா! எறிபொற்றிகிரியினாய்![11]
அரிமா நடை[12] கொண்டெழுந்தருளும் அமயந்தன்னிற் கணகணென
சிலம்பு புலம்பும் கழற் கமலத்[13] தேவே! வருக! வருகவே!!
செங்கோலுடைய திருவரங்கச் செல்வா! வருக! வருகவே!! 8

9. விடையின் நடை=ரிஷபகதி; 10. விழவழகர்=உத்ஸவ அழகர். 11. எறி பொற்றிகிரியினாய்!=ப்ரயோக சக்ரபாணியே!; 12. அரிமா நடை=சிங்கநடை; 13. கழற்கமலம்=பாதாம்புஜம்;

கனியா மனமும் கனிந்துருகக் கண்ணில் இன்பப் புனல்[14] பெருகக்
கடையேன் உடலம் புளகமுற[15]க் கழறும்[16] உரைகள் குழறிடவே
வனிதைத் தன்மை[17]யினை எய்தி மையல் மிகுந்து நையும் அகம்
வாய்ந்து வழுத்த[18] வருவோனே! வழுத்த எதுவும் தருவோனே!
தனிமா முதலே! மாதவனே! தயையால் மிக்க யாதவனே!
தமிழ் மா மறையை இசையுடனே சாற்றக் கேட்டு மகிழ்வோனே!
புனிதா! சிந்தை நைந்து மிகப் போற்ற வருக! வருகவே!!
பொற் கோயிலிலே கருணை பொழி புயலே! வருக! வருகவே!! 9

துன்பம் தொலைய வருக; மனத் தூய்மை பெருக வருக; அகச்
சோர்வு குலைய வருக; தமிழ்ச் சொல்லால் துதிக்க வருக; அருள்
இன்பம் பெருக வருக; மனம் இனிதில் உருக வருக; புனல்[19]
இழியும் விழிகள் பெற வருக; இருகை கூப்பித் தொழ வருக;
நின்பொற் கோயிற் செல்வமெலாம் நித்தம் வளர வருக; உயர்
நிமலா! வருக; ஆயர் குல நேயா! வருக, திருமகளோ(டு)
அன்புற்(று) அரங்கத்(து) அமர்கின்ற அண்ணல்! வருக; வருகவே!!
அரங்கா! அடியேற்(கு) உளம் இரங்கி அருள்வாய்! வருக! வருகவே!! 10

விருத்தாந்தங்கள்

ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனும் உத்ஸவங்களும்

[பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர்]

அறிவுடையீர்! நம் தூப்புல் நிகமாந்த மஹா தேசிகன் திருவேங்கடமுடையான் அவதார மென்பதற் கறிகுறியாகப் புரட்டாசித் திருவோணத்தில் அவதரித்ததின் காரணமாய் பல திவ்ய தேசங்களிலும் அபிமான ஸ்தலங்களிலும் ச்ரவணத்தில் முடிவதும் ஆரம்பிப்பதுமாய் உத்ஸவங்கள் நடைபெறுகின்றன. அவ்வோ ஸ்தலவாஸிகளின் ச்ரத்தைக்கும் பொருள் வஸதிக்கும் தகுந்த ரீதியில் இவைகள் வாசிபெறினும் வசிமுகத்தோஞ்சி பெற்ற தூப்புல் வள்ளலின் திருவுள்ளத்திற்கு உகப்பேயென நாம் நிச்சயிக்

14 இன்பப்புனல்=ஆனந்த பாஷ்பம்; 15. புளகமுற=பரவசமடைய; 16. கழறும்=சொல்லும்; 17. வனிதைத் தன்மை=பெண்தன்மை; (நாயிகா பாவம்); 18. வழுத்த=துதிக்க; 19. புனல்=இன்பக் கண்ணீர்.

கிறோம். இதில் கவனிக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. அதாவது இவ்வுத்ஸவங்கள் பெரும்பாலும் சென்னை வாஸிகளான உதார ப்ரமுகர்களைக் கொண்டே நடக்கின்றனவென்று சொல்லலாம். புரட்டாசி மாதம் பிறந்தவுடனேயே ஆங்காங்கிருந்து பலதேசிக பக்தர்கள் பட்டணத்தில் ஸேவை ஸாதிப்பதே இதை ருஜுப்படுத்துகிறது. அந்த அந்த ஸ்தலங்களிலிருப்பவர் பலர் இங்கு சென்னையில் உத்யோக முதலான வ்யாஜங்களையிட்டு வஸிப்பதே இதற்குக் காரணமாகிறது. முன் காலங்களில் ஒவ்வோர் அக்ரஹாரங்களிலும் இருப்பவர் ஒவ்வோர் உத்ஸவங்களை ஆவலுடன் ஸம்பாதித்து இஃதோர் குலதனமென்றெண்ணி தூப்புற்குலமணியின் அவதார மஹோத்ஸவத்தை நடத்திப்போந்தார்கள். இதற்கு மூலம் அவரவர்கள் கிராமத்தில் உசிதமான வ்ருத்தியுடனிருந்ததும் அவ்வாசார்ய சிகாமணியின் அரும்பெரும் ஸ்ரீஸூக்தி ரத்னங்களை அனவரதம் ஆசார்ய முகமாய் அர்த்தத்துடன் அனுக்கிரகிக்கப் பெற்றதுமேயாகும். இந்த ரீதிகள் இப்போது முற்றிலும் மாறியிருப்பதால் உத்யோகத்திலிருக்கும் அந்த அந்த தேசத்தவரைக் கொண்டு ஆங்காங்குள்ள ஸ்ரீ தேசிகன் ஸன்னிதி உத்ஸவங்கள் நடைபெறவேண்டியது அவசியமாயிற்று. சென்னையில் வசிக்கும் ஸ்ரீ தேசிகன் திருவடிகள் உத்யோகம் முதலிய நிர்ப்பந்தங்களினால் தங்கள் ஜன்ம பூமிக்கு அடிக்கடி போய் பெருமாளையும் தேசிகனையும் ஸேவிக்க இயலாது சென்னையிலேயே சிலவிடங்களில் ஸ்ரீ தேசிகனையும் பெருமாளையும் எழுந்தருளப்பண்ணி மிக்க ஸம்ருத்தியுடன் திருவாராதனம், உத்ஸவங்களை நடத்தி ஒருவாறு ஸமாதானமடைகிறார்கள். இங்கு இவர்கள் சில ஸமயம் அனுபவிக்கும் ஆனந்தத்தைப் பார்த்தால் இவர்கள் ஜன்ம பூமியிலுள்ள எம்பெருமானையும் தேசிகனையுமே மறந்துவிடுவார்களோவென நினைக்கக்கூட இடமுண்டாகிறது; இம்முறையில் ஸ்ரீ காஞ்சியிலுள்ள தூப்புல் ஸ்தலமும் சேர்ந்ததே. இப்பொழுதே அங்கும் உத்ஸவம் நடைபெறுகின்றது. ஆஸ்திகர்களின் ஆதரவுக் குறையினாலும் அகிஞ்சனர்களான அங்குள்ள ஸ்தலவாஸிகளின் ச்ரத்தையாலும் ஒரே வேளை உத்ஸவம் தோளுக்கினியானில் ஸ்ரீ தூப்புல் தேசிகன் கண்டருளுகிறார். இவ்வவதார ஸ்தலத்திலிருந்து ஆவாஹனமும் ப்ரதிஷ்டையும் நடந்தவிடங்களில் இருவேளையும் வாஹனங்களிலெழுந்தருளுவதும் அத்யாபக வேதபாராயண கோஷ்டியின் ஸம்ருத்தியும் ஸ்வாத்யங்களான (இனிமையான) வாத்யங்களின் விசேஷமும் ஸ்ரீ தூப்புல் தேசிகனுக்கும் சேஷபூதங்க (பெருமை பயக்குமவை) ளெனவே நாம் நினைக்கிறோம்.

பிள்ளைகள் ஆங்காங்கு பெரும் வாழ்ச்சி பெறுவது பிதாவுக்குப் பெருமை பயக்குமாயினும் பெற்றவர் பிரஸாதத்திற்கும் ப்ரயாஸப் படுவதானால் புதல்வனுக்கு அஃது பொருத்தமாகுமா? ஆகையால் ஸ்ரீ தேசிகன்

உத்ஸவங்கள் நடக்கும் இடங்களில் எல்லாம் ஆங்காங்கு சேர்ந்த பொருள்களின் வஸதிக்குத் தகுந்தபடி ரூ 10-க்கு குறையாமலனுப்பி ஸ்ரீ தூப்புல் தேசிகன் உத்ஸவத்தை சிறப்பாய் நடத்தினால் ஸ்ரீ தேசிகன் திருவுள்ளமுகப்பதோடு அந்தந்த ஸ்ரீ தேசிகன் ஸன்னிதிகளுக்கும் பெருமை விளைக்குமென நாம் நம்புகிறோம். எல்லா விடங்களிலும் தூப்புல் வேதாந்த தேசிகனே இன்னமொரு நூற்றாண்டிருமென்றல்லவோ நாம் எல்லாரும் மங்களாசாஸனம் செய்வது ஸ்ரீ தேசிகனுக்கு பலவிடங்களில் நடக்கும் பெருமைகளை கண்டு பொறாமை கொண்டு பிதற்றுகிறாரென பெரியோர்கள் நினையார்கள். வேறு சிலர் வேறு வேறு காரணங்களைக்கொண்டு வெறுப்பாராயினும் இதை மறுக்க முன்வரமாட்டார்களென நம்பியே யாவரையும் பணிந்து இவ்வியாஸத்தை யெழுதத் துணிந்தோம். இதில் சொற்பிழைகள் பொருட்பிழைகளிருந்தபோதிலும் பொருட்படுத்தாது ஸ்ரீ தூப்புல் தேசிகன் உத்ஸவத்திற்குப் பொருளுதவி செய்தருளுவாரென்றே ப்ரமுகர்களைப் ப்ரதீக்ஷிக்கிறோம்.

ஒரு திருத்தம்

ஆவணி மீ வெளி வந்த தீபிகையில் யாக பசு விஷயமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள வியாஸத்தில் 107-வது பக்கம், 24-வது வரியில் "ரக்ஷணைவ க்ஷேத்ரீயாதிஷ்வஸஜ்ஜவநா" என்ற வாக்யம் தவறாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாக்யத்திற்குப் பதிலாக "பூர்வஞ்ச விஶேஷ ஶாஸ்த்ரம் ஸாமாந்ய ஶாஸ்த்ராத்" என்ற தாத்பர்ய சந்திரிகா வாக்யம் இருக்கவேணும். இந்த மாதிரி திருத்திக் கொள்ளும்படி வாசகர்களைப் பிரார்த்திக்கப்படுகிறது

அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசார்யர்.

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸபை, திருக்குடந்தை

அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசார்யர்

திருக்குடந்தையில் பெரிய தர்மிஷ்டராயும், ஆஸ்திக சிகாமணியாயும் விளங்கி வந்த ஸ்ரீமான் உ. வே. விராஹக்குளம். ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியால் பல வர்ஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிற இந்த ஸபையின் இவ்வருஷத்திய வித்வத் ஸதஸ், ஸம்பாவனை முதலியவை ஐப்பசி மாஸம் முதல் வாரத்தில் வெகு நன்றாக நடந்தேறியது. திவான் பஹதூர் எஸ். ராகவ அய்யங்கார் ஸ்வாமி சில வர்ஷங்களாக விசேஷ சிரத்தையுடன் இந்த ஸபை கார்யங்களை நிர்வஹித்து நடத்தி வருவது போல் இவ்வருஷத்திலும் நன்கு நடத்தி வைத்தார்.

பரீக்ஷாதிகாரிகளும், பரீக்ஷயர்களுமாக அநேக வித்வான்களும், கனபாடிகளும், ஸாதாரண வேதாத்யாயிகளும்திவ்ய ப்ரபந்தமறிந்தவர்களும் எழுந்தருளியிருந்தார்கள். தினமும், பிரஸித்தவித்வான்களுடைய உபந்யாஸங்களும் நடை பெற்றன. ஸ்ரீ. உ.வேக்களான புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மஹா மஹோபாத்யாய ஆர். வி. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி, குடவாசல் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி, அக்நிஹோத்ரம் தாதாசார் ஸ்வாமி திருப்பதி காலேஜ் பிரின்ஸிபால் திருமலை தாதாசாரிய ஸ்வாமி திருச்சி அட்வகேட் ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி ஆகியவர்கள் சிறந்த விஷயங்களைப்பற்றி பிரஸங்கித்தார்கள்.

24—10—37ல் வித்வத் ஸம்பாவனை செய்யப்பட்டது. அந்தஸமயம் அநேக பிரமுகர்கள் எழுந்தருளியிருந்தார்கள்.

இந்த ஸபையின் ஆதரவில், திவான் பஹதூர். ஸ்ரீ உ. வே. ராகவ அய்யங்கார் ஸ்வாமியினுடைய முயற்சியால் அவருடைய மேல் பார்வையில் ஒரு யஜுர்வேத பாடசாலையும் 2 வருஷங்களாக நடந்து வருகிறது. 9 மாணவர்கள் வேதாத்யயநம் செய்து வருகின்றனர் 7 மாணவர்களுக்கு திரவிய உதவி செய்யப் படுகிறது. வேதத்துடன், காவ்யம் முதலிய பாடங்களும் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்த பாடசாலையும், ஸபையும் மேல் மேல் அபிருவித்தி யடையும்படி வைதிக விமான வாஸியான ஸ்ரீ சார்ங்கராஜன் அருள் புரியவேண்டுமென்று ஸதஸ்ஸில் கூடியிருந்த பெரியோர்கள் பிரார்த்தித்தார்கள்.

பம்பாய் பனஸவாடியில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஈச்வரளு ப்ரஹ்மோத்ஸவம்

1937ளு அக்டோபர்மீ 31உ முதல் நவம்பர்மீ 11உ வரையில் நடைபெறும். நவம்பர் 2உ த்வஜாரோஹணமும் 10உ தீர்த்தவாரியும் நடைபெறும். ஒவ்வொரு நாளும் இரண்டு வேளையும் ஸ்வாமி புறப்பாடு வீதிகளில் நடக்கும். தென்னிந்தியாவிலிருந்து வேத பாராயணக்காரர்களும் திவ்யப்ரபந்தம் ஸேவிப்பவர்களும் வந்து ஸ்வாமியின் முன்னும் பின்னும் பாராயணம் நடத்துவார்கள். தென்னிந்தியாவிலிருந்து பாண்டு வாத்தியக்காரர்களும் நாதஸ்வரக்காரர்களும் வந்து உத்ஸவ காலத்தில் வாசிப்பார்கள். வாணவேடிக்கையும் நடக்கும். வட இந்தியாவில் இப்படிப்பட்ட உத்ஸவம் வேறு எங்கும் ஸேவிக்க முடியாது. பக்த ஜனங்கள் எல்லோரும் இஷ்டமித்ரர்களோடு வந்து உத்ஸவத்தில் கலந்துகொண்டு ஆனந்திக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பம்பாய்
20-10-37

இப்படிக்கு,
தேவஸ்தானம் கார்யகர்த்தா.

திருவள்ளூர் ஸ்ரீவீரராகவ ஸ்வாமி வேத ஸாஹித்ய சாஸ்த்ர பாடசாலை.

மேற்படி பாடசாலையின் இரண்டாவது வருஷக் கொண்டாட்டம் சென்ற 26-9-37ல் மாலை மூன்று மணிக்கு சென்னை கவர்மெண்ட் வக்கீல் ஸ்ரீமான் K. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியினுடைய அக்ராஸனத்தின் கீழ் “கனகவல்லீ ப்ராஸாதம்” என்னும் கட்டிடத்தில் அதிவிமர்சையாக நடந்தேறியது. மாலை மூன்று மணிக்கு ப்ரஸிடெண்ட் விஜயம் செய்தார். கோயில் பரிஜனங்களும் இரத ஆஸ்திக மஹாஜனங்களும் பூர்ண கும்பம் முதலிய உபசாரங்களுடன் ஸபா நாதனை எதிர்கொண்டு அழைத்து வந்து ஸபையின் அக்ராஸனத்தில் வீற்றிருக்கச் செய்தனர். பாடசாலையின் கமிடி மெம்பர்களில் ஒருவரான ஸ்ரீமான் S. R. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் ஸ்வாகதபத்ரம் வாசித்து அளித்தார்.

பின்பு பண்டிட் பாலவெடு ஸ்ரீனிவாஸ ராமாநுஜாசாரியரும் திருவள்ளூர் மிஷின் ஹைஸ்கூல் பண்டிட் கருடபுரம் தேசிகாசாரியரும் தனித்தனியே ஸம்ஸ்கிருத பாஷையில் ஸ்வாகதபத்ரம் வாசித்து அளித்தனர். பிறகு ஸபைக்கு விஜயம் செய்ய இயலாததுபற்றி பாடசாலையின் அபிவிருத்தியை நோக்கி அடியிற்கண்ட பிரமுகர்கள் எழுதி அனுப்பிய லேகங்களை கமிட்டி கார்யதர்சி ஸ்ரீமான் தி. ச. வேதாந்தாசார்ய ஸ்வாமி வாசித்தார்.

(1) கார்ய நிர்வாக சபையின் அத்யக்ஷராகிய ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி (2) ஹைதராபாக்கம் அட்வகேட் திவான் பஹதூர் S. ஆராவமுது ஐயங்கார் ஸ்வாமி. M. B. E (3) கார்ய நிவார்க சபையின் உபாத்ரக்ஷர் ஸ்ரீமான் T. T. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி. M. L. A. (4) இவை வாசித்து முடிந்தபின் தி. ச. வேதாந்தாசார்யர் பாடசாலையின் வருஷாந்தர அறிக்கை (Report) வாசித்தார்.

பிறகு ந்யாயம், வ்யாகரணம் வேதம், திவ்ய ப்ரபந்தம், ஸாஹித்யம் இவற்றில் திருப்பதி ஸம்ஸ்கிருத காலேஜ் ப்ரின்ஸ்பால் மீமாம்ஸா கேஸரி பண்டித ராஜ ஸ்ரீமான் D. T. தாதாசார்ய ஸ்வாமி மாணுக்கர்களை பரீக்ஷை செய்தார் பரீக்ஷையில் திருப்திகரமாக விடை அளித்த வித்யார்திகளுக்கு உயர்ந்த விலையுள்ள புத்தகங்கள் ஸம்மானம் அளிக்கப்பட்டன. பரிசு புஸ்தகங்களை ஸ்ரீமான் ஜஸ்டிஸ் S. வரதாசாரியார், ராவ்பஹதூர் V. T. ரங்கஸ்வாமி அய்யங்கார், C. R. ராமாநுஜாசாரியார், K. S. கிருஷ்ண ஸ்வாமி ஐய்யங்கார், V. ராமஸ்வாமி சாஸ்திரி அண்டு ஸன்ஸ் இவர்கள் கொடுத்து உபகரித்தார்கள்.

இது தவிர ஸபையின் உபாத்யக்ஷராகிய ஸ்ரீமான் T. T. கிருஷ்ணமாசாரியார் இருபது வித்யார்த்திகளுக்கு, இருபது ஜதை வேஷ்டிகளை ஸம்மானம் அளித்தார். அதன்மேல் அக்ராஸனாதிபதி இந்த பாடசாலை வெகு உபயோகமான கார்யம் செய்துவருகிறது என்றும், ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் இதைப்போன்ற பாடசாலை ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும், மேனாட்டுப் படிப்பினால் இழுக்கப்பட்டு நமது தேசச் சிறுவர்கள் நமது புராதன நூல்களை இழந்துவிடுவது யுக்தமில்லை என்றும், இம்மாதிரி படிப்பு பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கும், ஆபீஸில் உத்யோகம் செய்யுபவர்களுக்கும், ஒழிவுஉள்ள ஸமயத்தில் கற்பிக்கப்படவேண்டும் என்றும், வெகு கம்பீரமாய் உபன்யஸித்தார்.

முடிவில் ஸ்ரீமான் D. T. தாதாசாரிய ஸ்வாமி, இப்பாடசாலையில் ப்ரோவ்ருத்தியைக் குறித்து சில அறிக்கைகளை வெளியிட்டார். ஸ்ரீமான் தி. ச. வேதாந்தாசாரியரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இராத்ரி 7 மணிக்கு சபை கலைந்தது.

திருவள்ளூர்
27—9—37

தி. ச. வேதாந்தாசார்யர், கார்யதர்சி,
ஸ்ரீ வீரராகவஸ்வாமி வேத சாஹித்ய பாடசாலை,

பத்திராதிபருடைய விளம்பரம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த புஸ்தகங்களை அச்சிட்டு வெளியிடுபவரில் பலர் தங்களுடைய புஸ்தகங்களைப்பற்றித் தக்கபடி விளம்பரம் செய்ய ஸாத்யப் படாததுகொண்டு அபேக்ஷகர்கையில் சேர்ப்பிக்க முடியாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேற் சொன்ன புஸ்தகங்களை வாசிக்கவேணும் என்ற விருப்பங்கொண்டவரில் பலர், புஸ்தகம் கிடைக்குமிடம் தெரியாமல் தவித்துக்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இரு தரத்தாருடைய இக் கஷ்டத்தை நீக்கக் கருதி, சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையார் இவ்வறிக்கையை வெளியிடுகிறார்கள்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தைத் தழுவின புஸ்தகங்களை இவ் வேதாந்த தீபிகையில் விளம்பரத்திற்காக செலுத்த வேண்டிய கட்டணம் ஒன்றுமில்லாமலே ப்ரசுரப்படுத்துகிறோம். ஆகையால் மேற் சொன்ன புஸ்தக வ்யாபாரிகள் அனைவரும் தங்கள் புஸ்தகம் கிடைக்கும் விலாஸம் விலை முதலிய விவரங்கள் அடங்கின பட்டிகையை அனுப்பினால் வருஷத்திற்கு ஒருமுறை யாதொரு செலவுமின்றி விளம்பரப் படுத்தப்படும்.

கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபா
4-5, பத்ரையா கார்டன் தெரு, பார்க்டவுன், சென்னை.

விரோதம் ஒன்றுமில்லை. மேலும், ஆத்மாவை நிரூபணம் செய்து காட்டவேணுமானால் ஞானம் ஒன்றே அதற்குக் கருவியாகிறது. ஞானம் ஒன்றைக்கொண்டே நிரூபணம் செய்யப்படுவதால் ஆத்மாவை ஞானம் என்று சொல்லுவது உசிதமே.

" नित्योपलब्ध्यनुपलब्धिप्रसङ्गोऽन्यतरनियमो वान्यथा " इति ज्ञानमात्रस्वरूपात्मवादे, हेत्वन्तरायत्तज्ञानवादे, सर्वगतात्मवादे च दोष उक्तः ॥

ஆத்மாவின் விஷயத்தில் பூர்வபக்ஷிகள் மூன்று பக்ஷங்களை சொல்லுகிறார்கள். அம்மூன்றையும் சொல்லி இந்த ஸூத்திரத்தால் நிராகரிக்கிறார். அவையாவன.

(1) ஆத்மாவுக்கு அறிவு ஒன்றே உருவமானது. அது அறிவுக்கு இடமில்லை.

(2) அந்த ஆத்மா அறியும் திறமையை அடைவதற்கு இந்திரிய ஸம்பந்தம் முதலான வேறு காரணங்கள் உண்டு.

(3) இந்த ஆத்மா எங்கும் நிறைந்தது. என்ற இம்மூன்று பக்ஷங்களும் ஒப்புக்கொள்ளத்தக்கவை அல்ல என்று நிரூபிக்கிறார். அதாவது —நமக்கு அறிவு சிலபோது உண்டாகிறது. சிலபோது உண்டாகிறதில்லை என்பது அநுபவசித்தம். இவ்வநுபவத்திற்கு ஏற்றபடி ஆத்மாவின் உருவம் இப்படிப்பட்டதென்பதை நிர்ணயிக்கவேணும். ஆத்மாவின் உருவமே அறிவு. அவ்வாத்மாவுக்கு தர்மபூத ஞானம் என்பது இல்லை என்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில், சிலபோது அறிவு உண்டாகாமல் இருப்பதற்கு காரணத்தை எப்படி நிரூபிக்க முடியும்? அறிவு இல்லை என்றால் ஆத்மா இல்லை என்றல்லவோ சொல்லவேணும். இந்திரிய ஸம்பந்தம் முதலான காரணங்களால் அறிவு உண்டாகும். இந்திரியங்களோடு சேர்க்கையில்லாத ஸமயத்தில் அறிவு உண்டாவதில்லை என்று கூறுவதும் சரியல்ல. இந்திரியங்கள் எப்போதும் ஆத்மாவோடு கூடவே இருக்கின்றன. ஒருபொழுதும் ஆத்மாவை விட்டுப் பிரிவதாகத் தென்படவில்லை. இதே யுக்தியைக்கொண்டு ஆத்மா எங்கும் நிறைந்துளது என்ற பக்ஷத்தையும் நிராகரித்து விடலாம். எங்கும் நிறைந்திருக்கும் பக்ஷத்தில் சரீரத்தில் உண்டாவதுபோல் ஆகாசம் பூமி எங்கும் அறிவு உண்டாக ப்ரஸங்கிக்கும். அப்படி காணப்படாததால் ஆத்மா நமது சரீரத்தின் உள்ளேயே அடங்கியது என்று ஒப்புக்கொள்ளவேணும்.

कर्ता शास्त्रार्थवत्त्वात् ॥ उपादानाद्विहारोपदेशाच्च ॥ व्यपदेशाच्च क्रियायां न चेन्निर्देशविपर्ययः ॥ उपलब्धिवदनियमः ॥ शक्तिविपर्ययात् । समाध्यभावाच्च ॥ यथा च तक्षोभयथा ॥ इत्यात्मन एव शुभाशुभेषु कर्मसु कर्तृत्वम् , प्रकृतेरकर्तृत्वम् , प्रकृतेश्च कर्तृत्वे तस्याः साधारणत्वेन सर्वेषां फलानुभवप्रसङ्गादिति च प्रतिपादितम् ॥

கீழ்ச்சொன்ன ஏழு ஸூத்திரங்களால் சுபம் அசுபம் என்ற இருவகை கர்மங்களையும் ஜீவனே செய்கிறான். இக்கர்மங்களுக்குக் கர்த்தா ப்ரக்ருதி அல்ல. ஆத்மாவே. ப்ரக்ருதியை கர்த்தாவென்று ஒப்புக்கொண்டால் 'அந்த ப்ரக்ருதி எல்லா ஜீவன்களுக்கும் பொதுப் பொருளாகையால் அனைவர்க்கும் வினைப்பயன் எல்லாம் நேரிட ப்ரஸங்கிக்கும் என்பது நன்கு நிரூபணம் செய்யப்பட்டது.

"परात्तु तच्छ्रुतेः" ॥ कृतप्रयत्नापेक्षस्तु विहितप्रतिषिद्धावैयर्थ्यादिभ्यः ॥ इत्यात्मन एव कर्तृत्वं परमपुरुषानुमतिसहकृतमित्युक्तम् ॥

இவ்விரண்டு ஸூத்திரங்களால் ஜீவனே கர்த்தா ஆனாலும் பரம புருஷனுடைய அநுமதியின் பேரில் கர்த்தாவாகிறான் என்பது நிரூபிக்கப் பட்டது.

अंशो नानाव्यपदेशादन्यथा चापि दाशकितवादित्वमधीयत एके ॥ मन्त्रवर्णात् ॥ अपि स्मर्यते ॥ प्रकाशादिवत्तु नैवं परः ॥ स्मरन्ति च ॥ इति ॥ अनीशया शोचति मुह्यमानः ॥ जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानमिति वीतशोकः ॥ क्षरन्त्वविद्या ह्यमृतन्तु विद्या विद्याविद्ये ईशते यस्तु सोन्यः ॥ प्राज्ञेनात्मना संपरिष्वक्तो न बाह्यङ्किञ्चन वेद नान्तरम् ॥ तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन्न्यो अभिचाकशीति ॥ ज्ञाज्ञौ द्वावजावीशनीशौ ॥ पृथगात्मानं प्रेरितारञ्च मत्वा जुष्टस्ततस्तेनामृतत्वमेति ॥ यदा पश्यः पश्यते रुक्मवर्णं कर्तार-

मीशं पुरुषं ब्रह्मयोनिम् ॥ तदा विद्वान्पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति ॥ स कारणं करणाधिपाधिपो न चास्य कश्चिज्जनिता न चाधिपः ॥ यस्सर्वज्ञस्सर्ववित् ॥ परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च ॥ निष्फलंनिष्क्रियं शान्तं निरवद्यंनिरञ्ज नम् ॥ नित्यो नित्यानां चेतनश्चेतनानामेको बहूनां यो विदधाति कामान् ॥ [नित्यानां बहूनां चेतनानां यः एकः नित्यश्चेतनस्स कामान्विदधातीत्यर्थः ।] पतिं विश्वस्यात्मेश्वरं इत्यादिषु प्रत्यगात्मनः परमात्मनश्च कर्मवश्यत्वेन शोचितृत्वेनासर्वज्ञत्वेन उपासनायत्तमुक्तित्वेन ; निरवद्यत्वेन सर्वज्ञत्वेन सत्यसङ्कल्पत्वेन सर्वेश्वरत्वेन समस्तकल्याणगुणाकरत्वादिना च स्वरूपस्य स्वभावस्य नानात्वव्यपदेशात् ; तयोरेव—"तत्त्वमसि ॥ अयमात्मा ब्रह्म ॥ योसौ सोऽहं योहं सोसौ ॥ अथ योन्यां देवतामुपास्ते अन्योऽसावन्योऽहमस्तीति न स वेद ॥ अकृत्स्नो ह्येषः....... आत्मेत्योवापासीत ॥ ब्रह्मदाशा ब्रह्मदासा ब्रह्म मे कितवाः" ॥ इति च सर्वजीवात्मव्यापित्वेनाभेदव्यपदेशाच्च ; उभयव्यपदेशाविरोधेन परमात्मांशो जीवात्मेत्यभ्युपगन्तव्यम् ॥"

இவை முதலான ஸூத்திரங்களிலும் உபநிஷத் வாக்யங்களிலும் பரமாத்மாவி
னுடையவும் ஜீவாத்மாவினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவங்கள் பலவாறாய்
நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஜீவாத்மா, கர்மவச்யன் அதாவது தான்
செய்த வினைகளுக்குள்பட்டவன். ப்ராக்ருதியில் பாரதீனனாயிருப்பதால்
துக்காநுபவத்தைக் கைக்கொண்டவன். சுருங்கிய அறிவுள்ளவன். பர
மாத்மாவை உபாஸித்து அதனால் முக்திபெற உரிமை வாய்ந்தவன். பர
மாத்மாவோ வெனில்—செய்வினைகளின் ஸம்பந்தமில்லாதவன். அதனால்
குற்றமற்றவன். ஸர்வஜ்ஞன். அதாவது எல்லாமறியவல்லவன். தன்
எண்ணத்தை உண்மையாகும்படி நிறைவேற்றும் திறங் கொண்டவன்.
உலகமனைத்துக்கும் ஈச்வரன். அதாவது தன்னை யொழித்து மற்ற ஜீவ
ராசிகளை தானிட்ட வழக்காம்படி செய்பவன். ஸகல கல்யாண குணங்
களால் நிறையப் பெற்றவன். இப்படி இவ்விருவருடைய ஸ்வரூபத்தை

யும் ஸ்வபாவத்தையும் பலவாறுய் வேற்றுமை தோன்றும்படி பேசி, "தத்வமஸி" முதலான விடங்களில் இருபொருளும் ஒன்றே என்று பேசப்பட்டது. பரமாத்மா ஜீவாத்மாக்களில் வ்யாபித்திருப்பது கொண்டு அப்படி சொல்லப்பட்டதென்று அறியவும். இப்படி இரண்டுவிதமான நிரூபணங்களை ஒன்றோடொன்று விரோதமின்றி ஒருமைப்படுத்தவேண்டி, ஜீவாத்மா பரமாத்மாவின் அம்சம் அதாவது ஒரு பாகம் என்று ஒப்புக்கொள்ள வேண்டியது அவச்யமாகிறது.

न केवलं न्यायसिद्धमिदम् ॥ श्रुतिस्मृतिभ्याञ्च अंशत्वमुक्तं जीवात्मनः ॥ "पादोऽस्य विश्वा भूतानि" "ममैवांशो जीवलोके जीवभूतस्सनातनः" इति ॥

ஜீவாத்மா பரமாத்மாவினுடைய அம்சமாகிறுன் என்றது யுக்தியால் ஏற்பட்டதே தவிர, ப்ரத்யக்ஷப்ரமாண வசநங்களால் ஏற்படவில்லையே என்று சங்கிக்கக்கூடும். அந்த சங்கைக்கு ஸமாதாநமாக ச்ருதி ஸ்மிருதி இரண்டிலும் இதற்கு ப்ரமாணமுண்டு எனக்காட்டுகிறுர். "பாதோஸ்ய விச்வாபூதானி" என்பது புருஷ ஸூக்தவசநம். பகவானுடைய நாலில் ஒரு பாகமான அம்சம் இந்த லீலா விபூதியாக விளங்குகிறது என்றும், மற்ற மூன்று பாகங்கள் நித்ய விபூதியில் காணலாம், என்றும் ஓதப்படுகிறது. "மமைவாம்சோ ஜீவலோகே" என்ற பகவத்கீதை வசநத்திலும் ஜீவன் என்னுடைய அம்சமானவன் என்று ஸ்பஷ்டமாகவே பகவான் அருளிச்செய்திருக்கிறுர்.

अंशत्वं नाम एकवस्त्वेकदेशत्वम् ॥ तथा सति उभयोरेकवस्तुत्वेन अविरोधो न स्यादित्याशङ्क्य "प्रकाशादिवत्तु नैवं परः" इति परिहरति ॥

அம்சம் என்றுல் ஒரு வஸ்துவினுடைய ஏகதேசம். ஒரு பாகம். அப்படியானுல் அம்சம் அம்சி இரண்டையும் ஒரேபொருள் என்றே கொள்ள வேணும். அப்போது, முன்சொன்ன இரண்டுவிதமான ச்ருதி வாக்யங்களுக்கு அவிரோதம் = ஒற்றுமை எப்படி என்று சங்கித்துக்கொண்டு "ப்ரகாசாதிவத்து நைவம் பர:" என்ற ஸூத்திரத்தால் பரிகாரம் அருளிச்செய்கிறுர். வெளிச்சம் முதலான வஸ்துக்கள், எப்படி வெளிச்சத்துக்கு ஆச்ரயமான திரவ்யத்தைக் காட்டிலும் வேறு பொருளாக இருந்து

கொண்டு அந்த திரவ்யத்துக்கு அம்சமாகவே வ்யவஹரிக்கப்படுகின்றனவோ அப்படியே இங்கு பரமாத்மாவுக்கு ஜீவாத்மா அம்சமாயும் வேறு பொருளாயும் ஆகிறுர். பரமாத்மா ஜீவாத்மாவைப்போல் இல்லை. பல விஷயங்களில் வேற்றுமை வாய்ந்தவன்.

अन्यविशेषणतैकस्वभावप्रकाशजातिगुणशरीरविशिष्टान् अग्नि-व्यक्तिगुण्यात्मनः प्रति प्रकाशजातिगुणशरीरिणां यथा अंशत्वम्, एवं परमात्मानं प्रत्यगात्मशरीरकं प्रति प्रत्यगात्मनोंशत्वम् ॥

உலகத்தில் மற்றொன்றுக்கு விசேஷணமாகவே காணப்படும் தன்மை வாய்ந்த ப்ரகாசம் ஜாதி, குணம், சரீரம் இவற்றை எடுத்துக்கொள்வோம். ப்ரகாசம் தீபம் முதலான ததாச்ரயமான திரவ்யத்தைவிட்டு தனித்து நிற்பதில்லை.. ஜாதி = மநுஷ்யத்வம் கோத்வம் முதலானது. அதுவும் வ்யக்தியை விட்டுப் பிரியாதது. ரூபம் முதலான குணமும், சரீரமும் அப்படியே. இந்த ப்ரகாசம், ஜாதி, குணம், சரீரம், இவை முறையே அக்நி, வ்யக்தி, திரவ்யம், ஆத்மா இவற்றிற்கு அம்சமாக இருப்பதைக் காண்கிறோமல்லவா? அப்படியே ஜீவாத்மாவை சரீரமாக உடைய பரமாத்மாவுக்கு ஜீவாத்மா அம்சமாகிறுன்.

एवम् अंशत्वे यत्स्वभावोंशभूतो जीवः नैवमंशो परमात्मा ॥ सर्वत्र विशेषणविशेष्ययोः स्वरूपस्वभावभेदात् ॥

இப்படி அம்சமாக இருக்கும்போது அம்சமாகிய ஜீவனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை அம்சியாகிய பரமாத்மாவினிடத்தில் இல்லாமலிருப்பது ந்யாயமானதே. உலகத்தில் எங்கும் விசேஷணம் விசேஷ்யம் இவ்விரண்டுக்கும் ஸ்வரூப ஸ்வபாவங்களில் வேற்றுமை காணப்படுகிறபடியால்

एवञ्च "कर्ता शास्त्रार्थवत्त्वात्" "परा तु तच्छ्रुतेः" इत्यनन्तरोक्तञ्च न विरुध्यते ॥

"ப்ரகாசாதிவத்து" என்கிற ஸூத்திரத்திற்கு அடுத்த கீழ் அதிகரணங்களில் இவ்விரண்டு ஸூத்திரங்களும் காணப்படுகின்றன. அவற்றில் முதல் ஸூத்திரத்தால் இங்கு செய்யப்படும் செய்கைகளுக்கு கர்த்தா யார் என்பதை சங்கித்து ஜீவனே கர்த்தா என்று நிர்ணயித்திருக்கிறுர். இவ்விதம்

ஸந்தேஹம் வரக்காரணம் என்னவெனில், சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் செய்வினைகளுக்கு கர்த்தா ப்ரக்ருதிதான் என்றும் ஜீவன் கர்த்தாவல்லன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் இந்த ஸந்தேஹம் உதித்தது. இதற்கு ஸமாதானம்— விதிநிஷேதங்கள் அடங்கிய சாஸ்திரங்கள் எல்லாம் ஜீவாத்மாக்களைக் குறித்தே ப்ரவ்ருத்தித்தவை. அசேதநமான ப்ரக்ருதிக்கு விதிநிஷேதங்கள் கூடா. ஆனால் ப்ரக்ருதிதான் கர்த்தா என்று சொன்ன வாக்யங்களுக்கு என்ன கதி? என்றால் அவற்றுக்கு கருத்து வேறு. அதாவது ஜீவனுக்கு கர்த்ருத்வம் தனக்காக வந்ததல்ல. ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் வந்தது. "பராத்து தச்ச்ருதே꞉" என்ற அடுத்த அதிகரண ஸூத்திரத்தில் ஜீவன் தனக்குத்தானாகவே ஸ்வதந்த்ரனாய் கார்யங்களைச் செய்கிறானா? அல்லது மற்றொருவனுடைய தூண்டுதலால் செய்கிறானாவென்று சங்கித்து பரம புருஷனுடைய தூண்டுதலால் ஜீவனுக்கு கர்த்ருத்வம் வருகிறது. அப்படியே சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட் டிருப்பதால் என்று நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. ஜீவாத்மா பரமாத்மாவுக்கு அம்சபூதன் என்று ஒப்புக்கொண்டால் கீழ்ச் சொன்னவை யனைத்தும் பொருந்துகின்றன.

एवं प्रकाशशरीरवत् जीवात्मनामंशत्वं पराशरादयः स्मरन्ति च—

"एकदेशस्थितस्याग्नेः ज्योत्स्ना विस्तारिणी यथा ।
परस्य ब्रह्मणः शक्तिः तथेदमखिलं जगत् ॥

यत्किञ्चित् सृज्यते येन सत्वजातेन वै द्विज ।
तस्य सृज्यस्य संभूतौ तत्सर्वं वै हरेस्तनुः ।
ते सर्वे सर्वभूतस्य विष्णोरंशसमुद्भवाः ॥" इति ॥

இப்படி ப்ரகாசம்போலேயும் சரீரம்போலேயும் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவுக்கு அம்சபூதர்கள் என்னும் விஷயத்தை ஸ்ரீ பராசரமஹரிஷி முதலானவர்களும் கூறுகிறார்கள். ஒரு சிறிய இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அக்நியின் வெளிச்சம் அவ்விடத்தைச் சுற்றி பரவி நிற்பதுபோல் இவ்வுலக மனைத்தும் பரமாத்மாவின் சக்தியென்றே கொள்ளவேணும். எந்தெந்த ப்ராணியால் எந்தெந்த வஸ்து ஸ்ருஷ்டிக்கப்படுகிறதோ அவையெல்லாம் பரமாத்மாவின் சரீரமே. அவையெல்லாம் ஸர்வபூத ரூபியான விஷ்ணுவின் அம்சத்தால் உண்டானவை என்று.

अन्यथा पारमार्थिकापारमार्थिकोपाधिसमाश्रयणे प्रत्यगात्मनोंऽशत्वे ब्रह्मण एव वेदान्तनिवर्त्याः सर्वे दोषा भवेयुः इति "आभासा एव च" इत्यादि सूत्रैरुक्तम् ॥

பரமாத்மாவினுடைய அம்சபூதன் ஜீவன் என்னும் விஷயத்தைக் கீழ்ச் சொன்ன விவரப்படி ஒப்புக்கொள்ளாமல் இவ்விஷயத்தையே வேறுவிதமாய் நிர்வஹிப்பாருண்டு. அதாவது—பரமாத்மாவுக்கு உபாதி என்ற ஒரு தோஷம் உண்டு. அது பாரமார்த்திகமாகவும் இருக்கலாம். அல்லது அபாரமார்த்திகமாகவும் இருக்கலாம். இந்த உபாதியாலே அகண்டமான ப்ரம்மம் பின்னப்பட்டு ஜீவாத்மாவாகிறது. பரமாத்மாவின் அம்சம் என்று சொல்லுவதற்கு இப்படியே நிர்வாஹம் என்று இப்படி ஒப்புக்கொண்டால் பரப்ரமத்திற்கே எல்லா தோஷங்களும் உண்டு என்றும் அந்த தோஷங்களே வேதாந்த ஞானத்தால் போக்கக்கூடியவை என்று சொன்னதாக ஆகுமாகையால் அந்த மதம் சரியல்லவென்று "ஆபாஸா ஏவ ச" முதலான ஸூத்திரங்களால் ஸூத்திரகாரர் கூறியிருக்கிறார்.

अतस्सर्वदा चिदचिद्वस्तुशरीरतया तदात्मभूतमेव ब्रह्म ॥ कदाचिदविभक्तनामरूपचिदचिद्वस्तुशरीरं तत्कारणावस्थम् ॥ कदाचिच्च विभक्तनामरूपचिदचिद्वस्तुशरीरं तत्कार्यावस्थं ब्रह्म ॥ सर्वदा चिदचिद्वस्तुशरीरतया तद्विशिष्टत्वेऽपि ब्रह्मणः परिणामित्वापुरुषार्थाश्रयत्वे शरीरभूतचेतनाचेतनवस्तुगते । आत्मभूतं ब्रह्म सर्वदा निरस्तनिखिलदोषगन्धानवधिकातिशयासङ्ख्येयज्ञानानन्दाद्यपरिमितोदारगुणसागरमवतिष्ठत इति ब्रह्मैव जगन्निमित्तमुपादानञ्चेति "यतो वा इमानो" त्यादि वाक्यं प्रतिपादयत्येवेति जन्माद्यस्य यतः तद्ब्रह्मेति सुष्ठूक्तम् ॥

ஆகையால் சேதநாசேதந வஸ்துக்களைத் தனக்கு சரீரமாகக் கொண்டதால் அவற்றிற்கு ஆத்மாவாகவே நிற்கும் பரம்மம். அதற்கு காரணாவஸ்தை என்னும் கார்யாவஸ்தை என்னும் இரண்டு நிலைகள் உண்டு. ப்ரம்மத்துக்கு உடலாயிருக்கின்ற சேதநா சேதநங்களுக்கு நாமம் ரூபம் என்ற பிரிவினைகள் இல்லாதபோது, காரணாவஸ்தையில் இருப்பதாகக் கொள்ளவேணும். சிலபோது சேதநாசேதநங்களுக்கு நாமம் ரூபம் இவற்

தில் விபாகம் ஏற்பட்டிருக்கும். அப்போது கார்யாவஸ்தையில் இருப்பதாக கொள்ளவேணும். ஆகவே ப்ரம்மம் எப்போதும் சேதநாசேதந வஸ்துக்களை சரீரமாக வைத்துக்கொண்டே இருக்கும். ஆனாலும் அடிக்கடி உருவ மாறுதல், அஞ்ஞானம் துக்கம் முதலான அபுருஷார்த்தங்கள், உடலாகிய சேதநாசேதநங்களைப் பற்றியவையே தவிர, பரமாத்மாவைச் சேராதவை. ஆத்மாவாகவே நிற்கும் ப்ரம்மம் எப்போதும் ஒருவித தோஷ வாஸனையுமில்லாதது. அளவற்ற மேன்மை வாய்ந்தவையும் எண்ணிறந்தவையுமான ஞானம், ஆநந்தம் முதலான மிக்க நல்ல குணங்களுக்குக் கடல்போல் இருப்பிடமாக இருக்கும். ஆகையால் அப்படிப்பட்ட ப்ரம்மமே இவ் வுலகத்திற்கு உபாதாநகாரணமாகவும் நிமித்தகாரணமாகவுமாகலாம், என்று "யதோவா இமாநி" இத்யாதி வேதவாக்யம் கூறுகின்றது. அனதுபற்றி "இவ்வுலகத்திற்கு எந்த வஸ்துவினிடமிருந்து ஜன்மாதிகள் உண்டாகின்றனவோ அதுவே ப்ரம்மம் என்று சொன்னது மிகவும் பொருத்தமானது.

सदेव सोम्येदमग्र आसीत् ॥ एकमेवाद्वितीयम् ॥ तदैक्षत बहुस्यां प्रजायेय ॥ इति ॥ अस्य चायमर्थः—यस्यात्मा शरीरम्, यस्याक्षरं शरीरम्, यस्य पृथिवी शरीरम्, यस्याव्यक्तं शरीरम्, एष सर्वभूतान्तरात्मा अपहतपाप्मा दिव्यो देव एको नारायणः इत्यादि श्रुतेः ब्रह्मणः सर्वदा चिदचिद्वस्तुशरीरकत्वात् स देवेदम् इदानीं स्थूलचिदचिद्वस्तुशरीरकत्वेन विभक्तनामरूपम् अग्रे प्रळयकाले सूक्ष्मदशापन्नचिदचिद्वस्तुशरीरतया नामरूपविभागानर्हं एकमेवासीत् ॥ स्वयमेव ब्रह्म सर्वज्ञं सर्वशक्ति निमित्तान्तरानपेक्षम् अद्वितीयञ्च अतिष्ठत् ॥ "तदैक्षत बहुस्यां प्रजायेयेति" तत् नामरूपविभागानर्हसूक्ष्मचिदचिद्वस्तुशरीरकतया एकमेवावस्थितं नामरूपविभागार्हस्थूलदशापत्त्या बहुप्रकारं स्यामिति ऐक्षत ॥

ஸதேவேதம் என்கிற ச்ருதி வாக்யத்திற்கு பின் வருமாறு பொருள் கொள்ளவேணும். "யஸ்யாத்மா சரீரம்" முதலான வேத வாக்யங்களால் ப்ரம்மம் எப்போதும் சேதநாசேதந வஸ்துக்களை தனக்கு சரீரமாக உடையது என்று சொல்லப்பட்டிருப்பதால், இப்போது நாமரூபங்களால்

இப்படியே வைச்வாநர வித்யையிலும் ஔபமந்யவாதிகளுக்கு முந்துற ஓராசார்யனிடத்திலே ஏகதேசோபதேசம் உண்டென்று கொள்ளவேணும். ஆகையாலேயிறே, "ஔபமந்யவகம் ஸ்வாத்மாநம் உபாஸ்ஸே? திவமேவ பகவோ ராஜந்" இத்யாதிகளில் இவர்கள் உபாஸிப்பதாகச் சொல்லும் வாக்யங்கள் பொருந்துவது, இவர்கள். "ஸமேத்ய மீமாம்ஸாம் சக்ருஃ" என்றது ப்ரத்யேகம் தங்களுக்கு உபதிஷ்டார்த்தங்கள் பிந்நபிந்நமாயிருக்கையாலே, இவையெல்லாம் தனித்தனியே வைச்வாநராத்மாவா? ஸமுதிதம் வைச்வாநராத்மாவா வென்று விசாரித்தார்கள் என்றபடி. கேகயோபதேசத்தாலே ஸமுதிதமே வைச்வாநராத்மா வென்று இவரறிந்தார்கள். முந்துற இவர்களுக்கு உண்டான ஏகதேசோபதேசம் பிந்நபிந்நமாயிருக்கையாலே ஸந்தேஹமுண்டாய் விசாரிக்கத் தொடங்க, தங்களுக்கு நிர்ணயம் பிறவாமல் உத்தாலகனிடம் போக, அவனுமறியாதது கொண்டு அவனையும் கூட்டிக்கொண்டு, உத்தாலகஷஷ்டராளாய் கேகயனைக் கேழ்க்க, அவனும் வ்யஸ்தோபாஸநத்தில் தோஷமும் ஸமஸ்தோபாஸநத்தையுமாயிற்று உபதேசித்தது. இத்தால் முந்துற உண்டான ஏகதேசோபதேசமே சேஷபூரணார்த்த மாயிற்றென்னதாயிற்று. 'இந்நிஷ்கர்ஷம் வைச்வாநர வித்யாப்ரகரணத்திலே உபநிஷத் பாஷ்யகாரர் அருளிச் செய்தார். "க்ரமேண" = சிஷ்யனுடைய ஆகாங்க்ஷாக்ரமத்தாலே. "சேஷபூரணார்த்தம்" = சிஷ்யனுக்கு ஆகாங்க்ஷையின்றிக்கே சொன்னால் இவன் புத்தியில் அர்த்தம் ப்ரதிஷ்டிதமாகாதென்று ஆகாங்க்ஷையைப் பிறப்பித்து சேஷத்தைப் பூரிப்பிக்கைக்காக இப்படி இவ்விரண்டு ப்ரகரணங்களிலும் ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலேயே அர்த்தநிர்ணயம் பண்ண பட்டதென்னக் குறையில்லை.

அவ—ஆனாலும் ஒரு ஞானத்தினுடைய உபதேசத்திற்கு பலபேர் பக்கல் போகலாமோ? "தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்" என்றன்றோ இருப்பது என்னவருளிச் செய்கிறார்.

மூ—ஸர்வேச்வரன் தானும் தானுபதேசித்த ஞானத்தை பின்னேயும் "தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா" என்று பல ஞானிகள் பக்கலிலே கேழ்க விதித்தானிறே.

வ்யா—ஸர்வஜ்ஞன் தானுமென்றதே, ஸர்வேச்வரன் தானுமென்றது, க்ருத்ஸ்ந மர்யாதாப்ரவர்த்தகன் இவனாகையாலே இவன் தானே பண்ணின விந்த மர்யாதையை அப்ராமாணிகம் என்னலாகாது என்கைக்காக. 'தானுபதேசித்த' வென்றது. ஆளிட்டு உபதேசம் இன்றிக்கே ஸர்வஜ்ஞனாயிருந்த தானே நேரிலுபதேசித்ததென்றபடி. இத்தாலே எம்பெருமானை யொழிந்தார் கிஞ்சித்ஜ்ஞராகையாலே இவர்களுபதேசத்தில்

கொத்தையுண்டென்ற வேண்டியிருந்தாலும் ஸர்வஜ்ஞர் உபதேசத்தில் கொத்தை சொல்லவொண்ணாதென்றபடி. ஞானத்தை என்றது ஸ்ரீ பகவத் கீதையிலே அர்ஜுநனுக்கு உபதேசித்த கர்மஞான பக்தி விஷயமான ஞானத்தை என்றபடி. பின்னையும்= தானுபதேசித்தவநந்தரமும். ப்ரணி பாதேநேத்யாதி—முக்யாசார்யோபாஸநம் போலே இவர்களையுமுபாஸிக்க வேணுமென்றபடி. பல ஞானிகள் பக்கல் என்றது—“உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்சிந:” என்கிற உத்தரார்த்தத்தில் ஞாநிந: என்றதைக் கடாக்ஷித்து. இத்தால் முக்கியமான வாசார்யன் ஒருத்தனேயானாலும் அபேக்ஷிதார்த்த பூர்த்திக்காக பலவாசார்யர்கள் கூடலாமென்று திருவுள்ளம். இங்கு ஞானியாவது பராவ்ராத்ம விஷயங்களிலே யதாவஸ்தித தர்சன விசதமான ஜ்ஞானமுடையவன். இவன் முன் பரிக்ரஹித்த ஆசார்யனாகவுமாம். வேறொருத்தனாகவுமாம். கேழ்க்கையாவது—ப்ரணிபாத புரஸ்ஸரமாய் சிரகாலஸேவா பூர்வகமான பரிப்ரச்னம். விதித்தானிறே இதி. “விதி” என்கிறதுவும் விதியாய் அகரணே ப்ரத்யவாயாவஹமாய் இவ்விஷயங்களில் இவனுக்குள்ள ஸம்சயம் தீருமளவும் கேட்டுத் தெளிய வேணுமென்று திருவுள்ளம்.

அவ—ஆனாலும் ஸதஸ்யத்துக்கும் ரஹஸ்யத்துக்கும் விரோதமில்லை என்று சொல்லப்போமோ. “ஸர்வ வர்ணேஷு தே சூத்ரா: யேஹ்ய பக்தா ஜநார்தநே” என்னும் “சண்டாளமபி வ்ருத்தஸ்தம் தம் தேவா ப்ராம்மணம் விது:” என்றும் ஸர்வ வர்ணங்களிலும் பகவத்பக்தி இல்லாதாரை சூத்திர ஜாதியாகவும் பகவத்பக்தரான சண்டாளரையும் ப்ராம்மணராகவுமன்றோ ரஹஸ்ய சாஸ்திரம் சொல்லியிருப்பது. “தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி” என்று தர்ம ஸம்ஸ்தாபநார்த்தமாக வசுதேவசுதனாக வவதரித்த எம்பெருமான் பீஷ்மத்ரோணாதிகள் இருக்க ஸ்ரீ விதுரர் திருமாளிகையிலே அமுது செய்தருளினார். “இக்ஷ்வாகுவம் சப்ரபவ:” என்கிறபடியே இக்ஷ்வாகு குலதிலகராய் “ரக்ஷிதாஸ்வஸ்ய தர்மஸ்ய” என்கிறபடியே ஆசாரப்ரதாநரா யிருந்த பெருமாள் “சபர்யா பூஜிதஸ்ஸம்யக்” என்கிறபடியே சபரி கையாலே ஸம்யக் போஜநம் கண்டருளினார். ஆகையாலே பாகவதருக்கு ஸதஸ்யங்களான தர்ம சாஸ்திரங்களில் சொல்லுகிற ஜாதியும் ததநுகுணமான வ்ருத்த வ்யவஸ்தையும் இல்லை என்றன்றோ ரஹஸ்ய சாஸ்திரமாயிருந்த ஸ்ரீ பகவச் சாஸ்திர ஸம்ப்ரதாயம். ஆகையாலன்றோ இழிகுலத்தவர்களேலும் எம்மடியார்களாகில் “தொழுமினீர் கொடுமின் கொள்மின்—என்று நின்னோடுமொக்க வழிபடவருளினாய்” என்று ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்தது. அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணாச்ரம வித்யாவ்ருத்தங்களை “சதுர்வேததரோ விப்ரோ வாசுதேவம் நவிந்ததி—வேதபாரபராக்ராந்தஸ்ஸவை

ப்ராம்மணகர்தப:” என்றும் “விஷ்ணு பக்தி விஹீநஸ்து யதிச்சச்வபசாதம:” என்றும், “வித்யாந்யா சில்பநைபுணம்” என்றும் “ஸர்வேஹாதம் பஸ்மநி” என்றும் “விஷ்ணுபக்தி விஹீநஸ்ய வேதசாஸ்திரம் ஜபஸ்தப: “அப்ராணஸ்யேவ தேஹஸ்ய மண்டநம் லோகரஞ்ஜநம்” என்று மிப்படியன்றோ கழித்துக் கிடக்கிறது. “நாராயணைகநிஷ்டஸ்ய யாயா வ்ருத்திஸ்ததர்சநம் । யோயோ ஜல்பஸ்ஸ ஸ ஜப: தத்த்யாநம் யந்நிரீக்ஷணம் ॥ தத்பாதாம்ப்வதுலம் தீர்த்தம் தது ச்சிஷ்டம் ஸுபாவநம் ॥ தது க்திமாத்ரம் மந்த்ராக்ர்யம் தத்ஸ்ப்ருஷ்டமகிலம் சுசி ॥ என்றன்றோ பாகவத விஷயத்தில் ரஹஸ்ய சாஸ்திர ப்ரமாணமிருப்பது என்ன வருளிச் செய்கிறார்.

மூ—இப்படிகளால் ஸம்ப்ரதிபந்ந சாஸ்த்ர விரோதமன்றிக்கே சாஸ்திர மூலத்வ ஸம்ப்ரதிபத்தி யுண்டான ஸம்ப்ரதாயமே உபஜீவ்யம்.

வ்யா—இப்படிகளாலென்றது—ஶாஸ்த்ரைக ஸம்ப்ரதாயத்திலே ஶாஸ்த்ர மூலமன்றிக்கே ஸம்ப்ரதிபந்ந சாஸ்திரத்துக்கு விருத்தமாய் ஸ்வகபோல கல்பிதமாயிருந்த ஸம்ப்ரதாயம் ப்ரமவிப்ரலம்பமூலக மென்றும், ஸதஸ்ய ரஹஸ்யங்களுக்கு பரஸ்பர விரோதம் சொல்ல வொண்ணாது என்றும் கீழ்ச்சொன்ன ப்ரகாரங்களா லென்றபடி. “ஸம்ப்ரதிபந்ந சாஸ்திர விரோதமன்றிக்கே” அர்த்தத்தில் விப்ரதிபத்தி யில்லாத சாஸ்திர விரோதமன்றிக்கே. அந்த சாஸ்திரங்களாகிறன—“ஶூதாயஸம் வெஷ்வெஶூத்ரெ” இத்யாதியான பாகவத சூத்ரனுக்கு ஆசௌச நியமம் சொல்லும் தர்ம சாஸ்திரங்கள். பாகவத ப்ராம்மணன் இன்னபடியே வர்த்திப்பான் பாகவத சூத்ரன் இன்னபடியே வர்த்திப்பான் என்று ஜாதிபேதேந பாகவதத்வ குணமடியாக ஆசாரநியமங்கள் சொல்லும் சாஸ்திரங்கள். “நஹ்யஸ்ய வர்ணபோஜ்ஞாநி நாவ்யந்த்ய வியய ஹ்யஸ்யா ஶ்ரோணாங்க ஶூத்ர ஜாதீநாம் ஶூத்ரதாகீர்த்திஷ்யதே” இத்யாதிகள். பாஞ்சராத்ர சாஸ்திரங்கள் ரஹஸ்ய சாஸ்திரங்கள் ஆனாலும் ததந்தர்கதமான சேஷ ஸம்ஹிதையிலே “ப்ராஹ்மணாதிஷு ஶூத்ரேஷு தேவாமாய ஹரிவணாஶ கீர்த்தநம்” என்று தொடங்கி, விஸ்தரேண பாகவதக்ரைவர்ணிகாசாரம் சொல்லி “ஸ்ரீஶூத்ராணாம் விப்ராவகேஷ்ய ஸஜாதீயைர்ஜவ வர்ஜிதம்” என்று தர்ம சாஸ்திராநுஸாரியாகவே ஆசார நியமங்கள் சொல்லாநின்றது. இந்த சாஸ்திரங்கள் பாகவதரைப் பற்றியே உத்பந்நங்கள் ஆகையாலே ஆஸ்திகரா யிருப்பார்க்கு இதில் விப்ரதிபத்தி பண்ண வழி இல்லை. கீழுதாஹரித்த “ஸர்வவர்ணேஷு தே ஶூத்ரா:” இத்யாதிகள் அர்த்த விப்ரதிபந்நங்கள். இவ்வசநங்கள் பாகவத ப்ரபாவ பரம் என்றிறே சித்தாந்திகள் நிர்வஹிப்பது. ஆகையால் வசநம் அவிப்ரதி

பங்கமானாலும் அர்த்தத்தில் விப்ரதிபத்தி உண்டாகையாலே அவிப்ரதிபந்நார்த்த வசநங்களைக்கொண்டு விப்ரதிபந்நார்த்த வசநங்களுக்கு அர்த்த நிர்ணயம் பண்ணுமது ப்ராமாணிகமாகையால் அப்படி பண்ணும் ஸம்ப்ரதாயமே உபஜீவ்யமெனத் தட்டில்லை. சாஸ்த்ர மூலத்வ ஸம்ப்ரதிபத்தி யுண்டான ஸம்ப்ரதாயமிதி"—"நாராயணைக நிஷ்டஸ்ய" இத்யாதியாய் முன்னுதாஹரித்த வசநங்கள் ஆளவந்தார் முதலான நம் பூர்வாசார்யர்களால் அநுதாஹ்ருதங்களாயையாலும் இந்த வசனங்களுக்கு விருத்தமாக ஆகமப்ராமாண்யத்திலே "[illegible]" என்று பகவத் தர்மநிஷ்டனுக்கு ஸமயாசாரம் சொல்லுகிற ஸநத்குமார ஸம்ஹிதா வசநத்தை உபாதாநம் பண்ணியிருக்கையாலே ஸம்ப்ரதிபந்ந சாஸ்திரங்கள் என்ன வொண்ணாது. ஆகையாலேயிறே பெரிய ரஹஸ்யத்திலே ப்ரபாவ வ்யவஸ்தையிலே இவ்வசநங்கள் ப்ரமாணங்களேயாகிலும் என்றருளிச் செய்தது. பிள்ளைக்கு ப்ரமாணமன்றென்றே திருவுள்ளம். ப்ரமாணமென்று கொண்டால் ஸம்ப்ரதிபந்ந சாஸ்திர விருத்தமான யயா [illegible]யாயிருந்த ஸம்ப்ரதாய மநுபஜீவ்யமாய் ஸம்ப்ரதிபந்ந சாஸ்திராநுஸாரியாய் அர்த்தாவலம்பியான ஸம்ப்ரதாயமே உபஜீவ்யமாயிருக்கும். ப்ரபாவவ்யவஸ்தையிலே தானே இவ்வசநார்த்தங்களை கேட்டுத் தெளிவது "உபஜீவ்யம்"—இப்படிக்கொத்த ஸம்ப்ரதாயத்தை அவலம்பித்தாலொழிய தத்வோபாய புருஷார்த்தங்களில் நிஷ்கர்ஷமுண்டாகாதாகையால் இதுவே உபஜீவநஹேது. ஜீவநமாவது—ஸம்ஸாரோந்மோசநம். உபஜீவ்யம் = உபஜீவநார்ஹம். ஸம்ஸாரோந்மோசநார்ஹ மென்றபடி. உபாச்ரித்ய ஜீவநார்ஹம் என்றும் சொல்லலாம்.

அவ—இப்படி ஸாமாந்யமாக ஸத்ஸம்ப்ரதாய மறியும் ப்ரகார மருளிச் செய்து இனி இந்த ஸத்ஸம்ப்ரதாயத்தில் ஆபாதப்ரதீதியில் தத்வ விஷயத்திலும் அநுஷ்டாந விஷயத்திலும் உபாய விஷயத்திலும் தோற்றும் விரோதங்களுக்கு பரிஹாரக்ரமங்களை ஸாமாந்யேந திங்மாத்ரேண ப்ரதர்சநம் பண்ணப் போகிறவராய் முந்துற தத்வ விஷயத்தில் பரிஹாரம் பண்ணுகிறார்.

மூ—அப்படிப்பட்ட ஸத் ஸம்ப்ரதாயத்திலே தோற்றும் விரோதம் தத்வ விஷயமாகில் தாத்பர்ய பேதத்தாலே விரோத சாந்தி உண்டாம்.

வ்யா—ஸத் ஸம்ப்ரதாயமாகிறது—ப்ரமாண ப்ரதிபந்நமாய் முமுக்ஷோருபாதேயமாயிருந்த ஸம்ப்ரதாயம். அப்படிப்பட்ட ஸத் ஸம்ப்ர

தாயத்திலே என்றத்தால் இப்படி இல்லாத ஸம்ப்ரதாய மொன்றுண்டென்று தோற்றுகிறது. அதாகிறது—எம்பெருமானார் நித்யத்திலே பூத சுத்தி அருளிச் செய்யும் ப்ரகரணத்திலும் ஸ்ரீ பாஷ்யாதிகளிலும் மற்றுமவ்வ ப்ரகரணங்களிலும் தத்வோத்பத்தி க்ரமத்தை நிஷ்கர்ஷித்து அருளிச் செய்யா நிற்க அதுக்கு விபரீதமாக யாதவப்ரகாசமதாவலம்பநம் பண்ணி தத்வநிரூபணம் பண்ணுவார் சிலருண்டு. "பூதாதியில் நின்றும் சப்ததந்மாத்திரை பிறக்கும், அதில் நின்று மாகாசமும் ஸ்பர்சதந்மாத்திரையும் பிறக்கும். அதில் நின்றும் வாயுவும் ரூபதந்மாத்திரையும் பிறக்கும். அதில் நின்று தேஜஸ்ஸும் ரஸதந்மாத்திரையும் பிறக்கும். அதில் நின்றும் அப்பும் கந்ததந்மாத்திரையும் பிறக்கும். அதில் நின்றும் ப்ருதிவீ பிறக்கும். என்றிப்படி யாதவ ப்ரகாச பக்ஷத்தை முந்துற ஸ்வபக்ஷமாகச் சொல்லி, ஸ்பர்சதந்மாத்திரை தொடக்கமான நாலு தந்மாத்திரைகளும், ஆகாசம் தொடக்கமான நாலு பூதங்களுக்கும் கார்யமாய் வாயு தொடக்கமான நாலு பூதங்களுக்கும் காரணமாயிருக்குமென்றும் சொல்லுவர்கள் என்று பகவத் பாஷ்யகார பக்ஷத்தை அநாதரம் தோற்ற எழுதினருண்டு. முன்பு சொன்னது யாதவ ப்ரகாச பக்ஷமென்றுமிடம் யாதவ ப்ரகாச க்ரந்த ஸம்வாத பூர்வகமாய் வ்யாக்யாதா காட்டினர். இவ்வழி அடியொற்றினர் முன்பே பலருண்டு. அவர்கள் சொல்லுமது ஸத் ஸம்ப்ரதாயம் அன்றென்னுகொண்டு ஸ்ரீ பாஷ்யகாரர் க்ரந்த முகமாயும் உபதேச முகமாயும் வந்த ஸத் ஸம்ப்ரதாயத்திலே முந்துற தத்வ விஷயத்தில் உண்டான விரோதத்தைப் பரிஹரிக்கிறார். "தோற்றும் விரோதம் தத்வ விஷயமாகில் என்று. இங்கு சொல்லவேண்டியவை எல்லாம் மேல் ரஹஸ்யங்களில் தத்வ நிரூபண ப்ரகரண வ்யாக்யாநங்களில் கண்டுகொள்வது. விரோத ப்ரதீதி எங்ஙனே என்றில், ஸம்ப்ரதாய ஸ்ரீஸூக்திகளிலும், அதுக்கு மூல பூதப்ரமாணங்களிலும் தத்வம் ஏகமென்றும் இரண்டென்றும், மூன்றென்றும் இப்படி பலப்ரகாரங்களாக வகுத்துக் காட்டுகையாலே சித்தம். தோற்றும் விரோதம் என்கிறது—ஆபாதப்ரதீதியாலே. "விரோதம் தத்விஷயமாகில்" இத்யாதி. வஸ்துநி விகல்பம் கூடாதாகையாலே எல்லாவற்றுக்கும் ஏகத்ர தாத்பர்யம் கொள்ளவேண்டி அவாந்தர விபாகபேதங்களுக்கு தாத்பர்யபேதகல்பநம் ஆவச்யகம் என்று திருவுள்ளம். "தாத்பர்ய பேதத்தாலே" என்றது அந்தந்த விபாகத்துக்கு அநுகுணமான ஞாநாநுஷ்டாந ப்ரதிஷ்டாரூப பல விசேஷாநுகுண தாத்பர்ய பேத கல்பநத்தாலே என்றபடி. அதாகிறது—[illegible] என்கிறது ஸர்வமும் [illegible] விசேஷணமாய் தோற்றி, இவற்றிற்கு [illegible]மாகைக்காக. ஈச்வர தத்வம் ஈசிதவ்ய தத்வம் இப்படி இரண்டு படியாக விபஜிப்பதற்கு ஈச்வரவ்யதிரிக்த க்ருத்ஸ்நத்

துக்கும் ஸ்வாதந்த்ர்யாத்யந்த நிஷேதத்திலே தாத்பர்யம். சித், அசித், ஈச்வரன் இப்படி தத்வ த்ரயமாக விபாகத்துக்கு ப்ராக்ருதாத்ம ப்ரமமும் ஸ்வதந்த்ராத்மப்ரமமும் இதுக்கு நிதாநமான அநீச்வரவாத ருசியுமாகிற மஹாவிரோதிகளை முற்பட கழிக்கையிலே தாத்பர்யம். இப்புடைகளிலே ரக்ஷ்யம் ரக்ஷகன், ஹேயம் உபாதேயம், என்று அர்த்தசதுஷ்டய விபாகத்திற்கும் "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோரூபம்" இத்யாதிகளில் ஸங்க்ரஹித்த படியே அர்த்தபஞ்சகவி பாகத்திற்கும் இத்தோடு நம் தர்சநத்துக்கு ப்ரதாநப்ரதி தந்த்ரமாயிருந்த சரீராத்மபாவ ஸம்பந்தத்தையும் கூட்டி ஷடர்த்தங்கள் என்கிற விபாகத்திற்கும் ரஹஸ்யாம்நாயதந் மூல பகவச் சாஸ்திரங்களிலே பகவான் வித்யா, கர்ம கால: கர்தவ்யதா, இதிகர்தவ்யதா ஸமய: என்று ஸப்ததா விபாகத்திற்கும் ப்ரயோஜநம் பூர்வாசார்ய க்ரந்தங்களிலே தெளிந்துகொள்வது. "விரோத சாந்தியுண்டாம்" வஸ்துநி விகல்பமில்லாமையாலே அபிப்ராயபேதத்தாலே கீழ்க்காட்டின விபாகங்களுக்கு பரிஹார முண்டாகக் குறையில்லை. இப்படியே தத்வோத்பத்திக் க்ரமத்திலே சதுர்விம்சதி பஞ்சவிம்சத்யாதி பரிகணநங்களிலும் கண்டு கொள்வது. அப்பிலிருந்து அக்நி உண்டாயிற்றென்றும் அக்நியிலிருந்து அப்பு உண்டாயிற்றென்றும் ஓதினவிரண்டும் வ்யஷ்டி ஸமஷ்டி ஸ்ருஷ்டிபேதந நடக்கும்கல்ப பேதங்களிலே யாகையாலே விரோதமில்லை. வாதுர்வ்யூஹம் பரம் ப்ரஹ்ம" இத்யாதிகளிலே வ்யூஹம் நாலாயிருக்க த்ரிவ்யூஹமென்கிற ஸம்ப்ரதாயம் வ்யூஹவாசுதேவ ரூபத்திற்கு பரரூபத்திற் காட்டில் அநுஸந்தேய குணபேத மில்லாமையாலே உபபந்நம்.

அவ—இப்படி தத்துவ விஷயத்தில் விரோத சாந்தி உண்டானாலும் அநுஷ்டாந விஷயத்தில் தோற்றும் விரோதத்திற்கு பரிஹாரம் துர்கடமன்றோ. ஶ்ருதிஸ்ம்ருத்யுக்த யாவத்கர்மாநுஷ்டாநாவஶ்யக மென்றும் யதாஶக்த்யநுஷ்டாந மென்றும் இப்படி இரண்டு படியும் ஸம்ப்ரதாயமில்லையோ. தக்ஷாதிகள் காலவிபாகம் பண்ணி அநுஷ்டாநங்களைச் சொல்லாநிற்க பஞ்சராத்ர சாஸ்திரத்தைக் கொண்டு பஞ்சகாலப்ரக்ரியையாலே அநுஷ்டாநமும் விருத்தமாகாதோ. சிலர் மோக்ஷார்த்தமாக ப்ரபத்தியும் பண்ணி அதடியாக பக்தியும் பண்ணாநிற்க சிலர்க்கு ப்ரபத்தி மாத்ராநுஷ்டாநம் விருத்தமாகாதோ. ஸத்வித்யாதஹர வித்யாதிகள் போலே "விகல்போ விஶிஷ்ட பலத்வாத்" என்கிற வதிகரணத்தில் பக்திப்ரபத்திகள் இரண்டும் விகல்பிதங்கள் என்றில் அப்போது லகுவான ப்ரபத்யுபாயத்தை விட்டு குரூபாயமாயிருந்த பக்தியோகத்திலே ப்ரவ்ருத்திப்பாரில்லாமையாலே குருவிதாநவையர்த்த்யம் வாராதோ. ஸ்வார்த்தாநுபவ கைங்கர்ய ரூப பலபேத மிருக்கையாலே ஸ்வார்த்தாநுபவா பேக்ஷிகளைப்பற்ற குரு சாஸ்திர

வையர்த்த்யமில்லையென்றில் அப்போது "[illegible]" இத்யாதிகளில் பக்தி ப்ரபத்திகள் இரண்டுக்கும் கைங்கர்யமே பலம் என்கையாலே துல்யவிகல்பம் என்கிற ஸம்ப்ரதாயத்தோடு விரோதம் வாராதோ வென்ன வருளிச் செய்கிறார்.

மூ—அநுஷ்டாந விஷயமாகில் அவ்வோ விதிக் கநுகுணமாக வ்யவஸ்திதாவ்யவஸ்தித ப்ரக்ரியையாலே விகல்பமாம்.

வ்யா—தோற்றும் விரோதம் என்று கீழ்உள்ளதை இங்கும் அநுஷங்கித்து தோற்றும் விரோதம் அநுஷ்டாந விஷயமாகில் என்று அந்வயித்துக்கொள்வது "அவ்வோ விதிக்கநுகுணமாக"—

"[illegible]" இத்யாதிகளிலே ப்ரதிபந்நமான நித்யகாம்ய விதிகளுக்கு அநுகுணமாக "வ்யவஸ்திதாவ்யவஸ்தித ப்ரக்ரியையாலே விகல்பமாம்" இதி "[illegible]" என்று கிடக்கச் செய்தே "[illegible]" என்று நித்யம் நிக்ரஹாநுத்பத்யர்த்தமாக எல்லாருக்கும் வ்யவஸ்திதமாய் "[illegible]" என்று காம்யம் [illegible] க்ஷீணமாகையாலே அவ்யவஸ்திதமாய் இப்படி விகல்பமாயிருக்கும் என்றபடி. வ்யவஸ்திதாவ்யவஸ்தித ப்ரக்ரியையாலே என்றது. "[illegible]" [illegible]" என்கிறபடியாலே பக்தியோக நிஷ்டன் நித்யநைமித்திக காம்யங்களில் ஒன்றும் விடாதே "ஸஹகாரித்வேந" என்கிற கணக்கிலே வித்யாஸஹகாரமாக [illegible] எல்லா மநுஷ்டிக்க வேணும். பக்தியோகம் காம்யமாகையாலே "[illegible]" என்கிறபடிக்கு அத்தனையு மநுஷ்டிக்க வேண்டியிருக்கும். ப்ரபந்நனுக்கு இந்த நிர்பந்தமில்லை. "ஸஹகாரித்வேந" என்கிற வேஷம் தவிருகையாலே நித்ய நைமித்திகங்களிலும் யதாஶக்தி "[illegible]" என்கிற ஸூத்திரத்தின்படியே வ்யவஸ்திதமாய் காம்யங்களில் அவ்யவஸ்திதமா யிருக்கும். தக்ஷாதி மஹரிஷிகளும் [illegible] கால விபாகத்துக்கு [illegible] மன்றிக்கே ஆபேக்ஷிகமாக காலத்தை [illegible] பிரித்து பகவதாராதநமாகவே கர்மத்தை விதிக்கையாலே விரோதமில்லை. இப்படி பஞ்சகால ப்ரக்ரியையாலேதானே ஆராதநம் பண்ணவேணும் என்றுமிடத்தை | "இருமுப்பொழு தேத்தி" என்கிற பாசுரத்திலே விவக்ஷிதமாக பூர்வாசார்யர்கள் வ்யாக்யானம் பண்ணினார்கள். அப்படியே,

" [illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

என்று ஸ்ரீ பாஷ்யகாரர் ஸங்க்ரஹிக்க இத்தை வங்கிபுரத்து நம்பிகளும் தம்முடைய நித்யத்திலே சேர்த்தருளினர். பிள்ளையும் ஸாராவளியிலே "[illegible]" என்றும் [illegible] திகளிலே கால விபாகத்துக்கு விரோதமில்லாத படி நிர்வஹித்தருளினர். இப்படி பகவத்ஸமாராதநம் பண்ணுகை பகவத் பாஷ்யகார ஸம்ப்ரதாய நிஷ்டரான பரமைகாந்திகளுக்கு வ்யவஸ்தித மாயிருக்கும். இஸ்ஸமாராதநங்களிலே அநதிக்ருதரான நம்தர்சந நிஷ்ட சில பரமைகாந்திகள் சிலர் இக் காலங்கள் எல்லாத்திலும் தங்களுக்கு யோக்யங்களான நித்யநைமித்திகங்களாலும் ஸங்கீர்த்தநாதிகளாலும் ஸமாராதநாதி யோக்யரான பரம பாகவதற்கு பாதந்த்ரராய் [illegible] வல்லதேவை செய்துமிக் கைங்கர்ய மிழவாதொழியலாமாகையாலே அவ்ய வஸ்திதமாயிருக்கும். அநுஷ்டாந விஷயமாகி வித்யாதியான ஸ்ரீ ஸூக்திக்கு இப்படி அர்த்தம் கொள்ளுகையே உசிதம். இங்ஙனன்றிக்கே ஏக தேசி களுடைய ஸ்நாநம் முதலான க்ருத்ஸ்நாநுஷ்டாநமும் அசாஸ்திரீயமென்று ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷாதிகளில் தோற்றுகையாலே அத்தையும் கூட்டி வ்ய வஸ்திதா வ்யவஸ்தித ப்ரக்ரியையாலே விகல்பமாமென்னக் கூடாது. இங் கனே சிலர் இந்த மூல ஸ்ரீ ஸூக்தியை ந்யாஸோபாஸனங்களுக்கு அவ்வோ விதிகளில் சக்த்யசக்த்யாதிகள் ப்ரயோஜகமாய். ஏற்படுவதால் வ்யவஸ்தித விகல்பம் என்றும் மாலாகாரணதீபாரோபணம் முதலான கைங்கர்யங் களுக்கு அவ்யவஸ்தித விகல்பம் என்றும் அர்த்தத்திலே யோஜிக்கை யுக்த மாய் இருக்கும் என்றூர்கள். அப்படியே உபாஸநாநுஷ்டாநத்திலே சக்தி யும் ஞானமும் சாஸ்திராநுமத ஜாதி குணதியோக்யதையும் விளம்பக்ஷமத் வமுமிவை வ்யவஸ்தித ப்ரக்ரியையாலே மோக்ஷார்த்தத்திலே விகல்பித [illegible] என்கிற கணக்கிலே அவ்யவஸ்தித ப்ரக்ரியையாலே விகல்ப மாயிருக்கும்.

இளங்குழந்தை முதல் கிழவரீறாக

சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்

ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப் பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கீ, முஸலீ கந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்ப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.

வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,

11, ஆதியப்ப முதலித் தெரு,

வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது

வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरन्यैर्वा बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

“ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்.”

உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்ருகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸ்ரீராஜ்மல் கம்பெனியாரே.



GHARAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

SRI VEDANTA DIPIKA

Vol. 26] DECEMBER 1937 [Part 6

OFFICE OF THE REGISTRAR ... 6 APR 1939

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஈசுவர ௵

கார்த்திகை ௴

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ப்ரசார சபா

(லிமிடெட்)

4-5, வாணி விலாஸ்,

பத்திரய்யன் தோட்டத்தெரு, பார்க்டவுன், மதராஸ்.

விளம்பரம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை நாளது **1938** வருடம் முதல் ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையின் பத்திரிகையாகிய ஸ்ரீ தேசிக—ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷணியுடன் ஒன்றாக இணைக்கப்பட்டு ஸ்ரீ வேதாந்த தீபிகை என்கிற பெயருடன் ஒரே பத்திரிகையாக ஒவ்வொரு ஆங்கில மாதமும் **25**உக்குள் வெளிவரும். இது சம்பந்தமான விசேஷ விளம்பரத்தை நம் தீபிகையின் **247**-ம் பக்கத்தில் கண்டுகொள்ளலாம்.

தீபிகை **1938** ஹு முதல் **27**-வது ஸம்புடமாக ப்ரசுரிக்கப்படும். புதிய கணக்குகளும் ஏற்பாடுகளும் செய்யவேண்டியிருப்பதால் இந்த 6 மாஸ சந்தாவாகிய ரு **1—8—0**யும், பழையபாக்கிகளையும் உடனே சபை ஆபீசுக்கு அனுப்பவேணுமாய் சந்தாதாரர்களை வேண்டிக்கொள்ளுகிறோம். **1938**ஹு ஜனவரி மீ௳த்திய ஸஞ்சிகை பாக்கிதாரர்களுக்கு வீ. பி. மூலமனுப்பப்படும்.

T. RAJAGOPALACHARI
R. TIRUMALAI TATACHARI
Joint Secretaries.

4 APR 1938

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

“ अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् । ”

“ अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । ”

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

158714

அதிர்ஷ்டம்!　　　　எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்ரோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்கி அருந்துங்கள்!　　　　கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு!!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to :—

SRI L. N. CONFECTIONARY,

Sales Depot :—West Chitrai St., Madura.

MADRAS OFFICE :—**Phone No. 3658.**

Y. M. I. A. Buildings, Armenian St., Madras

L　　காயம்—பெருங்காயம்　　**G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ண செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபகம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங்காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।

कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜீ. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய்　　சென்னை　　கும்பகோணம்

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்

(1) ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த ந்யாய சித்தாஞ்சநம்—ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் வெளியிடப்பட்டது. ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி அருளிய வ்யாக்யானத்துடன் கூடியது. விலை ரூ. **5—0—0**

(2) வேதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ பாஷ்யகாரர்) ஸ்ரீ. உப. வாசுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் **3—0—0**

(3) ஸ்ரீ பஞ்சஸ்தவம்—(ஸ்ரீ ஸ்துதி—ஸ்ரீ வைகுண்டஸ்தவம்) ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யரின் உரையுடன் **1—0—0**

(4) ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்தோத்திரங்கள் தேவநாகரத்தில் அச்சிட்டது **1—0—0**

(5) ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீ ஸ்துதி, V. அனந்தாசாரியன் எழுதிய தமிழுரையும் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதிய முகவுரையும். **0—8—0**

(6) ஸ்ரீ சூக்தபாஷ்யம்—ஸ்ரீநஞ்சீயர் அருளிச் செய்தது. சதுச்லோகி, சரணாகதி சத்யம், ஸ்ரீ ஸ்துதி ஸ்ரீ ஸ்தவம், ஸ்ரீ குணரத்நகோசம், லக்ஷ்மீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம், அஷ்டோத்ர சதநாம ஸ்தோத்திரம் இவ்வனைத்துக்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு; by A. Srinivasa Raghavan M.A., (புதுக்கோட்டை மகாராஜா காலேஜ்) **1—8—0**

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகங்கள்

(1) கோபால விம்சதி பகவத் த்யாந ஸோபாநம் **0—1—0**

(2) மகா வீர வைபவம். சுதர்சநாஷ்டகம் கருட தண்டகம் **0—1—0**

கிடைக்குமிடம்:

ஸ்ரீநிவாஸ விலாஸ புஸ்தகசாலை,

16, பாட்டாசாரியர் தெரு, கும்பகோணம்.

(3) அர்ச்சாவதார வைபவம் விக்ரஹாராதநத்தில் ஆக்ஷேபங்களும் ஸமாதாநங்களும் தேவநாகரியில் அச்சிட்டது மகா மஹோபாத்தியாய R. Y. கிருஷ்ணமாசாரியர் இயற்றியது **0—10—0**

வி. அனந்தாசாரியர்

கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம், போஸ்டு சென்னை.

வியாபாரிகளுக்கும் வித்தியார்த்திகளுக்கும் 25% கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

4 APR 1938

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃

[illegible]

விஷய ஸூசிகை

1. ஸ்ரீ உப. வே. மஹாமஹோபாத்யாய நரஸிம்மாசார்ய ஸ்வாமியின் எழுபதாவது திருநக்ஷத்திரக் கொண்டாட்டம் — 173
2. வேதாந்த ரக்ஷாமணி விமர்சம் — 218
   [ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]
3. பிஷ்டபசு நமக்கு உபாதேயமல்ல — 224
   [ஸ்ரீ. உப. அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசார்யர்]
4. ஸங்கல்ப ப்ரயோக விசாரம் — 233
   [ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]
5. ஸங்கல்ப தத்வ நிருபணம் — 234
   [ஸ்ரீ. உப. ஈ. வீரராகவாசார்யர்]
6. காலஞ்சென்ற சேட்லூர் துரைசாமி அய்யங்கார். — 238
7. பண்டைத் தமிழர் மதம் — 239
   [ஸ்ரீ. உப. ப. ரே. திருமலை அய்யங்கார்]
8. கோதாவதார நிர்ணயம் — 243
   [ப்ரம்மஸ்ரீ. வி. நாராயணய்யர், மைலாப்பூர்]
9. ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷணி ஸபையின் தீர்மானங்கள் — 247
10. ஸ்ரீ வேதாந்த தீபிகையும் ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷணியும் — 249
11. வேதாந்த ஸாரம் — 25—33
12. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தி — 41—48

திருவஹீந்திரபுரம் சேட்டலூர் வித்வான்
பகவத் விஷயம் பண்டித பூஷணம் தேசிக தர்ஶநாசார்யர்
ஸ்ரீ உப. வே. மஹாமஹோபாத்யாய
நரஸிம்மாசார்ய ஸ்வாமி.

திருவஹீந்திரபுரம் சேட்டலூர் வித்வான்
பகவத் விஷயம் பண்டித பூஷணம் தேசிக தர்ஶநாசார்யர்

ஸ்ரீ உ.வே. மஹாமஹோபாத்யாய நரஸிம்மாசார்ய ஸ்வாமியின்
எழுபதாவது திருநக்ஷத்திரக் கொண்டாட்ட நிர்வாக ஸபையாரின்

வர்த்தமான நிவேதனப் பத்திரிகை.

நமது ஸ்வாமியின் எழுபதாவது திருநக்ஷத்திரத்தை விஶேஷமாகக் கொண்டாடவேண்டியதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் விவரங்கள் ஞாபகச்சின்னத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 1—11—57ல் அழைப்புப் பத்திரிகை ஸ்வாமியின் ஶிஷ்யர்களுக்கும் அபிமானிகளுக்கும் அனுப்பப்பட்டது.

நமது ஸபாத்யக்ஷரும் ஸ்வாமியிடத்தில் அபிமானமுள்ளவர்களுள், முன்னிற்பவருமான சென்னை, அட்வகேட், ஸ்ரீ உ.வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பங்களூரிலிருந்து நேரில் மோட்டார் வண்டியிலேயே, திருவஹீந்திர புரத்திற்கு சனிக்கிழமை மாலை 7 மணிக்கே வந்து சேர்ந்தார். ஸ்வாமியின் ஶிஷ்யர்களில் சுமார் முன்னூறுபேர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குள் வந்து சேர்ந்தார்கள்.

அழைப்புப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்த நடைமுறைப்படி அவர்கள் எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7—15 மணிக்கு ஸ்வாமியின் திருமாளிகையில் கூடினார்கள். அவர்களுக்கு பரமோத்தேஶ்யமான ஸ்ரீபாத தீர்த்த க்ரஹணத்திற்கு பூர்வாங்கமான ஸ்வாசார்ய ப்ராசார்யாதிகளுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது. அவ்வமயம் நமது ஸபாத்யக்ஷர் நூறு ரூபாய் விலையுள்ள உயர்ந்த வேஷ்டியையும் புடவையையும் ஸமர்ப்பித்தார். ஸ்ரீ பாத தீர்த்தம் அனைவருக்கும் ஆனபிறகு ஸ்வாமிக்கும் ஸபாத்யக்ஷருக்கும் மாலையிடப்பட்டது. அங்கிருந்து எல்லோரும் புகைப் படம் பிடிப்பதற்காக ஸந்நிதியின் கீழ்புறத்திற்குச் சென்றார்கள். புகைப் படம் எடுத்தானதும் அங்கிருந்து ஸந்நிதியை ப்ரதக்ஷிணம் செய்து கொண்டு ஊர்வலமாய் மேள வாத்யாதிகளுடன் ஸ்வாமியை ஸ்ரீ தேசிகன் திருமாளிகைக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனார்கள்.

திருமாளிகையில் எல்லோரும் அமர்ந்தவுடன் பணப்பையை ஸமர்ப்பிப்பதற்கு முன்பு ஸபாத்யக்ஷர் ஸ்வாமியை அறிந்து அவருடன் சுமார் 25 வருடங்களாகக் கூடப் பழகி, அநுபவித்து, தாம் அறிந்துகொண்ட பல அரிய விஷயங்களை எடுத்துக்காட்டி ஓர் சிறந்த உபந்யாஸம் செய்தார். இந்த உபந்யாஸம் முழுவதும் ஸ்வாநுபவ பரீவாஹமாய் இருந்தாலும்

அது ஸ்வாமியின் ப்ரபாவ விஶேஷங்களை வெளியிட்டபடியினால் பரோபதேஶமாயும் நின்றது. அங்கு கூடியிருந்த நானூறு திருநாமங்களின் ஒவ்வொருவரும் அவருடைய உபந்யாஸத்தை ஶ்ரத்தையுடனும் பலத்த கரகோஷத்துடனும் அனுபவித்தார்கள். ஸபாத்யக்ஷர் தாம் பகல் 11-மணிக்கெல்லாம் சென்னைக்கு அவஸரமாகப் போகவேண்டும் என்று சொன்னபடியினால் மாலை 2 மணிக்கு ஸமர்ப்பிக்கப்பட வேண்டிய ஞாபகச் சின்னமும் காலையிலேயே ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸபாத்யக்ஷரின் உபந்யாஸத்தை ஸங்க்ரஹித்து எழுதுவது மிகவும் கடினமே ஆனாலும் அன்று கூட இருந்து அனுபவியாத மற்றவர்களும் அதில் ஸ்வல்ப பாகத்தையாவது அநுபவிப்பதற்காக அதில் சில பாகம் இங்கு ஸங்க்ரஹிக்கப்படுகிறது:—

“ஸ்வாமிக்கு ஸ்ரீதேஶிகனிடத்திலுள்ள பக்திக்கும், அவருடைய ஸ்ரீஸூக்திகளை லோகத்தில் பரவச்செய்வதிலுள்ள ஆஸ்தைக்கும் எல்லையே கிடையாது. ஶரீர ஸம்பந்தத்தால் நேரிடக்கூடிய விக்னாதிகள் ஒன்றுமில்லாமல் இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீ தேஶிகனுக்கு நிரந்தரமாகக் கைங்கர்யம் செய்யும்படி பகவான் ஸங்கல்பித்தானாகில் மோக்ஷம் தமக்கு வேண்டாமென்று சொல்லக்கூடிய இயல்பினர் நமது ஸ்வாமி. பகவான் தன்னை ஆஶ்ரயித்தவர்களுக்குத் தன்னைப்போல் ஸாம்யம் கொடுக்கிறான் என்று ஶாஸ்திரங்கள் சொல்லா நிற்கும். அது உண்மையோ அல்லவோ, ஆனால் ஆசார்யனாகிய ஸ்ரீ தேஶிகன் தம்மை ஆஶ்ரயித்தவர்களைத் தம்மைப்போல் ஆக்கிவிடுகிறார் என்னும் விஷயம் உண்மையே. இதை ஒருவரும் மறுக்கமுடியாது. அதற்கு நிதர்ஶநம் நமது ஸ்வாமியே எங்ஙனே என்னில் :—

“ஸ்ரீ தேசிகன் நித்ய விபூதியில் திருமாமணி மண்டபம் என்று உத்கோஷிக்கப்படும் மண்டபத்தில் முக்தன் பரமாத்மாவினால் ஸத்கரிக்கப்படுகிறான் என்று அனுஸந்தித்தார். அந்த அனுபவத்தை அவர் இப்பொழுது அந்தத் திருமாமணி மண்டபத்தின் மஹிமைக்குத் துல்யமான மஹிமையையுடைய தம்முடைய இந்த திருமாளிகையில் அப்படிப்பட்ட ஸத்காரத்தைப் பெறும்படியான அனுக்ரஹத்தை நமது ஸ்வாமி விஷயத்தில் செய்திருக்கிறார். தாம் அவதரித்தருளிய விபவ வருஷத்திலேயே நமது ஸ்வாமியை ஜனிக்கும்படி செய்தார். தாம் தேசிகன் என்று சொல்லப்படும்படி நின்றாப்போலே நமது ஸ்வாமியையும் தேசிக பதத்தில் (ஆசார்ய பதவியில்) நிறுத்தியிருக்கிறார். தாம் மஹாதேசிகன் என்னும்படி நின்றார். நமது ஸ்வாமியை மஹாமஹோபாத்யாயர் என்னும் பிருதைப் பெறும்படி செய்தார். தாம் வேதாந்தாசார்யர் என்னும்படி நின்றார். ஸ்வாமியை உபய வேதாந்தாசார்யர் என்று நிற்கும்படி பண்ணி

னார். நமது ஸம்ப்ரதாயத்தில் அனேகப் ப்ரபல பண்டிதர்கள் இருக்கிறார்கள் ஆனாலும் அவர்களில் சிலருக்கு ஒரு வேதாந்தத்தில் பரிசயமே இல்லை. மற்றும் சிலருக்கு அவை இரண்டிலும் பூர்ணமான ஜ்ஞானமில்லை. நமது ஸ்வாமி ஒருவருக்குத்தான் இத்திருநாமம் அந்வர்த்தமானது. தாம் கவிதார்க்கிக ஸிம்மம் என நின்றதை நினைத்து ஸ்வாமிக்கு அந்வர்த்த நாமமான நரஸிம்மம் என்கிற நாமம் இருக்கும்படி செய்தார். இந்த ஸ்வாமியின் பரிசயத்தை எனக்கு உண்டாக்கி வைத்தவரும் தேசிகாசார்யர் என்னும் ஒரு ஸ்நேஹிதரே. ஸ்வாமியுடன் கூடப் பழகினவனாகையினால் ஸ்வாமியினுடைய ஆழ்ந்த தேசிக பக்தியைப் பல தடவைகளில் நான் ப்ரத்யக்ஷத்தில் கண்டிருக்கிறேன். எந்த உத்தமமான வஸ்துவைப் பார்த்தாலும் அதை தேசிகனுக்கு ஸமர்ப்பிக்க வேண்டுமென்கிற எண்ணம் தான் ஸ்வாமிக்கு முதலில் உண்டாகும். இவருடைய இந்த மனோபாவத்தைப் பலர் அறியாமல் இவருக்கு பகவத் பக்தி இல்லை என்று என்னிடமே சொல்லியிருக்கிறார்கள். ஸ்வாமியின் மனோபாவமோ ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளை லோகத்தில் பரவச்செய்தே பரமமான தர்மம் என்பதும், அதற்காகத் தம்முடைய ஆயுளை த்யாகம் செய்ய ஸித்தம் என்பதும். இது கேவலம் மனோபாவத்தோடே நின்று விடாமல் அனுஷ்டான பர்யந்தமாய் நிற்கிறது நமது ஸ்வாமி விஷயத்தில். ஸ்வாமி தம்முடைய உபதேஶாதிகளினால் தம்மைப்போல் ஆசார்ய பக்தியுள்ள ஶிஷ்யனை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார். தேசிக ஸம்ப்ரதாயத்தில் பிறக்கும்படியான பாக்யம் பெற்ற பலர் நமது மதத்தின் பெருமையை உணராது மதாந்தரங்களில் ப்ரவேஸித்தும், ப்ரவேஸிக்க ஸித்தமாயும் இருந்தவர்களைச் சீர்திருத்தி ஸம்ப்ரதாயத்தில் ஊற்றமுடையவர்களாகச் செய்திருக்கிறார். நமக்கு முன்பாக இதோ காணப்படும் நூற்றுக்கணக்கான ஸ்வரூப ஜ்ஞானம் பெற்ற பாகவதர்களைத் திருத்திப் பணிகொள்ளும்படியான பேறு நமது ஸ்வாமிக்குத்தவிர வேறு எவருக்குக் கிடைத்திருக்கிறது? ஸ்ரீ தேசிகன் பல க்ரந்தங்களை அருளிச்செய்து அவற்றின் மூலமாய்ப் பலரைத் திருத்தினார். கால ஸ்வபாவத்தினால் அவற்றை அறிய ஶக்தியில்லாமல் ஜனங்கள் நிற்கும் இக்காலத்தில் நமது ஸ்வாமி அவற்றில் ப்ரதானமானவைகளுக்கெல்லாம் எளிய தமிழ் நடையில் வ்யாக்யானமிட்டு அவற்றை லோகத்தில் பரவச்செய்திருக்கிறார்.

“ஸ்வாமியின் உபந்யாஸங்களில் பல விஶேஷார்த்தங்களைக் கேட்டுள்ளேன். ஸ்ரீ ராமாயண காலக்ஷேபங்களில் ஸ்வாமி ஸாதிக்கும் அர்த்த விஶேஷங்களைப் புகழாதவர் இல்லை. ஒரு சமயத்தில் மதுர கவிகளின் ப்ரபாவத்தை நிரூபிக்கும் ப்ரகரணத்தில் துன்புற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தோல் வழியே நல் வழிகள் துணிவார்கட்கே’ என்பதற்கு

ஸ்வாமி நிரூபித்த அர்த்தம் இப்பொழுதும் என் முன்னே தோன்றுகிறது–'துன்பற்ற, தோன்றக் காட்டும், தோல் வழியே நல்வழிகள்' என்ற பதங்களுக்கும் 'தோல் வழியே நல்வழிகள்' என்கிற இடத்தில் ஏக வசனத்திற்கும் பஹு வசனத்திற்கும் ஸ்வாமி உபபாதித்த ஸ்வாரஸ்யார்த்தங்களை அடியேன் ஒரு காலத்திலும் மறக்க முடியாது.

"இப்படிப்பட்ட ஸ்வாமிக்கு நமது க்ருதஜ்ஞதையைத் தெரிவிப்பதற்காக இந்தப் பணப்பையை ஸமர்ப்பிக்கும்படியான பாக்யம் கிடைத்தது என்னுடைய ஜன்மாந்தர ஸுக்ருத பலமே. "இது எங்களுடைய க்ருதஜ்ஞதையை ஏதோ கொஞ்சம் வெளியிடுகிறதேயன்றி ஸ்வாமியின் ப்ரபாவத்திற்கு லக்ஷத்தும் அநுகுணமானதன்று. இத்துடன் ஸ்வாமியின் ஜீவிய சரித்திரமும், ஸ்வாமியின் விஷயமான புகழுரைகளும், வ்யாஸங்களும், ஸம்ப்ரதாய விஷயமான வ்யாஸங்களும் அடங்கிய இந்த ஞாபகச் சின்னத்தையும், ஸ்வாமியின் திருவாராதனத்திற்கு உபயோகப்படுவதற்காகச் செய்யப்பட்ட இந்த கோவிலாழ்வாரையும் ஸமர்ப்பிக்கிறேன். ஸ்வாமி இவற்றை அங்கீகரிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்"—என்று.

இதற்கு ஸ்வாமி 'ஸபாத்யக்ஷர் இப்பொழுது சொன்னவை எல்லாம் அவருடைய ஸ்வாநுபவமாகையால் அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அவர் சொன்னபடியே 'ஆசார்ய ஸார்வபௌமன் அடியேனுக்கு தேஹ தார்ட்யாதிகளை அநுக்ரஹித்தால் அவற்றைக்கொண்டு அவனுடைய, திவ்யார்ச்சா ரூபத்தில் கைங்கர்யம் செய்வதை விட்டுவிட்டு மோக்ஷத்திற்குப் போக ஆசைப்படமாட்டேன்' என்பது உண்மையே. ஸ்ரீ தேசிக ஸம்பரதாயத்தில் பிறந்து அதில் விசேஷ ஜ்ஞானாதிகளைப் பெற்றிருக்கும் ஒருவன் தன்னுடைய ஜ்ஞானத்தை லோகத்தாருக்குப் பயன்படுமாறு செய்யக் கடமைப்பட்டவன். அதுவே இவனுடைய ஸ்வரூபத்திற்கு உசிதமானது என்பது என்னுடைய அபிஸந்தி. இதுவே ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம். உகந்தேற்கும் உத்தமமான பணி. ஆகையினால் நீங்கள் இப்பொழுது என்னைப் பெருமைப்படுத்துவதெல்லாம் விபூதிமானை அவருடைய பெருமைக்குச் சேரும் என்று கொண்டு இவற்றைப் பெற்றுக்கொள்ளுகிறேன்' என்று பதில் அருளிச்செய்தார்.

இதற்குப் பிறகு ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்குச் சென்று, அங்கு அவருக்கு நடத்தப்பட்ட திருமஞ்ஜனத்தை ஸேவித்து, அவருடைய திவ்ய திருமேனி ஸௌஷ்டவத்தில் ஈடுபட்டு, அனைவரும் சிலகாலம் மெய்மறந்து நின்றார்கள். பிறகு மீண்டும் திருமாளிகையை அடைந்து அங்கு நடந்த ததீயாராதனத்தில் எல்லோரும் அந்வயித்தார்கள். சுமார் 400 பேருக்கு ததீயாராதனை நடந்தது. அது முடிவதற்குச் சற்று முன்பேயே ஸபாத்யக்ஷர் அவஸரமாய்ச் சென்னைக்குப் புறப்படவேண்டியிருந்தது.



எழுபதாவது திருநக்ஷத்திரக் கொண்டாட்டம்—7-11-1937.

ஸ்வாமியும் அவருடைய சிஷ்யர்களும் அபிமானிகளும்.

மாலை 2—30 க்கு மறுபடியும் எல்லோரும் கூடினார்கள். அவ்வமயம் ஞாபகச் சின்னத்திலிருந்து ஸ்வாமி விஷயமான புகழுரை முதலியவைகள் படிக்கப்பட்டன. ஸ்வாமியின் க்ருதிகளில் சில பாடப்பட்டன. இந்த கொண்டாட்டத்திற்கு திரவ்ய ஸஹாயம் செய்தவர்களில் அங்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் ஞாபகச் சின்ன ஸம்புடம் கொடுக்கப்பட்டது.

மாலை 6 மணிக்கு திருமாளிகையிலிருந்து ஸ்வாமி ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணப்பட்டார். ஸ்வாமியின் சிஷ்யர்களுடைய கூட்டத்தையும், மேளவாத்தியத்தையும், பாண வேடிக்கையையும் பார்த்த ஜனங்கள் இது ஒரு பெரிய உத்ஸவம்போலிருக்கிறது என்று ஆசி கூறினார்கள். இரவில் மறு படியும் ததீயாராதனை நடந்தது. பிறகு ஸ்வாமியைத் தண்டன் ஸமர்பித்து, அவருடைய நியமனம் பெற்றுக்கொண்டு சிஷ்யர்கள் சென்றார்கள்.

இதுவிஷயமான வரவு செலவு கணக்குகளும் அன்று எடுக்கப்பட்ட புகைப்படத்தின் அச்சு ப்ரதி ஒன்றும் இத்துடன் அனுப்பப்பட்டிருக்கிறது. புகைப்படம் வேண்டுமானால் ரூ. 1—12—0 அனுப்பினால் ஒரு ப்ரதி தபால் மூலமாய் அனுப்பப்படும்.

மிகுதியாய் நிற்கும் பணமும், ஞாபகச்சின்னம் விற்பனையினால் கிடைக்கும் தொகையும் ஸ்வாமியினிடம் பின்னால் ஸமர்ப்பித்து விடப்படும்.

இந்த மஹோத்ஸவத்திற்கு வந்தவர்களில் எழுவர்கள் சேர்ந்து, ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளில் வ்யாக்யானம் செய்யப்படாத க்ரந்தங்களை நமது ஸ்வாமியின் வ்யாகயானத்துடன் வெளியிடவேண்டுமென்றும், அவற்றில் முற்பட அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களை வெளியிட வேண்டுமென்றும், அவற்றை ஒவ்வொரு ரஹஸ்யமாக வெளியிடுவதற்கு வேண்டிய லௌகிக ஸௌகர்யங்களை செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்கிறார்களென்றும் மூன்று மாதங்களுக்குள் முதல் ரஹஸ்யமான ஸ்ரீ ஸாரஸாரம் வெளிவரும் என்றும் கேள்விப்பட நாம் மிகவும் ஸந்தோஷிக்கிறோம். இது பூர்த்தியாய்விட்டால் ஸ்ரீ தேசிகனுடைய ரஹஸ்யங்களுக்கெல்லாம் முதல் முதல் வ்யாக்யானமிட்ட பாக்யமும் பெருமையும் நமது ஸ்வாமியின் கூறாகும்.

இப்படி நமது ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதானரான ஸ்ரீ தேசிகனிடத்து விசேஷமாக ஈடுபட்டு நிற்கும் நமது ஸ்வாமியின் இந்த எழுபதாவது திருநக்ஷத்திர கோண்டாட்டத்திற்கு த்ரவ்ய ரூபமாகவும் வியாஸங்கள் ரூபமாகவும் உபகரித்தவர்களுக்கு ஸபையாரின் க்ருதஜ்ஞதையை இதன் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(சென்னை 22—12—37) நிர்வாஹ ஸபையாரின் நியமனப்படி, கார்யதர்சி.

ஸ்ரீ:

வேதாந்த ரக்ஷாமணி விமர்சம்

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர்]

(தொடர்ச்சி)

இந்த ஸூத்ரத்தில் இந்த ச்ருதி ஸூத்ரகாரர் மனதிலுள்ளதென்று இரண்டு பாஷ்யங்களுக்கும் ஸம்மதம். கர்ம பலன்களைப் பரீக்ஷித்து அவை அநித்யம், அல்பம் என்று தள்ளவேண்டும் என்று ச்ருதி. பரீக்ஷையென்பது ந்யாயங்களைக் கொண்டுதான் செய்யவேண்டும். அந்தந் யாயங்கள்தான் கர்மமீமாம்ஸை (ந்யாய ஸஹஸ்ரீ). இந்த ஸூத்ரத்தில் இந்த ச்ருதியை ஸூத்ரகாரர் நினைக்கிறாரென்பதை எல்லோரும் ஒப்புகிறார்கள். கர்மங்களைப் பற்றி விசாரித்து (பரீக்ஷை செய்து) அவை அநித்ய பலத்தையேதான் தருவனவென்று நிச்சயித்துக்கொண்டு, அதில் அதிருப்தராய் நித்யமும் பூர்ணமுமான பலத்தைப் பெற, ப்ரஹ்மத்தை யறிய குருவினிடம் செல்ல வேண்டுமென்ற கிரமத்தை இந்த ச்ருதி காட்டுகிறது. இதை மனதில் வைத்துக்கொண்டு, இந்த ப்ரஹ்ம ஸூத்ரம் ஜைமினி ஸூத்ரத்திற்குப் பிறகு இயற்றப்பட்ட நூல், 'முன்பு நடந்த கர்ம விசாரத்திற்குப் பிறகு' என்று பொருள் கொள்வதுதான் ஸூத்ரகாரர் திருவுள்ளத்தை அநுஸரித்ததாகும். வேதார்த்த விசாரமானமீமாம்ஸை ப்ரக்ருதம். முன் பாகம் முடிந்து அதன் தொடர்ச்சியாகப் பின் பாகம் தொடங்கப்படுவது நிச்சயம். 'பரீக்ஷித்து' என்பதற்கு 'கர்ம பரீக்ஷா சாஸ்த்திரத்தின் உதவியால் விசாரித்து' என்ற பொருள் ஸ்வரஸம். கர்மங்களை அநுஷ்டிப்பதால் கிடைக்கக்கூடிய பலங்களை ப்ரத்யக்ஷம், அநுமானம், உபமானம், ஆகமம் (சாஸ்த்ரம்) என்ற ஸர்வப்ரமாணங்களாலும் விசாரித்து, 'அநித்யம், அல்பம் என்று நிச்சயித்து' என்பது முண்டக பாஷ்யத்தில் ஸ்ரீ சங்கரர் பொருள். இந்த முதல் ஸூத்ரத்தில் இந்த ப்ரஹ்மவிசார சாஸ்த்ரத்திற்கு யார் அதிகாரி என்பது விளக்கப்படுகிறதென்பதையு மெல்லோரு மொப்புகிறார்கள். யார் அதிகாரியென்பதையும் இந்த ச்ருதியே காட்டுகிறது. கர்மங்களைப் பரீக்ஷித்து அவற்றின் பலன் அநித்யம் என்று நிச்சயித்து, அவற்றில் அத்ருப்தனை, ப்ரசாந்தசித்தனை, சமாந்விதனை, குருவிடம் நித்யப்ரஹ்ம விஞ்ஞானத்திற்காகப் போகவேண்டும். முன் பரீக்ஷை செய்திருப்பதும் அதிகாரத்தில் சேர்ந்தது. அது முன் நடந்ததென்பது நிச்சயம். 'ப்ரசாந்தசித்தனை' என்பது 'மனதின் நியமனத்தைச்' சொல்லுகிறது. உள்ளிந்த்ரியமான மனதின் நியமனத்தை இந்தப் பதத்தால் சொல்லிவிட்டதால் 'சமாந்விதனை' என்ற பதத்தில் 'சமம்' என்பது வெளி இந்த்ரியங்களின்

அடக்குதலைச் சொல்லும். வித்யையை க்ரஹிக்கவேண்டிய அவதானத்திற்கு உபயுக்தமான சித்த ஸமாதானம் முதலியதைச் சொல்லுகிறது. குரு முகச்ரவணத்திற்கு அது அங்கமாகும். ச்ரவணம் பண்ணி ப்ரஹ்மோபாஸனம் என்னும் மோக்ஷோபாயத்தைத் தெரிந்துகொண்டு, அதை அப்யஸிக்கு முன்பும் அப்யஸிக்கும் காலத்திலும், சாந்தி, தாந்தி, உபரதி, திதிக்ஷா, ஸமாதானம், ச்ரத்தை, முதலிய ஸாதனங்கள் வேண்டியதே. அத்யந்தமான இந்த்ரிய விஜயம் ச்ரவணத்திற்கு அவச்யமல்ல. 'ப்ரசாந்த சித்தாய' என்பதற்கு 'கர்வம் முதலிய தோஷ மில்லாமல்' என்றும், 'சமாந்விதாய' என்பதற்கு 'வெளி யிந்த்ரியங்களை யடக்கி' என்றும் ஸ்ரீ சங்கரபாஷ்யப் பொருள். ஸாங்கமாயும் ஸசிரஸ்கமாயும் வேதாத்யயனம் செய்து, வேதாந்தங்கள் மேலாகத் தெரிந்து, கர்ம பலத்தில் நித்ய பலம், கிடைக்கலாமோ வென்று கர்மகாண்டப் பொருளை விசாரித்து, மீமாம்ஸை செய்து, அந்த மீமாம்ஸையால் (பரீக்ஷையால்) கர்ம பலங்கள் அநித்ய மென்றும், அல்பமென்றும் நிச்சயித்து, அதில் அதிருப்தியையடைந்து, ப்ரஹ்மத்தால் அநந்தமும், நித்யமுமான பலன் கிடைக்குமென்று வேதாந்தங்களிலிருந்து கிடைத்த ஆபாத (மேல்) ஞானத்தைக் கொண்டு, மோக்ஷத்தி லாசையோடு ப்ரஹ்ம காண்டத்தை குரு முகமாக விசாரிக்க ஆரம்பிக்கிறார். ப்ரஹ்மஸூத்ரம் ப்ரஹ்மவிசார சாஸ்த்ரம். 'பின்பு ப்ரஹ்ம மீமாம்ஸை செய்யவேணும்' என்றதால் 'முன்பு ஒரு மீமாம்ஸை நடந்ததாகப் பொருள் கொள்ளுவது ஸ்வரஸ மென்று ஸ்ரீ ஸுதர்சனஸூரி ப்ரதர்சனம். கர்மமீமாம்ஸை முந்தியே ஏற்பட்டிருப்பது நிச்சயமாதலாலும், அது முடிந்த பிறகு அதிலுள்ளதைத் தாமும் இழுத்துக்கொண்டு (உபயோகித்துக்கொண்டு) இந்த ஸூத்ரங்களை வ்யாஸர் இயற்றியதாலும், முன் மீமாம்ஸைக்குப் பிறகு இந்த ப்ரஹ்ம மீமாம்ஸை செய்வதாக அவர் நினைத்தா ரென்பது நிச்சயம். ப்ராசீன ஸம்ப்ரதாயமும், கர்ம மீமாம்ஸை செய்த பிறகுதான் ப்ரஹ்ம மீமாம்ஸை செய்வதே. தைத்திரீய பாஷ்யத்தில் 'வேதமநூச்ய' என்றவிடத்தில் "வேதாத்யயனம் செய்தவன் தர்ம ஜிஜ்ஞாஸையைச் செய்யாமல் குருகுலத்திலிருந்து ஸமாவர்த்தனம் செய்யக்கூடாது என்று இதனால் அறியப்படுகிறது. ஸ்ம்ருதியும் 'அறிந்துகொண்டு கர்மங்களை யாரம்பிக்க வேண்டும்' என்று சொன்னதைக் கொண்டும் இது தெரிகிறது" என்று ஸ்ரீ சங்கரர் பணிப்பு. 'கர்மவிசாரம் செய்யாமல் குருகுலத்திலிருந்து திரும்பக்கூடாது' என்று ஸ்ரீ ஆனந்தகிரி பணிப்பு. சாந்தோக்யத்தின் முடிவில் குருகுலத்தில் வேதாத்யயனம் செய்வது தொடங்கி ப்ரயாண காலம் வரையில் ப்ரஹ்ம நிஷ்டன் வர்த்திக்கவேண்டிய வழிகளைக் கட்டளையிட்டிருக்கிறது. அந்த ச்ருதிதான் ஆப்ரயாண ஸூத்ரம், அநாவ்ருத்தி

ஸூத்ரம் முதலியதற்கு விஷயம். அங்கும், "நியமத்தோடு அத்யயனம் செய்யப்பட்ட வேதம்தான் கர்மஞான பலத்தை யடைய உபயோகப்படும். நியமமில்லாமல் அத்யயனம் செய்தால் பயன்படாது", 'அபிஸமாவ்ருத்ய' என்பதற்கு தர்ம ஜிக்ஞாஸையை முடித்துவிட்டு குருகுலத்திலிருந்து திரும்பி விவாஹம் செய்துகொண்டு' என்று ஸ்ரீ சங்கரர்பாஷ்யம். ஸ்ரீ பாஷ்யகாரர் ஸாதித்தபடி கர்ம மீமாம்ஸை செய்த பிறகுதான் ப்ரஹ்ம மீமாம்ஸை செய்வது உபநிஷத்துக்கள் விதிக்கும் க்ரமம் என்பதும், இது தான் அநாதியான ப்ராசீன ஸம்பரதாய மென்பதும், முண்டகச் சாந்தோக்யங்களிலிருந்தும், ஸ்ரீ சங்கரபாஷ்யங்களிலிருந்தும் ஸ்பஷ்டமாகிறது. மேலும் தைத்திரீய பாஷ்யத்திலும், டீகையிலும், "ஸமஸ்த வேதங்களின் பொருளை யறிந்தவன்தானே கர்மங்களி லதிகாரி யாவானென்று ஆக்ஷேபம் வர, ச்ரவணஜந்யமான வாக்யப் பொருளறிவுடையவன் யக்ஞாதி கர்மானுஷ்டானத்திற்கு அதிகாரியாகிறானென்பது உண்மையே. வேத வேதாந்தங்களின் பொருளை குருமுகமாக விசாரித்து அறிந்திருந்தாலும், ப்ரஹ்மோபாஸனை செய்து அதனால் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெறவில்லையே. ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்றவனுக்கல்லவோ கர்மங்களில் அதிகாரம் நீங்கும் என்கிறோம். ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் ப்ரஹ்மோபாஸனத்தால் ஸாத்யம்." என்று உரைக்கப்பட்டது, ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும் வரையில் கர்மானுஷ்டானத்திற்கு அதிகாரியே, கட்டுப்பட்டவரே. ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் உள்ளபடி பூர்ணமாக வருவது ப்ரயாணகாலம் வரையில் உபாஸனம் செய்து முடிந்த பிறகு ஈச்வரானுக்ரஹத்தால் 101-வது நாடி வழியாக உத்க்ரமித்து ஆதிவாஹிகர் உதவியால் விஷ்ணுவின் பரமமான பதத்தை யடையுங் காலந்தானென்பது ப்ரஹ்மஸூத்ரங்களும் உபநிஷத்துக்களும் காட்டிய மார்க்கம்

ச்ருதோப நிஷத்கர்களுக்கு இந்த அர்ச்சிராதிகதிதான் ப்ரஸித்தமான கதி யென்று ஸூத்ரகாரர் 'ச்ருதோப நிஷத்ககத்ய பிதானாச்ச' என்று தெளிவாகக் காட்டினார். 'ஸர்வாஸாம் அநியம:' என்று 'இந்த கதி எல்லா வித்தைகளுக்கும் பொது' என்றார். ப்ரதீகோபாஸகன் தவிர அப்ரதீகோபாஸகர்களை இந்த கதி வழியாய் நயநம் செய்கிறாரென்றும், அப்ரதீகாலம் பனஸூத்ரத்தில் காட்டினார். இந்த கதியால் பரமபதம் போனவருக்கு ஆவ்ருத்தியில்லை, என்றும், சாந்தோக்ய நிகமன வாக்ய ச்ருதியைக் காட்டி, 'அநாவ்ருத்தி: அநாவ்ருத்தி:' என்று இரட்டித்துப் பேசி சாஸ்த்ரத்தை முடித்தார். நம் சாஸ்த்ரியார் ஆசைக்கு ஸூத்ர சாஸ்த்ரகாரர் துளி இடம்கூடக் கொடுக்கவில்லை. ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைக் கொஞ்சம் பெற்று அதை அனுபவித்துக்கொண்டு மெய்மறந்

துள்ள யோகதசையில் யோகாரூடனாயிருக்கையில், கர்மங்களின் ஸ்வரூபத்யாகமும் எல்லோருக்கு மிஷ்டமேதான். யோகாரூடன் அந்த ஸமாதி தசையில் கர்ம மனுஷ்டிக்கக் கட்டுப்பட்டவனல்லதான். உடம்பின் நினைவே அவனுக்கு அப்பொழுது இல்லை. ஸ்ரீ சங்கரரும் கர்மாதிகாரமில்லையென்றது யோகாரூட தசையைப் பற்றித்தான் என்று கொண்டால் விரோதமில்லை. 5 முதல் 7 பூமிகைகள் அஸம்ப்ரக்ஞாத ஸமாதியில் 3 படிகள் என்பர். யோகம் சிலகால மிருந்து பிறகு தானாகக் கலைவது 5 வது படி. தானாகக் கலையாமல் பிறர் எழுப்பினால் மாத்திரம் கலையக் கூடியதாயிருப்பது 6 வது படி—பிறர் எழுப்பியும் அடியோடு கலைக்கக் கூடாமல் ஸமாதியில் எப்போதும் முழுகியிருப்பது 7 வது படி. 7 வது படி யேறினவருக்குக் கர்மானுஷ்டானம் இல்லைதான். 5, -படிகளிலும் யோகானுபவ ஸமயங்களில் அப்படியேதான். 'யோகாரூடஸ்ய கர்மச்யவநமபிததா ஸ்ஹ்யமங்கயர்த்த வாக்யை:' என்று தத்வமுக்தாகலாபம். இப்படிக்கொத்த ஸமாதி நிஷ்டரைப்பற்றி ஸ்ரீ சங்கரர் கர்மஸ்வரூபத்யாகம் பேசுவது அழகேயாகும். தத்வமஸி வாக்யப் பொருளை ச்ரவணத்தாலறிந்தவருக்கும் கர்ம முளதே. உபாஸனம் முற்றிப் பூர்ணமாகி ஸாக்ஷாத்காரம் வரும் வரையில் கர்மவச்யனே. 'அத்யயன மாத்ரவத:' என்னும் ஸூத்ரத்திலும் வேத வேதாந்தங்களின் அர்த்தத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டு கர்மத்தை யனுஷ்டிக்கிறானே யல்லாது ஸாக்ஷாத்காரம் வந்தவன் அனுஷ்டிக்கவில்லையே' என்று ஸ்ரீ சங்கரபாஷ்யாதிகளின் பொருள். 'வேதாந்தங்களின் பொருளை ச்ரவணத்தால் க்ரஹித்தவன் மஹா வாக்யத்தின் பொருளையும் க்ரஹணம் பண்ணுபவனே. வேதாத்யயனத்திற்கு உபநிஷத்துக்களை அத்யயனம் பண்ணவேண்டிய நிர்பந்தமில்லையே. உபநிஷத்துக்களை விட்டுவிட்டு கர்ம பாகத்தைமட்டும் அத்யயனம் செய்தவன்தானே கர்மங்களை யனுஷ்டிக்கிறான்' என்று பாமதி உரைத்த பொருளைப் பரிமளம் ஒப்பவில்லை. அதைத் தள்ளினது மிகவும் யுக்தம். ஸ்வசாகை முழுவதும் அத்யயனம் செய்து தீரவேண்டும். உபநிஷத்தை விட்டுவிட்டு கர்மகாண்டத்தை மட்டும் அத்யயனம் செய்வது ஏகதேசாத்யயனம்; அது சாஸ்த்ரீயமல்ல.

(3) 'ஏக ஆத்மநச் சரீரே பாவாத்' என்னு மதிகரணத்தில் 'முன்பே சாஸ்த்ரத்தின் ஆரம்பத்திலேயே, முதல் பாதத்தில் தேஹாதிரிக்தமான ஆத்மா ஒருவன் உளனென்று காட்டப்பட்டது. ஏன் இங்கே அதைத் திரும்பவும் உரைக்கவேண்டும்?' என்று ஸ்ரீ சங்கரபாஷ்யம் ஆக்ஷேபித்துக் கொண்டு ஸூத்ரகாரரான ஜைமினி இதைப்பற்றி ஒரு ஸூத்ரமு மியற்றவில்லை. பாஷ்யகாரரான சபரஸ்வாமி பின்னால் இங்கே வரப்போகிறதை அங்கே இழுத்துக்கொண்டு பேசினார். ஆகையால் ஸூத்ரங்களில் புன

ருத்தமில்லை.' என்று பதிலுரைத்தது. மீமாம்ஸை யிரண்டு மொரே சாஸ்த்ர மென்பதற்கும், முன்பின் க்ரமத்திற்கும் இதைக் காட்டிலும் ஸ்பஷ்டமான பேச்சு வேண்டுமோ, 'உபவர்ஷரென்னும் வ்ருத்திகாரரும் 'பின்பு சாரீரகத்தில் காட்டுவோம்' என்று அங்கே உரைத்தார்' என்றும் ஸ்ரீ சங்கரபாஷ்யம். இரண்டு ஸூத்ரத்திற்கும் உபவர்ஷர் வ்ருத்தி செய்தாரென்பதும், அது ப்ராசீன ஸாம்ப்ரதாயிக வ்யாக்யான மென்பதும் ஸ்பஷ்டம். 'உபவர்ஷர் என்பது போதாயனருக்கே மற்றொரு பெயர்' என்று தத்வடீகை. 'முன் நடந்த கர்மவிசாரஜந்ய கர்ம க்ஞானத்திற்குப் பிறகு ப்ரஹ்மத்தின் ஜிக்ஞாஸை தொடங்குகிறது' என்று போதாயன வ்ருத்தி. திருவனந்தபுரத்தில் அச்சிட்ட 'ப்ரபஞ்ச ஹ்ருதயம்' என்னும் க்ரந்தத்தில் '20 அத்யாயங்களடங்கிய மீமாம்ஸா சாஸ்த்ரத்திற்கு போதாயனர் க்ருதகோடி' என்னும் வ்யாக்யானம் செய்திருக்கிறார்' என்றுளது. 'உபவர்ஷோ ஹலபூதி: க்ருதகோடி: அயாசித: என்று கேசவ நிகண்டு. 'த்ரமிடர் எங்களுக்கும் ப்ராசீன பாஷ்யகாரர்; ப்ரஹ்மநந்தி வாக்யகாரர்' என்று ஸங்க்ஷேப சாரீரகம் 1-220, 221-ல் இவர்களே ப்ராசீன ஆசிரியர்களாக ப்ரமாணமென்று பேசிற்று. ஸ்ரீ பாஷ்யகாரருதாஹரித்தவாக்யங்களையே உதாஹரித்தது. எல்லோருக்கும் பூர்வாசார்ய ஸம்ப்ரதாயமொன்றே.

(4) பஞ்சபாதிகையில் 'ப்ராசீன வ்ருத்தியில் தர்மவிசாரத்திற்குப் பிறகு என்று பொருளுரைத்ததை ஸ்ரீ சங்கரபாஷ்யம் தூஷிப்பதாக அவதாரிகை 'அத:' என்பதற்கு பூர்வ ப்ரக்ருதமான தர்ம்ஜிக்ஞாஸையை யபேக்ஷித்துப் பிறகு ப்ராஹ்ம ஜிக்ஞாஸை ஆரம்பிக்கத்தக்கது. 'அத:' என்பதற்கு முன் சொன்னதே ப்ராஹ்மஜிக்ஞாஸைக்கு ஹேது என்பது பொருள்' என்று ப்ராசீன வ்ருத்திவாக்யத்தையும் பஞ்சபாதிகை உதாஹரித்தது.

இரண்டு மீமாம்ஸையும் ஓரே சாஸ்த்ர மென்பதையும், பூர்வ மீமாம்ஸை முன்பு கற்கவேண்டிய தென்பதையும் பேசிற்று. அநாதி ஸம்ப்ரதாயப் பொருளைத்தான் ஸ்ரீ பாஷ்யம் கைப்பற்றியது. சாஸ்த்ரியார் கக்ஷியாடும் பொருள் ப்ராசீன ஸம்ப்ரதாயத்திற்கு விருத்தம். ஸ்ரீ சங்கரபாஷ்யங்களின்படியே உபநிஷத்துக்கள் காட்டும் முன்பின் க்ரமத்தை அது மீறுகிறது. குருகுலத்தை விட்டு வெளிப்படுவதற்கு முன்பே கர்ம்விசாரம் செய்து முடியவேணும். பிறகு விவாஹம் செய்து கொண்டு யக்ஞாதிகளை யனுஷ்டித்து அதன் பிறகு ஸந்யஸிப்பதுதான் பெரும்பான்மையாக நடப்பது. ஸந்யஸித்த பிறகுதான் ப்ரஹ்மவிசாரத்தில் அதிகாரமென்று அத்வைத க்ரந்தங்கள் பேசுகின்றன. சமதமாதி

ஸாதநங்களில் உபரதியென்று ஸந்யாஸமென்று அவற்றினுரை தைத்திரீயபாஷ்ய டீகையில் 'வேதாந்த விசாரமும் குருகுலத்திலேயே முடிந்துவிடும்' என்கிறார் ஆநந்தகிரி. வேதாந்த ச்ரவணத்திற்குமுன் ஸாதன சதுஷ்டய ஸம்பத்திவேணுமென்ற நிர்ப்பந்தம் எப்படிக்கூடும்?

(5) 'ஆகையால் இப்படி வேதாந்த சாஸ்த்ரத்தை ச்ரவணம் பண்ணியறிந்தவன் சாந்தி, தாந்தி, உபரதி, திதிக்ஷை, ஸமாதாநம். இவற்றோடு ஸம்பந்நனாகித் தன்னுள்ளுள்ள பரமாத்மாவைப் பார்க்கக்கடவன் (உபாஸிக்கக்கடவன்)' என்று உபதேச முடிவில் ஜநகருக்கு யாக்ஞவல்க்யருரைத்தார். இது கடையுபதேசம். க்ருஹஸ்தரான ஜநகருக்கு க்ருஹஸ்தரான யாக்ஞவல்க்யர் உபதேசித்த உபரதிகுணம் ஸந்யாஸமாகாது. இந்த விதியில் 'சாஸ்த்ர சரவணத்தால் ப்ரஹ்மஸ்வரூபாதிகளை யறிந்து, பிறகு சமதமாதி ஸம்பத்தியோடு ப்ரஹ்மோபாஸனம் செய்யவேண்டியதென்றும் க்ரமத்தை ச்ருதியே விளக்கிற்று' என்று ஸ்ரீ பாஷ்யம் ஸ்பஷ்டமாகக் காட்டிற்று. 'சாஸ்த்ர ச்ரவணற்திற்குப் பிறகுதான் இந்த ஸாதனஸம்பத்துக்கள் நன்றாய் ஸித்திக்கக்கூடும். குருவிடம் ச்ரவணத்திற்கு முந்தி சிஷ்யனுக்கிருக்கவேண்டிய அதிகார ஸம்பத்தை. 'பரீக்ஷ்ய' என்ற முண்டக ச்ருதிவிதிக்கிறது. கர்ம மீமாம்ஸையைக் கொண்டும் கர்ம பலன்களின் அநித்யத்வத்தை ஸூக்ஷ்ம புத்தியால் ஆவ்ருத்தி விதானம் முதலிய ஹேதுக்களால் விசாரித்துத் தீர்மானிப்பதும் அதில் சேர்ந்து. 'வேதாந்தங்களுள்பட வேதாத்யயனத்தை அங்கங்களின் கற்கையோடு செய்து கர்மவிசாரமும் செய்து முடிந்ததால் கர்ம பலங்கள் அநித்யமென்ற நிச்சயம் பிறந்து, அநந்தமும் நித்யமுமான ப்ரஹ்மத்தை யடைவதெனும் புருஷார்த்தத்தைப் பற்றி வேதாந்தங்களிலிருந்து ஆபாத ப்ரதீதியும் (தீர்மானமல்லாத மேல்ஞானம்) ஏற்பட்டிருப்பதால், மோக்ஷத்தில் ஆசைபிறந்து நித்யமும் அநந்தமுமான ப்ரஹ்மத்தை யடைய, அதைப்பற்றி விசாரிக்க விரும்புகிறான்' என்று ஸ்ரீபாஷ்யம் இதில் நித்யாநித்யப் பொருள்களின் பகுத்தறிவு, (2) கர்மபலங்களில் வைராக்யம் (3)மோக்ஷேச்சை, ஆகிய மூன்று ஸாதனங்கள் ஒருவாறு கைகூடிவிடுகிறது. ஸாதன சதுஷ்டயத்தில் எவ்வளவு சக்யமோ அத்தனையும் பூர்வ வ்ருத்தத்தில் சேர்ந்துவிடுகிறது. ப்ரஹ்மஸூத்ரங்களை யறிவதற்கு அவச்யாபேக்ஷிதமான, உபஜீவ்யமான, ஜைமினீய ஸூத்ரங்களின் ஞானமும் சேருகிறது. கர்மவிசாரத்தை முன்பே செய்து முடிக்கிறதென்ற அநாதி ஸம்ப்ரதாயமும் அநுஸரிக்கப்பட்டதாகிறது. இத்தனை ஸாமஞ்ஜஸ்யமும் ஸ்ரீ பாஷ்ய ப்ரதர்சனத்திலுள்ளது.

பிஷ்டபசு நமக்கு உபாதேயமல்ல

[அக்நிஹோத்ரம். ராமாநுஜதாதாசாரியன்]

[இந்த வ்யாஸம் மிகவும் விரிவாகவும் ஸம்ஸ்க்ருத பாஷாஜடிலமாகவும் இருந்ததால் இதில் அதிக விஸ்தாரமாகத் தோன்றின பாகங்களை எடுத்துவிட்டு ப்ரசுரப்படுத்தி இருக்கிறோம். இந்த வ்யாஸகர்த்தா ச்ரௌத ப்ரக்ரியையில் மிகவும் உட்புகுந்து விமர்சம் செய்து எழுதியிருப்பது மெச்சத்தக்கது. ஹிம்ஸாயாகமும் அஹிம்ஸாயாகமும் அதிகாரி விசேஷ நியதம் என்பதுதான் விசாரணீயமான அம்சம். இந்த வ்யாஸம் எழுதிய ஸ்வாமி ஸ்ரீ வைஷ்ணவதர்ம சாஸ்திரங்களில் இன்னும் அதிக பரிசயம் செய்து தத்காலத்தில் அநுஷ்டானத்தில் இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவாசாரங்கள் அனைத்துக்கும் மூலகாரணங்களைக் கண்டுபிடித்து எல்லா ஆசாரங்களுக்கும் ஸாமரஸ்யம் வரும்படி எழுதினால் சித்தாந்தம் ஸமஞ்ஜஸமாயிருக்கும். ப-ர்.]

யாக பசு ஹிம்ஸா தர்மத்தைப்பற்றி ஸ்ரீ பாஷ்யகார, ஸ்ரீ தேசிகாதி ஸம்பூர்வாசார்ய ஸித்தாந்தத்தை முன் வியாஸத்தில் விஸ்தாரமாக நிரூபித்தோம். அந்த ஹிம்ஸையானது அஹிம்ஸையே யென்றும், பசுவுக்கு உயர்ந்த கதியைக் கொடுக்கக்கூடிய ஹிததமமான கார்யமாகையால் அது ரக்ஷண மென்றும், ஹிம்ஸை யென்று தோன்றுமிடங்கள் பாமரர்களுடைய புத்தியை அனுவாதம் செய்கிறவை யென்றும், பசு ஹிம்ஸையை நிந்திக்குமிடங்கள் அந்யஸ்துதிபரங்க ளென்றும், ஆதலால் விசிஷ்டாத்வைதிகளின் ஸித்தாந்தப்படி "நஹிம்ஸ்யாத—" என்ற பொது விதிக்கும் "அக்நீஷோமீயம்—" என்ற விலக்கு விதிக்கும் ஸம்பந்த மில்லையாகையால் உத்ஸர்காபவாதக்ரமமே கிடையாதென்றும் ஸ்ரீ தேசிகாதிகளின் திருவுள்ளத்தையும் ஸித்தாந்தத்தையும் அதில் வெளியிட்டோம்.

இப்படியிருந்தும், சிலர் ப்ரத்யக்ஷ பசுவுக்குப் பதிலாக பிஷ்டத்தினால் (மாவு) செய்யப்பட்ட பசுவைக் கொண்டு நாம் யாகம் செய்வது விரும்பத்தக்கதென்றும், உபரிசரவஸு என்றவன் பிஷ்டபசு யாகம் செய்ததாக மஹாபாரதத்தில் காணப்படுவதாயும் வாதிப்பதைக் கேட்டுவருகிறோம். வேதாந்த தீபிகையிலும் ஒரு ஸ்வாமி இந்த விவாதத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார்.

ஆகையால் இந்த வியாஸத்தில் பிஷ்டபசுவானது க்ருதயுகத்திலிருந்த உபரிசரவஸு ஒருவனுக்காகவே ஏற்பட்டதென்றும், உபரிசரன் வேதமார்க்க நிஷ்டனல்ல வென்றும், ஸ்ரீ பாஷ்யகாரர் சிஷ்யப்ரசிஷ்ய பரம்பரையில் உதித்த த்ரயீநிஷ்டபரமை காந்திகளுக்கு, தாந்திரகமான

பிஷ்டபசுவில் அதிகாரம் கிடையாதென்றும், க்ருதயுகத்திற்குப் பிறகும், உபரிசரன் காலத்திற்குப் பிறகும் பிஷ்டபசு, உலகில் அநுஷ்டானத்தில் இல்லாமல் மறைந்துவிட்டதால் தாந்திரிகர்கள் கூட அதை இப்போது அநுஷ்டிக்க வழி கிடையாதென்றும் ஸ்ரீ தேசிகன் திருவுள்ள மிருப்பதை ஸங்க்ரஹமாக நிரூபணம் செய்ய விரும்புகிறோம்.

வேதவிஹிதமல்ல

ஸ்ரீ வைஷ்ணவர்களில், ரிக், யஜுஸ், ஸாமமென்கிற த்ரயீவேத நிஷ்டர்களும், மநு, பராசர, வ்யாஸாதிகளுடைய ஸ்மிருதி தர்ம நிஷ்டர்களும், ஸ்ரீ பாஷ்யகாரருடைய உபதேச, அநுஷ்டானங்களிலே நிஷ்டையுடையவர்களுமான நமக்கு, பகவத் ஸமாராதனரூபங்களான ஸகல வர்ணாச்ரம தர்மங்களும் ஸ்வசாகாஸூத்ர விதிகளின்படியே அநுஷ்டேயங்களென்றும், இந்த நியமத்தை மீறக் கூடாதென்றும், ஸ்ரீமத் ஆகமப்ராமாண்ய ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷா, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாராதிகளில் நிர்ணயிக்கப்பட்ட நிர்விவாதமான விஷயமாகும். இந்த வ்யவஸ்தையின்படி பிஷ்டபசுவானது த்ரயீ வேதங்களிலோ, ஸ்ம்ருதி, கல்பஸூத்ராதிகளிலோ விதிக்கப்பட்டதா வென்பது கவனிக்கப்படவேண்டும். அப்படி கவனித்தால் இப்போது உலகில் ப்ரசாரத்தில் இருந்துவரும் த்ரயீவேதங்களில் ஓரிடத்திலாவது பிஷ்டபசு விதிக்கப்பட்டதில்லை யென்பது வெகு தெளிவாக விளங்கக்கூடியது. ப்ரத்யுத ப்ரத்யக்ஷபசு விதியே இருப்பது யாவராலும் ஒப்பக்கூடியது. யாகத்தையும், பசு ஹிம்ஸையையும் பழித்த வேதபாஹ்யர்கள் கூட நமது வேதங்களில் ப்ரத்யக்ஷ பசு விதியே இருப்பதை மறுக்கமுடியவில்லை. வேதம் அப்ரமாணம் என்று அவர்கள் வாதிப்பதற்குக்கூட அதில் பசு ஹிம்ஸை விதிக்கப்பட்டிருப்பது ஒரு முக்கிய காரணம்.

வேத விதிகளை அநுஸரித்து கல்பம் எழுதிய ஆபஸ்தம்ப, போதாயன, ஆச்வலாயன, பாரத்வாஜ, ஸத்யாஷாட, வைகானஸ, த்ராஹ்யாயண காத்யாயனாதி ஸகல ரிஷிகளும் தங்களுடைய ஸூத்ரங்களில் பிஷ்டபசுவைப்பற்றிப் பேசவேயில்லை. ப்ரதியக்ஷ பசு ப்ரயோகத்தையே சொல்லுகிறார்கள். பிஷ்டபசு வேத விஹிதமாயிருந்தால் அதற்கும் அவர்கள் ப்ரயோகம் எழுதியிருக்க வேண்டாமா?

மனுயாக்ஞவல்க்யாதி ஸ்மிருதிகர்த்தாக்களும் யாக பிஷ்டபசுவைப் பற்றிய ப்ரஸ்தாபமே செய்யவில்லை. ப்ரத்யுத ப்ரத்யக்ஷ பசுவே, வேத விஹித மென்றும், அதுதான் தர்மமென்றும் சொல்லுகிறார்கள்.

பூர்வகாண்ட மெனப்படுகிற வேத பாகங்களுக்கு மீமாம்ஸாஸூத்ரம் எழுதிய ஜைமினிமஹர்ஷியோ, அந்த ஸூத்ரவ்யாக்யாதாக்களான மஹான்

களோ ஓரிடத்திலாவது இந்த பிஷ்டபசுவை ஸ்மரிக்கவில்லை. இது வேத விஹிதமானால் ஜைமினியும் இதைப் பற்றிய விசார நிர்ணயாதிகளைச் செய்திருப்பாரல்லவா ?

மேலும் வேதத்தில் பிஷ்டபசு விதி யிருந்தால் பரம காருணிகர்களான மஹர்ஷிகள் இதைத்தான் நமக்கு விதித்திருப்பார்களேயன்றி ப்ரத்யக்ஷ பசுவை விதித்திருக்கமாட்டார்கள். பிரத்யக்ஷ பசுவுக்கு ஹிம்ஸாத்வம் கிடையாதென்று ஸமர்த்தித்தாவது அதை ஆதரிக்கும்படி சொல்லமாட்டார்களல்லவா ?

ஸ்ரீ தேசிகனின் திருவுள்ளம்

இப்படி அஹிம்ஸாத்வ ஸித்தாந்த மிருந்தபோதிலும், பரமைகாந்தியான உபரிசரவஸு பிஷ்டபசு அனுஷ்டித்ததாக மஹாபாரதத்தில் கதை காணப்படுகிறது. ஆதலால் பிஷ்டபசுவுக்கும் மூலபூதமான சாஸ்திரவிதி ஒன்று இருந்து தீரவேண்டும். அந்த சாஸ்திரம் எது? அந்த சாஸ்திரமானது ஸ்ரீ பாஷ்யகார சிஷ்ய பரம்பரையிலுள்ள த்ரயீ நிஷ்டர்களான நமக்கு உபாதேயமா? இல்லையா? என்ற சங்கை ஏற்படக்கூடியது. இந்த முக்கியமான சங்கையை ஸ்ரீ தேசிகன் அதிகரண ஸாராவளியிலும் தாத்பர்ய சந்திரிகையிலும் எடுத்து பிஷ்டபசு விதியானது நமக்கு உபாதேயமல்லவென்று நிஷ்கர்ஷித்தார்.

இதே திருவுள்ளத்தைக் கொண்டுதான் "ஸ்வதர்மமபிசாவேக்ஷ்ய" என்ற கீதா தாத்பர்ய சந்திரிகையில் :—

> விஷ்வக்ஸேநாதி வியுக்தானாம் த்ரயீமயக்ரதுநிஷ்டா
> ஸமீக்ஷ்யா விஷேஷ நியதஃ ॥

என்ற வாக்யத்தால் பிஷ்டபசுவானது கிருத யுகத்திலிருந்த அதிகாரிக்கு மட்டும் ஏற்பட்டதென்று ஸாதித்து நம் விஷய மல்லவென்று அதை ஒதுக்கி யருளினர். "யஜ்ஞாநாம் ஜபயஜ்ஞோஸ்மி" என்ற கீதா தாத்பர்ய சந்திரிகையிலும் :—

> க்ருதயுகவஹி உபரிசராத்யஃ பிஷ்டபசுபிரிஷ்டவாந் ॥

என்றதால் உபரிசரனே பிஷ்டபசுவுக்கு அதிகாரி என்று ஸாதித்து த்ரயீ நிஷ்டர்களான நம்மை விலக்கியிருக்கிறார்.

உபரிசரவஸு வைதிகனல்ல்

இந்த பிஷ்டபசு விவாதத்தில், பிஷ்டபசுவுக்குப் பிரமாணமாக சாஸ்திரீயமான ஆதாரம் எங்கும் கிடைக்கவில்லை. ஆசார்யாதிகளும் அந்த பிரமாணத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால் உபரிசரனுடைய அனுஷ்

டானமே பெரிய ப்ரமாணமாகக் காட்டப்படுகிறது. ஆகையால் உபரிசரவஸு எத்தகைய அதிகாரி? அவன் வேத விதிகளை அநுஸரிப்பவனா? அவன் செய்த பிஷ்டபசு யாகம் எத்தகையது? அது வேத விஹிதமா, என்பவைகளைத் தெரிந்துகொண்டால் இந்த பிஷ்டபசு விவாதத்தில் எல்லாக் கலக்கங்களும் தெளிந்துவிடும். மஹாபாரதம், ஸ்ரீ பாரமேச்வர ஸம்ஹிதை முதலியவைகளில் உபரிசரனைப்பற்றியும் அவன் செய்த யாகத்தைப்பற்றியும் காணப்படும் விவரத்தைப் பார்த்தால் அவன் த்ரயீவேத நிஷ்டனல்லவென்பதும், ஏகாயநசாகை யென்ற தந்திர சாஸ்திர நிஷ்டனென்பதும் அதன்படியே ஸகல ஸம்ஸ்காரங்களையும் அநுஷ்டித்தவனென்றும் அவன் செய்த யாகங்களும் தந்திர சாஸ்திர விஹிதங்களென்பதும் அவனுடைய காலத்திற்குப் பிறகு அந்த சாஸ்திரம் மறைந்துவிட்டதென்பதும், வெகு ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

உபரிசரவஸு ஸாத்வத சாஸ்திர நிஷ்டனான ஒரு விலக்ஷணாதிகாரியென்பதும், எல்லா யாகங்களையும் ஸாத்வத சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விதியை அநுஸரித்தே செய்தானென்றும் கூறப்படுவதால் அவன் வைதிக மதஸ்தனல்லவென்பது தெளிவாகிறது. அந்த ஸாத்வத சாஸ்திரமானது ஸூர்யன் முகமாக முன்பு வெளிப்பட்டதென்றும் மேற்படி சுலோகத்தில் சொல்லப்படுவதால் அவனுடைய சாஸ்திரமே வேறு என்றும் நிச்சயப்படுகிறது.

மேலும் இந்த வஸு பாக்யானத்தில் அந்த வஸுவைப்பற்றிக் காணப்படும் விவரங்கள் அவன் வைதிகமார்க்க நிஷ்டனல்லவென்பதை ஸ்திரப்படுத்துகின்றன.

"உபரிசரவஸு பிறப்பதற்கு முந்தியே சித்திர சிகண்டிகள் எனப்படுகிற ஏழு ரிஷிகள் பகவானுடைய நியமனப்படி, உபரிசரவஸுவுக்காகவென்றே புதிதாக ஒரு சாஸ்திரத்தை உற்பத்தி செய்தார்கள். பிறகு பகவான் நேரில் ஆவிர்ப்பவித்து அந்த சாஸ்திரத்தைப் பார்த்து ப்ரசம்ஸை செய்துவிட்டு உபரிசரவஸு இந்த சாஸ்திரப்படியே எல்லா தர்மங்களையும் அநுஷ்டிக்கப்போவதாயும், வஸு இறந்த பிறகு அந்த புதிய சாஸ்திரமும் அந்தர்த்தானத்தை அடையுமென்றும் பகவான் நியமித்தார். பிறகு வெகு காலத்திற்குப் பிறகு பிறந்த உபரிசரவஸு பிருஹஸ்பதியிடமிருந்து அந்த சித்ரசிகண்டிஜ சாஸ்திரத்தை அப்யஸித்து அதன்படியே க்ரியைகளைச் செய்தான்.

ஸ்ரீ பாரமேச்வர ஸம்ஹிதையிலும்

முதலாவது அத்யாயத்தில் மஹாபாரதத்தைவிட வெகு ஸ்பஷ்டமாக உபரிசரன் அவைதிகனென்பது விசதமாயிருக்கிறது. அங்கு ஸ்ரீ சாண்டில்ய மஹர்ஷி சொல்லுகையில்,

"தேவதாந்தர மிச்ரங்களான ருக், யஜுஸ் ஸாமாதிகளான த்ரயீ வேதங்களில் தமக்கு நிஷ்டை ஏற்படாததால், தேவதாந்தர ஸம்பந்த மில்லாததும், ஸ்ரீ வாஸுதேவனையே ஸாக்ஷாத்தாக ப்ரதிபாதிக்கிறதாயு முள்ள சாஸ்திரத்தை அறிய ஆசை யுண்டாகியதாயும், அதன்மேல், சித்ர சிகண்டிகளால் செய்யப்பட்ட மூலவேதம், அல்லது ஏகாயநசாகையை அத்யயனம் செய்ததாயும் இந்த ஏகாயநசாகையில் அச்வமேதம், முதலிய யாகங்கள்கூட சொல்லப்பட்டிருப்பதாயும், அந்த யாகங்கள் த்வாதசாக்ஷராதிகளான பகவந் மந்த்ரங்களால் செய்யக்கூடியவைக ளென்றும் சொல்லிவிட்டு உபரிசரவஸு என்றவனும் இந்த ஏகாயந மூலவேதப்படி ஸம்ஸ்காரங்களைப் பெற்று, அச்வமேதாதியாகங்களையும் இந்த ஏகாயந வேத விதிப்படி செய்தா னென்றும் சாண்டில்யர் விவரித்திருக்கிறார்.

இந்த சாண்டில்ய வசனங்களில் உபரிசரன் த்ரயீநிஷ்டனல்லவென்பதும் ஏகாயநசாகாநிஷ்டனென்பதும், அந்த மூல வேதத்தினாலேயே உபநயநாதி ஸகல ஸம்ஸ்காரங்களையும் பெற்றவனென்பதும் ஏகாயநவேதத்தில் சொல்லப்பட்ட த்வாதசாக்ஷராதி பகவத ஸாதாரண மந்த்ரங்களையும் ப்ரயோகங்களையும் கொண்டே அச்வமேதாதி யாகங்களைச் செய்ததாயும் வெகு ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ பாஷ்யகார சிஷ்யர்களுக்கு உபாதேயமல்ல.

ஆகவே மஹா பாரதப் பிரமாணத்தாலும், பாரமேச்வர ஸம்ஹிதா வசனங்களாலும் உபரிசரன் த்ரயீபஹிர்பூதனென்பதும் அவனுக்கு காயத்ரீ மந்த்ராதிகள்கூட கிடையாதென்பதும் அவனுடைய விலக்ஷணமான யாகம் த்ரயீநிஷ்டர்களுக்கு ஏற்றதல்லவென்பதும் நிச்சயிக்கப்பட்டது. த்ரயீநிஷ்டர்களான நமக்கு ஸ்வசாகாஸூத்ராதிகளும் கர்மாக்களும் விஹிதங்களாயிருக்கையில் மற்றொன்றில் அதிகாரம் உண்டாக வழியில்லை. அதிலும் வைதிக மதஸ்தன் தாந்திரிக மந்த்ர ப்ரயோகாதிகளுள்ள கர்மாக்களில் பிரவிர்த்திக்கக் கூடாதென்று நம் ஆசாரியர்கள் நிர்ணயித்தார்கள். ஸ்ரீ ஆகம ப்ராமாண்யத்தில் ஸ்ரீ ஆளவந்தாரும் இந்த விஷயத்தை விஸ்தாரமாக விசாரித்து த்ரயீ தர்மத்தை விட்ட அதிகாரிகளையும் காட்டி த்ரயீநிஷ்டாதிகாரிகளைவிட மேற்படி தாந்திரிக அதிகாரிகள் விலக்ஷணர்கள் என்று சொல்லி இவ்விருவர்களுடைய தர்மங்களுள் ஸாங்கர்யம் கூடாதென்று ஸ்ரீ ஆளவந்தார் ஸித்தாந்தம் செய்தருளியிருக்கிறார்.

ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ப்ரக்ருதத்திற்கு மிகவும் பொருத்தமாயிருப்பதால் அதை இங்கு குறிப்பிடுகிறோம் :—

அதாவது :—

"பாஷ்யகாரர் குலங்களெல்லாம் இன்றளவாக ஸ்வஸூத்ரோக்தமானபடியே தத்தத்தேவதாமந்த்ரங்களைக்கொண்டு விவாஹோபநயநாதிகள் அநுஷ்டிக்கவும் காணா நின்றோம்.

பெரிய நம்பி முதலான பரமாசார்யர்களும் தம் தாம் ஸூத்ரங்களின் படியே யஜ்ஞாதிகள் பண்ணினார்களென்பதும் ஸர்வருக்கும் பிரஸித்தம்.

ஆன பின்பு பாஷ்யகாரருடையவும், தச்சிஷ்ய ப்ரசிஷ்யர்களுடையவும் உபதேசாநுஷ்டானங்களிலே நிஷ்டையுடையார்க்கு, ஆகம ஸித்தாந்தாநுவர்த்திகளான ஸம்ஹிதா விசேஷங்களிலே ப்ரதிநியதங்களாகச் சொல்லும் மந்த்ர விசேஷங்களைக்கொண்டு க்ரியா விசேஷங்களை அநுஷ்டிக்கவொண்ணாது"

ஸ்ரீ தேசிகன் மேற்கண்ட வாக்யங்களால், ஸ்ரீ பாஷ்யகார சிஷ்ய ப்ரசிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர்கள், த்ரயீ வேத நிஷ்டர்களாகவே இருந்துகொண்டு நிஷேகாதி தஹநாந்த ஸம்ஸ்காரங்களை ஸ்வசாகா ஸூத்ர விதிகளின்படியே அநுஷ்டிக்கவேண்டுமென்று நியமிக்கிறார். முதல் வாக்யத்தில் விவாஹோபநயாதிக்ருஹ்ய கர்மாக்களைக் குறிப்பிட்டு விட்டு, ஸ்ரீ பெரிய நம்பிகளின் யாகாநுஷ்டான க்ரமத்தைக் காட்டி ச்ரௌத கர்மாக்களிலும் ஸ்ரீ பாஷ்யகார சிஷ்ய பரம்பரையார் ஸ்வசாகா, ஸூத்ரப்படியே யாகாநுஷ்டானம் செய்யவேண்டுமே யல்லது, தாந்திர, மந்த்ர ப்ரயோகாதிகளைக்கொண்டு எந்த கர்மாக்களையும் அநுஷ்டிக்கக் கூடாதென்று கண்டதஃ நிஷேதித்திருக்கிறார். யாகாநுஷ்டான க்ரமத்தில் பெரிய நம்பிகளின் அநுஷ்டானமே நமக்கு உபாதேயமென்றும் தாந்திரிக கர்மங்கள் நிஷித்தங்களென்றும் ஸ்ரீ தேசிகன் ஸாதிப்பதிலிருந்து உபரிசரனுடைய விலக்ஷண மந்த்ர ப்ரயோக விசிஷ்டமான தாந்திரிக யாகம் நமக்கு நிஷித்தமென்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் பற்றியிருப்பதில் ஸந்தேஹத்திற்கு இடமில்லையே?

ஆகம, மந்த்ர, தந்த்ர, தந்த்ராந்தர ஸித்தாந்தங்களென்கிற நான்கு ஸித்தாந்தப் பிரிவுகளில் "ஆகம ஸித்தாந்தம்" என்பது த்ரயீ தர்மங்களை நிஷேதித்து அவைகளுக்குப் பதிலாக தாந்திரங்களாக நிஷேகாதி தாஹாந்த ஸம்ஸ்காரத்தைச் சொல்லியிருக்கிறது. "ஸாடியாக்ஷர விதெய்வ தேஷாம் விஹாய த்ரயீ" என்ற பாரமேச்வர வசனமும் ஸ்ரீ ஆகம ப்ராமாண்யாதி ஸ்ரீ ஸூக்திகளும் இதை ஸ்திரப்படுத்துகின்றன.

உபரிசரனுடைய அநுஷ்டானம் யாவத்தும் மூல வேதம், அல்லது ஏகாயந வேதத்தை அநுஸரித்ததென்று காட்டினோம் இந்த ஏகாயந விதியைத்தான் "யததாமஸ்திதாஸம் ஸ்ரீ ஸாத்வதம் விதிநா" என்ற

பாரமேச்வர வசனம் "ஆகமஸித்தாந்த" மென்று வ்யஹரிக்கிறது. ஆகையால் "ஆகம ஸித்தாந்தாநுவர்த்திகளான" என்று ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்தியில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கதாம். ஆதலால் உபரிசராநுஷ்டானம் ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்தத்திற்கு ஏற்றதல்லவாகையால் நமக்கு உபாதேயமல்லவென்ற ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் விசதமாகிறது.

பூர்வாசார்ய அநுஷ்டானமும் அப்படியே.

ஸ்ரீ பாஷ்யகார உபதேசம் ப்ரத்யக்ஷ பசுவாக இருப்பதுடன், அவருக்கு அபிமதமான அநுஷ்டானமும் அப்படியே என்று நிச்சயமாகிறது. ஸ்ரீ பாஷ்யகாருக்கு முன்பும், பின்பும் அநேகர் யாகாநுஷ்டானம் செய்திருப்பது பிரஸித்தம். ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருத்தகப்பனார், ஸ்ரீ கேசவ ஸோமயாஜீ என்ற திருநாமமுள்ளவர். அவர் ஸோமயாகம் அநுஷ்டித்தவர். தவிரவும் ஸ்ரீ பாஷ்யகாரரின் ஆசார்யனான ஸ்ரீ பெரிய நம்பிகள் யஜ்ஞாநுஷ்டானம் செய்தவரென்று ஸ்ரீ தேசிகன் ஸாதித்தார்.

மேலும் ஸ்ரீ தேசிகன் "யஜ்ஞாநாம் ஜபயஜ்ஞோऽஸ்மி" என்ற கீதா தாத்பர்ய சந்திரிகையில்

"அத ஏவ ஹி உபரிசராதய: விஷ்வக்ஸேந ஸிஷ்டவத: ॥"

என்ற வாக்யத்தில் பிஷ்ட பசுவுக்கு உபரிசராநுஷ்டானத்தையே உதாஹரணமாகக் காட்டியிருப்பதும் கவனிக்கத் தக்கது. த்ரயீ பஹிர்பூதனும், ஆகம ஸித்தாந்தமென்ற தாந்திரிக அதிகாரியுமான உபரிசரனை உதாஹரணமாக ஏன் காட்டவேண்டும் ஸ்ரீ பாஷ்யகார சிஷ்ய ப்ரசிஷ்ய பரம்பரையில் யாராவது ஒருவர் பிஷ்டபசு அநுஷ்டித்திருந்தால் கூட ஸ்ரீ தேசிகன் அதைக் குறிப்பிட்டிருக்கலாமல்லவா ? ஸ்ரீ தேசிகன் பிதாமஹனை ஸ்ரீ புண்டரீகாக்ஷயஜ்வா அநேக யாகங்கள் செய்ததாக ஸ்ரீ தேசிகன் பெருமைப் படுகிறார். பெரிய நம்பிகள் போன்றவர்களின் யஜ்ஞங்களில் பிஷ்டபசு ஆசரிக்கப்பட்டிருந்தால் உபரிசரனைக் காட்டவேண்டிய நியாயமே இல்லை.

ஆதலால் ஆசார்யர்களின் அநுஷ்டானத்தைக் காட்டமுடியாமல் உபரிசரனைக் காட்டுவதிலிருந்து ஸ்ரீ பாஷ்யகார சிஷ்ய ப்ரசிஷ்ய பரம்பரையில் எக்காலத்திலும் பிஷ்டபசு கிடையாதென்பதை ஸ்ரீ தேசிகன் ஸ்பஷ்டமாக ஒப்புக்கொண்டதாகிறது. யாராவது ஒருவராவது அநுஷ்டித்திருந்தால் ஸ்ரீ தேசிகன் அதையும் குறிப்பிட்டிருப்பாரல்லவா ? ஸ்ரீ தேசிகன் காலத்திற்குப் பிறகும் ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் இன்றுவரை பிஷ்ட பசு ஒருவராலும் அநுஷ்டிக்கப் பட்டதாக பிரஸித்தியில்லை. ஸ்ரீ தேசிகன் குமாரர், ஸ்ரீ பஞ்சமத பஞ்ஜன தாதாசார்ய ஸ்வாமி, அரசாணி பாலை

வெங்கடாசார் திருவம்சஸ்தர்கள், கரூர் ஸ்வாமி போன்ற மஹா பரமைகாந்திகளும் ப்ரத்யக்ஷ பசுவையே அநுஷ்டித்தது ஸர்வருக்கும் பிரஸித்தம்.

ஆகவே ஸ்ரீ பாஷ்யகார ஸம்ப்ரதாயத்தில் பிஷ்ட பசுவுக்கு ப்ரஸக்தி இல்லையாகையால் அது கிருதயுக காலத்திலிருந்த தாந்திரிக அதிகாரி விசேஷ நியதமென்று ஸ்ரீ தேசிகன்,

விஷ்வக்ஸேநாதிஷு ஸாத்த்வதாத்யதிகாரிவ்யக்தி நியத இதி நாவிநஸ்யாத் விரோத: । என்றும்.

விஷ்வக்ஸேநாதி விதிஸ்து ஏகாயநஶாகாநிஷ்ட அதிகாரிவிஶேஷ நியத: । என்றும் ஸாதித்தார்.

தாத்பர்ய சந்திரிகையில்

ஸ்ரீ தேசிகன் இரண்டு இடங்களில் பிஷ்ட பசு அவைதிக உபரிசரவஸு விஷயமென்று நிர்ணயித்திருப்பதை இங்கு சிறிது விவரிக்க விரும்புகிறோம். முதலில் ஸ்வயம்சிவாவேக்ஷ்ய என்ற கீதா ச்லோக தாத்பர்ய சந்திரிகையை கவனிப்போம். அங்கு:—

விஷ்வக்ஸேநாதிவிதிஸ்து ஏகாயநஶாகாநிஷ்ட அதிகாரிவிஶேஷ நியத: ।: "பஶுயஜ்ஞை: கதம் ஹிம்ஸ்ரை: மாத்ருஶோ யஷ்டுமர்ஹதி ॥" இத்யாதிவசநாதிதி பாவ: ॥
என்று ஸ்ரீ தேசிகன் ஸாதிக்கிறார்.

இங்கு காணப்படும் "ஏகாயநஶாகாநிஷ்ட" என்றதற்கு ஏகாயந சாகாநிஷ்டன் என்ற அர்த்தம் திருவுள்ளம். ஸ்ரீ பாரமேச்வர ஸம்ஹிதையில்;—

ஸாத்வதாநாம் ஸித்தாந்தம் ஶ்ருத்வா க்ஷீராப்திவாஸிந: ।
ஸாத்விகாத்யந்தமாயாதை: ஸர்வைர்கார்த்தயுகை: ஸ்ம்ருத: ॥

என்பதால் ஏகாயநசாகா விஹிதமான ஆகம ஸித்தாந்தத்தை "கார்த்தயுக தர்ம" மென்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உபரிசரன் இந்த ஆகமஸித்தாந்தமெனப்படுகிற கார்த்தயுக தர்ம நிஷ்டனென்பது கீழே நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இங்கு ஸ்ரீ தேசிகனும் "பஶுயஜ்ஞை: கதம் ஹிம்ஸ்ரை: மாத்ருஶோ யஷ்டுமர்ஹதி" என்ற உபரிசரவஸுவின் வார்த்தையையே இதற்கு பிரமாணமாக எடுக்கிறார். அதாவது:—உபரிசரன், "ஹிம்ஸாத்மகமான யாகங்களால் நான் யஜிக்கமாட்டேன்" என்று சொல்லுவதால் அத்தகைய அதிகாரிக்காகவே பிஷ்ட பசு ஏற்பட்டதென்றும், அஹிம்ஸாத்வவாதிகளான

வைதிக மதஸ்தர்களுக்கு அது ஏற்பட்டதல்லவென்றும் ஸ்ரீ தேசிகன் ஸாதிக்கிறார். உபரிசரன் ப்ரத்யக்ஷ பசு யாகத்தை ஹிம்ஸையென்று சொல்லுகிற ஒரு மதத்தைச் சேர்ந்தவனாகையால் அவனுடைய அபிப்பிராயமும் அநுஷ்டானமும் நம் ஸித்தாந்திகளுக்கு உபாதேயங்களல்லவென்பது ஸ்ரீ தேசிகனால் இங்கு நிர்ணயிக்கப்பட்டது.

யஜ்ஞாநாம் ஜபயஜ்ஞோऽஸ்மி என்ற கீதா தாத்பர்ய சந்திரிகையிலும் ஸ்ரீ தேசிகன் பிஷ்ட பசுவானது உபரிசராதி அதிகாரிக்குமட்டும் ஏற்பட்டதென்பதை ஸ்திரப்படுத்தியிருக்கிறார். அங்கு, யக்ஞங்களுள் ஜபயக்ஞம் ப்ரசஸ்தம் என்ற கீதையின் தாத்பர்யத்தை ஸ்ரீ தேசிகன் விவரணம் செய்கையில், மற்ற யக்ஞங்களில் ஒவ்வொரு கிலேசமிருப்பதாயும் ஜபயக்ஞத்திலே எவ்வித கிலேசமும் கிடையாதாகையால் அது ப்ரசஸ்தமென்று நிரூபிக்கிறார். இதில் ஹிம்ஸாயக்ஞம், அஹிம்ஸாயக்ஞம் இரண்டையும் ஸ்ரீ தேசிகன் குறிப்பிட்டு இந்த இரண்டிலும் கிலேசமிருப்பதாக ஸாதிக்கிறார். இதில் ஹிம்ஸாயக்ஞமானது சாஸ்திரீயமாயிருந்தபோதிலும், ஹிம்ஸைக்கு ஸமாதானம் சொல்லவேண்டிய கிலேசம் அதில் இருப்பதாகச் சொல்லிவிட்டு, அஹிம்ஸாயக்ஞத்திலுள்ள கிலேசத்தை உபபாதிக்கையில்:—

அஹிம்ஸாத்மகாஸ்து யஜ்ஞா: விசிஷ்டாதிகாரிஸாபேக்ஷா: ।
அத ஏவ ஹி உபரிசராதய: பிஷ்டபசுபிரிஷ்டவந்த: ॥

என்பதால், அஹிம்ஸாத்மகமான பிஷ்ட பசு யக்ஞத்தை உபசராதி அதிகாரி விசேஷ நியதமென்று ஒதுக்கவேண்டிய கிலேசமிருப்பதாக ஸாதிக்கிறார். இதை மேலே நிகமன் வாக்யத்தில் ஸ்வாமீ தெளிவாக்கியிருக்கிறார். அதாவது;—

ஏவம் த்ரயீஜுஷ்டே ஹிம்ஸாதி ப்ரஸங்க:, அதிகாரி விசேஷாதிநா வ்யவஸ்தாபநம் இத்யாதி: க்லேசாநுஷங்க: । ஜபயஜ்ஞஸ்து தஸ்ய ஸம்பாவா.............யஜ்ஞாந்தரேப்ய: ஜபயஜ்ஞ: ப்ரசஸ்த: ।

இந்த வாக்யத்தில், த்ரயீ விஹித யக்ஞங்களில், ஹிம்ஸா ப்ரஸக்தி இருக்கிற கிலேசத்தையும், அஹிம்ஸாயக்ஞத்தில், அதிகாரி விசேஷ நியதமென்ற வ்யவஸ்தை செய்யவேண்டிய கிலேசத்தையும் குறிப்பிடுவதன் மூலமாக பிஷ்ட பசு யாகம் உபரிசர விஷயமேயல்லது நமக்கல்லவென்பதை ஸ்திரப்படுத்தியிருக்கிறார்.

பிஷ்டபசு மறைந்துவிட்டது

தாந்த்ரிகமான பிஷ்டபசு கூட இக்காலத்தில் அநுஷ்டிக்க வழியில்லை. ஏகாயநசாகையோ, அதை அத்யயனம் செய்யும் அதிகாரிகளோ, பிஷ்ட-

பசுவுக்காக ஏற்பட்ட மந்த்ர, ப்ரயோகாதிகளோ இப்போது எங்கும் கிடைக்கவில்லை. அவை உபரிசரன் காலத்திற்குப் பிறகு மறைந்துவிட்டன. ஸௌபாக்யானத்தில் பகவத் வசநத்தால் இது ஸ்பஷ்டமாகிறது. சித்ரசிகண்டி சாஸ்திரமானது ஸ்வாயம்புவமட்டும் உத்பத்தி செய்யப்பட்டதாகையால், அவன் இறந்த பிறகு அந்த சாஸ்திரமும் அந்தர்த்தானமடைந்துவிட வேண்டுமென்று

ஸ்வாயம்புவே த்வதீதே து ஸஹ தேந ப்ரணங்க்ஷ்யதி ।
ஏதத் ஸம்ப்ரோக்தம் ஸர்வம் வ: கதிதம் மயா ॥

என்ற வாக்யத்தால் சித்ரசிகண்டி ரிஷிகளுக்குப் பகவான் ஆக்ஞாபித்தார்.

இந்த பிஷ்டபசு விஷயமாக இன்னும் சில விஷயங்கள் உண்டாயினும் அவை இப்போது இங்கு ப்ரஸக்தங்களல்லவென்று விடப்படுகின்றன.

ஆகவே உபரிசரனும், அவனுடைய பிஷ்டபசுவும், அவைதிகமாகையாலும், அவனுடைய அநுஷ்டானம் த்ரயீ நிஷ்டர்களுக்கு உபாதேயமல்லவென்று ஸ்ரீ தேசிகாதி ஸ்ரீ ஸூக்திகளால் தெளிவாகிறபடியாலும், ஸ்ரீ பாஷ்யகார சிஷ்ய ப்ரசிஷ்ய பரம்பரையில் ப்ரத்யக்ஷ பசுவே அநுஷ்டிக்கப்பட்டு வந்திருப்பதாலும், ஸ்ரீ தேசிகன் பிஷ்டபசுவை காலாதிகாரி விசேஷ நியதமென்று ஒதுக்கிவிட்டதாலும் வைதிக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அது உபாதேயமல்லவென்பது ஸித்தமாயிற்று.

ஸங்கல்பப்ரயோக விசாரம்

[ஸ்ரீ. உ. வே. ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சிறுப்பள்ளி.]

சுக்லாம்பரதரம் விஷ்ணும் என்ற ச்லோகம் ப்ராசீநம் ஸாம்ப்ரதாயிகம். ஆழ்வானுடைய யமகரத்நாகரம் முதல் ச்லோகத்தில் தானே செய்தருளிய வ்யாக்யாநத்தில் 'அல்லது இப்படியும் பொருள் கூறலாம். க்ருதயுகாதிகளில் தம்முடைய இச்சையால் ரூபங்களை பரிக்ரஹிக்கும் பகவானுக்கு ச்வேதர்ணமே உண்டு. அதுவே இங்கே விக்நசமநத்திற்காக ஆச்ரயிக்கப்படுகிறது'. ததாஹு: என்று சொல்லி, சுக்லாம்பரதரம் விஷ்ணும் என்ற ச்லோகம் ப்ரமாணமாக உதாஹரிக்கப்பட்டது. விக்நங்களைப் போக்குவதற்காக வெண்மை வர்ணமான பகவானை முதன் முதலில் இந்த ச்லோகத்தால் த்யாநம் செய்யும் ஸம்ப்ரதாயத்தை அநுசரித்து தாமும் ப்ரஸந்நமேகம்போலே வெண்மையான வர்ணமுடைய பகவானைப் பணிந்து தம்ப்ரபந்தத்தைத் தொடங்குவதாகக் காட்டினார். ஸ்ரீ பாகவதம் தசமத்தில் 'ஸர்வஸ்வம் ஜலதாதத்வா" என்று சரத்காலத்தில் நீரவர்ஷித்து வெண்மை நிறம் வாய்ந்த மேகத்தை வர்ணித்திருக்கிறது. பகவானும் வெண்மை நிறத்திலும் மேக வர்ணத்தைவிடவில்லை என்று ஆழ்வானுடைய அழகிய ப்ரதர்சநம்.

ஸங்கல்பதத்வ நிரூபணம்.

[தி. ஈ. வீரராகவாசாரியர், திருவாதி]

[நமது வித்வான்களுடைய பாண்டித்யம் விசித்ரமானது. நமது சாஸ்திரங்களோ, கடல்போல் நாலுதிக்குகளிலும் ஸஞ்சாரம் செய்ய இடம் தருகின்றன. ஸ்தித ஸ்யகதி: சிந்த நீயா என்ற ந்யாயத்தை ஒட்டி இருப்பதற்கு ஸமாதாநம் சொல்லுவதாயிருந்தால் எவ்வளவோ சொல்லக்கூடும். இந்த ச்லோகத்தை அநுஸந்திப்பதில் மஹா ப்ரத்யவாயம் உண்டு என்று நான் சொல்ல வரவில்லை. இந்த ச்லோகாநுஸந்தாநம் நமக்கு ப்ராப்தமானதற்கு மூல ப்ரமாணம் என்ன? ஸகல க்ர்மாரம்பங்களிலும் விக்நநிவாரகமங்களா சரணம் அவச்யகர்த்தவ்யமா? அகரணே ப்ரத்யவாயமுண்டாகுமா? இந்த ச்லோகத்தை அநுஸந்திப்பதற்கு ஸ்ரீ உடையவர், தேசிகன் முதலான ஆசார்யாளுடைய ஸம்மதி உண்டா? வையாயிகரில் சிலர் சொல்லும் போலே. அதுமித ச்ருதி மூலகமாய் விதிப்ராப்தமானல், ஸந்த்யோபாஸநாதிகளிலும் அவச்யமல்லவா. இத்யாதி விஷயங்களை விசாரித்து தீர்மானித்தால் நன்றாயிருக்கும்.

மேலும். நமது நித்ய நைமித்திகாதி கர்மங்களால் பகவானுக்கு ப்ரீதி உண்டாகிறது என்று ப்ரமாணங்கள் காணப்படுவதால் பகவத் ப்ரீதியையே ப்ரயோஜநமாகக் கருதி கர்மங்களைத் தொடங்கவேணும் என்று இந்த வ்யாஸத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதில் கிஞ்சித்தேனும் அடியேனுக்கு விவாதமில்லை. இன்னம் அநேக ஸந்தர்ப்பங்களில் ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளில் பகவத் ஸமாராதநத்தையே முக்கிய பலமாகக் காட்டியிருப்பதால் இந்த ஸந்தர்ப்பத்தில் அப்படி அநுஸந்திப்பது அழகாக விருக்குமோ என்று அடியேனுடைய மநோபாவம். அதாவது ஸந்த்யோபாயநாக்யேந கர்மணா பகவந்தம் ஆராதயிஷ்யாமி, அதவா, அர்ச்சயஷ்யாமி என்று அநுஸந்திப்பது உசிதமாகலாம் போல் இருக்கிறது.

இந்த ஸங்கல்பப்ரகரணத்தில் நாராயண சப்தத்தைக் காட்டிலும் பகவத் சப்தத்தை உச்சரிப்பது ஆசார்யாபிமதமாயிருக்கும் எனத் தோன்றுகிறது.

வர்ணாச்ரம தர்மாநு பாலநத்திற்கு, பதிவ்ரதையின் மங்கள்ய ஸூத்ர ரக்ஷணத்தையன்றோ திருஷ்டாந்தமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அப்போது நாராயண ப்ரீத்யர்த்தத்தைக் காட்டிலும், பகவதாராதநாநு ஸந்தாநம் விலக்ஷணாதிகாரத் யோதகமாகும் என்றும் தோன்றுகிறது.
ப—ர்]

பத்ராதிபர் ஸ்ரீ. உ. வே. வி. அனந்தாசார் ஸ்வாமியால் சென்ற மாஸ தீபிகையில் பிரசுரிக்கப்பட்ட ஸங்கல்ப ப்ரயோக பரிஷ்காரத்திலுள்ள அம்சங்களுக்கு ஸமாதானத்தை விஜ்ஞாபனம் பண்ணிக்கொள்ளுகிறேன்.

சாஸ்த்ரீய கர்மாரம்பங்களில் ஆசார்ய பரம்பராபஜனமும் பகவத்யானமும் அவச்யம் என்பது

हरिमेवस्मरेन्नित्यं कर्मपूर्वापरेषुच सचाचार्य वंशोज्ञेयो भवति । आचार्याणामसावसाविरया भगवत्तः ।

இத்யாதி ப்ரமாணங்களைக் கொண்டு सर्वत्र शास्त्रीय कर्मारंभे भगवत्त् पर्यन्त गुरुपङ्क्ति प्रपदनं निश्रेयसाय भवति என்று ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷையில் ஸமர்த்திக்கப்பட்டிருக்கிறது. அதை அனுஸரித்தே ஸங்கல்ப காலத்தில் ஆசார்ய பரம்பராபஜனம் பண்ணி சுக்லாம்பரதரம் விஷ்ணும் என்று பகவத்பஜனமும் செய்யப்படுகிறது. இந்த ச்லோகம் ஹயக்ரீவப்ரதிபாதகமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்! அது உசிதமாகவும் தோன்றுகின்றது. சசிவர்ணம் சதுர்புஜம் என்றிவைகள் ஸ்ரீ ஹயக்ரீவ விக்ரஹத்திலுள்ள வெண்மை நிறத்தையும் சதுர்புஜங்களையும் ப்ரதிபாதிக்கின்றன. வ்ருத்தஹாரீத ஸம்ஹிதையில்

"शङ्खाभरशङ्खचक्रे करसरसिजयोः पुस्तकञ्चान्यहस्ते बिभ्रद्व्याख्यान मुद्रालसदितर करः,

என்றிவ்வாறாக ஹயக்ரீவத்யானம் சொல்லப்பட்டிருக்கின்றது

"निर्मलस्फटिकाकृति" "शुद्धस्फटिक मणि भूभृत्प्रति मटं" व्याख्यामुद्रां करसरसिजैः"

என்றிவ்வாகாரம் ஹயக்ரீவ ஸ்தோத்ரத்திலும் ஆசார்யனால் அனுஸந்திக்கப்படுகிறது.

"हता शेषा वद्य" "लय: प्रत्यू हानां" இத்யாதிகளான ஹயக்ரீவ ஸ்தோத்ராதி வசனங்களால் ஹயக்ரீவானு சந்தானம் ஸர்வ விக்ன நிவாரகம் என்று ஏற்படுவதால் ஸர்வ விக்னோப சாந்தயே என்று சொல்லிய பலமும் உசிதமாகிறது. ஹாரீத ஸம்ஹிதையில்

"शुक्लाम्बरधरं विष्णुं मुक्ताहारैर्विभूषितं । ध्यात्वासमर्चयेद्देवं"

என்று பகவத்யானம் சொல்லப்பட்டிருப்பதால் அந்த ரீதியிலே ஹயக்ரீவனுக்கும் சுக்லாம்பரம் உபபன்னம். ஆகவே லக்ஷ்மீ ஹயக்ரீவனே இச்ச்லோகத்தால் உபாஸிக்கப்படுகிறதாகக் கொள்ளலாமென்று தோன்றுகிறது.

இரண்டாவது—ஸ்ரீ பகவதாஜ்ஞயா பகவத் கைங்கர்ய ரூபம் என்று பலரும் ஸ்ரீ மந்நாராயண ப்ரீத்யர்த்தம் என்று சிலரும் சொல்லி வருகிறார்கள். இதில் முதல் பக்ஷம் கொஞ்சம் ஸங்கதமாகலாம் போலிருக்கிறது. இரண்டாவது ஸர்வதா அஸங்கதமென்பதில் ஆக்ஷேபமில்லை என்று எழுதியிருப்பது உசிதமன்று. ஸ்ரீ வைஷ்ணவ தர்ம ப்ரதிபாதனத்துக்காக ஏற்பட்ட ஹாரீத ஸ்ம்ருதி முதலிய ப்ரமாணங்களிலும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலும் கர்மாக்களை பகவத் ப்ரீத்யர்த்தமாகவும் பகவத் கைங்கர்ய ரூபங்களாகவும் அநுசந்தித்துச் செய்யவேண்டுமென்றே ஏற்படுகிறது. ஹாரீத ஸ்ம்ருதியில்

" भोक्तारं सर्वयज्ञानां सर्वलोकेश्वरं हरिं ।
ज्ञात्वातत्प्रीतये सर्वान् जुहुयात् என்றும்

" दानं तपश्च यज्ञश्च त्रिविधं कर्मकीर्तितं ।
तत्सर्वं भगवत्प्रीत्यै कुर्वीत सुसमाहितः " என்றும்

तस्मात्तु वैष्णवो भूत्वावैदिकीं वृत्तिमाश्रितः ।
कुर्वीत भगवत्प्रीत्यै कुर्याद्यज्ञादि कर्मयत् ॥

तद्विशिष्टमिति प्रोक्तं सामान्य मितरं स्मृतं ।
फलहीना भवेत्सातु सामान्यावैदिक क्रिया ॥

என்றும் இவ்வாறாக பகவத் ப்ரீதியை உத்தேசித்தே வைதிக கர்மங்கள் அநுஷ்டிக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டது.

சௌனக மஹர்ஷியினாலும்

" दानं ददद्भिर्यैरुक्त मच्युतः प्रीयतामिति ।
प्रति ग्रहीतृभिश्चैव न ते मद्विषयोपगाः " ॥

என்று தான ப்ரதிக்ரஹங்களை பகவத் ப்ரீதியையே பலமாகக் கோலிச் செய்பவர்கள் நரகத்தை அடையமாட்டார்கள் என்று இவ்வநுஸந்தானத்துக்கு நிரய நிஸ்தாரகத்வம் கண்டோக்தம்.

வைதிக கர்மங்களெல்லாம் ஸ்ரீ பகவதாஜ்ஞயா என்று ஸங்கல்பத்தில் நாம் அநுஸந்திக்கிற க்ரமத்திலேயே அநுஸந்தித்துச் செய்யப்படவேண்டும் என்பதும்

" तद्विधि वैदिकी याच तदाज्ञाचोदिता क्रिया ।
तत्राप्याराधनत्वेन कृतापापस्य नाशिनी "

என்கிற ஹாரீத வசனத்தினால் ஸ்பஷ்டமாகிறது.

இனி ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலும் இவ் வர்த்தமே உபபாதிக்கப்பட்டிருப்பதையும் ஸங்க்ரஹமாகக் காட்டுகிறேன். ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷை இரண்டாமதிகாரத்தில்

" तच्चेद्भगवत्प्रीत्यैक प्रयोजनतयानुष्ठेयमित्यनुज्ञायेत तर्हि तदनुबन्धि सर्वमपि तद्वदनुज्ञायतां "

என்பதனால் ஸ்ரீ பாஷ்யகாரரால் சொல்லப்பட்ட நித்ய ஸமாராதனம் பகவத்ப்ரீதியையே ப்ரயோஜனமாகக் கொண்டு அநுஷ்டிக்கப்படவேண்டுமென்றில் அப்படியே மற்றவையும் அதையே ப்ரயோஜனமாகக் கொண்டு அநுமதிக்கப்படலாம் என்றருளிச் செய்யப்பட்டிருப்பதாலும் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரத்தில் சாஸ்த்ரீய நியமநாதிகாரத்தில் "प्रहर्षयिष्यामि" என்று உத்தேச்யையான பகவத் ப்ரீதிக்கு" என்று கண்டோக்கியிருப்பதாலும் பாமை காந்தி பகவத் ப்ரீத்யர்த்தம் என்று பகவத் ப்ரீதியை பலமாகக் கோலியே வைதிக கர்மங்களை அநுஷ்டிக்கவேண்டும்.

" उपायतां परित्यज्य " என்பது பகவத் ப்ரீத்யர்த்தங்களான கர்மங்களும் பகவச் சேஷ பூதங்களாகையாலே அவனே ப்ரதானோபாயனாகிறபடியால் கர்மங்களில் ப்ரதானோபாயத்வ புத்தியைத் தவிர்த்து அதை பகவானிடத்திலே பண்ணவேணுமென்கிறது.

" प्रियाय ममविष्णोश्च देवदेवस्य शार्ङ्गिणः ।
मनीषी वैदिकाचारं मनसापिन लंघयेत् " ॥

என்றிவ்வாறாக வைதிகாசாரங்களுக்கு பகவத் ப்ரீதி ப்ரயோஜனமாகச் சொல்லப்பட்டிருப்பதால் உக்தார்த்தங்கொள்ளவேண்டும்.

" प्रीत्यै विष्णोस्तवच कृतिनः प्रीतिमन्तो भजन्ते ।
वेला भङ्गप्रशमन फलं वैदिकं धर्मसेतुं " ॥

என்று ஸ்தோத்ரத்திலும் இவ்வர்த்தம் அருளிச் செய்யப்பட்டது.

" स्वकर्मणा तमभ्यर्च्य " என்கிற கீதாவசனத்திலும் தனக்கு அடைத்த வர்ணாச்ரமாநுகுண கர்மத்தினால் பகவதாராதனம் சொல்லப்பட்டது.

இதனால் ஸ்வகர்மமானது பகவதர்ச்சன ரூபமென்று ஏற்படுவதால் பகவத் ப்ரீத்யர்த்தம் என்கிற அநுசந்தானம் ஆவச்யகமென்றதாகிறதேயன்றி அவ்வநுஸந்தானத்தை இது நிஷேதிக்கமாட்டாது.

ஸ்ரீ பாஞ்சராத்ரோக்தமான பகவத் ப்ரீத்யர்த்தேன கர்மணா என்னும் பகவான் ப்ரீயதாம் வாஸுதேவ: என்றும் ஸங்கல்பத்திலும் கர்மா

னுஷ்டானங்களுக்கு பகவத் ப்ரீதியே பலமாக உத்தேசிக்க விதிக்கையாலும் இந்த ஸங்கல்பம் மதாந்தரஸ்தரைப்பார்த்து அநுஸந்திக்கப் படவதாகக் கொள்ள ந்யாயமில்லை. ஆகவே ஸ்ரீ பகவதாஜ்ஞாநுபகவத் கைங்கர்யரூபம் என்று சிலரும் பகவத் ப்ரீத்யர்த்தம் என்று சிலரும் யதா ஸம்ப்ரதாயம் அநுஸந்திப்பது மிகவும் ஆவச்யகமானது என்று ஸங்க்ரஹமாக நிரூபிக்கப்பட்டது

காலஞ்சென்ற சேட்லூர் துரைசாமி அய்யங்கார், பி. ஏ. பி. எல்.

இவர் சென்றமாதம் திடீரென்று காலஞ்சென்றது தென்னிந்தியர்கள் யாவருக்கும் அதிலும் ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்திற்கே மிகவும் சோசனீயமானது, திருப்பதியில் சத்வம் சத்தில் ஜனித்து இவர் ஆரம்ப முதல் கடைசிவரையில் "பிரஹ்மணி ஸ்ரீனிவாஸே" என்கிற ஓர் பதக் கோர்வைக்கு ஓர் அசாதாரண அர்த்த விசேஷம் கல்பித்தவராய்; திருப்பதியில் ஸாந்நித்யம் கொண்டிருக்கும் ஸ்ரீனிவாசனே பரப்ரம்மம் என்கிற ரீதியில் பக்தி அதிசயத்துடன் நினைத்தும் அநுபவித்தும் சொல்லியும் செய்தும் வந்துள்ளார்.

பொதுஜன நன்மைக்காக அநேக காலம் உழைத்தவர்; மகாத்மா காந்தியினிடம் குருபக்தி மிகுந்தவர்; லாயர் வேலையில் மிகவும் சிறந்தவர்; வித்வத் பக்ஷபாதி: வைதிக தர்மம் இடைவிடாது பரிபாலித்தவர்: சிநேகத்திற்கு மிகவும் பாத்திரர்: அதிதி ஆராதனத்தில் நிபுணர். சென்ற சில வருஷங்களாக இவர் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் ஊக்கத்துடன் ஆராய்ச்சி செய்து அதனுடைய அபிவிருத்திக்காக உத்ஸாகத்துடன் முயன்று வந்திருக்கிறார். ஸ்ரீமத் ராமாயணத்தை சில காலமாக சிரமப்பட்டு அந்தர் பூதமான அர்த்தஸவாரஸ்யங்களையும் இதர ரகஸ்யங்களையும் தேடி யெடுத்து ஸஹ்ருதயர்கள் எல்லாருக்கும் சந்தோஷிக்கும்படி அவ்வப்போது பிரசுரப்படுத்தி வந்திருக்கிறார். இப்பேர்க்கொத்த ஸ்ரீமான் இக்கர்ம பூமியை விட்டு திடீரென்று பரலோக ப்ராப்தியடைந்தது அந்த ஸ்வாமிக்கு அநுரூபமாயிருந்தபோதிலும், நம்மவர் யாவருக்கும் பெரியதோர் கஷ்டம். பெரிய தௌர்பாக்கியமாகவே கருத வேண்டும்.

பண்டைத் தமிழர் மதம்

(பந்தல்குடி பாரத்வாஜமாடபூசி ரெ. திருமலை ஐயங்கார். காரியதரிசி,
திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.)

பண்டைத்தமிழ் நூல்களைச் செவ்வனே ஆராய்ந்தால் பண்டைத் தமிழர் மதம் வைணவம் என்பது கையிலங்கு நெல்லிக்கனியாகக் காணலாம் இதனை இப்பகுதியிற்சற்றுக்கூறுவாம்.

இற்றைக்குச் சுற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன் திகழ்ந்த புலவர் பெருமானான பாரதம்பாடிய பெருந்தேவனார், நற்றிணையில்,

1 " மாநிலஞ் சேவடியாகத்தூ நீர்வளைநரல் பௌவமுடுக்கையாக
விசும்பு மெய்யாகத்திசை கையாகப்
பசுங்கதிர் மதியமொடுசுடர் கண்ணாக.
வியன்ற வெல்லாம் பயின்றகத்தடக்கிய
வேதமுதல் வனென்ப. தீதறவிளங்கியதி கிரியோனே "

என்கிறார். இது "பூ: பாதௌ" என்ற ஸஹஸ்ர நாமதியான சுலோகத்தை அடியொற்றிய பாட்டென்பது அறியத்தகும்.

திரிகடுகம் என்ற நூலை இயற்றிய நல்லாதனார்

2 " கண்ணகன் ஞாலமளந்ததூஉங்காமருசீர்
தண்ணறும் பூங்குருந்தஞ்சாய்த்ததூஉ—நண்ணிய
மாயச்சகட முதைத்ததூஉ மிம்மூன்றும்
பூவைப்பூ வண்ணனடி "

என்கிறார்.

நான் மணிக்கடிகை என்ற நூலை இயற்றிய
விளம்பி நாகனார்

---

1 வேதமுதல் வனாகிய திருமாலுக்கு நிலவுலகம் திருவடியாகவும் கடல் ஆடையாகவும், விசும்பு திருமேனியாகவும், திசைகள் கைகளாவும், சந்திர சூரியர்கள் இரண்டு கண்களாகவும் அமையும். இப்படிப்பட்ட பகவான் எல்லாப்பொருள்களிலும் அந்தர்யாமியாகப் பொருந்தியிருப்பதுடன் அவற்றைத் தன்னுள்ளும் அடைக்கிக் கொண்டிருப்பன்.

2 இடம் விரிந்த பூமியை அளவு செய்ததும், அழகிய சிறப்பையுடைய குளிர்ந்த மணமாகிய மலர்களையுடைய குருந்த மரத்தைச்சாய்த்து விழச்செய்ததும், கொலை செய்யவந்த வஞ்சனையாகிய வண்டியை உதைத்ததும், இம்மூன்று பெருளும் காயாம் பூவை ஒத்த திருமேனியையுடையானது சீர்பாதமாம்.

3 " மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கு
முது நீர்ப்பழனத்துத் தாமரைத்தாளி,
னெதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமலரொக்கு நிறம்" என்றும்;

4 படியை மடியகத்திட்டானடியினன்
முக்காற் கடந்தான் முழுநில—மக்காலத்
தாப்பணித்தாங்கிய குன்றெடுத்தான் சோவி
னருமை யழித்தமகன்" என்றும்

பாடியிருக்கின்றார்.

கண்ணபிரான் பின்னையை மணந்தபின் அவளுடன் அப்பெருமான் நிகழ்த்திய சரிதைகளைப் பண்டைத்தமிழ்மக்கள் நாடகமாக நடித்து வந்தனர். இந்நாடகங்களிற் சிறந்தது ஆயர்பாடியில் தாதெருமன்றம் என்ற விடத்து, யசோதைப்பிராட்டியும், பிறரும் காணுமாறு, கண்ணனும் நம்பிமூத்த பிரானும் பின்னையை நடுவிற்கொண்டு ஆடிய அற்புதக்குரவையே யாகும். குரவையாவது 'செய்தோர் செய்த காமமும் விறலும் எய்த எழுவர் மங்கையர்கைகோத்துச்சுழன்றாடுதல்' என்ப.

" ஆயர்பாடியில் எருமன்றத்து
மாயவனுடன் தம்முன் ஆடிய
வாலசரிதை நாடகங்களில்
வேனெடுங்கட்பின்னை யொடாடிய
குரவையாடுதும் யாமென்றாள்
கறவைகன்று துயர் நீங்குகவென்வே"

" மாயவன்றன் முன்னினொடும் வரிவளைக்கைப்பின்னையொடும்
கோவலர் தஞ்சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
ஆய்வளைச் சீர்க்கடி பெயர்த்திட்ட சோதையார் தொழுதேத்தத்
தாதெருமன்றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே"

என்பவை இங்கு அறியத்தக்கன.

---

3 மதிமாயவனது ஒளிமுகம் ஒக்கும்; ஒளி சிறந்த ஞாயிறு அவனது சக்கர மொக்கும்; முது நீர்ப்பழனத்துத் தாமரைத்தாளின் கட்செவ்விமலரை மற்றவன் கண்ணொக்கும்; நிறம் காயாவின் புது மலரை ஒக்கும்.

4 உலகத்தைத்தன் வயிற்றின் கண் வைத்தானும், எல்லாவுலகையும் தன் சேவடியான் மும்முறையாற் கடந்தானும், முற்காலத்து ஆநிரையைத்து யர்கெடுக்க வேண்டி மலையை யெடுத்தானும் சோவென்னும் குறும்பினருமையை அழித்த மகனும் முன் சொல்லிய மாயவன், (குறும்பு அரண்; சோவரணம்—அசுரர் நகரம்.)

பழந்தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் 'ஆய்ச்சியர் குரவை'ப்பகுதியிற்கூறவதைக்கேண்மின்.

" வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல் வண்ணன் பண்டொருநாட்கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற்கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோமருட் கைத்தே.
அறுபொருளி வனென்றே யமரர் கணந்தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினாலுறவெண்ணெயுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே.
திரண்டமரர் தொழுதேத்துந்திருமாலின் செங்கமல
விரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாகநடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே.

* * *

மூவுலக மீரடியான் முறை நிரம்பாவகை முடியத்
தாவிய சேவடி செப்பத்தம்பி யொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவி யென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவி யென்ன செவியே.
பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமலவுந்தி யுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங்கையுங்கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.
மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர் பாலாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தாரணமுழங்கப் பஞ்சவர்க்குத்தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணாவென்னா நாவென்ன நாவே"

மேலும் இச்சிரியர் "காடு காண் காதை'யில் திருவேங்கடமுடையானது நின்றதிருகோலத்தைப் ப்ற்றி அழகாகப் பாடுவது அடியில் வருமாறு:—

5 "வீங்கு நீரருவி வேங்கடமென்னும்
ஓங்குயர் மலையத் துச்சிமீ மிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய விடை நிலத்தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையினேந்தி
நலங்கிளராரா மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கணெடி யோனின்ற வண்ணமும்

என்பது.

சிவ பரத்துவங் கூறும் அத்வைதியாகிய நச்சினார்க்கினியரும் திருமலையைக் குறிக்கையில் 'நிலங்கடந்த நெடு முடியண்ணலை நோக்கி உலகோர் வலஞ்செய்து வீடு பெற்றமலை' என்பர்,

திருவரங்கச் செல்வனைக் குறிக்கையில்

6 "நீலமேக நெடும்பொற் குன்றத்துப்
பால் விரிந்த கலாது படிந்ததுபோல
ஆயிரம் விரித்தெழுதலையுடைய யருந்திறற்
பாயற்பள்ளிப் பலர் தொழுதேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன்கிடந்தவண்ணமும்"

எனப் பேசுகிறார்.

---

5 கொடி வழித்திர்த்த முதலிய மிக்க அருவி நீரையுடைய திருவேங்கடமென்று கூறப்படும் உயர்ந்த மலையின் உச்சி மீதே ஞாயிறுந் திங்களும் இருமருங்கும் ஓங்கி விளங்கிய நடுவிடத்தே நல்ல நீல நிறமுடைய மேகமொன்று தன் மின்னாகிய புடவையை யுடுத்துத் தன் வில்லாகிய பணியைப் பூண்டு நின்றாற்போலப் பகையை வருத்தும் திருவாழி திருச்சங்குகளை அழகிய தாமரைக் கையின் கண் ஏந்தி அழகுமிக்க ஆரத்தைத் திருமார்பிற் பூண்டு பொற்பூவாடை யுடுத்துச் சிவந்த திருக்கண் மலரையுடைய நெடியோன் நின்ற திருக்கோலத்தையும்

6 நீலமேகமொன்று உயர்ந்த பொன்மலையின் பக்கங்களில மிக்காமல் ஒக்கப் படிந்ததுண்டாயில் அதனை யொப்பத் தனது படம் விரித்தெழுந்த ஆயிரம் தலைகளையும் ஒட்டுதற்கரிய வலியினையுமுடைய பாம்பப் பள்ளி மீதே தேவர் பலருந்தொழுதேத்த அலைவிரியும் காவிரியாற்றிடைக் குறையிலே திருமகள் பொருந்திய திருமார்பையுடையோன் கிடந்த திருக்கோலத்தையும்

பாரதம் பாடிய பெருந்தேவனார் தங்காலத்துப் பிரபலமாக விளங்கிய கோயில், திருமலை, பெருமாள் கோயில், அழகர் கோயில்களாகிய திருமால் திருப்பதிகளை

"தேனேங்கு நீழற்றிருவேங்கட மென்றும்
வானேங்கு சோலைமலையென்றும்—தானேங்கு
தென்னரங்கமென்றந்தி ருவத்தியூரென்றும்
சொன்னவர்க்கு முண்டோதுயர்"

என்றும் வாயாரப் பாடியுள்ளார்.

முன்னரே இத் தீபிகையில் "கம்பர் மதம் வைஷ்ணவம்"; 'திருவள்ளுவரும் ஸ்ரீ வைஷ்ணவமும்"; "திருவள்ளுவரும் திருமாமகளும்" "முப்பாற்றலைக் கடைப்பாக்கள்"; "கம்ப ராமாயண ஆதியந்தப்பாக்கள்" என்ற தலைப்பின் கீழே வியாசங்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றால் திருவள்ளுவரும் கம்பரும் பரம வைணவ சிகாமணிகள் என்பது போதரும். •சமயம் வாய்த்து இடமுங்கிடைப்பின் 'பரிபாடலிலிருந்து போதிய சான்றுகள் காட்ட உத்தேசித்துளோம்.

நம்மவரிற் பலர் தமிழின் நீர்மைநன்கு அறியாதவராகலின் சிறுவர்களும் கற்றுணர்ந்து கொள்ளுமாறு இங்ஙனம் வரைந்துளோம். குணங்கொண்டு குற்றங்களை மின். கண்ணன் கழலிணையே காப்பு.

கோதாவதார நிர்ணயம்

[ப்ரம்மஸ்ரீ. வி. நாராயணய்யர், மைலாப்பூர், M.A.M.L.]

[சில நாட்களுக்கு முன் நமது நண்பர் ஸ்ரீமான் T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் ஆநந்தவிகடன் தீபாவளி மலரில் பிரசுரிக்கப்பட்ட வியாசம் ஒன்றில் ஸ்ரீ ஆண்டாள் என்று நம்மவர்களால் அவதாரமூர்த்தியாய் கொண்டாடப்பட்டு அர்ச்சாவதார ரூபமாய் பூஜிக்கப்பட்டும் இருக்கிறது. நிஜமாய் இருந்த ஒரு வ்யக்தி விசேஷமல்லவென்றும், அது பெரியாழ்வாரால் தன் மனஸ்ஸையே ஒரு ஸ்திரீயாக பாவனை செய்து அவ்வித ஸ்திரீ எழுதின பிரபந்தங்களாக ஸ்ரீ ஆண்டாள் எழுதினதாக நம்மால் கொண்டாடப்படும் பிரபந்தங்களெல்லாம் நிஸ்சயிக்கக் கூடுமென்ற தமது கொள்கையைத் தெரிவித்திருக்கிறார்.

அவ்விதம் நிஸ்சயிப்பது நம்மவர்களுக்கு ஓர் அபசாரமாகத் தோன்றினும் ஆராய்ச்சி முறையில் வெளியிடப்பட்ட அவ்வித கொள்கையை

காம் ஸரியான வாத ரீதியில் திருப்தியான பதில் சொல்லி தீர்ப்பதே கடமையாகும்.

இது விஷயமாய் நமது நண்பர் ஸ்ரீமான் வி. நாராயணய்யரிடம் பிரஸ்தாபிக்க நேரிட்டபோது அவர் அப்பொழுது எழுதி அனுப்புவதாக சொன்ன வியாசம் இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அவர் மிகவும் அருமையாய் தேடிப் பொறுக்கிக் கோர்த்துள்ள காரணங்கள் மிகவும் பகு மானிக்கத்தக்கவை. ப—ர்]

இக் காலத்தில் எதிலும் அதி சங்கை பண்ணுவது முறையாக இருக்கிறது. ஸ்ரீராம கிருஷ்ணாதி அவதாரங்கள் நிகழ்ந்தனவா? கோபிகள் வாஸ்தவத்திலே கோபிகளா? அல்லது, நாயகீ பாவத்தை ரூபீகரித்து எழுதிய கவிதாசித்திரங்களா? நம்மாழ்வார் என்று ஒருவர் இருந்தாரா? அல்லது மதுரகவிகளே அந்தாதிகளைப்பாடி கண்ணி நுண் சிறுத்தாம்பினையும் அந்தாதியாகப் பாடினாரா? நம்மாழ்வார் வேறு மதுரகவி வேறு என்றால் ஆழ்வார் பத்து என்னும் கணக்கு எப்படிப் பொருந்தும்? ஆண்டாள் என்றொரு வியக்தி யுண்டா? அல்லது. பெரியாழ்வார் தாமே பாடிய பாடல்களுள் ஒரு பகுதியை கோதை பாடியதாக பின்னோர் அமைத்துக் கொண்டனரா? ஸ்ரீ தேவி என்றே ஒரு வியக்தி யுண்டா? அல்லது புருஷோத்தமனுடைய திருமார்பத்திலே உள்ளதையை கவிகள் இவ்வாறு ஒரு ரூபமாகக் கல்பித்துக்கொண்டார்களா? என்றெல்லாம் சங்கை எழுவது இக்காலத்து ஆராய்ச்சி முறைக்கு ஏற்றதேயாம்.

இவ்வாறு எழும் அதி சங்கைகளுள் ஒன்று கோதையின் திருவவதாரத்தைப் பற்றியது அதனை இங்கு நீக்க முயல்வேன்.

அகத்துறைப் பாடல்களை கவிமரபு என்று கொள்ளாமல் அவற்றைச் சரிதவுண்மைகள் என்று கொண்டு சில கதைகள் எழுந்துள்ளன. ஆனால் அவ்வாறு திவ்யப் பிரபந்தங்களை யொட்டி கதைகள் எழவில்லை. அதற்குக் காரணம் அக மார்க்கம் வைஷ்ணவர்களை மறக்கவொண்ணாதபடியினை திருவாய்மொழியிலே அமைந்திருப்பது தான். “மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண் பிறந்தே” என்ற ஆழ்வாரைப் பெண் பிறவி என்று சொல்வாரில்லை. ஆயினும் நாய்ச்சியாரையும் பெரியாழ்வாராகவே பிரமிப்பது ஒரு படியில் உசிதமே, நாய்ச்சியார் திருமொழிப் பாசுரங்களையும் திருப்பாவையையும் பெரியாழ்வாரே பாடினாரானால் இவற்றையும் “விட்டு சித்தன் சொல்” என்றது போலச் சொல்லியிருப்பார் அன்றோ? அவ்வாறின்றி திருப்பாவைக் கடைக் காப்புப் பாசுரத்திலே, “பட்டர்பிரான் கோதை சொன்ன” என்று விரதங்கொண்டு எந்தும் விட்டு சித்தர் சொல்

வரோ? கூடலிழைக்கும் பாசுரங்களின் முடிவிலே, பட்டர்பிரானுடைய பிரஸக்தியின்றியே, கோதை கூறிய பாடல் பத்தும்" என்று இருப்பதுவே போதுமே, "பட்டர் பிரான் கோதை" என்பதற்கு "பட்டர் பிரானாகிய கோதை" என்று பொருள் கொள்ளலாமென்பவர் "வில்லிபுத்தூர் மன் விட்டு சித்தன் தன் கோதை வாய்த்தமிழ் வல்லவர்" என்றிருப்ப தற்கு என் செய்வர்? கோதை என்னும் வியக்தி வேறு, வில்லிபுத்தூர் மன் வேறு என்று தெளிவாக்கவே போலும் "கோதை வாய்த்தமிழ்" என்னும் தொடர் "கோதையின் வாய்ச்சுவையோடு அமைந்த தமிழைக்" குறிப்பிடுகின்றது இதுபோலவே, பைங்கமலத்தண் தெரியலையுடைய கோதைப் பிராட்டியின் "வில்லைத் தொலைத்த புருவங்களை வேறொரு பாசுரம் குறிப்பிடுகின்றது.

கோதைப் பிராட்டியின் அவதாரத்தை மறுப்பவர்களின் பக்ஷம் தான் என்ன? பெரியாழ்வாரே இப்பாடல்களையும் பாடினார் என்பது தானே அவ்வாறாயின், நாய்ச்சியார் திருமொழி என்ற விபாகம் ஏறறப் பட்டது நாயகி பாவத்திலே ஆழ்வார் பாடியவற்றை தனித்துத் தொகுத்த தாலே ஏற்பட்டிருக்கவேண்டும் அங்ஙனமாயின், "பட்டிமேய்ந்தோர் காரேறு" என்று தொடங்கும் திருமொழி இந் நாய்ச்சியார் திருமொழி யிலே சேர்க்கப்பட்டது பொருந்தாதன்றோ? வினாவும் விடையுமாக அமைந்த இப்பாடலிலேகூட ஆண்டாள் தன்னை மறந்திலள்; தான் நாயகி என்பதை மறந்திளள். "கார்த்தண் கமலக்கண் என்னும் நெருங்கயிறு படுத்தி என்னை ஈர்த்துக்கொண்டு விளையாடும் ஈசன்" என்கிறாள்.

பெரியாழ்வார் பாடல்களோ மறந்தும் நாயகீ பாவம் அமையாதன வாக உள்ளன. நாயகீ பாவத்தை அவர் அனுஸரிப்பதும் இல்லை. கோவிந் தன் குழல் கொண்டு ஊதியதை வருணிக்கும்போதும் தன்னைத் திருத் தாயாராகவே கொண்டு 'நங்கைமீர்கள்' இது ஓர் அற்புதம் கேளீர் "என்று" கோவலர் சிறுமியர் வந்து கவிழ்ந்து நின்றதை வருணிக்கிறார். கண்ணன் காலிப்பின்னே எழுந்தருளக் கண்டு இளவாய்க் கன்னிமார் காமுற்ற வண்ணத்தைப் பாடும்போது "என் பெண் நோக்கிக் கண்டாள்" என்றும் "என் மகள் அயர்க்கின்றதே" என்றும் "என் மகள் ஆசைப் பட்டு" என்றும் தாய்மாராவார் கூறுவனவற்றோடேயே அப் பெண்கள் "என்வசமல்லவே" என்றும் "மற்றொருவர்க் கென்னைப் பேசலொட் டேன்" என்றும் "பவளவாய் முறுவலும் காண்போம், தோழீ! என் றும் கூறுகிறார். இவ்வாறு பெரியாழ்வார் திருமொழியின் வாத்ஸல்யத் துறையும் நாய்ச்சியார் மொழியின் நாயகீ பாவமும் மிகவும் வேறு படுவன வாக இருப்பதினின்றுமே அவ்வவைகளைப் பாடியவர்கள் வேறு வேறு

ஆதல் வேண்டும் என்று நிர்ணயிக்கவே, "தாயவள் சொல்லிய சொல்லைத் தண் புதுவைப்பட்டன் சொன்னதாய தமிழ்பத்துள்" ஒன்றின் பகுதியான

ஒருமகள் தன்னை யுடையேன் உலகம் நிறைந்த புகழால்
திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால் தான் கொண்டுபோனான்

என்னும் வாக்கியங்களை கோதைப்பிராட்டியின் திருக்கல்யாணத்தின்போது பெரியாழ்வாரின் மனப்பான்மையை அடிப்படையாக கொண்டெழுந்தது என்று உத்ப்ரேக்ஷிப்பதினின்றும் கோதை என்று ஒருத்தி உளளோ இலளோ என்னும் ஆசங்கையை எழுப்புவதற்கு இடமில்லை.

மேற்கூறிய காரணங்களால் கோதைப்பிராட்டியார் என்றொருவர் இருந்தார் என்பது ஏற்படவில்லை என்னும் ஸம்சயாத்மாக்களையும் நம்பச் செய்யும் பிரமாணங்கள் இரண்டு நாய்ச்சியார் திருமொழியிலே யுள்ளன. அவையாவன :—

(1) செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டு சித்தர் கேட்டிருப்பர்.

(2) நல்ல என் தோழி ! நாகணை மிசை நம்பரர்
செல்வர், பெரியர், சிறுமானிடவர் நாம் ;
வில்லி புதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல், அது காண்டுமே.

ஆக எம்பெருமான் ஆழ்வார்களாய் அபிநவதசாவதாரம் செய்ததுபோலே, நீளாதேவியும் கோதைப் பிராட்டியாக அவதரித்தார் என்று கொள்வதே யுக்தமாம், நமது நாய்ச்சியாரே, இவ்வித சங்கைகளை நீக்குவதற்கே

"கொல்லை யரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே"

என்று பாசுரமிட்டருளினார்போலும், ஸ்ரீ ராமபிரான் வாய்ச்சொல் ஸத்யம் என்பது போலவாயிற்று ஆண்டாள் பிறந்தமையும்,

---

14—12—1937ல் ஸ்ரீரங்கம் ஸ்ரீதசாவதார ஸந்நிதியில், ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அழகிய சிங்கர்கள் அக்ராஸனத்தில் நடந்த ஷை ஸபையின் ஐந்தாவது வார்ஷிக மஹா ஸதஸ்ஸில் பூரண அநுமதியுடன் ஏகமனதாகப் பின் கண்ட விஷயங்கள் தீர்மானம் செய்யப்பட்டன.

I. 1938ஞூ த்துக்கு ஷை ஸபையின் தலைமைஸபைக்கு நிர்வாஹிகள் :

1. ஸ்ரீ உ. வே. A. V. கோபாலாசார்யர் ஸ்வாமி, M. A. B. L. Advocate — அக்ராஸனாதிபதி.
2. „ திவான் பகதூர் S. ராகவ அய்யங்கார் ஸ்வாமி. Retired Judge, — உபஅக்ராஸனாதிபதி.
3. „ T. ஸ்ரீனிவாஸய்யங்கார் ஸ்வாமி. B. A. L. T., — காரியதரிசி & பொக்கிஷதாரர்.
4. „ அன்பில். S. ஸௌம்யநாராயணாசார்யன். — பொதுகாரியதரிசி.
5. „ Rao Sahib R. நாராயண ஐயங்கார் ஸ்வாமி Rtd. Dy. Superintendent of police, — நிர்வாகமெம்பர்.
6. „ Rao Sahib. K. R. ஸ்ரீனிவாஸாசார் ஸ்வாமி. B. A. Rtd. customs officer — ஷை.
7. „ N. R. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி B. A. Rtd. Submagistrate. — ஷை.
8. „ A. கோபாலாசார்யர் ஸ்வாமி. — ஷை.
9. „ V. கோபாலய்யங்கார் ஸ்வாமி M. A., Sanskrit Profesoer, St. Joseph's College, Trichinopoly. — ஷை.

II. ஷை 1938ஞூ த்துக்கு சென்னை கிளை ஸபையின் நிர்வாஹிகள் :—

1. ஸ்ரீ. உ. வே கமலாபுரம் ராவ் ஸாகிப் R. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி. — கிளை அத்யக்ஷர்.
2. „ பாவஸ்து ஸ்ரீனிவாஸாசார் ஸ்வாமி. — உபஅத்யக்ஷர்.
3. „ T. ராஜகோபாலாசார்யர் ஸ்வாமி. B. A. B. L., Rtd. Sub. Judge & Advocate. — காரியதர்சி & பொக்கிஷதார்.
4. „ V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி. B. A. B. L. Advocate — நிர்வாஹமெம்பர்.
5. „ S. ஆராவமுதய்யங்கார் ஸ்வாமி. B. A. B. L., Advocate. — ஷை.
6. „ R. ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் ஸ்வாமி. B. A. Revenue Secretariat. — ஷை.
7. „ D. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி. B. A. B. L. Advocate. — ஷை.

பத்திரிகை

1. "ஸம்ரக்ஷிணீ"யும், "தீபிகை"யும் ஒரே பத்திரிகையாக "ஸ்ரீ வேதாந்த தீபிகை" என்ற பெயருடன் 1938௵ ஜனவரி௴ முதல் சென்னையிலிருந்து வெளிவரும்.

2. ஸ்ரீ ஸம்ரக்ஷிணீ பத்திராதிபர் ஷை தீபிகைக்கு அதிபராகச் சேர்ந்து நடத்தப்படும்.

3. பத்திரிகை வருஷ சந்தா ரூ 2; போஷகர் ௵ ரூ 5; ஜீவிய சந்தா ரூ 50.

4. ஸ்ரீரங்கம் தலைமை கார்யாலயத்து நிர்வாஹிகளும் சென்னை கிளை காரியாலயத்து நிர்வாஹிகளும் "தீபிகை"யை நன்கு நடக்குமாறு செய்யவேணும். அடுத்த ௵த்துக்கு இந்தக் கார்யத்தையே பிரதான மாக பிரசாரம் செய்வார்கள்.

5. ஸ்ரீரங்கத்தில் காரியதரிசிகளும், சென்னையில் பரவஸ்து ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமியும் ஷை பத்திரிகையின் ஏஜண்டுகளாயிருந்து சந்தாதார் சேர்ப்பது, ரசீது கொடுப்பது, பணம் வசூலித்து ஏற்பாடுகள் செய்வார்கள்.

6. மேலே கண்ட காரியங்களை ஸரிவர செய்ய சாதாரண மெம்பர்கள் வசூலில் ரூபாய்க்கு கால் ரூபாய் வீதமும், போஷகருக்கு ரூபாய் ஒன்று வீதமும், ஜீவிய சந்தாமெம்பர்கள் சேர்க்க ரூபாய் ஐந்தும் உசிதம்போல் சிலவு செய்து கொள்ளலாம்.

7. பிரதி ௴மும் வரவு சிலவு கணக்குகள் T. ராஜகோபாலாசார்யர் ஸ்வாமி ஏற்படுத்தும் நியமங்கள் படி செய்யவேணும்.

8. சென்னை கிளை கமிட்டியார், ஸ்ரீரங்கம் தலைமை ஆபீஸ் கமிட்டியாரால் தீர்மானித்துச் செய்யும் விதிகள் பிரகாரம் காரியங்களை நன்கு நடத்துவார்கள்.

9. ஷை (தீர்மானங்கள்) நியமனங்கள் ஒரு வருஷத்திற்கு இருக்கும்.

10. "ஸம்ரக்ஷண ஸபை"யின் வரவு சிலவு, ஆஸ்தி கடன் முதலியதுகளை ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ப்ரசார ஸபையாரிடம் இன்றுமுதல் ஒப்பிக்கப்பட்டது. ஜனவரி (1938) 1ௗ முதல் ஷை ஸபையாரால் கொடுக்கப்படும் ரசீதுகளை உபயோகப்படுத்தவேணும்.

11. "ஸம்ரக்ஷண ஸபை"யின் கொள்கைகளை முற்றிலும் அனுஸரித்து "தீபிகையில்" வியாஸங்கள் வெளியிடப்படும்.

12. ஸபையின் புஸ்தகங்கள், மற்ற இருப்புகள், வசூலாக வேண்டிய பாக்கிகள் பூராவும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த பிரசார ஸபாவின் சார்பாக ஸ்ரீ. உ. ப. வே. தோட்டாலம் ராஜகோபாலாசார் ஸ்வாமியினிடம் ஒப்புவிக்கவேண்டியது.

13. ஷை "தீபிகை"யின் வரவு, சிலவு, ஆஸ்திகடன், பொருப்புகள் ஒன்றிலும் ஸம்ரக்ஷண ஸபையோருக்கு ஸம்பந்தமில்லை.

14. ஸ்ரீதேசிகன் ஸம்பிரதாயத்தின் அபிவ்ருத்தியை உத்தேசித்து சென்னை கிளை கமிட்டியார்கள் மேலே கண்ட தீர்மானங்களை க்ருபை கூர்ந்து அங்கீகரித்து நிறைவேற்றி வைக்கும்படி பிரார்த்திக்கப் படுகிறார்கள்.

15. "ஸம்ரக்ஷிணீ" பத்திரிகையில் இதுவரையில் ஸ்ரீதேசிகன் ஸ்ரீ ஸூக்திகளுக்கு தமிழ் வ்யாக்யானங்கள் போட்டு வந்தபடிக்கு தீபிகையில் 16 பக்கங்களுக்கு குறையாமல் ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்தி வ்யாக்யானங்கள் போடப்பட்டு வரும்.

"ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ"யை ஆதரித்து வரும் சந்தாதார்கள் இனி 1938௵ ஜனவரி௴த்தில் "வேதாந்த தீபிகை" என்னும் பெயருடனே வரும் பத்திரிகையைப் பெற்று நம் ஸம்ப்ரதாயத்துக்கு ஒரே பத்திரிகை பொதுவாய் நடத்தவேணுமென்ற யோஜனையினால் திருவுள்ளம் பற்றும்படி பிரார்த்திக்கிறோம்.

மேலே கண்ட தீர்மானங்கள்—திவான்பஹதூர் S. ராகவய்யங்கார் ஸ்வாமியும் ராவ்ஸாஹிப் R. நாராயணய்யங்கார் ஸ்வாமியும் சேர்ந்து கொண்டு வந்து மஹா ஸபையோருடையவும் ஸ்ரீமத் அழகிய சிங்கர்களுடையவும் பூர்ண ஆதரவுடன் ஏகமனதாய்த் தீர்மானித்து நிறைவேற்றினார்கள்.

A. V. GOPALACHARIAR.

அக்ராஸனாதிபதி,

ஸ்ரீ தீபிகாபிமானிகளுக்கு ஓர் விசேஷ விக்ஞாபனம்

'ஸம்ரக்ஷணியும்' 'தீபிகையும் 1938௵ முதல் ஒன்று கூடி தீபிகை என்கிற பழைய பெயருடன் நம் தீபிகாநேயர்களின் மனதை களிக்கச் செய்யும்படி ப்ரசுரிக்கப்படும் என்கிற விஷயம் இதனால் அறிவிக்கப்படுகிறது. ஆகிலும் இது விஷயமாய் தீபிகாபிமானிகளின் வேண்டுகோளின் பேரில் அடியேன் சில விஷயங்களை விக்ஞாபித்துக் கொள்ளுகிறேன். அதுகளை க்ஷமித்தருளவேணும், இக்காலத்தில் ஜனநாயகம் மேலிட்டிருப்பதால் பொதுஜனங்களுக்கு எது ஹிதத்தை விளைவிக்கும் என்பதை கவனிக்கவேணும். ப்ராசீன சாஸ்திரங்களும் இதையே தான் முறையிடுகின்றன. "பூத தயை" "ஸர்வபூதஹிதே ரத:—" என்று சொல்லிக் கொண்டே காலத்தை கழித்துவிடுகிறோம்.

गच्छतस्तिष्ठतो वापि जाग्रतः स्वपतोऽपि वा ।
यन्न भूतहितार्थाय तत्पशोरिव जीवितम् ॥

இதிஹாஸ ஸமுச்சயம்—4. 5

[நடக்கும்போதும், நிற்கும்போதும், விழித்துக்கொண்டிருக்கும் போதும், உறங்கும்போதும், எவன் செய்கை ப்ராணிகளின் நன்மையின் பொருட்டு ஆகிறதில்லையோ, அவனுடைய வாழ்க்கை மிருகத்தினுடையது போலாகும்.

நம் ராமாநுசனுக்கு "दयैकसिन्धुः" என்னும் நிகரற்ற திருநாமம் சாற்றப்பட்டது.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகனே நானாவிதங்களாக நம் ஸித்தாந்தத்தை ப்ரகடனம் செய்தார். விஸ்தாரமாயும், சுருக்கமாயும், கடினமாயும், ஸரளமாயும், கத்யமாயும், பத்யமாயும், வ்யாக்யான ரூபமாயும், வ்யாக்யேய ரூபமாயும் இன்னும் பலவிதமாகக் கிரந்தங்களை "शान्तमधुरान्" என்னும் கணக்கிலே கோடாநு கோடிக் கிரந்தங்களையும் எழுதியும் ப்ரவசனம் செய்தும் நம் ஸித்தாந்தத்தை ஓங்கி வளர செய்தார். இப்போது காலவைஷம்யத்தால் நம் ஸித்தாந்தம் "दिगन्तव्यापिनी" யாகப் பரவாமல் க்ஷேபத்தை அடைந்து வருகிறது. இது கலிகால மஹிமை. பல பேர்களுக்கு அவரவர் ஜீவனோபாயத்திற்கே பருக்லேசப்பட்டு ஒரு தினத்தின் பெரும்பாகத்தைக் கழிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் நிஶ்ரேயஸ்ஸை விளைவிக்கும் தர்மஸாதனங்களை அன்வேஷணம் செய்ய அவகாசமேது? இது நிற்க அவ்வோ விஷயங்களை கடினமான ப்ராசீன மணிப்ரவாளரசனையிலோ, ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகள் மாதிரியோ நம் ஜ்ஞாதாக்கள் ஸாதித்து விட்டால் அவ் விஷயங்கள் பண்டிதர்களுக்கு அநாவச்யம், ஸாமான்ய ஜனங்களுக்கோ புலப்படாது; இத்துடன் சாஸ்திர விசாரமும் விமர்சையும் செய்கிறோமென்று அபூர்வமான விஷயங்களைப் பற்றி விவாதபுரஸ்ஸரமாய் பல வ்யாஸங்களை எழுதி ப்ரசுரம் செய்தால், அவைகளில் பாச்சாத்திய கலைகளில் சிறந்த நம்லௌகிக சிரோமணிகளுக்கு ஒருநாளும் அபிருசி உண்டாகாது. ஆகையால் வேதாந்த விஷயங்களில் ஸதஸ்ஸில் சொல்லவேண்டிய விஷயங்களை எளிய நடையில் எழுதி ஆத்மைகவேத்யமாகயில்லாமல் பகு ஜனங்களுக்குபகாரமாக நிஶ்ரேயஸ்ஸாதனதர்மங்களையும், வைஷ்ணவ ஸித்தாந்தத்தையும் ஸுலபமாக காட்டி வைக்கவேணுமென்கிற கருணையுடன் விஷய ப்ரதானம் சுருக்கமாக செய்யவேணுமென்று தீபிகாபிமானிகள் சார்பில் ஸவிநயம் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். க்ஷமித்தருளவேணும்.

T. R. ஓராவஸ்
ஸபை ஜாயிண்டு ஸெக்ரிடேரி

அவ—இப்படி அவ்யவஸ்தித விகல்பம் என்றால் ந்யாஸோபாஸநங்களுக்கு வ்யவஸ்திதவிகல்பம் என்னும் துல்யவிகல்பம் என்னும் சொல்லுவார்க்கு விரோதம் வாராதோவென்ன வருளிச் செய்கிறார்.

மூ—ந்யாஸோபாஸநங்களிலே அதிகாரி பேதத்தையிட்டு வ்யவஸ்தித விகல்பம் என்பார்க்கும் பலஸாம்யத்தையிட்டு துல்யவிகல்பம் என்பார்க்கும் விரோதமில்லை.

வ்யா—ந்யாஸோபாஸநங்களிலே = ஸ்வாதந்த்ர்யேண மோக்ஷஸாதநதயா நுஷ்டிதங்களான ந்யாஸோபாஸநங்களிலே. அங்கமாக அநுஷ்டிக்கும் ந்யாஸத்திலும் பலதயா அநுஷ்டிக்கும் உபாஸநத்திலும் அதிகாரி பேத பலஸாம்யங்களையிட்டு வ்யவஸ்தித துல்யவிகல்பங்கள் சொல்லவொண்ணாதிறே. அகிஞ்சநனை ந்யாஸாதிகாரியிறே பலதயா உபாஸநம் அநுஷ்டிக்கிறது. அப்படியே ஸகிஞ்சநன் அநுஷ்டிக்கும் ந்யாஸவித்யைக்கும் உபாஸநத்துக்கும் பலம் வேறு ஆகையாலே, துல்யவிகல்பம் என்பதும் சேராது. "அதிகாரி பேதத்தையிட்டு" அதிகாரி பக்கலுள்ள ஸகிஞ்சநத்வாகிஞ்சநத்வரூப பேதத்தையிட்டு, "வ்யவஸ்தித விகல்பம் என்பார்க்கும்" பக்திப்ரபத்திகள் இரண்டும் மோக்ஷஸாதநதயா விகல்பிதங்களானாலும் ஸதக்ஷுத்ரஹோமாதிகள் போலன்றிக்கே ஸகிஞ்சநாதிகாரி, பக்தியே அநுஷ்டிக்கவேணும் என்னும் அகிஞ்சநாதிகாரி ப்ரபத்தியே அநுஷ்டிக்கவேணும் என்றும் இப்படி வ்யவஸ்திதவிகல்பம் என்பார்க்கும் என்றபடி. "பலஸாம்யத்தையிட்டு துல்ய விகல்பம் என்பார்க்கும்" "மம கைங்கர்ய லிப்ஸுபி:" என்று ஓரே பலத்தைச் சொல்லி, தத்ஸாதநமாக "பக்த்யா ப்ரபத்யா வா ப்ராப்ய:" என்று சரண்யன் சொல்லிவைக்கையாலே குருலகுக்களான பக்திப்ரபத்திகள் ஏகபலஸாதநமாய் துல்யவிகல்பம் என்று சொல்லுவார்க்கும் விரோதமில்லை. குருலகுவநுஷ்டாநங்களுக்கு அதிகாரி பேதமுண்டாகையாலும் இரண்டதிகாரிகளுக்கும் பலம் ஒன்றாகையாலும் விரோதமில்லை. இங்கு அதிகாரி பேதத்தையிட்டு பலஸாம்யத்தையிட்டு என்கிற விரண்டும் பஞ்சமியாய் அவிரோதோபபாதகமாயிருக்கும். இத்தாலே பக்தி ப்ரபத்திகள் இரண்டும் அதிகாரி பேதத்திலே வ்யவஸ்திதங்கள் என்றும் இரண்டுக்கும் மோக்ஷமே பலம் என்றும் சொல்லித்தாயிற்று. இப்படி இங்கு ந்யாஸோபாஸநங்களிலே அதிகாரி பேதத்தையிட்டு வ்யவஸ்தித விகல்பம் என்பார்க்கும் பலஸாம்யத்தையிட்டு துல்யவிகல்பம் என்பார்க்கும் விரோதமில்லை என்று இவ்வளவே அருளிச் செய்கையாலே பக்தி ப்ரபத்திகளுக்கு பலபேதம் சொல்லும் ஸம்ப்ரதாயம் ஸத்ஸம்ப்ரதாயமன்றென்றதாகையாலே நிரா

காணீயமென்று கொள்ளவேணுமென்று தோன்றுகிறது. இத்தாலே ப்ரதிகூலராவார் தேஹாத்மாபிமானிகளும் ஸ்வதந்த்ரரும் அந்யசேஷபூதரும் உபாயாந்தர நிஷ்டரும் ஸ்வப்ரயோஜந பரருமென்று பக்தரையும் ப்ரபந்நரையும் ப்ரதிகூலவர்க்கத்திலே சேர்த்து, உபாயாந்தர நிஷ்டருக்குத் தேச்யன் தேவதாந்தர்யாமியான ஸர்வேச்வரன். உபாயம் கர்மஜ்ஞான பக்திகள். உபேயம் பகவதநுபவம். ஸ்வப்ரயோஜந பரருக்குத் தேச்யன், நெஞ்சினால் நினைப்பான் யவன் என்கிறவன். உபாயம் ஸ்வகீய ஸ்வீகாரம் உபேயம் ஸ்வார்த்த கைங்கர்யம் என்று ஃபலபேதகல்பநம் பண்ணும் ஸம்ப்ரதாயம் ஸத்ஸம்ப்ரதாய மன்றென்றதாகிறது. இங்ஙனிசையாதே போனால் இவ்விரோதத்தையும் பரிஹரிக்க வேண்டிவருமே. ஃபலைக்யமும் வ்யவஸ்தித விகல்பமும் கொள்ளும் ஸம்ப்ரதாயத்தோடு ஃபலபேதம் கொள்ளும் ஸம்ப்ரதாயத்திற்கு விரோதம் துஷ்பரிஹாரம் "ஸசமம ப்ரியஃ" என்ற பக்தனை ப்ரதிகூல வர்க்கத்திலே சேர்ப்பது ஸத்ஸம்ப்ரதாயத்திலே அஸஹ்யாபசார கோடியிலேயாம். உபேயம் என்கிற பதத்திற்கு "ஸோ(அ)ச்நுதே ஸர்வாந் காமாந்ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா" இத்யாதி ச்ருதிகளாலும்,

"நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுகபாவைகலக்ஷணம்।
பேஷஜம் பகவத்ப்ராப்தி ரேகாந்தாத்யந்திகீ மதா॥"

இத்யாதி ச்ருத்யுப ப்ரும்மணங்களாலும் சொல்லப்படுகிற நிரதிசயாநந்த ரூப பகவதநுபவமென்று வ்யாக்யாதா எழுதிவைக்கையாலே இந்த உபேயார்த்தமாக உபாயாநுஷ்டாதாவான உபாயாந்தர நிஷ்டன் ஏகாந்தி என்னக்குறையில்லை.

"யதந்த்யேகாந்திநோ பக்தா ஸ்தாநந்ய ஹித ஸம்ச்ரிதாஃ।
தேஷாமேகாந்திநஃ ச்ரேஷ்டாஃ தேசைவாநந்ய தேவதாஃ"

என்று இவனை ச்ரேஷ்டன் என்றான் கீதோபநிஷதாசார்யன். ப்ரபந்நரை ஸ்வப்ரயோஜநபரராகச் சொன்னதும் "மமகைங்கர்யலிப்ஸவஃ" இத்யாதிகளிலே பகவத் கைங்கர்ய ஸாதநம் ப்ரபத்தி என்று சொன்ன பகவத் வாக்ய விருத்தம்.

அவ—ஆஸ்திகரான வைதிகர்க்கும் கூட ஐஹிகாமுஷ்மிக ஃபலங்களிலே இச்சையுண்டாகையாலே தத்ப்ரதிபாதகங்களான சாஸ்திர ஸம்ப்ரதாயங்கள் நாநாவாயிருக்கையாலே அதுகளை இங்கே சோதிக்கவேண்டாவோ.

"கர்மாவஸ்யைகஸ்யைவாவமாநாத்
ஜந்மாந்தரதோ தஃகர்மாஸ்யதை॥
ஸந்தத்வாஸ்யாமஃ"

என்கிறபடியே ஐஹிகாமுஷ்மிகாநுபவங்கள் அல்பத்வாஸ்திரத்வதுக்க மூலத்வ துக்கமிச்ரத்வ துக்கோதர்க்கத்வ விபரீதாபிமான மூலத்வ ஸ்வாபாவிகாநந்த விருத்தத்வங்களாகிற தோஷ ஸப்தகங்களோடே கூடியிருக்குமாகையாலே ஹிதமாகாது. ஹிதப்ரவர்த்தகருக்கு அதுகளின் சோதநம் அநாவச்யகம். "யத்ஸாரபூதம் ததுபாததீத" என்கிறபடியே ஸாராம்சம் உபாதேயமாகையாலே தத்ப்ரதிபாதக சாஸ்திரமூல ஸம்ப்ரதாயசோதநம் ஆவச்யகம் என்றில் இந்த ஸம்ப்ரதாயத்துக்கும் ப்ரவர்த்தகர் க்ஷேத்திரஜ்ஞராகையாலே ப்ரமவிப்ரலம்பாதிகள் உண்டாய் தத்ப்ரவர்த்தித ஸம்ப்ரதாயம் ஸத்ஸம்ப்ரதாயமென்று விச்வஸிக்கப் போமோ? ப்ரதமப்ரவர்த்தகன் ஸர்வேச்வரனாகையாலே ப்ரமவிப்ரலம்பாதிகளுக்கு அவகாசமில்லை என்றாலும் அவனுக்குப் பின் ப்ரவர்த்தகரெல்லாரும் க்ஷேத்ரஜ்ஞராகையாலே அந்த சங்கை வாராதோவென்ன வருளிச் செய்கிறார்.

மூ—ஸர்வலோகஹிதமான அந்த அத்யாத்ம சாஸ்திர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதமப்ரவர்த்தகன் ஸர்வேச்வரன். மற்றுள்ளாரெல்லாரும் அவன்தானேயாதல் சேதநாந்தர முகத்தாலே யாதல் மயர்வற மதிநலமருள ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள்.

வ்யா—ஸர்வலோகஹிதமான இதி. மற்றுள்ள சாஸ்திரார்த்தங்கள் தாபத்ரயாபிஹதிஹேதுவாயிருக்குமாகையாலே "தாபத்ரயாதுரை ரம்ருதத்வாய ஸவஜிஜ்ஞாஸ்ய:" என்கிறபடியே அத்யாத்ம சாஸ்திரமே ஸர்வலோகஹிதமாயிருக்கும். த்வைதாத்வைதமதங்களில் அத்யாத்ம சாஸ்த்ரவ்யபதேசம் உண்டாகையாலே தத்வ்யாவ்ருத்தி தோன்ற இந்த என்றது ஸம்ப்ரதாய விசேஷணம். உபநிஷத்துக்குள்ளே விஸ்த்ருதமாயிருந்தவர்த்தவிசேஷங்களை ரஹஸ்யத்ரயத்திலே சேர்த்து ப்ரவர்த்திப்பித்த இந்த விலக்ஷணமான ஸம்ப்ரதாயத்திற்கு. அத்யாத்மசாஸ்திரம் பரமாத்ம தத்ப்ராப்தி, ததுபாயங்களை வெளியிடும் சாஸ்திரம். இத்தை ரஹஸ்யத்ரய ஸம்ப்ரதாயமென்னும் சொல்லிப் போருவார்கள். "ப்ரதம ப்ரவர்த்தகன் ஸர்வேச்வரன்" இதி. ஸர்வேச்வரன் ஸர்வநியந்தாவாகையாலே அவன் ஸர்வலோகஹிதமாக நியமித்த ஸம்ப்ரதாயமே முமுக்ஷுவாயிருப்பார்க்குபஜீவ்யம். "அத்யாத்ம சாஸ்திர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகன் என்கையாலே மற்றுள்ள சாஸ்திரங்களுக்கு

இவன் ப்ரதம ப்ரவர்த்தகனன்றிக்கே ப்ரவ்ருத்தப்ரவர்த்தகத்வமும் அநு மந்த்ருத்வமே இவனுக்கு உள்ளது என்றது திருவுள்ளம்.

பிராட்டியும் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரவர்த்தகையாலே ஸர்வேச்வர சப்தத்திலே இவளும் விவக்ஷிதமாயிருக்கும். இவளும் ஈச்வரதத்வத்திலே அந்தர்பூதை என்றிறே ஸம்ப்ரதாயம்.

“தஷஹஷ-ிாவாதூா௦ந வுரயமஷியதெ ஶ ு ாதிாவி”

என்றருளிச் செய்தாரிறே பட்டர். மற்றுள்ளாரெல்லாரும் என்கிறது சேனை முதலிகள் தொடக்கமாக ஆழ்வார் நாதமுநிகள் உள்ளிட்ட அஸ்மதாசார்யபர்யந்தமாகவுள்ள ஆசார்யபரம்பரையைச் சொல்லுகிறது. இதுக்கு ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள் என்றத் தோடந்வயம். அவன்—இது கர்த்தா. தானேயாதல் சேதநமத்வாரீக்ருத்யவா. சேதநாந்த்ரமுகத்தாலேயாதல் = ஆசார்ய பாகவத முகத்தாலேயாதல், மயர்வு = அஜ்ஞாநம் அற = நசிக்கும்படி, மதிநலம் = ஸமீசீநஜ்ஞாநத்தை. அருள = கிருபை பண்ண.

அவ—ஆனாலும் ஸர்வேச்வரன் ப்ரதமப்ரவர்த்தகன் என்ற மாத்திரத்தாலே ஸம்ப்ரதாயம் உபாதேயமாகக் கூடுமோ. “ஸாாெஜாவஸளஹாடதாடெொஹஷ வாிஹணிதஃ ஶீ ுயஷெண ஹஶாெஜு” என்கிறபடியே புத்தனும் பகவதவதாரமாகையாலே அவன் ப்ரவர்த்திப்பித்த ஸம்ப்ரதாயமும் உபஜீவ்யமாக வேண்டாவோ. மஹரிஷிகள் பௌத்தசாஸ்திரத்தை திரஸ்கரிக்கையாலும் “யுஶாவஹி வொாஹதயாவஷிவாஜஃ” என்று சக்கிரவர்த்தித் திருமகனும் சொல்லுகையாலும் “ஸாமதவாஶஜெூாஜாவ௦ விஜாவுஃ” என்று ஆசார்யர்கள் அருளிச் செய்கையாலும். மஹரிஷிகள் இந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்திப்பிக்கையாலும், இது உபஜீவ்யமாகலாம் என்றில் பிஸஸ்தைந்யாதிகளிலே ரிஷிகள் பரஸ்பரம் அஸூயாவிஷ்டர்களாய் பரஸ்பர சாபத்தாலே அஸச்சாஸ்திர ப்ரவர்த்தகராகையாலே வேதாந்த ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர் என்றதுதான் கூடுமோ. மேலும் இப்போது வரும் ஸம்ப்ரதாயத்துக்கு ரிஷிகள் ஆசார்யராகக் காணப்படாமையாலே ரிஷிகள் ப்ரவர்த்தகர் என்னத்தான் கூடுமோவென்ன வருளிச் செய்கிறார்.

மூ—இப்படி அநசூயாதிகுண யுக்தராய் “ப்ரணிபத்யாபி வாத்யச” இத்யாதிகளிற்படியே ஸம்யகுபஸந்நரான வதிகாரிகளைப் பற்ற யதார்த்த தர்சிகளாய் யதாத்ருஷ்டார்த்தவாதிகளான வ்யாஸபோதாயநாதிகளாலே

யதாதிகாரம் ப்ரவ்ருத்தமான வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்தயுகாரம்பத்திலே ப்ரம்மநந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார் என்று.

வ்யா—இப்படி = அவன் தானேயாதல் சேதநாந்தரமுகத்தாலேயாதல் மயர்வற மதிநலம் அருளின ப்ரகாரம். இதுக்கு நம்மாழ்வார் ப்ரவர்த்தரானார் என்றத்தோடந்வயம். மயர்வற மதிநல மருளினன் என்று ஆழ்வார் ஸ்வவிஷயத்தில் அருளிச் செய்திருக்கையாலே நேரே அவன் தானே மயர்வற மதிநலமருளினான். இத்தால் இப்படிச் சொல்லுகிறது மூற்றத்தைப் பற்ற என்கிற வாக்யவ்யாக்யாநத்திலே ஆழ்வார் பக்கல் அஜ்ஞாநம் அத்யல்பமாய் என்று ஆழ்வாருக்கு அஜ்ஞாநத்தை இசைந்து எழுதியது ஆழ்வார் ஸ்ரீஸூக்திவிருத்தமாமளவன்றிக்கே இந்த அநுவாதமும் அஸஹ்யாபசாரமாம். அநசூயாதிகுணயுக்தராய் என்று. “நவஜா௦யொஹுஸ-ியதி, வுவகூ்ாஜ்ந ஸ-ியவெ, ஷஜீஸ-ியாவிஜாகூ௦” இத்யாதிகளிலே ப்ரதிபந்நமான சிஷ்யகுணங்களைச் சொல்லுகிறது. ஆதிசப்தத்தாலே “ஊஷ௦தெநாதவஹாய நாஷஜாய கஷாவந நவாஶாஶ ுஷெவெ வாவு௦” இத்யாதிகளிலே ப்ரதிபந்நகுணவிசேஷங்கள் விவக்ஷிதங்கள். அநசூயாதிகள் சிஷ்யன் பக்கல் உபதேச யோக்யதாபாதகங்களான குணங்கள். “ப்ரணிபத்யாபிவாத்யச” ப்ரணிபாதம் தண்டவத்பூமௌ பதநம். அஷ்டாங்கப்ரணாமமென்றபடி. அபிவாதநம், கோத்திரநாமோச்சாரண பூர்வகம் பாதோப ஸங்க்ரஹணம், சகாரம் இரண்டையும் ஸமுச்சிக்கிறது. இத்தாலே ஆசார்ய விஷயத்திலே அபிவாதநமில்லாதே ப்ரணிபாதமாத்ரம் பண்ணும் ஸம்ப்ரதாயம் ஸத்ஸம்ப்ரதாய மன்றென்றதாகிறது. “ஸம்யகுபஸந்நரான” இதி.

“ஶஶ ுஜாயாதி ஊஷாய ஶாஜு ஶ ுஜாவாாய வ।
நுாயெந வுஷெ, ஶ ுதாஷநுதுஸஹாஷ:
தஜெவ வ கூதஷெஹஹீ ।
காவணுஷொஷெவஹதஹஹாவஃ
வுஹாஜிகூ யுஜலஸஷஷ வெதாஃ ॥
யஜெ யஹு்ாஹிஶ்தவ ுஷஹிதஜெ ஶிஷுஜெஹ௦”

இத்யாதிகளில் படி ஸம்யகுபஸந்நம் பண்ணின என்றபடி. “அதிகாரிகளைப் பற்ற.” இதுக்கு யயாயிகாரம் ஷுவுத்தமான வென்கிறத்தோடந்வயம். யதார்த்ததர்சிகளாய் என்று ஆசார்யனுக்கு ஆவச்யகமான குணத்

தைச் சொல்லுகிறது. "உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வ தர்சிந:" என்றாரிறே கீதோபநிஷதாசார்யன். ஸ்யாதவிஷ்வ விஷ்ணு ஷ்டிவதீ வைசேஷிகராய் பரமகாருணிகராயிருக்கையாலே யதாத் ருஷ்டார்த்தவாதிகளானவென்றது. வ்யாஸர் = ப்ரஹ்ம ஸூத்ரிகாரர், தாமஸப்ரக்ருதிகளான ரிஷிகள் போலன்றிக்கே "ஸத்யவாக வ்யாஸ:" என்று ச்ருதி ப்ரசித்தமான ஆப்த்யதிசயமுடையவர்.

"க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்।
கோ ஹ்யந்ய: புண்டரீகாக்ஷாந் மஹாபாரத க்ருத் பவேத்" ॥

என்று பகவதவதாரமாகப் பேர் பெற்றவர். இவர் நாமஸங்கீர்த்தநம் பண்ணும்போது "உஹஹிதை: சீதலி நாதஸ்ய ஹ்ருஷ்ட: ப்ராஞ்ஜலிரப்ரவீத்" என்கிற பெருமை பெற்றவர்..போதாயநர் = தத்வ்ருத்திகர்த்தா. பகவத் போதாயநர் என்று பெருமை பெற்றவர். ஆதிசப்தத்தாலே டாசக்ருத்ம ராதிகள் விவக்ஷிதர். "யதாதிகாரம் ப்ரவ்ருத்தமான" இந்த ஸம்ப்ர தாயம் ஸர்வோஜ்ஜீவநார்த்தமாகையாலே க்ரஹீதாக்களான நம்முடைய அதிகாரத்திற்குப் ரூபிகாரிகளான தங்களுடைய அதிகாரத்திற்கும் அநு குணமாக ப்ரவ்ருத்தமான, வேதாந்த ஸ்ம்ப்ரதாயத்திற்கு=வேதாந்தோதி தமான வத்யாத்ம சாஸ்திரஸம்ப்ரதாயத்திற்கு, கீழே ஸர்வலோகஹித மான வித்த வத்யாத்ம சாஸ்திர ஸம்ப்ரதாயத்திற்கென்று உபக்ராந்த மாகையாலே, இத்தாலே, அத்யாத்மசாஸ்திரம் வேதாந்த சாஸ்திர பஹிர் பூதம் என்கிறது இந்த வைதிக ஸம்ப்ரதாயத்தில் சேராது என்று சொல் வித் தாயிற்று. ப்ரம்மநந்த்யாதிகளுக்குப் பின்பு இந்த யுகாரம்பத்திலே நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானுர் என்று யோஜிப்பது. ப்ரஹ்மநந்த்யாதி கள் த்வாபரத்திலே ப்ரவர்த்தகர். ப்ரஹ்மநந்தியாகிருர் டங்காசார்யர் ஆதிசப்தத்தாலே த்ரமிடாசார்ய குஹதேவாதிகள் விவக்ஷிதர். நம் மாழ்வார். இவர் யுகபேதநவர்ணபேதத்தில் பகவதவதாரக்ரமத்திலே க்ருஷ்ணவதார ஸமாப்த்யநந்தரம் இந்த யுகத்தில் சதுர்த்த வர்ணத்தில் பகவதவதார விசேஷம். ஆழ்வார்களை அபிநவதசாவதார மென்றிறே பெரிய ரஹஸ்யத்திலே பிள்ளையருளிச் செய்தது. கண்ணன் யாதவ குலத்திலே பிறந்து க்ஷத்திரிய குலோத்பந்நனை அர்ஜுநனை வ்யாஜீ கரித்து அத்யாத்ம சாஸ்திர ஸாரமான ஸ்ரீகீதோபநிஷதுபதேசம் பண்ணி னுப்போலே இவரும் அத்யாத்ம சாஸ்திர ஸம்ப்ரதாய ப்ரவசநம் பண்ணக் குறையில்லை. க்ருஷ்ணன் கீதாசாஸ்திர முகத்தாலே ப்ரவசநம் பண்ணி னுப்போலே இவரும் திருவிருத்தம் முதலான ப்ரபந்த சதுஷ்டய முகத் தாலே ப்ரவசநம் செய்தருளினது.

அவ—ஆனாலும் வேதாந்தங்களிலே உத்க்ருஷ்டரான த்ரைவர்ணிக ருக்கு நிக்ருஷ்டரான த்ரைவர்ணிகர் உபதேசிக்கக் காண்கையாலும் க்ருஷ் ணன் த்ரைவர்ணிகராகையாலும் அத்யாத்ம சாஸ்திரோபதேசத்திலே விரோதமில்லை. ஆழ்வார் அத்ரைவர்ணிகராகையாலே "நாஹம் ஸ்யாநாதாம் ஹவிஷ, நவஹி நவயோஜாதி:" இத்யாதிகளில் வதுர்த்த வர் ணத்திலே ஆசார்யத்வம் நிஷித்தமாகையாலே நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினன் என்னும்படி அத்யாத்மசாஸ்திர ப்ரவசநம் பண்ணினது சேரும்படி எங்ஙனேயென்னருளிச் செய்கிறார்.

மூ—ப்ராப்யம் ஞாநம் ப்ராம்மணத் க்ஷத்ரியாத்வா வைச்யாச் சூத் ராத்வாபி நீசாத பீக்ஷ்ணம், இத்யாதிப்ரமாண பலத்தாலே மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினன் என்கிறது உபபந்நம்.

வ்யா—ப்ரமாணத்தாலே என்னுதே ப்ரமாண பலத்தாலே என்று அதிகமருளிச் செய்தது கீழ் உதாஹரித்த ப்ரமாணங்களுக்கு இது அபவாதப்ரமாணம் என்று திருவுள்ளத்தாலே. இந்த ச்லோகத்துக்கு பகவத்ஞாநம் அவச்யம் ஸம்பாதநீயமாகையாலே பூர்வ பூர்வாலாபத்தில் மற்றுள்ளார் பக்கலிலும் ஞாநமாத்ரம் விசதமாக ஸம்பாதநீயம் என்று பிள்ளை தாமே ப்ரபாவ வ்யவஸ்தையிலே வ்யாக்யாநம் பண்ணுகையாலே ஞாநம் அவச்யம் ஸம்பாதநீயமாகத் தோற்றுமாகையாலும் ஞாதாவாயிருப் பானுக்கு,

"பாத்ரேப்யோ ஜ்ஞாநதாநம் து க்ருத்வா விப்ரம் ஸமீக்ஷ்ய ச।
நாதேயமாயஸம் பாதி ஜந்மநீஜ ஸம்வீஜக்ருத்" ॥

என்கிற ப்ரமாணத்தின்படியே ஸத்பாத்ரங்களிலே ஞாநப்ரதாநமாவச் யகமாகையாலும் இதிலகாணே ப்ரத்யவாயம் உத்தரார்த்தத்திலே தோற் றுகையாலும் இவர் ப்ரவசநம் உபபந்நமாகக் குறையில்லை. மற்ற விஷயங் களில் வர்ணபேதந வ்யவஸ்தை கூடினாலும் ஞாநப்ரவசநஸம்பாதந விஷ யங்களில் வ்யவஸ்தை இல்லை என்னதாகிறது. இப்படியேயிறே ஸ்ரீஸா ராஸ்வாதிநீ இட்டருளினது.

"அதிரஷ்ட்வியா மஹ்யஷாமஸ்து ஷஷ்டியுதபிலாசிதா।
தநேஷ்ஷ்யம் தமோஹம் ரஹஸ்யம்" ॥

என்றத்தை ஞாநப்ரதாநத்திலே ஸங்கோசித்து நம் பூர்வர்கள் வ்யாக்யாநம் செய்தருளினது. இப்படிகளால் இவர் ஸம்ப்ரதாய ப்ரவசநம் பண்ணக்

குறையில்லை. "மிக்க வேதியர்" என்கிற பாட்டு பூர்வம் க்ருஹீதார்த்தங்கள் ஆழ்வார் பாடித் தந்தருளுகையாலே ஸம்சயவிபர்யயங்கள் ஒன்றுமில்லாதபடி என்னெஞ்சில் ஸ்திரப்ரதிஷ்டிதமாயிற்று என்கிறது. ப்ரபந்த முகத்தாலே பரம்பரயா உபகரித்தவர்களும் ஆதரணீயரென்று மேலே அருளிச் செய்திருக்கையாலும், "ஸகூ்வா பஹு வாயஸ்ய ஶ்ரு தயெஸ்யாவகரொதிய: ॥ தஶ்வீஹ ஶாஸ்த்ரவிஷ்யாக்ஷ" என்கிற ப்ரமாண பலத்தாலும் ஸம்ப்ரதாயத்திற்கு இவர் ஆசார்யர் என்னக் குறையில்லை, எம்பாருக்கு திருமலை நம்பிகள் ப்ரதாநாசார்யராலும் ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதாநாசார்யர் எம்பெருமானர் ஆகிறாப்போலே ஸ்ரீ மதுரகவிகளுக்கு வித்யாமந்த்ரோபதேஷ்டாவான ஆசார்யன் வேறே உண்டென்னவாலும் இவருக்கு ஸம்ப்ரதாய ப்ரதாநாசார்யன் ஆழ்வார் என்னக்குறையில்லை. ஆழ்வார் இப்படி பாடித் தந்திலாகில் இவருக்கு பூர்வக்ருஹீதார்த்தம் ஸ்திரப்ரதிஷ்டிதமாயிராதே தேவதாந்தர ப்ரயோஜநாந்தரபரராய் உண்டுடுத்துத் திரிவாரில் ஒருவராய் விடுவராகையாலே, அதில்லாதே இப்படி ஆக்கினவர் ஆழ்வார் ஆகையாலே இவருக்குப்ரதாநாசார்யர் இவரே என்னக் குறையில்லை. அவ்யவஹிதமோக்ஷோபாயவ்யவஸாயம் பிறப்பிக்கை ப்ரதாநாசார்யக்ருத்யம் என்று மேலே அருளிச் செய்கையாலே நல்வார்த்தைகளாலும் திருவாய்மொழி முகத்தாலுமே இவருக்கு அவ்யவஹிதமோக்ஷோபாயவ்யவஸாயம் பிறந்ததாக "திருக்குருகூர் நம்பிக்கன்பனாய் அடியேன் சதிர்த்தேனின்றே" என்று இவர் தாமே அருளிச் செய்கையாலும் ப்ரதாநாசார்யர் இவரே ஆகவேணும்.

> "ஸாக்ஷாந்ரேஸ்கு நாவாயாநெந்யா விஷ்யாஹெஷா நவாஷிஶக ।
> கஷ்யெதஶொக்ஷஶாஸ்த்ரஷ்ட ஸதமெஶ்ஷ்தஶொ ஶாஸ்த்ர: ॥"

என்று பெரிய ரஹஸ்யத்திலே அருளிச் செய்தபடியே ஸ்ரீ மதுரகவிகளுக்கு அவ்யவஹிதமொக்ஷோபாயம் ப்ரபத்தி வித்யையாகையாலே "ஞாயித்ரியா ஸமஸ்தவிதெதயல் திவாந்யாதெக்ஷ்ய:" என்றருளிச் செய்தபடிக்கு ப்ரபதநம் ஔகிக வாக்யங்களைக் கொண்டும் அநுஷ்டிக்கலாமாகையாலும் இது வித்யாமந்த்ரக்ரஹண ரூபமன்றாகையாலும் ப்ரபத்திவித்யை தான் ஸர்வாதிகாரமாகையாலும் அகலகில்லேனென்கிற பாட்டை ப்ரபத்யநுஷ்டாந ப்ரகாசகமாக பூர்வாசார்யர்கள் வ்யாக்யாநம் செய்தருளுகையாலும் நம்மாழ்வாரே ச்ரேஷ்டதமமான குருவாயிருக்க வடுக்கும். மிக்க = ச்ரேஷ்டாளான, வேதியர் = வைதிகர்களுடைய வேதத்தின் வேதத்தினுடைய, உட்பொருளை, அந்தர்கதார்த்தத்தை. வேதத்திறட்பொருளை என்றும் பாடமுண்டு. அப்போது, நுண் = ஸூக்ஷ்மமாயிருந்த, தாவகாறு

விபாகம் உண்டாக்கப் பட்டதாகக்காணுப்படுகிற பரமாத்ம ஸ்வரூபமானது அக்ரே = ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்மாவஸ்தை = அதாவது கண்ணுக்குப் புலப்படாத நிலையில் இருக்கும் சேதநா சேதநங்களை தனக்கு சரீரமாகக் கொண்டிருப்பதால் நாமரூப விபாகத்திக்கு அநர்ஹமாய் அதாவது வெவ்வேறு பெயரிட்டு வெவ்வேறு உருவமாக பிரிக்க அர்ஹதையில்லாததாய் ஒரே பொருளாகவே இருந்தது. அத்விதீயம் = தனக்குத் தானே எல்லா மறியவல்லதும், தன் ஸங்கல்பப்படி எல்லாம் செய்ய திறமை வாய்ந்ததுமான அந்த ப்ரம்மம் வேறு நிமித்த காரணத்தைத் தனக்குத் துணையாக விரும்பாததாகவும் இருந்தது. "ததைக்ஷத பஹுஸ்யாம்" தத் = இப்படி நாமரூப விபாகமின்றி ஸூக்ஷ்மமான சேதநா சேதந வஸ்துக்களை தனக்கு உடலாகக் கொண்டிருப்பதால் ஒரே வஸ்துவாக நின்றிருந்த ப்ரம்மம். நாமரூப விபாகத்திற்கு யோக்யமாகும்படியான ஸ்தூல தசையை அடைந்து பல படியாய் ஆகுவேன் என்று ஸங்கல்பித்தது என்று.

स्यां प्रजायेयेति व्यष्टिसमष्टिव्यपदेशः ॥ चिदचितोः परस्य च प्रलयकालेऽपि व्यवहारानर्हसूक्ष्मभेदः सर्वैर्वेदान्तिभिरभ्युपगतः ॥ अविद्याकृतभेदस्य उपाधिकृतभेदस्य च अनादित्वाभ्युपगमात् ॥ इयांस्तु विशेषः—ब्रह्मैवाज्ञम् उपाधिसम्बद्धं चेति सर्वश्रुतिस्मृतिन्यायविरोधोऽन्येषाम् ॥ तदभावादविरोधश्चास्माकम् ॥ इति ॥

इति जन्माद्यधिकरणम् ॥

बहु स्यां = நான் பலபடியாய் ஆகுவேன், **प्रजायेय** = நான் பலபடியாய் பிறப்பேன் என்று இரண்டுவினைச் சொற்களுக்கும் ஒரே பொருள் போல் தோற்றும். ஆயினும் வெவ்வேறு நிலைகளைப் பொருளாகக் கொண்டு புநருக்தி அதாவது இரட்டிப்புச் சொல் என்னும் தோஷத்தைப் பரிஹரிக்க வேணும். அதாவது—இவ்விரண்டும் இரண்டுவிதமான ஸ்ருஷ்டியைக் காட்டுகின்றன. பகு ஸ்யாம் என்று வ்யஷ்டி ஸ்ருஷ்டியையும், ப்ரஜாயேய என்று ஸமஷ்டி ஸ்ருஷ்டியையும்; அவையாவன--வ்யஷ்டி ஸ்ருஷ்டியாவது தத்துவங்களைத் தனித்தனியே உண்டாக்குதல், ஸமஷ்டி ஸ்ருஷ்டியாவது *-தத்துவங்களை ஒன்றோடொன்று சேரச்செய்து ஸ்தூலதசையைக் காண்பித்தல். சேதநாசேதநங்களுக்கும் பரமாத்மாவுக்கும் ப்ரளய காலத்திலும் பேதம் அதாவது அவர் தம்மில் வேற்றுமை உண்டென்றும், ஆனல் அவ்வேற்றுமை வ்யவஹாரத்திற்கு யோக்யமல்லாதபடி ஸூக்ஷ்மமாயிருக்கும்

என்பது எல்லா வேதாந்திகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். ஒரு வேதாந்தி, அவ்வேற்றுமை அவித்யையால் ஏற்பட்டது என்றார். மற்ற வேதாந்தி, உபாதியால் ஏற்பட்டது என்றார். இவ்விருவரும் வேற்றுமை அநாதி என்று ஒப்புக்கொள்ளுகிறவர்களே. விசிஷ்டாத்வைத ஸித்தாந்திகளான நாமும் பேதம் அநாதி என்றே ஒப்புக்கொள்கிறோம். அவருக்கும் நமக்கும் வித்தியாசம் என்னவெனில்—ஒருவர் பரம்மத்தை அஜ்ஞானியாக ஒப்புக்கொண்டார். மற்றவர் ப்ரம்மத்தை உபாதி என்னும் தோஷத்தோடு கலந்ததாக ஒப்புக்கொண்டார். இதனால் ஸகல ச்ருதிகளுக்கும் ஸகல ஸ்மிருதிகளுக்கும் யுக்திக்கும் விரோதம் உண்டாகிறது. நமக்கோ வெனில் அவித்யையையும் உபாதியையும் ஒப்புக்கொள்ளாததனால் ஸகல ச்ருதி ஸ்மிருதி ந்யாயங்களுக்கும் விரோதமில்லை

இதி ஜந்மாத்யதிகரணம்

शास्त्रयोनित्वाधिकरणम्

सू—शास्त्रयोनित्वात् (१. १. ३.)

एवं चिदचिद्वस्तुशरीरतया तद्विशिष्टस्य ब्रह्मण एव जगदुपादानत्वं निमित्तत्वञ्च नानुमानगम्यमिति शास्त्रैकप्रमाणकत्वात्तस्य "यतो वा इमानि भूतानि" इत्यादिवाक्यं निखिलजगदेककारणम् ब्रह्मैव बोधयत्येवेति सिद्धम् ॥

இப்படி சித் என்னும் அசித் என்னும் வஸ்துக்களை தனக்கு சரீரமாகக் கொண்டதாதலால் அவற்றோடு கூடியிருக்கும் ப்ரம்மமே இவ்வுலகுக்கு உபாதாநகாரணமும் நிமித்தகாரணமும் ஆகிறது என்ற விஷயம் அநுமானத்தால் அறியமுடியாததாகையால், அப்படிப்பட்ட ப்ரம்மத்தை சாஸ்திரம் கொண்டே அறியவேண்டியிருப்பதால் "யதோவா இமாநி பூதாநி" என்னும் வாக்யம் உலகமனைத்துக்கும் முக்கிய காரணமாகிய ப்ரம்மத்தையே போதித்தே தீரும் என்பது சித்தமாகிறது.

समन्वयाधिकरणम्

सू—तत्तु समन्वयात् (१. १. ४.)

पुरुषार्थतया अन्वयः समन्वयः । शास्त्राख्यप्रमाणस्य पुरुषार्थपर्यवसायित्वेऽपि ब्रह्म स्वस्य परस्य च अनुभवितुः अविशेषेण स्वरूपेण गुणैः विभूत्या च अनुभूयमानं अनवधिकातिशयानन्दरूपमिति पुरुषार्थत्वेन अभिधेयतया अन्वयात् ब्रह्मणः शास्त्रप्रमाणकत्वं उपपन्नतरमिति निरवद्यं निखिलजगदेककारणं ब्रह्म वेदान्ताः प्रतिपादयन्तीत्युक्तम् ॥

சாஸ்திரயோநித்வமாவது—சாஸ்திரம் கொண்டே அறியக்கூடியதாக விருக்கைத் = முன் சூத்திரத்தில் சொன்ன சாஸ்திரயோநித்வம், ஸமந்வயாத் = எல்லா சாஸ்திரங்களும் பரப்ரம்மத்தை பரம புருஷார்த்தம் என்று போதிப்பதால், (சித்திக்கிறது) அந்வயம் என்றால் ஒற்றுமை, ஸம் அந்வயம் என்றால் விசேஷமான ஒற்றுமை. அதாவது ப்ரம்மமே சிறந்த புருஷார்த்தம் என்று அறிவிப்பதில் எல்லா சாஸ்திரங்களுக்கும் விசேஷ ஒற்றுமை உண்டு. புருஷார்த்தத்தை போதிக்கும் சொல்லுக்கே சாஸ்திரம் எனப் பெயர் வழங்கும், புருஷார்த்தம் என்பது முடிவில் சுக ரூபமாய் இருக்கவேணும், இல்லாவிட்டால் ஸாமான்ய ஜனங்களுக்கு அதில் ப்ரவ்ருத்தி உண்டாகாது. ப்ரம்மமானது, தனது ஸ்வ ரூபத்தைகொண்டும் குணங்களைக் கொண்டும், விபூதியைக் கொண்டும் அநுபவிக்கப்படும்போது தனக்கும் பிறனுக்கும் வேற்றுமையின்றி அளவற்ற இன்ப ரூபமாயிருக்கும் என்று வேதாந்த' சாஸ்திரங்கள் அனைத்தும் 'ப்ரம்மமே புருஷார்த்தம் என்னும் பொருளை உரைக்கிறபடியால் ப்ரம்மத்துக்கு சாஸ்திரயோநித்வம் சொன்னது யுக்தமாகும். ஆனது பற்றி எல்லா உலகங்களுக்கும் முக்கிய காரணமான ப்ரம்மத்தையே வேதாந்தங்கள் அறிவிக்கின்றனவென்று சொன்னது குற்றமற்ற சொல்லாகும்.

ईक्षत्यधिकरणम्

तत्र तावत्प्रधानं वेदान्तप्रतिपादनानर्हमित्याह—

ईक्षतेर्नाशब्दम् (१. १. ५.)

अशब्दम् आनुमानिकं प्रधानम्। तत् वेदान्तवेद्यं न। कुतः, ईक्षतेः स देव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम्, इति प्रस्तुतजगत्कारणव्यापारवाचिनः ईक्षतेर्धातोः श्रवणात् "तदैक्षत बहुस्याम्" इति ॥

அசப்தம் = ப்ரதாநம் என்னும் ப்ரக்ருதியானது. ந = வேதாந்தங்களால் அறியத்தகுந்த பொருளல்ல. ஏனெனில், ஈக்ஷதே: = உபநிஷத்தில் அந்த பரமாத்மாவை ஈக்ஷ என்னும் வினையெச்சத்திற்கு எழுவாயாக அதாவது கர்த்தாவாக சொல்லியிருப்பதால். சாந்தோக்யோப நிஷத்தில் "ஸதேவஸோம்ய" என்ற வாக்யத்தில் பரமாத்மாவைச் சொல்லத் தொடங்கி ஐக்ஷத = ஸங்கல்பித்தது, என்று அது செய்த தொழிலைக் காட்டியிருக்கிறது. தத் = அந்த பரமாத்மாவானது, பகு = பலபடியாக, ஸ்யாம் = ஆகுவேன். என்று ஐக்ஷத = ஸங்கல்பித்தது, என்று. ப்ரதாநத்தைப் பரப்ரஹ்மமாக ஒப்புக்கொண்டால், அது அறிவில்லாத வஸ்துவாகையால் அதற்கு ஸங்கல்பம் என்னும் மனோவ்யாபாரம் கூடாது. அந்த ஸங்கல்பத்திற்கு ஆச்ரயமான வஸ்து அறிவுள்ளதாக இருக்கவேணும் அசேதநமான ப்ரதாநத்திற்கு இது ஒவ்வாது.

गौणश्चेन्नात्मशब्दात् ॥ (१. १. ६.)

கௌண: சேத் = ஐக்ஷத என்ற விடத்தில் ஈக்ஷணம் என்னும் ஸங்கல்பமானது முக்கியப்பொருளல்ல. கௌணப்பொருளாகும். அப்படியானால் ஐக்ஷத என்னும் க்ரியாபதத்திற்கு ப்ரதாநத்தையே கர்த்தாவாகக் கொள்ளலாம் என்றால். ந = அது சரியல்ல. ஏனெனில் "ஆத்ம சப்தாத்" இப்படி ஸங்கல்பம் செய்த பொருளை ஆத்மாவென்று மேலே சொல்லியிருப்பதால்.

"तत्तेज ऐक्षत" इत्यादिषु अचेतनेपि वस्तुनि ईक्षतिः श्रूयते। तत्र गौण इति चेत्; नैतदुपपद्यते। प्रस्तुते सच्छब्दवाच्ये

श्रूयमाणात् चेतनवाचिनः आत्मशब्दात् 'स आत्मा तत्त्वमसि श्वेतकेतो" इति ह्युत्तरत्र श्रूयते ॥

அந்த தேஜஸ் ஸங்கல்பித்தது. என்றது முதலான விடங்களில் அசேதநமான வஸ்துவினிடத்திலும் ஈக்ஷணம் என்னும் செயல் ஓதப்படுகிறது. அங்கே ஈக்ஷணம் முக்கியப் பொருளாகாது. கௌணப்பொருள் என்றே கொள்ளவேணும். அதுபோல் இங்கு ஸத் என்னும் பொருள் ப்ரதாநம் என்றே வைத்துக்கொண்டு, அதற்குச்சொன்ன ஈக்ஷணத்தை கௌணப் பொருளாகவே கொள்ளலாம் என்பது ஆக்ஷேபம்.

இதற்கு ஸமாதாநம்—நாம் நிரூபிக்கப்புகுந்த பொருள் இங்கே ஸத் என்னும் சொல்லால் சொல்லப்பட்டது. இப்பொருளையே, மேலே ஆத்மாவென்னும் சொல்லால் சொல்லியிருக்கிறது. ஆத்மாவென்னும் சொல் அறிவுள்ள வஸ்துவையே சொல்லும். "ஸ ஆத்மா" அதுவே ஆத்மா. ச்வேதகேதோ—ஓச்வேதகேதுவே—தத்த்வம் அஸி. நீ அந்த ஸத் என்னும் பொருளாகவே இருக்கிறாய், என்றல்லவோ மேலே ஓதப்படுகிறது.

तेजःप्रभृतिष्वपि न गौणमीक्षणम्। तेजःप्रभृतिशब्दैरपि तच्छरीरकं ब्रह्म एवाभिधीयते ॥

தேஜ அதாவது ஒளி முதலியவற்றில் கூறப்பட்ட ஈக்ஷணமும் கௌணமல்ல. முக்கியப் பொருளேயாம். தேஜ முதலான சொற்களாலும் அந்தந்தப் பொருளை தனக்கு உடலாகக்கொண்ட பரப்ரம்மமே சொல்லப்படுகிறது.

"अनेन जीवेनात्मनानुप्रविश्य नामरूपे व्याकरवाणि" इति ब्रह्मात्मकजीवानुप्रवेशादेव सर्वस्य वस्तुनो नामरूपभाक्त्वात् ॥

அநேநஜீவேந என்ற ச்ருதியில் சொன்னபடி, ப்ரம்ம ரூபியான ஜீவனுடைய அநுப்ரவேசத்தாலேயே எல்லாப் பொருள்களுக்கும் பற்பலவிதமான பெயர்கள் உருவங்கள் இவை உண்டாகின்றன.

तत् सृष्ट्वा तदेवानुप्राविशत्। तदनुप्रविश्य। सच्च त्यच्चाभवत्। निरुक्तञ्चानिरुक्तञ्च। निलयनञ्चानिलयनञ्च। विज्ञानञ्चाविज्ञानञ्च। सत्यञ्चानृतञ्च सत्यमभवत्।" इति चेतनमचेतनञ्च पृथक् निर्दिश्य

तदुभयमनुप्रविश्य सत्यच्छब्दवाच्योऽभवत इति हि समानप्रकरणे स्पष्टमभिहितम् ॥

ஒரு விஷயத்தில் ஸம்சயம் வந்தால் இதே விஷயத்தைச் சொல்லியிருக்கிற வேறு இடங்களிலிருந்து ஸம்சயத்தை தீர்த்துக்கொள்ளவேணும். சாந்தோக்யோபநிஷத்தில் கூறப்பட்ட ஸ்ருஷ்டிக்ரமம் தைத்திரீயோபநிஷத்தில் ஆனந்தவல்லியிலும் கூறப்பட்டிருக்கிறது. அங்கு "தத்ஸ்ருஷ்ட்வா" என்று தொடங்கி சேதநம் அசேதநம் இவற்றை தனித்தனியே நிரூபித்து அவ்விரண்டிலும உள்புகுந்து ஸத் என்னும் த்யத் என்னும் சொல்லால் சொல்லப்பட்டதாக ஆயிற்று என்று தெளிவாய் உரைக்கப்பட்டது. ஸத் = சேதநம் த்யத் = அசேதநம்.

तन्निष्ठस्य मोक्षोपदेशात् (१. १. ७.)

தன்னிஷ்டஸ்ய = அந்த 'ஸத் என்னும் சொல்லால் சொல்லப்பட்ட பொருளை உபாசிப்பவனுக்கு, மோக்ஷோப தேசாத்'' = மோக்ஷம் உண்டு என்று உபதேசிக்கப்பட்டிருப்பதால்

इतश्च प्रधानादर्थान्तरभूतं सच्छब्दाभिहितं जगत्कारणम् । सच्छब्दाभिहिततत्वनिष्ठस्य मोक्षोपदेशात् । "तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्ये अथ संपत्स्ये" इति हि तन्निष्ठस्य मोक्ष उपदिश्यते ।

மேல் சொல்லப்போகும் காரணத்தாலும், ஸத் என்னும் சப்தத்தால் சொல்லப்பட்ட ஜகத்காரணமான வஸ்துவானது ப்ரதாநத்தைக் காட்டிலும் வேறு பொருளேயாகும். உபநிஷத்தில் ஸத் என்று சொல்லப்பட்ட வஸ்துவை உபாசிப்பவனுக்கு மோக்ஷம் உபதேசிக்கப்பட்டிருப்பதால் "தஸ்யதாவதேவ சிரம் என்று தொடங்கும் உபநிஷத் வாக்யத்தால் அவனுக்கு மோக்ஷம் உபதேசிக்கப்படுகிறது. தஸ்ய = அப்படிப்பட்ட உபாஸகனுக்கு தாவதேவசிரம் = அவ்வளவே விளம்பம் = காலதாமதம் யாவத் நவிமோக்ஷ்யே = எப்போது இந்த சரீரத்திலிருந்து வெளிப்படுகிறானே. அத = அதன் பிறகு, ஸம்பத்ஸ்யே = ஸத்ரூபமான ப்ரஹ்மத்தை அடைகிறான் என்று

प्रधानकारणवादिनामपि हि प्रधाननिष्ठस्य मोक्षो नाभिमतः ।

ப்ரதாநம் என்னும் ப்ரக்ருதியை ஜகத்காரணமாக ஒப்புக்கொண்டவரும் அந்த ப்ரதாநத்தை உபாசிப்பவனுக்கு மோக்ஷம் உண்டென்று ஒப்புக்கொள்ளவில்லை.

हेयत्वावचनाच्च (१. १. ८.)

यदि प्रधानमत्र विवक्षितं तदा तस्य हेयत्वात् अध्येयत्वमुच्येत । न तदुच्यते । मोक्षसाधनतया ध्येयत्वमेवात्रोच्यते । "तत्त्वमसि श्वेतकेतो" इत्यादिना ॥

ஸத்வித்யாப்ரகரணத்தில் ஸத் என்னும் பொருளை ஜகத்காரணமாகச் சொல்லி, பின்னே, அதை த்யாகிக்கவேணும். என்று உபதேசிக்கப்பட்டிக்கிறதேயல்லாமல், அதை த்யாகிக்காமல் விட்டுவிடவேணும் என்று சொல்லப்படவில்லை. ப்ரதாநமே ஜகத்காரணம் என்று பொருள்கொள்வோமானால், அது துச்சமான வஸ்து வாயதுகொண்டு மேலே அதை த்யாகிக்காமல் விட்டுவிடவேணும் என்று சொல்லியிருக்கவேண்டியது. அப்படியல்லாமல், மோக்ஷத்திற்கு ஸாதநமாயிருப்பதுகொண்டு அதை த்யாகிக்கவேணும் என்றே சொல்லியிருக்கிறது, இதை "தத்வமஸி ச்வேதகேதோ'' என்று தொடங்கும் வாக்யத்தில் காண்க.

इतश्च न प्रधानम् ।
सू—प्रतिज्ञाविरोधात् (१. १. ९.)

கீழில் சொன்னப்ரதிஜ்ஞைக்கு விரோதமுண்டாவதால். ஸத் ப்ரதாநமல்ல.

एकविज्ञानेन सर्वविज्ञानप्रतिज्ञाविरोधात् । सच्छब्दवाच्यतत्वज्ञानेन तत्कार्यतया चेतनाचेतनसर्ववस्तुज्ञानं "येनाश्रुतं श्रुतं भवति" इत्यादिना प्रतिज्ञातम् । तद्धि प्रधानकारणवादे विरुध्यते । चेतनस्य प्रधानकार्यत्वाभावात् ॥

ஒரு பொருளின் அறிவைக்கொண்டு எல்லாப்பொருட்களையும் அறியக்கூடும் என்று முன்சொன்ன ப்ரதிஜ்ஞைக்கு விரோதம் வருகிறபடியால் ப்ரதாநம் ஜகத்காரணம் ஆகாது.

ஸத் என்னும் சொல்லுக்குப் பொருளாகிய ஒரு வஸ்துவின் அறிவைக் கொண்டு சேதநம் என்னும் அசேதநம் என்னும் இரண்டு வகையான

எல்லா வஸ்துக்களையும் அறியலாத்யமாகும்; மற்றவை யெல்லாம் அந்த ஒரு வஸ்துவின் கார்யமாகையால், என்று "யேநாச்ருதம் ச்ருதம்" என்று முதலான வாக்யத்தால் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கிறது. ப்ரதாநமே ஜகத்காரணம் என்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அது விரோதிக்கும் சேதநம் ப்ரதாந கார்யமில்லையாதலால்.

प्रधानादर्थान्तरभूतब्रह्मकारणवादे चिदचिद्वस्तुशरीरं ब्रह्मैव नामरूपविभागाविभागाभ्यां कार्यं कारणञ्चेति ब्रह्मज्ञानेन कृत्स्नस्य ज्ञाततोपपद्यते ॥

ப்ரதாநத்தைக் காட்டிலும் வேறு வஸ்துவான ப்ரஹ்மமே ஜகத் காரணம் என்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் சேதநா சேதந வஸ்துக்களை சரீரமாகவுடைய ப்ரஹ்மமே நாமங்களிலும் ரூபங்களிலும் பிரிவாலும் பிரிவின்மையாலும் கார்யமாகவும் காரணமாகவும் ஆகிறது. ஆகையால் ப்ரம்மத்தின் அறிவைக்கொண்டு எல்லாப் பொருட்களையும் அறிவது பொருந்தியதே.

इतश्च न प्रधानम् ।

सू—स्वाप्ययात् (१. १. १०.)

"स्वप्नान्तं मे सोम्य विजानीहीति । यत्रैतत् पुरुषस्स्वपिति नाम सता सोम्य तदा संपन्नो भवति । स्वमपीतो भवति । तस्मादेनं स्वपितीत्याचक्षते । स्वं ह्यपीतो भवति" इति जीवस्य चेतनस्य सुषुप्तस्य सता संपन्नस्य स्वाप्ययवचनात् प्रधानादर्थान्तरभूतं सच्छब्द-वाच्यमिति विज्ञायते । स्वमपीतो भवति । आत्मानमेव जीवोपीतो भवतीत्यर्थः ॥

அப்யம் என்றால் லயம் மறைதல். இந்த ஜீவன் தன்னிடத்திலேயே மறைந்து நிற்கிறான் என்று சொல்லியிருப்பதால் ப்ரதாநம் ஜகத்காரணமன்று. சாந்தோக்யோ பநிஷத்தில் உத்தாலகமஹரிஷி ச்வேதகேதுவைப் பார்த்து, புத்திரனே! இஜ் ஜீவனுடைய ஸுஷுப்தி என்னும் அவஸ்தையைச் சொல்லுகிறேன். கேள். என்றுசொல்லி, இந்த ஜீவன் எப்போது உறங்குகிறானோ அப்போது ஸத் என்னும் பொருளோடு சேர்ந்தவன் ஆகிறான். தன்னையே அடைந்தவனாகிறான். ஆகையாலேயே இவனை 'ஸ்வபிதி'

சென்னை-600 005.
158724

இளங்குழந்தை முதல் கிழவீறாக

சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்

ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப்பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கி, முஸலீ கந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைகொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்ப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அநுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது: ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.
வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமீஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் சீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्त्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



" ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printe d by S. Krishna at Kabeer Printing Works, 195, High Road, Triplicane, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.